# THE
# ASTROLOGICAL DICTIONARY.

சொற்பொருள் விளக்கமென்னும்

# சோதிடப் பேரகராதி.

இது

61 ௵ பஞ்சாங்கம் ஆக்கியவரும், சிற்பநூற் பொக்கிஷ
பதிப்பாளரும், மங்கம்மாள் அல்லது மதுரைக்கரசி
யென்ற சரித்திர நூலாசிரியரும், மதுரை
புத்தகசாலையினருமாகிய

சோதிட சாஸ்திரி

## எஸ். கூடலிங்கம்பிள்ளை

அவர்களால்

பற்பல சொற்பொருள் விளக்கத்தோடு

ஆக்கப்பெற்றது.

எஸ். கூடலிங்கம் புத்தகசாலை, மதுரை.

காபிரைட் ரிஜிஸ்டர்டு. விலை ரூ 2-4-0

1924

Meenalochani Press, Madura—24.

# முன்னுரை.

வானுறை நாள்கோள் பூததா துயிர்வேர்
வருக்கமற் றுளபொருட் பகுதி
தானுறை யண்ட கோளமா திகளைத்
தனித்தனி யியக்கிடுஞ் சான்றாங்
கோனுறை யாத பொருளிலை யென்ற
கொள்கைய தாலிந்நூல் தனக்கு
எனுறை யாதுன் னருளென வடியே
னெழுதினேன் தொழுதிறை யவனே.

பொன், வெள்ளி, கல் முதலிய தாதுவருக்கங்களும், மரம், செடி, கொடி முதலிய மூலவருக்கங்களும், மக்கள், விலங்கு, பறவை முதலிய உயிர் வருக்கங்களும், இவைகட்கு ஆதாரமாகிய மண், நீர், தீ, காற்று, ஆகாயமென்னும் ஐந்து பூதங்களும், சூரியனாதி நவக்கிரகங்களும், இராசிகள், நட்சத்திரங்கள் முதலிய இயற்கைப்பிண்ட கோளங்களுமாகியவனைத்தையும் அகண்ட ஓரண்டத்துள்ளாக்கி அடக்கிக்காக்கும் ஒப்புயர்வற்றொரு பொருளா யெப்பொருளுள்ளு மியங்கும் எல்லாம் வல்ல இறைவன் றிருவருளையுன்னி இச்சோதிடப் போகாதியை எழுதத்துணிந்தேன். ஆகையால் இந்நூல் இனிது நிறைவேறுமாறு இறைவன்றிருவருள் புரிவானாக.

இங்ஙனம் அணுவினுள்ளணுவாய் அறிவினுள்ளறிவாய் அனைத்துந்தானாயிலங்கும் பரமேசுவரனருளால் தோன்றியழியும் தாது மூலசீவனென்ற மூவகை இனங்களிற் சீவவருக்கமே சிறந்தன வென்பதும் இச்சீவவருக்கங்களனைத்தினும் மக்கட் பிறப்பே மிக்கசிறப்புடைத்தென்பதும் மதிநுட்ப நூலோடுடைய அறிஞர்யாவருக்கும் ஒப்பமுடிந்த உண்மையாம்.

இத்தகைய சிறப்புவாய்ந்த மக்கள் நன்னெறி யொழுகி இக வாழ்வில் இன்புறவும் பரவாழ்வில் முத்திநிலை யெய்தவும் இறைவன் றிருவருளால் வகுக்கப்பெற்ற சாதனமாகநினைக்கப்படும் வேதத்திற்குச் சோதிடமே கண்ணாகக் கருதப்பெற்று வருகிறது. இச்சோ

திட சாஸ்திரத்திற்காதாரமாயுள்ளன சூரியனாதிகோள்கள் மேடாதி ராசிகள், வாரம், திதி, நட்சத்திரம் முதலியவைகளே. இவைகட்கெல்லாம் ஆதியாயும் ஆதாரமாயும் சோதிட கணிதசாஸ்திரத்திற்கு முக்கியமாகிய காலத்தையளக்குங் கருவியாயுமுள்ள சூரியனைக்கொண்டு அதிநுட்பமான காலமுதல் விநாடி, நாழிகை, ஓரை, முகூர்த்தம், சாமம், பகல், இரவு, நாள், வாரம், பக்கம், மாதம், இருது, அயனம், வருடம் ஆகிய காலப்பாகுபாடுகளை நுணுக்கமாகக் கணித்துக் கண்டறிவதற்கும், கிரகசாரகதிபேதங்களின் நிலைகளையறிந்து உலகஞ் சீவிப்பதற்காதாரமாகிய மழை, வெயில், காற்று முதலியஇயல்புகளையுணர்ந்தோதுவற்கும், மக்கள் பிறக்கும் காலநுட்பங்களைக் கணித்தறிந்த இலக்கினம், இராசி, ஓரை, அமிசம் என்னும் பல பிரிவுகளில் கோள்நிலையமைப் புணர்ந்து தாய், தந்தை, சகோதரம், தாரம், மக்கள், யோகம், கண்டம், மாணகால முதலிய பன்னிரண்டு பாவகங்களிலுண்டாகும் பலன்களோடு கோட்சார முறையாகத் திசை, புத்தி, சித்திரம் முதலிய காலங்களிலீடுபட்டு பிறப்பு முதல் இறப்பு வரை நிகழும் சுகதுக்கமாகிய எல்லாவிதப்பலாபலன்களையுமறிந்துகொள்வதற்கும், இந்துமதத்துள்ளிட்ட வெல்லாச் சமயத்தாரும் வைதீகமெனக்கருதக்கூடிய செனனந்தொட்டு நடந்தேறும் வாழ்க்கைச் சடங்குகளாகிய சூதிகாக்கிருகமுதல் கல்வி, கலியாணம், ருதுசாந்தி, சீமந்தம்முதலிய பூருவக்கிரியைகளையும், மாணந்தொட்டு நிகழும் சாச்சடங்குகளாகிய அந்தியேட்டி.திதி, தருப்பணம் முதலிய அபரக்கிரியைகளையும் விதி விலக்குகளறிந்து நடத்தி உய்வதற்கும், எல்லாச் சமயத்தாருக்கும் பொதுவான தொழிற்றுறைகளாகிய விவசாயம், வியாபாரம், கைத்தொழில், உத்தியோகம் முதலிய பலவித இலௌகீக காரியங்களை ஏற்றகாலங்கண்டு செய்வதற்கும், மற்றும் பலவற்றிற்கும் சோதிடசாஸ்திரமே இன்றியமையாததாகக் கருதப்பெற்று வருதல் நம் அனுபவசித்தமேயாம்.

இவ்வண்ணம் வேற்றுமையின்றி எல்லாமக்களாலும் கையாளப்பெற்றுவரும் சோதிட விஷயமாக வடமொழியிலும், தென்மொழியிலும் எண்ணிறந்த நூல்களுள்ளன; அவற்றுள்உயர்தனிச் செம்மொழியாகிய தமிழுக்குத் தலைமைபூண்ட அகஸ்திய முனிவருக்கு

முருகக்கடவுள் ஆதியில் சோதிட நுட்பங்களனைத்தையும் உபதேசிக்க, அவர்தம் சீடர்களாகிய பலவேறு சித்தர்களுக்குத் திருவாய் மலர்ந்தருளிய சோதிட நுட்பங்களைக் கொண்டே குமாரசாமியம், சினேந்திரமாலை, சந்திரகாவியமுதலாய செய்யுள்வடிவமாகியபலநூல்களையும், வேறுசில செய்யுணடை, உரைநடை நூல்களையும் முற்காலத்தும் பிற்காலத்துமுள்ள அறிஞர்கள் இயற்றியுள்ளார். அவைகளில் பற்பலநூல்கள் அச்சுவாகனமேறி வெளிவந்துலவுவன கற்றோர் பலருந்தெற்றென வுணர்ந்ததொன்றேயாம்.

இங்ஙனம் வெளிவந்துலவும் அரும்பெரும் நூல்களனைத்தும் பெரும்பாலுஞ் செய்யுளுருவமாயிருத்தலின் தமிழிலும், சோதிடத்திலும் வல்லுநரேயன்றி ஏனையோர் பொருள் காண்டற்கியலாது குன்றமுட்டியகுரீஇப் போலவும், குறிச்சிபுக்கமான்போலவும் இடர்ப்படுகின்றனர். இங்ஙனம் இடர்ப்படாவண்ணம் நூலாசிரியர்கள் காரக நிகண்டென ஆங்காங்கு இரண்டொரு செய்யுட்களையே கூறியிருத்தலின் அவைகளைக்கொண்டு அந்நூலின் பொருளை ஐயந்திரிபின்றி அறிதற்கு இயலாதென்பது யாவரும் நன்கறிந்ததேயாம். அந்நிகண்டில் ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்களும் பலபொருளைக் குறிக்கும் ஒரு சொற்களும் சோதிடவாராய்ச்சிக்கு வேண்டுவனவாகிய குறியீடுகளும், நுண்ணிய விஷயங்களை யாராய்தற்குரிய வழிநெறி முறைகளும், ஆங்கில முகமதிய கணிதமுறைகளையாராய்தற்கேதுவாகிய வழிகளும் பிறவும் விளங்கக் கூறாமலிருத்தலையுணர்ந்து பல சோதிடபண்டிதர்கள் இவையனைத்தும் ஒருசேர வுணர்தற்குரிய சோதிடவகாராதி யொன்றிருப்பின் நலமெனக் கூறியதோடு முன்னர்த்தமிழில் அறுபத்தொருவருடப் பஞ்சாங்கத்தையச்சிட்டு வெளியிட்டதுபோல சோதிடவகாராதியொன்று இயற்றி வெளியிடும்படி தூண்டிவந்தனர். அவர்ளாணையை மறுத்தற்கஞ்சி இத்துறையிலிறங்கி நூல்களை யாராய்ச்சிசெய்து வருகையில் நேர்ந்த இடையூறுகள் பலவாகும். அவற்றைப் பொருட்படுத்தாது செல்லுகையில் கண்ணோய்க்கிலக்காகிப் பெரிதுந் துயருற்றேன். ஆகையால் வேறுபலநூல்களையும் ஆராய்ந்து இவ்வகராதியை முற்றமுடிக்க இயலாததற்குப் பெரிதும் விசனப்பட்டுக்கொண்டிருக்

கும் அமையத்து என் நண்பர்கள்பலரும் சரீரம் அநித்தியமாகையால் தொகுத்தவளவில் வெளியிடின் நலமெனக்கூறினர். அந்நண்பர்கள் விருப்பத்தின்படி இச்சிறிய புத்தகத்திற்கு சோதிடப் பேரகராதி எனப்பெயரிட்டு வெளியிட்டுள்ளேன்.

இந்நூலை செவ்வனே தொகுத்தெழுதற் கிடையூறாகக் கண்ணோய் ஏற்பட்டமையால் உதவியாளரைக் கொண்டே ஒருவாறு முற்றுற முடித்தேன். ஆகையால் பிழைகள் இருப்பின் அறிஞர்கள் அப்பிழைகளைக் கருதாது நலமொன்றையே கைக்கொள்வதோடு என்னாலியற்றப்பெற்றுள்ள அறுபத்தொருவருடப்பஞ்சாங்கம், சிற்பநூற்பொக்கிஷ முதலிய சோதிடநூல்களையும், மங்கம்மாள் என்ற சரித்திர நூலையும் யான் பதித்த வேறுசில நூல்களையும் ஆதரித்ததுபோல இந்நூலையும் ஆதரிக்குமாறு மிக்க வணக்கமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்.

எஸ். கூடலிங்கம் பிள்ளை.

உ

கடவுள் துணை.

# சோதிடப் போகராதி.

## காப்பு.

இடப்பேர்நாட் கோட்பே ரீண்டுபல நற்சோ
திடப்பே ரகாதி செப்ப—உடற்குள்
உறையு முயிர்க்கு ளுறைந்துசான் ரூதும்
இறைவன் பதங்காப்பா மே.

## அ

அ—எட்டென்னும் எண்ணின்குறி. தமிழ்மொழியின் முதலெழுத்து.

அகசன்—கேது.

அகசு—பகற்பொழுது, பகல்நாழிகை. குறிப்பு—ஒவ்வொரு நாளிலும் பகலிரவு நாழிகை சரியாயிராமல்வித்தியாசப்படுகிறது. இதன் காரணம், பூமி,சூரியனுக்கு நேராயிராமல் சிறிது ஒருக்கணித்து இருப்பதால் அதன்மேல் சூரியகிரணங்கள் எப்பொழுதும் ஓரளவாய்விழாமற் சித்திரை முதல் புரட்டாசிவரையில் அதன் வடபாதியின்மேல் அதிகமாயும், ஐப்பசிமுதல் பங்குனிவரை அதன் தென் பாதியின்மேல் அதிகமாகவும் விழுகின்றது. ஆனதால் பூமிமத்திக்குவடபாகத்திலிருக்கிறநமக்கு சித்திரைமுதல்புரட்டாசிவரை பகற்காலம் நீண்டும் ஐப்பசிமுதல்

அகத்திய நட்சத்திரம்.

பங்குனிவரை இராக்காலம் நீண்டும் இருக்கும். சித்திரை ஐப்பசி இந்தமாதங்களில்மாத்திரம் பகலிரவுநாழிகைகள் சற்றேறக்குறைய சரியாகவிருக்கும். கணிதசாஸ்திரப்படி(பங்குனி புரட்டாசி) இந்த மாதங்களில் ௰உ தேதிமுதல் அகசுப்பிரமாணம் ௩௰ நாழிகையிலிருந்து வித்தியாசப்பட ஆரம்பிக்கிறது

அகணம்—கணியாதது.

அகணிதபஞ்சாங்கம் — அலகிடாது சொல்லும் பஞ்சாங்கம்.

அகணிதம்— எண்ணிக்கையின்மை, கணித முறையுளொன்று. மனக்கணிதம்.

அகத்திய நட்சத்திரம்—ஓர் நட்சத்திரம். இது, கடலலையை நிறுத்துவதாம்.

அகத்தியன் — அகத்திய முனிவன், இவரால் அநேக சோதிடசாஸ்திரங்கள் செய்யப் பெற்றிருக்கிறன்றன.

அகம்—சூரியன், நாள், பகல்.

அகம்மியம்—கோடி, கோடாகோடி, பத்துலட்சங்கோடி.

அகர்—பகல்.

அகர்நாதன், அகர்ப்பதி } சூரியன்

அகர்மணி—சூரியன், விண்மணி.

அகர்முகம், அகர்ம்மணி, அகர்ம்முகம் } உதயகாலம், வைகறை, சூரியன்.

அகாயு—காகம், பாம்பு, வயது.

அகி—ஆவணி, மேகம், இராகு, சூரியன், ஒரு நட்சத்திரம்.

அகிகை—துருவ நட்சத்திரம்.

அகிப்பிரத்தினதேவதை—உத்திரட்டாதி நட்சத்திர அதிதேவதை.

அகிப்பிரத்தினம்— இரவிலேநிகழும் மூன்றுமூகூர்த்தமாகிய உத்திரட்டாதி, உத்திரட்டாதிநட்சத்திரம்

அகிரன்—சூரியன்

அகிர்ப்புத்தினி — இரவில் நிகழும் மூன்றுமுகூர்த்தமாகிய உத்திரட்டாதி, உத்திரட்டாதிநட்சத்திரம்.

அகூபாரன்—சூரியன்

அகோராத்திரம்—அல்லும், பகலும்.

அகோரை—இரண்டரை நாழிகை கொண்ட நேரம்.

அக்கம்—பூகோளாட்சம்.

அக்கனனம்--பதனகேந்திரம் இது;-இலக்கினம், நான்காமிடம், ஏழாமிடம், பத்தாமிடமாம்.

அக்கிரச்சா, அக்கிரச்சியை } கிரகங்கள், கிழக்கு மேற்கு வீதியகறவில் வருஞ் சா.

அக்கினிகேது—தூமம்.

அக்கினி கோணம்—தென்கீழ்த்திசை.

அக்கினி நட்சத்திரம்—கொடிய நட்சத்திரம். இது, பரணி மூன்றாம் பாதமுதல் உரோகணி முதற் பாதம் முடியும்வரை சூரியன் நிற்கும் நட்சத்திரமாம்.

அக்கினிநாள்—அக்கினி நட்சத்திரம், கொடியநாள்.

அக்கினிபஞ்சகம்—பஞ்சகம் எட்டிஞென்று. வரலாறு;—பஞ்சகத்திற் காண்க.

அக்கினிமண்டலம்-- மும்மண்டலத்தொன்று.

அக்கினிமூலை—தென்கிழக்குமூலை

அக்கினியுற்பாதம்—வாற்கொள்ளி, விழுகின்ற நட்சத்திரம், விண்வீழ்கொள்ளி.

அக்கினியோகம் — அக்கினிக்குரிய யோகம். இது, ஞாயிற்றில் துவாதசியும், திங்களிற் சஷ்டியும், செவ்வாயிற் சத்தமியும், புதனில் அஷ்டமியும், வியாழனில் நவமி

யும், வெள்ளியிற் றசமியும், சனி யில் ஏகாதசியும் வருவனவாம்.

அங்கசா—சோதிட வுறுப்புக்களி லொன்று

அங்கச்சனி—ஒருவன் பிறக்கும் போது அவன் தேகவுறுப்பில் நிற் பதாகக் கணிக்கப்படுஞ்சனி.

அங்கச்சோமன்—ஒருவன் பிறக்கும் போது அவன் தேகவுறுப்பில் நிற் பதாகக் கணிக்கப்படுஞ் சந்திரன்.

அங்கநட்சத்திரம் — ஒருவன் பிறக் கும்போது அவன் தேகஉறுப்பில் நிற்பதாகக் கணிக்கப்படும் நட்சத் திரம்.

அங்கபுதன்—ஒருவன் பிறக்கும் போது அவன் தேகவுறுப்பில் நிற் பதாகக் கணிக்கப்படும் புதன்.

அங்கமைந்து—வாரம், திதி, நட்சத் திரம், யோகம், கரணம் என்பன வாம். இவைகளைப் பஞ்சாங்க மெ ன்று சொல்வர்.

அங்கயோகம் — இலக்கினமுதலிய கேந்திர மூலத்திரிகோணங்களி லாவது, உச்சத்திலாவது, குரு நிற்பதாம்.

அங்கவித்தியை = கணிதசாஸ்திரம். இது, உடம்பிலுள்ள குறிகளினால் ஒருவனுடைய நன்மை தீமைகளை அறிவிக்கும் நூல்.

அங்கவியாழன்—ஒருவன் பிறக்கும் போது அவனுடைய தேகவுறுப் பில் நிற்பதாகக் கணிக்கப்படும் வியாழன்.

அங்கவெள்ளி — ஒருவன் பிறக்கும் போது அவனுடைய தேகவுறுப், பில் நிற்பதாகக் கணிக்கப்படும் சுக்கிரன்.

அங்கனை—ஓரிராசி.

அங்காதித்தன் — ஒருவன் பிறக்கும் போது அவனுடைய தேகவுறுப் பில் நிற்பதாகக் கணிக்கப்படும் சூரியன்.

அங்காரன்—செவ்வாய், அங்காரகன்.

அங்காரகதோஷம் — செவ்வாய் தோஷம். வரலாறு;- செவ்வாய் ஸ்திரீ ஜாதகங்களில் 2, 12, 4, 7, 8, ஆகிய இவ்விடங்களி லிருப்பின் புருஷனுக்கு ஆகாது. இவ்விதமே புருஷ ஜாதகங்களி லிருப்பின் பெண்ணுக்கு ஆகாது. (2)புருஷர்களுக்கு 2,7-லும் ஸ்தி ரீகளுக்கு 4, 12-லும், இருவர்கட் கும் 8-லும் செவ்வாயிருந்தால் தோஷமுண்டு.

(3) இருபாலார்க்கும் மிதுனம், கன்னிஎன்னும் இவை இரண்டா மிடமாகி அதிற்செவ்வாயிருந்தால் தோசமில்லை,விருஷபம், துலாம் ஆகிய இவற்றுளொன்று பன்னி ரண்டா மிடமாகி அதிற் செவ் வாயிருந்தால் தோசமில்லை,

(4)மேடம்,விருச்சிகம்ஆகிய இவற் றுளொன்று நான்கா மிடமாகி

அதிற் செவ்வாயிருந்தால் தோசமில்லை. மகரம், கடகம் ஆகிய இவற்றுளொன்று ஏழாமிடமாகி அதிற் செவ்வாயிருந்தால் தோசமில்லை.

(5)தநுசு, மீனம் ஆகிய இவற்றுளொன்று எட்டாமிடமாகி அதிற் செவ்வாயிருந்தால் தோசமில்லை. கும்பத்திலாவது, சிம்மத்திலாவது செவ்வாயிருந்தால் தோசமே இல்லை,

(6)செவ்வாய் சந்திரனுடன் சேர்ந்தாலும், அல்லது குருவுடன்சேர்ந்தாலும் தோஷமில்லை. அன்றியும், செவ்வாய் ஆட்சிவீட்டிலாவது, சுயநவாம்சத்திலாவது இருப்பினும், புதன், சந்திரன், சுக்கிரன்,குரு ஆகிய இவர்களுள் ஒருவரோடு கூடியாவது, அல்லது அவர்கள் பார்வை பெற்றாவது இருப்பினும் ஜாதகனுக்குச் செவ்வாய் தோஷமில்லை யென்பதோடு நல்ல பலனுண்டென்பதாம். செவ்வாய் ஜனனகாலத்தில் இலக்கினம், சந்திர லக்கினம், சுக்கிர லக்கினம் ஆகிய இவைகளின் 12, 2, 4, 7, 8 முதலிய இடங்களிலிருந்தால் தோசம். இதுபோல ஸ்திரீ ஜாதகத்தையும் பார்க்கவேண்டும். இருவருக்குமிருந்தாற் புத்திராதி சகல சந்தோஷங்களும் அநுபவிப்பர். இவ்வாறு புருஷனுக்கு இருந்து ஸ்திரீக்கு இல்லாவிட்டால் (ஸ்திரீக்கு) தோஷம். ஸ்திரீக்கு இருந்து புருஷனுக்கு இல்லாவிட்டால் (புருஷனுக்கு) தோஷம். இருவருக்கும் இருப்பின் உத்தமமென்பதாம். இலக்கினத்தில் செவ்வாயிருந்தாலுந் தோஷமென்பாருமுளர்.

அங்காரகன் — அங்காரன், செவ்வாய்.

அங்கி—அத்தநாள், கார்த்திகை நட்சத்திரம்.

அங்கிசி—கிரணம், சூரியகிரணம், சூரியன்.

அங்கிசை—அமிசை.

அங்கிநாள்—அஸ்தநட்சத்திரம், கார்த்திகை நட்சத்திரம்.

அங்குசாயதார யோகம்--ஓர்யோகம். இது, இலக்கினம், சரராசியாய் ௧௧-ல் குருவும், ௰௨-ல் செவ்வாயும் நிற்க, வெள்ளி சனி கேந்திர திரிகோணமேற அமாவாசை அல்லது பௌர்ணமி கூடியிருத்தலுமாம்.

(2)இலக்கினஞ்சரமாய் குரு திரிகோணமேறி மற்றக் கிரகங்கள் ஆறு,எட்டு, பன்னிரண்டில் நிற்பதுமாம்.

(3)இலக்கினம் திராசியாய் குரு பார்க்க ஒரு பாவக்கிரகம் உச்ச கேந்திரத்தில் நிற்பதுமாம்.

அசங்கம் — சூரியனுக்கெதிரே கிரகங்கள் நிற்றல்.

அசங்கற்பமாதம் — சங்கிரமத்தின் ஆதியந்தங்களிலே அமாவாசை, வர நிகழுமாதம்.

அசத்துரு—சந்திரன்

அசலாத்தமி—மாசிமாதத்தின் பூர்வபக்கத்து ஏழாந்திதி.

அசம்—ஆடு, மேடம்.

அசனி—இடி.

அசன்னியம்—அபசகுனம்.

அசாதி—செவ்வாயென்னுங் கிரகம்

அசிதம்—அமரபக்கம், சனி.

அசிதன்—சனி.

அசிந்தம்—ஓரெண், இது கோடாகோடி, பத்துலட்சங்கோடி, மரணம்.

அசிந்தியம்—ஓரெண், இது பத்துலக்ஷம் கோடி, கோடாகோடி.

அசிரன் } சூரியன்.
அசிதகரன் }

அசீதி—சடசீதிமுகம், இது ஆனி, புரட்டாசி, மார்கழி, பங்குனி, என்னும் மாதங்களின் பிறப்பு. எண்பது என்னும் எண்ணுக்கும் பெயர்.

அசீதிகம்—எண்பதென்னும் அளவுள்ளது.

அசீதிகன் — எண்பது வயதுடையவன்.

அசுபக்கிரகம்—தீயகிரகம், பாவக்கிரகம், இது சூரியன், செவ்வாய், சனி, அமரபக்கத்துச் சந்திரன், இராகு, கேது, சூரியனுடன்கூடி நின்ற புதனும், பாம்புடன் கூடிய வியாழனுமாம்.

அசுபதி நட்சத்திரம் — அசுவகினி, அசுவதி, அசுவினி, அசுவை, அச்சுவதி, அச்சுவினி, இரலை, ஏறு, இவுளி, ஐப்பசி, சென்னி, பரி, புரவி, மருத்துவநாள், முதனாள், யாழ், வாசி.

அசுபமாலாயோகம்—எல்லாக் கிரகங்களும் ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகிய இத்தானங்களில் நிற்பதாம்.

அசுபயோகம்--சுபமல்லாதயோகம். இது இலக்கினத்திற்குப்பன்னிரண்டிற் சந்திர சூரியரல்லாத மற்றைக்கிரகங்கள் கூடிநிற்பதாம்.

அசுபராசி—குரூரராசி- கெட்டராசி, பாவவிராசி.

அசுபவாரம்—ஞாயிறு, சனி, செவ்வாய்.

அசுரகுரு—சுக்கிரன்.

அசுரசந்தி—இரணிய வேளை, இது மாலைநேரம்.

அசுரநாள்—மூலநட்சத்திரம்.

அசுரமந்திரி—சுக்கிரன்.

அசுரன்—இராகு, கேது.

அசுரை—இராசி, இருள்.

அஞ்சிட்டன். அட்டகணிதம்.

அசுவகினி—அச்சுவினி.

அசுவதி—அசுபதி, அச்சுவினி.

அசுவினி—அசுபதிநட்சத்திரம்.

அசுவை—அச்சுவினிநாள்.

அசேனன்—சூரியசமுகத்து ஆறிருதுக்களிலும் நின்று பாட்டயர்வோரிலொருவன்.

அசைகபாதம்—இரவில் நிகழுமிரண்டாமுகூர்த்தமாகிய பூரட்டாதி.

அசோகசத்தமி — மாசி மாதத்தின் பூருவபக்கத்து ஏழாந்திதி.

அசோகாட்டமி—சித்திரை மாதத்திற் புதவாரத்தோடு கூடிய எட்டாந்திதி.

அசௌக்கியத் தானம்—இலக்கினத்திற்கு மூன்று, ஆறு, எட்டு, பனிரண்டாமிடங்கள்.

அச்சரணம்—பூரட்டாதி நட்சத்திரத்திற்கு அதிதெய்வம்.

அச்சிரநாள்—கூதிரும் முன்பனியுமுள்ள காலம்.

அச்சிரவக்காலம்—முன் பனிக்காலம்.

அச்சு—யுகம்.

அச்சுவதி
அச்சுவினி } அசுபதி நட்சத்திரம்

அஞ்சங்கம்--பஞ்சாங்கம், இவை:-திதி வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என்பனவாம்.

அஞ்சனன்—சனி.

அஞ்சானனம்—சிங்கவிராசி.

அஞ்சிட்டன்—சூரியன்.

அஞ்சு—ஐந்து.

அஞ்சுமாலி
அஞ்சு மான் } சூரியன்.

அடுப்பு—பரணிநட்சத்திரம்.

அட்சய—அறுபதாவது வருடம்.

அட்சயதிருதியா—வைகாசி மாதச் சுக்கிலபட்சத்தில்வரும் மூன்றாந்திதி.

அட்சயவருடப் பலன்—இவ்வருடத்திற் சொற்ப மழையாகஇருந்தாலும் பருவகாலங்களிலெல்லாம் நன்றாகப்பெய்யும்.நன்செய், புன்செய் முதலிய புலங்களில்எல்லாவிதமானபயிர் விருத்தியாவதோடு நன்குவிளைவும் மனிதர்களுக்குச் சுகசீவனமு முண்டாம். உதாரணம்:— மானேகேளட்சயத்தின் மாரியற்பமானாலுந், தானே நலமுண்டாந் தாரணியில், வானூறுங்---கார்பொழியும் வேளாண்மை கானமெங்குந் தோன்றுமே, சீர்பொழிய வோங்குந்திரு. (இடைக்காடர்.)

அட்சயா--சாந்திரமாதத்தில்ஞாயிறு திங்கள் இவ்வாரங்களில் வரும் ஏழாநாள்.

அட்சயாநவமி —அட்சயநவமி. கார்த்திகை மாதம் பூருவபக்கத்தில் வரும் ஒன்பதாந்திதி.

அட்சரகணிதம்—பீசகணிதம்.

அட்டகணிதம்—எட்டுவகைக் கணிதம்.இவை;-கனமூலம்கனம், குண

கம், சங்கிலிதம், பாகாம், வருக்க மூலம், வருக்கம், விபகலிதம். இதன் வரலாறு எண்வகைக் கணி தத்திலறிக.

அட்டகை—அட்டமி.

அட்டகோணம்—எண்கோணம்.

அட்டசுபம்—எட்டுவகை மங்கலம்; இவை இணைக்கயல், கண்ணாடி, சாமரம், கொடி, தோட்டி, நிறை குடம், முரசு, விளக்கு என்பன வாம்.

அட்டதிக்காளர் — எண்டிசைப் பாலர். வரலாறு அட்டதிக்குப் பாலகரிற் காண்க.

அட்டதிக்கு—எட்டுத்திசை. அவை கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு.

அட்டதிக்குப்பாலகர்—திக்குக் காவலர். இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் இவர்கிழக்காதி முறையே நிற்பவராம்.

அட்டதிசை—எட்டுத்திக்கு, அன்றியும் எட்டுத்திசையுமாம். அவை மங்களதிசை, பிங்களதிசை, தன்னியதிசை, பரமாதிசை, பத்திரதிசை, உட்கதிசை, சித்ததிசை, சங்கடதிசை என்பனவாம். திசை ஒன்றுக்கு வருடம் நாலரையாம்.

அட்டநாகம் — எண்வகைநாகம். அவைஅனந்தன், கார்க்கோடகன், குளிகன், சங்கபாலகன், தக்கன், பதுமன், மகாபதுமன், வாசுகி என்பனவாம்.

அட்டபாலகர்—அட்டதிக்குப் பாலகர்.

அட்டபாலகர்குறி—திக்குப் பாலகரடையாளம். அதாவது கொடிக்குறி. அவை இந்திரனுக்கு இடி, அக்கினிக்குப் புகை, இயமனுக்குச் சிங்கம், நிருதிக்குஞாளி, வருணனுக்குஇடபம், வாயுக்குக் கழுதை, குபேரனுக்குயானை, ஈசானனுக்கு காகமென்பனவாம்.

அட்டமக—எட்டாவது.

அட்டமங்கலம்—அட்டசுபம்பார்க்க.

அட்டமச்சனி—சென்ம லக்கினத்திற்கு எட்டாமிடத்தில் நிற்குஞ் சனி. கோசாமுறையாகச் சந்திர லக்கினத்திற்கு எட்டாமிடத்தில் நிற்குஞ் சனியுமாம்.

அட்டமத்தானம் — இலக்கினத்திற் கெட்டாமிடம்.

அட்டமாசிக்கூறு—சென்ம நட்சத்திரத்திற்குப் பதினாறு, பதினேழு, பதினெட்டாம் நட்சத்திரங்கள்.

அட்டமம்—எட்டாவது.

அட்டமி—எட்டாந்திதி.

அட்டமூர்த்தம்—எட்டு மூர்த்தம். அவை, இயமானன், ஆகாயம், காற்று, சந்திரன், சூரியன், தீ, நீர், நிலம் என்பனவாம்.

அட்டவர்க்கம்—எட்டுவித வர்க்கம். அவை சமுதாயம், திரிகோண சோதனை, ஏகாதிபத்தியம், குண சமூகம், இராசிகுணாகாரம், கிரக குணாகாரம், சுத்தபிண்டம், ஏகசமூகம் என்பனவாம்.

அட்டவிஞ்சதி—இருபத்தெட்டு.

அட்டாங்கம்—எட்டு அங்கம். அவை யுகம், வருடம், மாதம், திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என்பனவாம்.

அட்டாதசம்—பதினெட்டு.

அணியெண்—முப்பத்தைந்து.

அண்டகோளம் — அண்டத்தின் உருண்டைவடிவம்.

அண்டபகிரண்டம்—துருவ சக்கரத்துட்பட்ட உலககோளமும், அதற்குப் புறத்திலுள்ள கோளமுமாம்.

அண்டம்—ஆகாயம்.

அண்டயோனி—சூரியன்.

அதமயோகம்—சூரியனுக்குக் கேந்திரத்தில் சந்திரன் நிற்பதாம்.

அதமவிஞ்சதி, அதமவிமிசதி } பிரபவமுதலிய அறுபது வருடங்களிலே தீதாக விளங்குங்காலமாகிய பின்னிருபது வருடமாம்.

அதிகண்டம்— நித்திய யோகத்தொன்று. இதுசந்திரனைப் பற்றியது.

அதிகமாதம்—அறுபது வருடத்திற்கொருமுறை ஒரு வருடத்தில் அதிகநாள் வருமாதம்.

அதிகாலம், அதிகாலை } விடியற்காலம்.

அதிசாந்திரன்—சந்திரன்.

அதிசாரம்—கிரகநடையினொன்று.

அதிசாரவக்கிரகம் — அதிசாரத்தில் வரும் வக்கிரகதி.

அதிதிநாள்—புனர்பூசநட்சத்திரம்.

அதிதியர்—சூரியர்.

அதிதேவதை—அதிகாரதேவதை.

அதிநீசம்—வர்க்கத்திற் றாழ்ந்தது.

அதிபதி—ஒவ்வொரு இராசிக்கும் ஆதிபத்தியம் பெற்ற கிரகங்கள், இராசாநாதன்.

அதிபர்—முதல்வர், அதிபதி.

அதிபலம்—அதிகபலம், மிக்கபலம்.

அதிபன் — இராசா, உடையவன், உரியவன், சொந்தக்காரன்.

அதிபெலராசி — உபயராசிநான்குமாம், இவை கன்னி, தனுசு, மிதுனம், மீனம் என்பனவாம்.

அதிமாதம்—அதிகமாதம்.

அதியுச்சம்—வர்க்கத்திலுயர்ந்தது.

அதியோகம்—ஓர் சுபயோகம். இது சென்மலக்கினம், சந்திரலக்கினம் இவைகட்கு ஆறிலாவது, ஏழிலாவது, எட்டிலாவது சுபக்கிரகங்களமைய நிற்பதாம்.

அதிருட்டி புதனுக்கிரகதோஷம்— அதிட்டி பூதனையென்னுந்தோஷத்தால்வரும் பாலாரிட்ட தோஷமாம்.

அஸ்தமம். — அநந்ததிருதியை.

அதிவிருஷ்டி } பெருமழை.
அதிவிருட்டி }

அதீதகாலம்—இறந்தகாலம்.

அதுலம்—ஒரெண், இது இலட்சங் கோடி, கோடி. கோடாகோடி.

அதோமுகராசி—கீழ்நோக்கியவிராசி, அதாவது சூரியனின்றராசியாம்.

அத்—ஒன்று, பாதி.

அத்தகிரி—சூரியன் அஸ்தமிக்கும் மேற்குமலை.

அத்தகோளம்—கோளத்தின் பாதி.

அத்தக்குன்று = அத்த கிரியைக் காண்க.

அத்தசதம்—ஐம்பது நூறுண்டு.

அத்தசந்திரன்-பாதிச்சந்திரன், பால சந்திரன்.

அத்தசாமம்—நடுச்சாமம்.

அஸ்தநட்சத்திரம் } அங்கிநாள், ஐம்
அத்தநட்சத்திரம் } மீன், ஐவிரல். களிறு, கன்னி, சாமரம், கைமீன், கைனி, கௌத்துவம், நவ்வி என் பனவாம்.

அஸ்தநாள்—அஸ்தநட்சத்திரம்,

அத்தநாள்—அஸ்தநட்சத்திரம்' பாதிநாள்.

அத்தபவனம்—ஏழாமிராசி.

அத்தபாகம்—பாதிப்பாகம்.

அத்தப்பிரகாம்—நாலேகால் நாழி கைகொண்டது.

அத்தப்பிரகரன் — கரந்துறை கோள்களிலொன்று.

அத்தமம் } அஸ்தமிக்கை
அஸ்தமம் }

அத்தமயம் } சூரியன்முதலிய கிர
அத்தமயனம் } சங்கள் படுதல், அதா வது மறைதல்.

அஸ்தமனம் } அஸ்தமன காலம்.
அத்தமனம் } அத்தமித்தல்.

அத்தம் } அஸ்தமித்தல், அஸ்த
அஸ்தம் } நட்சத்திரம், பாதி.

அத்தன்—தகப்பன், பிதுர்த்தான மாகிய ஒன்பதாமிடமுமாம், பதி னொன்றாமிடத்திற்கும் பொதுப் பெயர்.

அத்தவுதையம்—அருத்தோதயம்.

அத்தார்த்தம் } அரைவருடம், ஆண்
அத்தார்ந்தம் } டிற் பாதி.

அத்திகம்—வருடந்தோறும்வருவது.

அத்திசம் } சந்திரன்.
அத்திநவநீதகம் }

அத்தியந்தம் — ஒரெண், அவை கோடிகோடி கோடாகோடி.

அத்திரி—சூரியன்.

அத்திரிசாதன்—சந்திரன்.

அத்துச்சம்—கிரகங்களின் அதியுச் சம், சரியுச்சமுமாம்.

அத்தோதயம்—அருத்தோதயம்.

அநங்கதிரயோதசி—மார்கழி மாதம் பூருவபக்கத்தில்வரும் பதின்மூன் றாந்திதி.

அநந்தசதுர்த்தசி—புரட்டாசி மாதத் துப் பூருவபக்கத்தில் வரும் பதி னான்காந்திதி.

அநந்ததிருதியை—புரட்டாசி, மார் கழி, வைகாசி இம்மாதங்களில் வரும் பூருவபக்கத்து மூன்றாந் திதி.

அநந்தவிரதம் — புரட்டாசி மாதம் பூருவபக்கத்துச் சதுர்த்தசியன்று அநுட்டிக்கும் ஓர் விரதநாள்.

அநபாயோகம்—அனபாயோகத்தைப் பார்க்க.

அநந்தாதியோகம்—இன்ன கிழமையில் இன்னநட்சத்திரம் வருவதென்பது, விபரம்—;ஆனந்தாதியோகத்திற் காண்க.

அநபை—அனபாயோகம்.

அநலநட்சத்திரம்—செவ்வாய் நின்ற நட்சத்திரத்திற்கு, ஏழு, பதினொன்கு, பதினறு, இருபத்தைந்தாம் நட்சத்திரங்களாக வருவது,இது-; தோசமுள்ளதாம்.

அநலம் } அனலநட்சத்திரம்.
அநலநாள் }

அநலி—சூரியன்.

அநாவிலன் —சுக்கிரன்.

அநிலநாள் — சோதி நட்சத்திரம், விசாக நட்சத்திரமுமாம்.

அநிலி—சோதிநட்சத்திரம்.

அநுசம்—அனுசநட்சத்திரம்.

அநுசாரம்—கிரகவக்கிரம்.

அநுடம்—அனுசநட்சத்திரம்.

அநுமதி—பௌரணை.

அனுவக்கிரேட்டம்—இட்டத்தைச்சர்ப்பாகாரமாக வைத்துஅதிலொரு விராசியைக் கழிந்துநின்ற கால அளவு; இது—; மூன்று பாகையும் இருபது கலேயுங்கொண்டது.

அநூரு—சூரியன்றேர்ப்பாகன்

அந்தகன்—சனி.

அந்தகாரம்—இருள்.

அந்தகாலம்—மரணகாலம், முடிவு காலம்.

அந்தணன் —சனி, வியாழன்.

அந்தரதிசை — மகா திசையினுள் இடை இடையேவருங் கிரகங்களின் அதிகாரத்தோடு பொருந்திய காலம்.

அந்தரபுத்தி — கிரகங்களினுட்கதி. அதாவது கிரகதிசைகளின் உள்ளே செல்லாநின்ற புத்தியுள்நடை பெறுங்காலத்துள் நிகழுங்காலம்.

அந்தரம்—அளவு, ஆகாயம், இடம், இருள், உள்வெளி, காலம், கிரகங்களினுள்ளுக்குள்ளானகாலம், கூட்டம், மிச்சம், நிமித்தம்.

அந்தராந்தரதிசை— கிரகங்களினுள்ளுக்குள்ளான திசாகாலம்.

அந்தராளதிக்கு—கோணத்திசை.

அந்தராளம்—இடைக்காலம்.

அந்தர்க்கதம்—மறைவிடத்தானம்.

அந்தர்த்தானம்—உள், மறைவிடம்.

அந்தன் —சனி.

அந்தி—இரவு, மாலேக்காலம்.

அந்திக்கோன்—சந்திரன்.

அந்திசந்தி—காலேமாலே.

அந்திபகல்—இராப்பகல்.

அந்திப்பொழுது—மாலேக்காலம்.

அந்திமாலே—பகற்காலத்தின் முடிவில் வருமாலேக்காலம்.

அந்தியகருமம்—மரணச்சடங்கு.

அந்தியகாலம்—மரணகாலம், முடிவு காலம்.

அந்தியமம்—இரேவதி நட்சத்திரம், மீனராசி.

அபசெயத்தானம்—மூன்று, ஆறு, பத்து, பதினொன்று நீங்கியஇராசிகள். (பலதீ)

அபசவ்வியம்—இடப்பக்கம்.

அபசித்துமூர்த்தம்—எட்டாமுகூர்த்தம்.

அபமம்—கீழ்க்கதி, இது;சூரியன் தக்கணாயனத்திலாவது உத்தராயணத்திலாவது இறங்குதல்.

அபமிருத்து—இடையில் வருவனவாகிய கண்டதோசங்கள்.

அபரபக்கம்—சந்திரன் பிற்பக்கம் கிருட்டினபக்கம், தேய்பிறை.

அபரபட்சம்—அமரபக்கம், பதினைந்தா நாளென்னும் கால அளவு சந்திரன் பிற்பக்கம், கிருட்டின பக்கம், தேய்பிறையுமாம்.

அபராத்திரம்—இரவின் பிற்சாமம், கடைச்சாமமுமாம்.

அபரான்னம் — மத்தியானத்தையடுத்துப் பின்வரும் ஆறுநாழிகை கொண்டகாலம்.

அபவர்த்தம்—ஒன்றுக்கொன்று வித்தியாசமான இரண்டுராசியையாவது, பலராசியையாவது சேடம் வராமல் அரிக்கும் வேறொரு இராசி.

அபிசித்து—ஒரு முகூர்த்தம், ஒட்டு நட்சத்திரம், அது—,உத்திராடத்திற்குப்பின் சோதிவிஷயமாகச் சேர்க்கப்படுவது, அன்றியும் உத்திராடத்தின் முடிவிற் பதினைந்து நாழிகையும் திருவோணத்தின் முடிவில் நாலுநாழிகை, நாலு விநாடியுமாம்.

அபிசேகத்தானம்—இலக்கினம்.

அபிரூபன்—சந்திரன்.

அபீசு—கிரணம்.

அப்சன்—சந்திரன்.

அப்தசதம்—நூறாண்டு.

அப்தம்—ஆண்டு, வருடம்.

அப்தா } கிழமை.
ஹப்தா }

அப்தாக்கணக்கு—வாரக்கணக்கு.

அப்பர்சுவாமி திருநட்சத்திரம்—சித்திரை மாதத்தில்வரும் சதைய நட்சத்திரம்.

அப்பன்வீடு—இலக்கினத்திற்கொன்பதாமிடம், பிதிர்த்தானமுமாம்.

அப்பியுதயம் } சூரியோதயம்.
அப்பியுத்தானம் }

அப்பிரபிசாசகம் } இராகு.
அப்பிரபிசாசம் }

அப்பிரமேயம்—ஒரொன், இருபதினாயிரங்கோடிகோடி,கோடாகோடி.

அப்புக்கிரகம் } சந்திரன், சுக்கிரன்.
அப்புக்கோள் }

அப்பு—பஞ்சபூதத்தொன்று,இதுநீர் பூராடநட்சத்திரமுமாம்.

அமங்கலநாள்—புனர்பூச நட்சத்திரம், பூரநட்சத்திரம்.

அமச்சன்—மந்திரி, வியாழன்.

அமதி—காலம், சந்திரன்.

அமயம்—காலம்.

அமரபக்கம் / அமரபட்சம் } பதினைந்து திதி கொண்டது பூரணைக்குப் பின்சந்திரன் நிற்கும் பக்கம், பின்பக்கம்.

அமலாயோகம்—இலக்கினம் அல்லது சந்திரன் இவைகளுக்குப் பத்தாமிடத்திற் சுபக்கிரகங்கள் நிற்பதாம். (பலதீ)

அமவாசி—அமாவாசி.

அமன்—பன்னிரு சூரியருள்ளொருவனை அரியமன்.

அமாமசி—அமாவாசி.

அமாவசி / அமாவாசி / அமாவாசியை / அமாவாசை } இரவிமதி யோகம், சூரியனுஞ் சந்திரனுங் கூடும் நாள் அது-; கிருட்டினன் பக்கத்துப் பதினைந்தாந் திதி.

அமிசம்—அதிட்டம், பங்கு, பாகை, பின்னம், மேல்வாயிலக்கம், (இராசிச் சக்கரம்போன்ற) அமிசநிலைக்கும் பெயராம்.

அமிசு—சூரியன், பிரபை.

அமிசை—அங்கிசை.

அமிர்தகலை—சந்திரகலை.

அமிர்தகிரணன்—சந்திரன்.

அமிர்தயோகம் — சுபயோகம் இது சுபகாரியங்களுக் குபயோகமான வாரமும் நட்சத்திரமுங் கூடிவருவது. விபரம் அமிர்தாதி யோகம் பார்க்க.

அமிர்தாதி யோகம்—சுபாசுபங்களை ஆறு வகையாக விவரித்துக் கூறுவது, விபரம்—;ஞாயிற்றில் அசுபதி, கார்த்திகை, ரோகணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, பூராடம், சதையம், பூரட்டாதி இவைகள் வரிற் சித்தயோகமாம். உத்திரம், அஸ்தம், மூலம், உத்திராடம், திருவோணம், உத்திரட்டாதி, ரேவதி, இவைகள்வரில் அமிர்தயோகமாம், அஸ்தம்வரில் அமிர்தசித்தயோகமாம். மகம், அனுசம், கேட்டை, அவிட்டம் இவைகள் வரில் மரணயோகமாம். பரணி வரிற் பிரபலா நிஸ்டயோகம். விசாகம்வரில் உற்பாதயோகமாம்.

திங்களில் அசுபதி, பரணி,மிருகசீரிடம், திருவாதிரை, பூசம், ஆயிலியம், பூரம், உத்திரம், அஸ்தம், அனுசம், கேட்டை, மூலம், அவிட்டம், சதையம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி இவைகள் வரில் சித்தயோகமாம்; ரோகணி, மிருகசீரிடம், புனர்பூசம், சுவாதி, திருவோணம் இவைகள்வரில் அமிர்தயோகமாம். மிருகசீரிடம் வரில் அமிர்தசித்த யோகமாம். கார்த்திகை, மகம், விசாகம், உத்திராடம் இவைகள்வரில் மரணயோகமாம். சித்திரைவரிற் பிரபலாநிஸ்டயோகமாம். பூராடம்வரில் உற்பாதயோகமாம்.

## அமிர்தாதியோகம்.

செவ்வாயில்—அசுபதி, பரணி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசமுதற் பூரம்வரையிலுள்ளனவும், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுசம், பூராடம், திருவோணம், அவிட்டம், ரேவதியுமாகிய இவைகள்வரிற் சித்த யோகமாம். அசுபதி, ரோகணி உத்திரம், மூலம், உத்திரட்டாதி இவைகள் வரில் அமிர்தயோகமாம். அசுபதிவரில் அமிர்த சித்தயோகமாம். திருவாதிரை, விசாகம், சதையம், பூரட்டாதி இவைகள் வரில் மரணயோகமாம். கேட்டைவரில் உற்பாதயோகமாம். உத்திராடம்வரிற் பிரபலாகிஸ்டயோகமாம்.

புதனில்—பரணி, ரோகணிமுதல் மகம்வரையிலுள்ளனவும் சித்திரை, சுவாதி, விசாகம், அனுசம், கேட்டை, திருவோணம், சதையம்,உத்திரட்டாதியுமாகிய இவைகள் வரிற் சித்தயோகமாம். கார்த்திகை, பூரம், உத்திரம், அனுசம், பூராடம், உத்திராடம், பூரட்டாதி, இவைகள்வரில் அமிர்தயோகமாம். அனுசம்வரில் அமிர்தசித்தயோகமாம். அசுபதி, அஸ்தம், மூலமாகிய இவைகள்வரில் மரணயோகமாம். அவிட்டம்வரிற் பிரபலாகிஸ்டயோகமாம், ரேவதிவரில் உற்பாதயோகம்.

## அமிர்தாதியோகம்.

வியாழனில்--பரணி,பூசம்,ஆயிலியம், பூரம், அஸ்தம், சித்திரை, விசாகம்,அனுசம்,மூலமுதல் அவிட்டம் வரையிலுள்ளனவும் பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதியுமாகிய இவைகள்வரிற் சித்தயோகமாம். அசுபதி, புனர்பூசம்,பூசம், மகம், சுவாதி இவைகள்வரில் அமிர்தயோகமாம். கார்த்திகை, மிருகசீரிடம், திருவாதிரை, உத்திரம், சதையம் இவைகள்வரில் மரணயோகமாம், ரோகணிவரில் உற்பாதயோகமாம், கேட்டைவரிற் பிரபலாங்கிஸ்டயோகமாம்.

வெள்ளியில்—பரணி, கார்த்திகை, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூரம், உத்திரம், சித்திரைமுதல் அனுசம்வரையிலுள்ளனவும் உத்திராடம் அவிட்டம்முதல், ரேவதிவரையிலுமுள்ளனவுமாகிய இவைகள்வரிற் சித்தயோகமாம், அசுபதி, அஸ்தம், மூலம், ரேவதி இவைகள்வரில் அமிர்தயோகமாம். ரேவதிவரில் அமிர்தசித்தயோகமாம்.ரோகணி, ஆயிலியம், மகம், கேட்டை, திருவோணம் இவைகள்வரில் மரணயோகமாம். பூசம்வரில் உற்பாதயோகமாம்,பூராடம்வரிற் பிரபலாகிஸ்டயோகமாம்.

சனியில்—அசுபதி, பரணி, ரோகணிமுதல் பூசம்வரையிலுள்ளனவும், பூரம் விசாகமுதல் அவிட்

டம் வரையிலுள்ளனவும், உத்திரட்டாதியுமாகிய இவைகள்வரிற் சித்தயோகமாம். கார்த்திகை, ரோகணி, மகம், சுவாதி, சதையம், இவைகள்வரில் அமிர்தயோகமாம். ரோகணிவரில் அமிர்தசித்தயோகமாம், ஆயிலியம், அஸ்தம், சித்திரை, பூரட்டாதி இவைகள் வரில் மரணயோகமாம். உத்திரம் வரில் உற்பாதயோகமாம். ரேவதி வரிற் பிரபலாகிஸ்டயோகமாம்.

அமிர்த்தரங்கினி—சந்திரகிரணம்.

அமுதகடிகை—சில நட்சத்திரகாலங்களிற் சுபகருமங்களுக்கு யோக்கியமானவையாகக்கருதப்படும்நாழிகைகள், விபரம்-;பரணி மிருகசீரிடம், பூரம் இவைகட்கு முப்பது நாழிகையின்மேலும், பூசத்திற்கு பதினொன்றின்மேலும், அசுபதிக்கு இருபத்தொன்றின் மேலும், கார்த்திகைக்கு ஐம்பதின்மேலும், திருவாதிரை, ஆயிலியம் இவைகட்கு நாற்பதின்மேலும், பூராடம், பூரட்டாதி இவைகட்கு பத்தின்மேலும், அஸ்தத்திற்கு ஏழின் மேலும், உத்திரட்டாதிக்கு பதினெட்டின் மேலும், சுவாதிக்கு இருபத்திரண்டின்மேலும், இரேவதிக்கு பன்னிரண்டின் மேலும், அனுடம், மூலம், உத்திராடம், அவிட்டம், புனர்பூசம், பூசம், உரோகணி, இவைகட்குப்பதினன்றின் மேலும், சித்திரைக்கு பதினொன்றின் மேலும், கேட்டைக்கு முப்பத்தொன்றின் மேலும், விசாகம், திருவோணம், மகம், சதையம் இவைகட்கு இருபதின்மேலும், உத்திரத்திற்கு முப்பத்துமூன்றின் மேலும் வரும் நாழிகைகளாம். விசகடிகைக்கு மேல்வரும் நான்கு நாழிகை அமுதகடிகை என்பாருமுளர்.

| | |
|---|---|
| அமுதகதிரோன்<br>அமுதகிரணன்<br>அமுதசம்பூதனன் | சந்திரன். |
| அமுதசித்தயோகம்<br>அமுதயோகம் | ஓர்சுபயோகம் விபரம்--;அமுதாதி யோகத்திற்காண்க. |

அமை—அமாவாசை.

அமைச்சன்—வியாழன்.

அமையம்—காலம், பொழுது, நாள், பகல், பருவம்.

அம்சதிசை--அமிசஆயுர்த்தாயதிசை.

அம்சயோகம் — பஞ்சக் கிரகங்கள் ஆட்சியுச்சமாகிய இடங்களிற்கேந்திரித்து நிற்பதாம், (பலதீ)

அம்சாம்சம்—பங்கிற்பங்கு.

அம்சாம்சி—பங்கிற்பங்காக.

| | |
|---|---|
| அம்சுமந்தன்<br>அம்சுமாலி | சூரியன். |

அம்பரம்—ஆகாயம், கடல், திசை.

| | |
|---|---|
| அம்பரமணி<br>அம்பரீடன் | சூரியன். |
| அம்புலி<br>அம்புலிமான்<br>அம்போசம்<br>அம்போசன் | சந்திரன். |

அயனகாலம் — துலாயனத்திற்கும், மேடாயனத்திற்கும் இடையே நிகழுங்காலம், விபரம்-;அயனத்திற்காண்க.

அயனசலனம் — கிரகங்கள் மத்தியவரியிலிருந்து பக்கவரிக்குத் திரும்புதல்.

அயனமண்டலம் — சமரேகைக்கு வடக்கே அல்லது தெற்கே சூரியன் செல்லும் வீதி.

அயனாம்சம் — அயனுஞ்சானு சாரத்தினாலே தினமான முதலியனவற்றை அறியும்பொருட்டுக் கற்பிக்கப்பட்ட மாதம்.

அயனம் — செல்லுதல், பருதி, பிறப்பு, வருடப்பாதி, வருடம், இது உத்தராயணம், தெச்சணாயனம் என இருவகைப்படும். குறிப்பு;- ஆரியப்பட்டன்செய்த சோதிடச்சித்தாந்தத்தின்படி சூரியனைப் பூமி சுற்றிவரும்போது சூரியன் சரிவினாற் சிலகாலம் உஷ்ணம் அதிகரித்தலாலும் சிலகாலங்குறைதலாலும் இருதுபேதங்களுண்டாகின்றன. இவ்வமைப்பால் சூரியனுக்கு நேராக பூமத்திய ரேகைக்குத் தென்னிந்தியா சிறிது வடக்காக இருப்பதால் வடபாகத்தில் சூரியன் வருங்காலம் நமக்கு வேனிற்காலமாகவும் தென்பாகத்திற் சூரியன் வருங்காலம் மழைக்காலமாகவுங் காணப்படும். இப்படி பூமத்திய ரேகைக்கு வடக்கிற் சூரியனிருக்குங் காலஅளவை வரை இருந்து பின்னர்த் தெற்கோரந்திரும்பப் போகுங்காலம், தெட்சணாயனமென்றும், தெற்கேயிருந்து வடக்கே போகுங்காலம் உத்தராயணமென்றுஞ் சொல்லப்படும், அன்றியும் நட்சத்திர மண்டலத்திற்குள்ள இயற்கைப் பிறழ்ச்சியாலும் இருதுபேதம் நேரிடும் (பஞ் கணி.)

அயனகாலம் — அயனத்தைப்பார்க்க.

அயனன் — உரோகணி நட்சத்திரம்.

அயுதம் — பதினாயிரம்.

அய்யானனம் — சிங்கவிராசி.

அரங்கபூதி — ஐப்பசிமாதம் பௌரணையில் வரும் இரவு.

அரசன் — வியாழன்.

அரணி — சூரியன்.

அரத்தன்
அரத்தாங்கன் } செவ்வாய்

அரவம்
அரவு } ஆயிலியநாள், இராகு கேதுக்களுக்கும் பெயர்.

அரவுநாள் — ஆயிலியநட்சத்திரம்.

அராக்கோன் — இராகு, கேது.

அரி — கிரணம், சந்திரன், சிங்கவிராசி, சூரியன், செம்மறியாட்டுக்கடா, பாம்பு.

அரிகேசம் — சூரியனுடைய கதிர்களிலொன்று.

அரிச்சிகன் — சந்திரன்.

அரிடிகம் — சிற்பநூல் முப்பத்திரண்டினொன்று.

அரிட்டதேவதைகள்—குழந்தைகளுக்குவரும்பாலாரிட்ட தோசதேவதைகள். அவையாவன: தந்தை, பிணி, காளிகை, வீமரூபி, அங்குசுனி, பூதினி, முத்தகேசி, ஆகாசினி, அரிகோதினி, சகுனி, பூமாயி, உத்தமி, பிங்கலை, கோகர்ணி, பங்கயை, சீமுகி, சேனி, கும்பகர்ணி, தாபதை, காலார்க்கி, நந்தினி, குரோதினி, தானுனி, சாகினி, பஞ்சாளை, காமினி, பேதினி, களினி, மகாகும்பினி, அரணி, ஆகாசகர்ணி, வாயு. விசாக்கினி, சுகந்தினி, வனதேவி, குண்டனி என்பவையாம்.

அரிட்டம் }
அரிஸ்ட்டம் } அதிட்சம், அமங்களம், உற்பாதம், பாலாரிட்ட முதலியதோசங்கள், மரணக்குறி

அரிணன்--சூரியன்.

அரிணாங்கன்—சந்திரன்.

அரிதாலிகை—புரட்டாசி மாதச் சுக்கில பக்கச்சதுர்த்தி.

அரிதினம்—ஏகாதசி.

அரிதேவம்—திருவோண நட்சத்திரம்.

அரிபுதை—இரவு.

அரிமா—சிங்கவிராசி.

அரியமா—சூரியன்.

அரிவருடம் —நவகண்டத்துள்ளொன்று. இது இமயகிரிக்கும் நிடதபுரிக்குமிடையேயுள்ளது.

அருக்கசன் }
அருக்கசூன் } சனி

அருக்கபுத்தி—சூரியகதி.

அருக்கமண்டலம்—சூரியமண்டலம்

அருக்கம் }
அருக்கன் } சூரியன்

அருக்கவிக்கேபம் }
அருக்கவிட்சேபம் } சூரியாட்சம்.

அருக்கனிலை—காணுக்கோளிரண்டின்நிலை, சூரியன்நிலை, விபரம்;- சனி இரவு முப்பதும், ஞாயிறு பகல் முப்பதும், தெற்கிலும், ஞாயிறு இரவு முப்பதும், திங்கள் அறுபதும், தென் மேற்கிலும், செவ்வாய் பகல் முப்பதும், ஷை இரவிற்பத்தும், மேற்கிலும், மற்றையஇருபதும், புதன்பகல்முப்பதும்வடமேற்கிலும், புதன் இரவு முப்பதும், வியாழன் பகல் முப்பதும், ஷை இரவு பத்தும், வடக்கிலும், மற்றைய இருபதும், வெள்ளி அறுபது நாழிகையும் வடகிழக்கிலும், அருக்கனிருக்கும்நிலைகளாம், அக்கினி மூலைபாழ்.

அருக்கன்—காணுக்கிரகங்களிரண்டு, சூரியன், ஞாயிற்றுக்கிழமை.

அருக்கன்வீதி—கிராந்தி மண்டலத்தை நான்கு இராசிகொண்ட மூன்றுபாகமாகக்கொண்டு சூரியன்செல்லும்வீதி.

அருக்கேந்து சங்கமம்—அமாவாசை.

அருணசாரதி—சூரியன்.

அருணம்—விடியல்.

அருணன்—சூரியன், சூரியன்சாரதி, புதன்.

அருத்தோதயம். அர்த்தப்பிரகரதோசம்.

அருணாத்மசன்—சனி.

அருணோதயம்—சூரியோதயம், வைகறைப்பொழுது.

அருத்தசந்திரன் — அட்டமிச் சந்திரன், இளம்பிறை.

அருத்த நாள்—பாதிநாள்.

அருத்தநிசா—அருத்தசாமம், நடுச்சாமம்.

அருத்தயாமம்—அஉரயாமம், பாதி இரவு, மூன்றேமுக்கால் நாழிகை. அன்றியும், இரவின்முன்நிகழுமூன்றேமுக்கால் நாழிகையையும், பின்நிகழு மூன்றே முக்கால் நாழிகையையும்விட்டு இரவில் திரியாமாவென மூன்றுயாமங்கொள்ளப்படுவதின்நடுவே நிகழும்யாமமுமாம்.

அருத்தராத்திரம்—நடுராத்திரி.

அருத்தேந்து—அர்த்தசந்திரன், அட்டமிச்சந்திரன், இளம்பிறை.

அருந்ததி—ஓர் நட்சத்திரம்.

அருத்தோதயம் — அர்த்தோதயம், ஓர் விசேடநாள், இது அறுபது வருடத்திற்கொருமுறை தைமாசி மாதங்களில்வரும் ஞாயிற்றுக்கிழமையிற் குருஅத்தமிக்க சூரியன் மகரத்திலும் சந்திரன் வியதிபாத யோகங்கூடிய திருவோண நட்சத்திரத்திலு மிருந் தொன்றாக உதயமாகுதலாம், இதில் வியதிபாதத்தில், நாலாவதுபாகமும், அமாவாசையில் முதற் பாகமும், திருவோணத்தில் நடுப்பாகமும், சூரியஉதயமும் அமைவதுவிசேடமாம்.

அருவாவசு — சூரியன் கதிர்களுள் வியாழனை விளங்கச்செய்யுங்கதிர்.

அரைநாள்—நடுநாள், நாளிற்பாதி, பாதிநாள்.

அரையிரவு } அர்த்தராத்திரி, இரவிற் பாதி, பாதிராத்திரி.
அரையிருள் }

அர்க்கசூனு—சனி.

அர்க்கன்—அருக்கன், ஞாயிற்றுக்கிழமை.

அர்க்காதிபதி—திரவியாதிபதி.

அர்ச்சகாகிரகம்—ஒருவகைத் தோசநோய், இது—குழந்தை பிறந்த பதினோராவது நாள், பதினோராவது மாதம், பதினோராவது வருடம், இவைகளில் குழந்தையை அல்லது தாயைப்பீடிக்கும் ஒரு பெண் கிரகத்தாலுள்ள பாலாரிட்ட தோசமாம்.

அர்த்த சந்திரன் — பாதிச்சந்திரன். அட்டமிச் சந்திரன், இளம் பிறை.

அர்த்த சந்திரயோகம்—இரண்டாமிடமுதல் எட்டாமிடம் வரை, சூரியாதி எழுவர் நிற்பதாம்.

அர்த்தசாமம்—இரவின் நடுச்சாமம், பாதிராத்திரி.

அர்த்தப் பிரகரதோசம்—ஞாயிற்றுக்கிழமை முதல் சனிக்கிழமைவரை முறையேவரும் நான்கு, எழு,

இரண்டு, ஐந்து, எட்டு, மூன்று ஆறு என்னும் சாமங்களாம்.

அர்த்தப் பிரகான்--புதன்மகன், விபரம் அர்த்தப்பிரகா தோசத்திற் காண்க.

அர்த்தோதயம் — அருத்தோதயம் பார்க்க.

அர்த்த மூலநாழிகை—மூல நட்சத்திரத்தின் முதலிரண்டு நாழிகை

அர்ப்புதம்—ஆயிரங்கோடி.

அலகு—எண்.

அல்க்கினம்—இலக்கினமல்லாதது, துட்டலக்கினம்.

அலம்—விருச்சிகராசி.

அலரி
அலரியோன்
அலர்கதிர் } சூரியன்.

அலர்கதிர் ஞாயிறு — விரிகிரணச் சூரியன்.

அலவன்—சந்திரன், கர்க்கடகவிராசி

அலி—விருட்சிகராசி.

அலிக்கிரகம்—புதன், சனி, கேது.

அலிக்கோள்—அலிக்கிரகம்.

அலிநாள்—ஆண் பெண்ணென்னும் பகுப் பில்லாத நட்சத்திரங்களாகிய, மிருகசீரிடம், சதையம் என்பனவாம்.

அல்—இரவு.

அல்கல்—இரவு, நாள்.

அல்லு—இருள்.

அல்லி—இரவு.

அல்லோன்—சந்திரன்.

அவசித்து—அபிசித்துவைக் காண்க.

அவபோதகன்—சூரியன்.

அவமாகம்—மூன்று திதியாவது, மூன்று நட்சத்திரமாவது, மூன்று யோகமாவது, ஒருநாளிற் கலந்திருப்பது.

அவமானம்—இலக்கினத்திற் கெட்டாமிடம்.

அவமிருத்தியோகம் — ஓர் கெட்ட யோகம்; இது—திருவாதிரை, கேட்டை, ஆயிலியம், பரணி, கார்த்திகை, முப்பூரம் என்னும் நாட்களுடன் பாவ வாரமும் இருத்தையுங் கூடிவருவதாம். இதில் — நோய் காணில் தீதாம்.

அவமிருத்து—ஆறுமிடம், துர்மரணம், கேதுவின் மகன்.

அவமிருத்துத் தானம்—ஆறு,எட்டாமிடங்கள்.

அவயோகம்—துர்ச்சம்பவம், நாசயோகம்; அன்றியும், இலக்கினத்திலும் பன்னிரண்டாமிடத்திலும் ஏழு கிரகங்கள் கூடி நிற்பதாம்.

அவரோகணதிசை—உச்சத்தைவிட்டு நீசராசிக்குப் போகுங் கிரகதிசை.

அவரோபணம்—அத்தமித்தல்.

அவலோகம்
அவலோகனம் } பார்வை.

அவலோகிதம்—இயற்கையான பார்வை.

அவாசி—தெற்கு.

அவாந்திரதிசை — இடையிலுள்ள திசை. அவை—தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு என்பன.

அவாந்திரம்—மத்தியகாலம்.

அவி—சூரியன்.

அவிட்டம்—ஆவணி, காகம், கொடி, பறவை, புள், வசுநாள்.

அவிட்டநாள்—அவிட்டநட்சத்திரம்.

அவ்வியத்தம்—கோடி, கோடிகோடி கோடாகோடி

அவ்வியத்தராசி — பீசகணிதத்திற் சொல்லப்பட்ட அறியப்படாத சங்கியை.

அவிர்மதி—விரிகிரணச் சந்திரன்.

அழலவன் }
அழலோன் } சூரியன், செவ்வாய்.

அழல்—கேட்டைநாள், செவ்வாய்.

அழற்கதிர்—சூரியன்.

அழிவு—இலக்கினத்திற்குப் பன்னிரண்டாமிடம், கெடுதி.

அளகு }
அளக்கர் } கார்த்திகை நட்சத்திரம்.

அளவை—நாள்.

அறிஞன்—புதன்.

அறிவனாள்—உத்திரட்டாதி.

அறிவன்—உத்திரட்டாதி, செவ்வாய், புதன்.

அறிவின்மைத்தானம்--எட்டாமிடம்.

அறிவுகாரகன்—வியாழன்.

அறுபது வருடம்—பிரபவ, விபவ, சுக்கில, பிரமோதூத, பிரசோற்பத்தி, ஆங்கிரச, ஸ்ரீமுக, பவ, யுவ, தாது, ஈசுர, வெகுதானிய, பிரமாதி, விக்கிரம, விசு, சித்திரபானு, சுபானு, தாரண, பார்த்திப, விய, சர்வசித்து, சர்வதாரி, விரோதி, விகிர்த்தி, கர, நந்தன, விஜய, ஜய, மன்மத, துர்முகி, ஏவிளம்பி, விளம்பி, விகாரி, சார்வரி, பிலவ, சுபகிருது, சோபகிருது, குரோதி, விசுவாவசு, பராபவ, பிலவங்க, கீலக, சௌமிய, சாதாரண, விரோதிகிருது, பரிதாபி, பிரமாதீச, ஆனந்த, இராட்சச, நள, பிங்கள, காளயுத்தி, சித்தார்த்தி, இரௌத்திரி, துர்மதி, துந்துபி, ருதிரோற்காரி, இரக்தாட்சி, குரோதன, அட்சய என்பனவாம். குறிப்பு—பிரபவமுதல் வியவரையுள்ள இருபது வருடமும் உத்தமமென்றும், சர்வசித்து முதற் பராபவ வரை இருபது வருடமும் மத்திமமென்றும், பிலவங்கமுதல் அட்சயவரை இருபது வருடமும் அதம மென்றுங் கூறுவர்.

அறுபத்தொருவருடப்பஞ்சாங்கம் —- அல்லது பழைய பஞ்சாங்கத்திரட்டு; இது இங்கிலீஷ் 1854ஆம் வருட (ஆனந்த) முதல், 1915ஆம் வருட (ஆனந்த)ம் வரையுள்ளது. இப்பஞ்சாங்கத்தை அச்சிட்டு வெளியிட வெண்ணி சென்னை, மதுரை,

சிலோன் முதலியபல விடங்களிற் பலர் முயற்சித்தும்,இயலாது விட்டுவிட்டனர். இந்நூல்வெளிவரின் தமிழ் நாட்டா ரனைவருக்கும் பேருதவியாயிருக்கு மென்று கருதி தமிழ் நாடன்றி மலையாளம் கன்னடம், சிங்களம், பர்மா முதலிய வனைய நாடுகளிலும் மதுரை சோதிட சாஸ்திரி யென்று பிரக்கியாதி பெற்றவரும் திருப்பரங்கிரிப் பிரபாவம், மங்கம்மாள் அல்லது மதுரைக்கரசி முதலிய நூலாசிரியரும், இச்சோதிடப்பேரகராதிக் காசிரியரும், மதுரைப் புத்தகசாலைக் கதிபருமாகிய எஸ். கூடலிங்கம்பிள்ளை யவர்களால் தொகுத்து இங்கிலீஸ் 1914ஆம் வருஷம் வெளியிடப் பெற்றுள்ளது.

அறுபான்—அறுபது.

அறுமீன்—கார்த்திகை நட்சத்திரம், கார்த்திகைமாதம்.

அறுவகைப்பருவம் } ஒருவருடத்தை
அறுவகைஇருது } ஆறு பருவகாலங்களாகப் பிரிக்கப்பெறுவது. விபரம் இருதுவிற் காண்க.

அறுவாய்—கார்த்திகைநாள்.

அறுவை—சித்திரைநாள்.

அற்புதம்—பத்துக்கோடி.

அற்புதாக்கிரகம்—ஒருவகை பாலாரிட்டக் கிரகதோசநோய். இது குழந்தைபிறந்த பன்னிரண்டாம் நாள் அல்லது பன்னிரண்டா மாதம், அல்லது பன்னிரண்டாம் வருடம், குழந்தைக்கு அல்லது தாய்க்கு வரும் பீடையாம்.

அற்றைவாக்கியம்—பஞ்சாங்க வாக்கிய காலமாகிய இருநூற்று நாற்பத்தெட்டுத் தினங்களில் எடுத்துக்கொண்ட தினமாகிய அன்றையதினத்துக்குள்ள வாக்கியம்.

அனங்கசயனம்—அஸ்தம், புனர்பூசம், பூசம் இவைகள் ஆதிவாரத்தில் வருவது.

அனந்தம்—பத்துக்கோடி கோடி. கோடா கோடி, ஆகாயம்.

அனந்தசதுர்த்தசி—புரட்டாசிமாதம் பூருவ பக்கத்தில் வரும் பதினான்காந் திதி.

அனந்திருதிகை — ஆவணி மாதம் பூருவபக்கத்தில் வரும் மூன்றாந் திதி.

அனபாயோகம்—சந்திரனுக்கு முன்னும் பின்னும் சுபர்கள் நிற்பது.

அனலி—சூரியன்.

அனுவிலன்—சுக்கிரன்.

அனிலநாள் — சோதி நட்சத்திரம், விசாகநட்சத்திரம்.

அனுசநட்சத்திரம் } தாளி, தேள்,
அனுடநட்சத்திரம் } பனை, புல், பெண்ணை, போந்தை, மித்திர நாள்.

அனுசநாள் } அனுசநட்சத்திரம்.
அனுடநாள் }

அனுமதி—சதுர்த்தசி, பூரணை.

அனுமான் — சிற்பநூல் முப்பத்திரண்டி லொன்று.

அனுக்கிரகம்—கிரகங்கள் வக்கிரகதியிலே முன் இராசிக்குச் செல்லுதல்.

அனுவக்கிரகம்— கிரகங்கள் வக்கிர கதியிலே முன் இராசிக்குச் செல்லுதல்.

அனுவர்த்தனம்—பலன்.

அனுவழி—புதன்.

அனூரு—அருணன், புதன்.

அன்பு—ஐந்தாமிடம்.

அன்றில்—மூலநட்சத்திரம்.

அன்னகோட்டகன்—சூரியன்.

அன்னியவோடாவிகாகிரகம்--பாலாரிட்ட தோசத்தோடு பாலரைத் தொடரும் பன்னிரு பெண்கிரகங்களினொன்று. இது-குழந்தை பிறந்த எட்டாநாள், எட்டாமாதம், எட்டாவது வருடம் இவைகளெதிலாவது குழந்தையை, அல்லது தாயைப் பீடிப்பதாம்.

அன்னை—தாய், நாலாமிடம்.

## ஆ

ஆகாசக்கல்—சூரியகிரணத்தனு.

| | |
|---|---|
| ஆகாசக்கிரகம்<br>ஆகாயக்கிரகம்<br>ஆகாசக்கோள்<br>ஆகாயக்கோள் | பஞ்சபூத கிரகத்தொன்று, அவை-இராகு, கேது, சனி. |

ஆகாயவீதி—நட்சத்திரவீதி.

ஆகுலம்—வருடக்கடையில் பதினைந்துநாளும், மாதக்கடையில் மூன்றுநாளும், நட்சத்திரமுடிவில் இரண்டு நாழிகையுமாம்.

ஆக்கிநேயம்—தென்கீழ்த்திசை.

ஆக்கிரகாயணி—மிருகசீரிட நட்சத்திரம்.

ஆக்கினீயம்—ஆனிமாதம்.

ஆங்கீரச—ஆறாவது வருடம்.

ஆங்கீரச; வருடப்பலன்—அளவுக்கு மிஞ்சிய மழையால் விளைச்சல் கெட்டு வெள்ளப்பஞ்சமும், மேட்டுப் பூமிகள் விளைவும், மொத்தமாய்ப் பார்க்கில் சனங்களுக்குக் கஷ்ட முண்டாம். உதாரணம்—ஆங்கீ ரசவருட மான மழைமிகுத்து, நீங்காம னீரோடி நீள்புவனம்-பாங்காய், விளைவின்றிப் பஞ்சமிகுமே யுயிர்கட், களவின்றிச் செல்வமறு மே (இடைக்காடர்)

ஆசனன்—சுக்கிரன்.

| | |
|---|---|
| ஆசாடம்<br>ஆஷாடம் | ஆடிமாதம். |

ஆசான்—சுக்கிரன், வியாழன்.

ஆசிரபத்தன் — மூலநட்சத்திரத்திற் பிறந்தவன்.

ஆசிரமம்—மூலநட்சத்திரம்.

| | |
|---|---|
| ஆசுவினம்<br>ஆசுவின்<br>ஆசுவீசம் | ஐப்பசிமாதம். |

ஆசை—திசை.

ஆச்சந்திரார்க்கம்—பெருங்கால அளவு; இது சந்திரசூரியருள்ளமட்டும்.

ஆச்சிவீடு — சொந்தவீடு, சொந்தச் சேத்திரம், தனதுவீடு.

ஆடவை—பெண், மிதுனவிராசி.

ஆடி—உத்திராடநாள், கர்க்கடக மாதம், காற்று.

ஆடிக்கரு—கர்ப்போட்ட மேகம்.

ஆடிக்காற்று—ஆடி உத்திராடக்காற்று, மழைக்குறியிஞென்று.

ஆடித்திதிக்குறி — மழைக்குறியிஞென்று. இது-ஆடிமாதம் வளர்பிறையில் நவமித்திதியுஞ் சோதி நட்சத்திரமுங் கூடினநாளில் மந்தாரமாவது மழையாவது காற்றாவது குமுறலாவது மின்னலாவது உண்டாகில், மூன் மழையுண்டென்பதும்,

(2) தசமியும் விசாகமுங் கூடினபோது இக்குறியுண்டாகின், நடுவில் மழையுண்டென்பதும்,

(3) ஏகாதசியும் அனுசமுங்கூடினபோது இக்குறியுண்டாகின், பின்மழையுண்டென்பதும்,

(4) தேய்பிறைத் தசமியுடனேயாவது, ஏகாதசியுடனேயாவது ரோகணி நட்சத்திரங் கூடினபோது பொழுது கட்டினுல் நல்லமழையுண்டென்பதுமாம்.

ஆடிப்பஞ்சமி— மழைக்குறியிஞென்று; இது—ஆடிமாதம் வளர்பிறைப் பஞ்சமியில் ஞாயிற்றுக் கிழமைவரில் கொஞ்சமழை யுண்டாம், திங்கட்கிழமைவரில்வெள்ளமுண்டாம், செவ்வாய்க் கிழமைவரில் சண்டையுண்டாம், புதன்கிழமைவரில் பெருங்காற்றடிக்கும், வியாழக்கிழமைவரில் நல்லவிளைவுண்டாம், வெள்ளிக் கிழமைவரில் பெருமழையுண்டாம், சனிக்கிழமைவரில் விளைச்சல் குறைவுண்டாம்.

ஆடிப் பட்டம்—ஆடிப் பருவத்திற் பயிரிட உத்தேசிக்கும் நாள்.

ஆடு—மேடவிராசி.

ஆடை—சித்திரைநட்சத்திரம்.

ஆட்டை—ஆண்டு.

ஆண்கிரகம் } சூரியன், செவ்வாய்,
ஆண்கோள் } வியாழன்.

ஆண்டளப்பான்—வியாழன்என்னுங் கிரகம்.

ஆண்நட்சத்திரம்--புருடநட்சத்திரம்; இது—அஸ்தம், புனர்பூசம், பூசம்; திருவோணம், அபிசித்து; அனுசம், உத்திரட்டாதி, பூரட்டாதி, அசுபதி முதலியனவாம்.

ஆண்டு—வருடம், விபரம், வடத்திற் காண்க.

ஆண்டுமிச்சம் — கொல்லமாண்டின் தொகையிலிரண்டுதள்ளி ஏழிற் கொடுத்து கண்டசேடமாம்.

ஆண்ராசி--புருடராசி, இது-மேடம் மிதுனம், சிங்கம், துலாம், தனுசு, கும்பம் என்பனவாம்.

ஆதபன் } சூரியன்.
ஆதவன் }

ஆதாயம்— பதினொராமிடம், இலாபத்தானம்.

ஆதாயவிரையம் — நட்சத்திரஆதாயவிரையத்திலறிக.இலாபம்நட்டம்.

ஆதாரத்தோற்றம்—சூரியன், சந்திரன்.

ஆதானதிசை — சென்மநட்சத்திரத்திற்கு எட்டாவது நட்சத்திரதிசை.

ஆதி—சூரியன்.

ஆதிசாரம்—சிற்பநூல் முப்பத்திரண்டினொன்று.

ஆதிச்சனி—மகநட்சத்திரம்.

ஆதிதேவன்—சூரியன்.

ஆதித்தசூனு—சூரியன் மகன்; இது-சனி

ஆதித்ததிருட்டி } சூரியபார்வை;
ஆதித்தபார்வை } இது- சூரியன் நின்ற நட்சத்திரத்துக்கு, முன்மூன்று பின்மூன்று நட்சத்திரங்களும் குருட்டுநாட்களாம். அதற்கு முன் நான்கும் பின் நான்கும் ஒருகண்பார்வையுள்ள நாட்களாம். மற்ற நட்சத்திரங்கள் இருகண்பார்வையுள்ள நாட்களாம்.

ஆதித்தமணி—சூரியன்.

ஆதித்த மண்டலம் — சூரியமண்டலம்.

ஆதித்தன்—சூரியன்.

ஆதித்தன்சேய்—சூரியன்மகன்,இது சனி.

ஆதித்தன் மத்திபச்சா — சூரியனுக்குக் கடகமுதல் ஆறுராசியிற் கண்டசா. இது கணிதமுறை.

ஆதித்தியசா—சூரியனுடையசாவாக்கியம். இது கணிதமுறை.

ஆதித்தியன்—சூரியன்.

ஆதிரை—திருவாதிரை நட்சத்திரம்.

ஆதிவாரநக்தம் — அஸ்தநட்சத்திரங்கூடிய ஞாயிற்றுக்கிழமை.

ஆதிவாரம்—ஞாயிற்றுக்கிழமை.

ஆதேசம்—கிரகசாரம், புத்தி.

ஆத்திரேயன்—சந்திரன்.

ஆத்துமகாரகன் } உயிர்க்கிரகம்;இது
ஆத்துமா } சூரியன், பாகையிலுயர்ந்தோன்.

ஆநந்த—நாற்பத்தெட்டாவது வருடம்.

ஆநந்தாதியோகம்—ஓர்யோகம்; இது-இன்ன கிழமையில் இன்ன நட்சத்திரம்வரில் இன்னயோகமென்பதும் இதற்கு நன்மை தீமையும். விபரம்-ஞாயிறில்—அசுபதிவரில் ஆனந்தயோகம், தனலாபம். பரணிவரில் காலதண்ட யோகம், விக்கினம். கார்த்திகைவரில் தர்மயோகம், காரியசித்தி. ரோகணிவரில் பிரசாபதியோகம், சித்திகரம். மிருகசீரிடம்வரில் சௌமியயோகம், தனலாபம். திருவாதிரைவரில் துவாம்சயோகம், விக்கினம். புனர்பூசம்வரில் துவஜயோகம், வஸ்துலாபம். பூசம்வரில் ஸ்ரீவற்சயோகம், லட்சுமிகரம்.

## ஆநந்தாதியோகம்.

ஆயிலியம்வரில் வச்சிரயோகம், கலகம்.மகம்வரில் முத்கரயோகம், காரியக்கெடுதி. பூரம்வரில் சூத்திரயோகம், சௌக்கியம். உத்திரம்வரில் மித்திரயோகம், பூலாபம். அஸ்தம்வரில்மானசயோகம், ராசபூசிதம். சித்திரைவரில் பத்மயோகம், மித்திரலாபம். சுவாதிவரில் இலம்பயோகம், போசனலாபம். விசாகம்வரில் உற்பாதயோகம், துக்ககரம். அனுசம்வரில் மிருத்துயோகம், தீமையுண்டாம். கேட்டைவரில் சாரணயோகம், சம்பத்துண்டாம். மூலம்வரில் சித்தயோகம், சகலசித்தி. பூராடம்வரில் சுபயோகம், நன்மையுண்டாம். உத்திராடம்வரில் அமிர்தயோகம், வஸ்திரலாபம். அபிசித்துவரில் முசலயோகம், அசௌக்கியம், திருவோணம் வரில் தண்டயோகம் கெட்டபலன். அவிட்டம்வரில் மாதங்கயோகம், கஷ்டபலன். சதையம்வரில் இராக்கதயோகம், அபசகுனம்.பூரட்டாதிவரில் சரயோகம், சீக்கிரச்சித்தி. உத்திரட்டாதிவரில் ஸ்திரயோகம், தீர்க்கசித்தி. ரேவதிவரில் வர்த்தமானயோகம், லாபகாமிவைகளுண்டென்பதாம்.

(2) திங்களில்-மிருகசீரிடம் வரில் ஆனந்த யோகம்,தனலாபம். திருவாதிரைவரில்காலதண்டயோகம்,

## ஆநந்தாதியோகம்.

விக்கினம். புனர்பூசம்வரில் தர்மயோகம், காரியசித்தி. பூசம்வரில், பிரசாபதியோகம், சித்திகரம்.ஆயிலியம்வரில் சௌமிய யோகம், தனலாபம். மகம்வரில் துவாம்சயோகம், விக்கினம். பூரம்வரில் துவஜயோகம், வஸ்துலாபம். உத்திரம் வரில் ஸ்ரீவற்ச யோகம், லட்சுமிகரம்.அஸ்தம்வரில் வச்சிரயோகம், கலகம். சித்திரைவரில் முத்கரயோகம், காரியக்கெடுதி. சுவாதிவரில் சத்திரயோகம், சௌக்கியம். விசாகம்வரில்,மித்திரயோகம், பூலாபம்.அனுசம்வரில் மானசயோகம், ராசபூசிதம். கேட்டைவரில்பத்மயோகம்,மித்திரலாபம். மூலம்வரில் இலம்பயோகம், போசனலாபம் பூராடம்வரில் உற்பாதயோகம்,துக்ககரம். உத்திராடம் வரில் மிருத்துயோகம்,அசுபகரம். அபிசித்து வரில் சாரணயோகம், சம்பத்துண்டாம். திருவோணம் வரில் சித்தயோகம்.சகலசித்தி. அவிட்டம்வரில் சுபயோகம்,நன்மையுண்டாம். சதையம்வரில் அமிர்தயோகம்,வஸ்திரலாபம்.பூரட்டாதி வரில் முசலயோகம், அசௌக்கியம். உத்திரட்டாதி வரில் தண்டயோகம், அசுபகரம். ரேவதிவரில் மாதங்கயோகம், கஷ்டம். அசுபதி வரில் இராக்கதயோகம்,அபசகுனம், பரணிவரில்சரயோகம்,சீக்கிரச்

சித்தி. கார்த்திகை வரில் ஸ்திர யோகம், தீர்க்கசித்தி. ரோகணி வரில் வர்த்தமான யோகம்,லாபக ரம்.

(3) செவ்வாயில்-ஆயிலியம் வரில் ஆனந்தயோகம், தனலாபம்; மகம் வரில் காலதண்டயோகம், விக்கி னம்; பூரம்வரில் தர்மயோகம், கா ரியசித்தி. உத்திரம்வரில் பிரசா பதியோகம், சித்திகரம். அஸ்தம் வரில் சௌமியயோகம், தனலா பம்.சித்திரை வரில் துவாம்ஜயோ கம், விக்கினம். சுவாதிவரில் துவச யோகம், வஸ்துலாபம். விசாகம் வரில் ஸ்திரி வற்சயோகம், லட்சு மீகரம். அனுசம் வரில் வச்சிரயோ கம், கலகம். கேட்டை வரில் முத் கரயோகம், காரியக்கெடுதி.மூலம் வரில் சத்திரயோகம், சௌக்கிய ம். பூராடம் வரில் மித்திரயோகம், பூலாபம். உத்திராடம் வரில் மா னசயோகம், ராசபூசிதம். அபிசித் துவரில் பத்மயோகம், மித்திரலா பம். திருவோணம் வரில் இலம்ப யோகம், போசனலாபம். அவிட் டம் வரில் உற்பாதயோகம், துக்க கரம்.சதையம் வரில் மிருத்துயோ கம், அசுபகரம். பூரட்டாதி வரில் சாரணயோகம், சம்பத்து. உத்திர ட்டாதி வரில் சித்தயோகம், சகல சித்தி. ரேவதிவரில் சுபயோகம், சுப்பிரதம். அசுபதிவரில் அமிர்த யோகம், வஸ்திரலாபம். பரணி வரில் முசலயோகம், அசௌக்கி யம்.கார்த்திகை வரில் தண்டயோ கம், அசுபகரம். ரோகணி வரில் மாதங்கயோகம், கஷ்டம். மிருக சீரிடம்வரில் ராக்கதயோகம், அப சகுனம். திருவாதிரைவரில் சர யோகம்,சீக்கிரச்சித்தி. புனர்பூசம் வரில் ஸ்திரயோகம், தீர்க்கசித்தி. பூசம் வரில் வர்த்தமான யோகம், லாபகரம்.

(4)புதனில் அஸ்தம் வரில் ஆனந் தயோகம், தனலாபம்; சித்திரை வரில் காலதண்டயோகம், விக்கி னம்; சுவாதிவரில் தர்மயோகம், காரியசித்தி; விசாகம் வரில் பிரசா பதியோகம், சித்திகரம்; அனுசம் வரில் சௌமியயோகம், தனலா பம்; கேட்டைவரில் துவாம்சயோ கம், விக்கினம்;மூலம் வரில் துவச யோகம், வஸ்துலாபம்; பூராடம் வரில் ஸ்திரிவற்ச யோகம், லட்சு மீகரம்; உத்திராடம் வரில் வச்சிர யோகம், கலகம்; அபிசித்து வரில் முத்கரயோகம், காரியக்கெடுதி; திருவோணம் வரில் சத்திரயோ கம்,சௌக்கியம்; அவிட்டம் வரில் மித்திரயோகம், பூலாபம்; சதை யம் வரில் மானசயோகம், ராசபூ சிதம்; பூரட்டாதி வரில் பத்மயோ கம், மித்திரலாபம். உத்திரட்டாதி வரில் இலம்பயோம், போசனலா பம்; ரேவதி வரில் உற்பாதயோ கம், துக்ககரம். அசுபதி வரில்

ஆநந்தாதியோகம்.

மிருத்துயோகம், அசுபகரம்; பரணிவரில் சாரணயோகம், சம்பத்து; கார்த்திகை வரில் சித்தயோகம், சகலசித்தி. ரோகணிவரில் சுபயோகம், சுபப்பிரதம். மிருகசீரிடம் வரில் அமிர்தயோகம், வஸ்திர லாபம். திருவாதிரைவரில் முசல யோகம், அசௌக்கியம். புனர்பூசம்வரில் தண்டயோகம், அசுபம். பூசம்வரில் மாதங்கயோகம், கஷ்டம். ஆயிலியம்வரில் ராக்கத யோகம், அபசகுனம். மகம்வரில் சரயோகம், சீக்கிரசித்தி. பூரம் வரில்ஸ்திரயோகம், தீர்க்கச்சித்தி, உத்திரம்வரில் வர்த்தமானயோகம், லாபகரம்.

(5) வியாழனில் அனுசம்வரில்ஆனந்தயோகம், தனலாபம். கேட்டைவரில் காலதண்டயோகம், விக்கினம். மூலம்வரில் தர்மயோகம், காரியசித்தி. பூராடம்வரில் பிரசாபதியோகம், சித்திகரம். உத்திராடம்வரில் சௌமியயோகம், தனலாபம். அபிசித்துவரில் துவாம்ச யோகம், விக்கினம். திருவோணம் வரில் துவசயோகம், வஸ்துலாபம். அவிட்டம்வரில் ஸ்திரிவற்ச யோகம், லட்சுமீகரம். சதையம் வரில் வச்சிரயோகம், கலகம். பூரட்டாதிவரில் முத்கரயோகம், காரியக்கேடு. உத்திரட்டாதிவரில் சத்திரயோகம், சௌக்கியம். ரேவதி வரில் மித்திரயோகம், பூலாபம்.

ஆநந்தாதியோகம்.

அசுபதிவரில் மானசயோகம், ராசபூசிதம். பரணிவரில் பத்மயோகம், மித்திரலாபம். கார்த்திகைவரில் இலம்பயோகம், போசனலாபம். ரோகணிவரில் உற்பாதயோகம், துக்ககரம். மிருகசீரிடம்வரில் மிருத்துயோகம், அசுபகரம். திருவாதிரைவரில் சாரணயோகம், சம்பத்து. புனர்பூசம்வரில் சித்தயோகம், சகலசித்தி. பூசம்வரில் சுபயோகம், சுபப்பிரதம். ஆயிலியம் வரில் அமிர்தயோகம், வஸ்திர லாபம். மகம்வரில் முசலயோகம், அசௌக்கியம். பூரம்வரில் தண்டயோகம், அசுபம். உத்திரம்வரில் மாதங்கயோகம், கஷ்டம். அஸ்தம் வரில் ராக்கதயோகம், அபசகுனம். சித்திரைவரில் சரயோகம், சீக்கிரசித்தி. சுவாதிவரில் ஸ்திரயோகம், தீர்க்கசித்தி. விசாகம்வரில் வர்த்தமானயோகம், லாபம்.

(6) வெள்ளியில் உத்திராடம்வரில் ஆனந்தயோகம், தனலாபம். அபிசித்துவரில் காலதண்டயோகம், விக்கினம். திருவோணம்வரில் தர்மயோகம், காரியசித்தி. அவிட்டம்வரில் பிரசாபதியோகம், சித்திகரம். சதையம்வரில் சௌமிய யோகம், தனலாபம். பூரட்டாதி வரில் துவாம்சயோகம், விக்கினம். உத்திரட்டாதிவரில் துவசயோகம், வஸ்துலாபம். ரேவதிவரில்

ஆநந்தாதியோகம்.

ஸ்திரிவற்சயோகம், லட்சுமீகரம். அசுபதிவரில் வச்சிரயோகம், கலகம். பரணிவரில் முத்கரயோகம், காரியக்கெடுதி. கார்த்திகைவரில் சத்திரயோகம், சௌக்கியம். ரோகணிவரில் மித்திரயோகம், பூலாபம். மிருகசீரிடம்வரில் மானசயோகம், ராசபூசிதம். திருவாதிரைவரில் பத்மயோகம்,மித்திரலாபம். புனர்பூசம்வரில் இலம்பயோகம், போசனலாபம். பூசம்வரில் உற்பாதயோகம், துக்ககரம். ஆயிலியம்வரில் மிருத்துயோகம், அசுபகரம். மகம்வரில் சாரணயோகம், சம்பத்து.பூரம்வரில்சித்தயோகம், சகலசித்தி. உத்திரம்வரில் சுபயோகம், சுபப்பிரதம். அஸ்தம்வரில் அமிர்தயோகம், வஸ்திரலாபம். சித்திரைவரில் முசலயோகம், அசௌக்கியம். சுவாதிவரில் தண்டயோகம், அசுபகரம். விசாகம்வரில் மாதங்கயோகம்,கஷ்டம். அனுசம்வரில் ராக்கதயோகம், அபசகுனம். கேட்டைவரில் சரயோகம், சீக்கிரசித்தி. மூலம்வரில் ஸ்திரயோகம், தீர்க்கசித்தி. பூராடம்வரில் வர்த்தமான யோகம், லாபகரம்.

(7)சனியில் சதையம்வரில் ஆனந்தயோகம், தனலாபம். பூரட்டாதிவரில் காலதண்டயோகம், விக்கினம். உத்திரட்டாதிவரில் தர்மயோகம், காரியசித்தி. ரேவதிவரில் பிரசாபதியோகம், சித்திகரம். அசுபதிவரில் சௌமியயோகம், தனலாபம். பரணிவரில் துவாம்சயோகம், விக்கினம். கார்த்திகைவரில் துவசயோகம், வஸ்துலாபம். ரோகணிவரில் ஸ்திரிவற்சயோகம், லட்சுமீகரம். மிருகசீரிடம்வரில் வச்சிரயோகம், கலகம். திருவாதிரைவரில் முத்கரயோகம், காரியக்கெடுதி. புனர்பூசம்வரில் சத்திரயோகம்,சௌக்கியம். பூசம்வரில் மித்திரயோகம், பூலாபம். ஆயிலியம்வரில் மானசயோகம், ராசபூசிதம். மகம்வரில் பத்மயோகம், மித்திரலாபம்.பூரம்வரில் இலம்பயோகம், போசனலாபம். உத்திரம்வரில் உற்பாதயோகம், துக்ககரம். அஸ்தம்வரில் மிருத்துயோகம், அசுபகரம். சித்திரைவரில் சாரணயோகம், சம்பத்து. சுவாதிவரில் சித்தயோகம், சகலசித்தி. விசாகம்வரில் சுபயோகம்,சுபப்பிரதம். அனுசம் வரில் அமிர்தயோகம், வஸ்திரலாபம். கேட்டைவரில் முசல யோகம், அசௌக்கியம். மூலம்வரில் தண்டயோகம்,அசுபம்.பூராடம் வரில் மாதங்கயோகம், கஷ்டம்.உத்திராடம் வரில் ராக்கதயோகம், அபசகுனம். அபிசித்துவரில் சரயோகம், சீக்கிரசித்தி. திருவோணம் வரில் ஸ்திரயோகம், தீர்க்கச்சித்தி. அவிட்டம்வரில் வர்த்தமானயோகம், லாபகரம்.

ஆந்தை—பஞ்சபட்சியிலொன்று.

ஆந்தைக்காதல்—ஆந்தைகூவும்ஒலிக் குறிப்பால் சுபாசுபங் காண்பது. விபரம் — ஒருரை யுரைக்கு மாகி லுற்றதோர் சாவு சொல்லும், ஈரு ரை யுரைக்கு மாகி லெண்ணிய கருமம் நன்றாம், மூவுரையுரைக்கு மாகில் மோகமாமங்கைசேர்வாள், நாலுரை யுரைக்கு மாகில்நாழியிற் கலகஞ்சொல்லும், ஐந்துரை யுரைக்கு மாகி லங்கொரு பயணஞ் சொல்லும், ஆறுரையுரைக்கு மாகி லடுத்தவர் வரவுண் டாகும், ஏழுரை யுரைக்குமாகி லிறந்தபண் டங்கள் சேரும், எட்டுரையுரைக் குமாகில் திட்டெனச் சாவு சொல்லும்,ஒன்பது பத்து மாகி லுத்தம மாகுர் தானே என்னும் அகவற் பாவாலுணர்க.

ஆபத்துத்தானம் — இலக்கினத்திற் காறுமிடம்.

ஆபரணத்தானம் — இலக்கினத்திற் குமூன்றுமிடம்.

ஆபோக்கிலீபம் } இலக்கினமுதல்
ஆபோக்கிலீபராசி } மூன்றும் ஆறும் ஒன்பதாம் பன்னிரண்டாம் இராசிகளாம.

ஆப்தம்—அப்தம், ஆண்டு, வருடம். இதன் விபரம்—சிருட்டியாதிவருடம், பாண்டவவருடம், கலியுக வருடம், விக்கிரம வருடம், போஜராச வருடம், சாலிவாகன வருடம், கொல்லமாண்டு, இராம தேவர் வருடம், பிரதாபருத்திர வருடம், கிருஷ்ணராய வருடம், இஜரி வருடம், பசலி வருடம், இங்கிலீஷ் வருடம், மெய்கண்ட தேவர் வருடம், சிவஞான தேவர் வருடம் என்பனவாம்.

ஆப்பம்—கும்பவிராசி.

ஆம்பலரி—சூரியன்,

ஆம்பல்—ஒரெண், சந்திரன்.

ஆயம்—இலக்கினத்திற்குப் பதினோ ராமிடம்.

ஆயனம் — அயனம், ஆண்டிற்பாதி, வருடம்.

ஆயிரங்கதிரோன் }
ஆயிரங்கிரணன் } சூரியன்.
ஆயிரஞ்சோதி }

ஆயிரம்—சகத்திரம்.

ஆயிலியம் }
ஆயிலியநாள் } ஆயிலியநட்சத்திரம்.
ஆயில் }

ஆயிலிய நட்சத்திரம் — அரவு நாள், ஆயில், கௌவை, பாம்பு.

ஆயுகம்—வயது.

ஆயுகாரன் }
ஆயுட்காரன் }
ஆயுள்காரன் } சனி.
ஆயுட்காரகன் }
ஆயுள்காரகன் }

ஆயுசு—வயது.

ஆயுட்டானம் } உயிருக் குரியராசி.
ஆயுர்த்தானம் } இது-எட்டா மிட
ஆயுள்த்தானம் } மும் அதற்கெட்டா மிடமாகிய மூன்றுமிடமுமாம்.இவைகளுக்கு விரையத் தானங்களாகியஏழாம்இரண்டா மிடங்கள்மாக

கத்தானங்களாம். அன்றியும், சந்திரனிருந்த ராசிக்கு மவ்வாறே கொள்க.

ஆயுட்பொருத்தம்
ஆயுர்ப்பொருத்தம்
ஆயுள்பொருத்தம் } மணப்பொருத்தத் தொன்று, இது-பெண் நட்சத்திரமுதல் ஆண் நட்சத்திரம்வரை எண்ணின தொகையையும் ஆண் நட்சத்திர முதல் பெண்நட்சத்திரம்வரைஎண்ணின தொகையையும் தனித்தனி எழிற் பெருக்கி இருபத்தேழுக் கீந்த மிச்சம் பெண்ணினுடைய நாளினின்றும் எண்ணப்பட்ட தொகை குறைந்தால் ஆயுள் பொருத்தமுண்டாம். ஆணினுடைய நாளினின்றும் எண்ணப்பட்ட தொகை குறைந்தால் பொருந்தாது என்பதாம்.

ஆயுஷ்மான்
ஆயுண்மான் } நித்திய யோகத் தொன்று.

ஆயுதபீடை—இலக்கினத்திற் காருமிடம்.

ஆயுதபூசை—புரட்டாசிமாதம் பூருவ பக்கப் பிரதமை முதற்கொண்டு இலட்சுமி, சரசுவதி, துர்க்கை, இவர்களைக் குறித்து ஒவ்வொன்றுக்கு மூன்று நாளாக ஒன்பதுநாள், ஆயுதங்கள் முதலிய படைக்கலங்கள் புஸ்தகங்கள் வைத்துச் செய்யும் பூசை.

ஆயுதம்--எண்வகுப்பினென்று. அது-பதினாயிரம்.

ஆயுத்தானம்
ஆயுர்த்தானம்
ஆயுள்தானம் } உயிர்க்குரிய ராசி. விபரம்-ஆயுட்டானத்திற் காண்க.

ஆயுள்காரகன்—சனி.

ஆரம் — கீழ்வாயிலக்கம், கோணம், சனி, செவ்வாய்.

ஆரல்—அக்கினி, கார்த்திகை நட்சத்திரம், செவ்வாய்.

ஆரிய படன்
ஆரிய பட்டன் } ஓர் சோதிடசாஸ்திரி. இவர் சாலிவாகன சகாப்த மிருநூற்றின் மேலிருந்த ஓர் கணித மேதாவி.இவர் செய்த சோதிட சித்தாந்தத்தில் பூமி உருண்டை வடி வென்றும், பூமி தினந்தோறுந் தன் நாராசத்திலே சுழன்று வருகிற தென்றுங் கூறப்பெற்றுள்ளது.

ஆரியன்—குரு, சூரியன்.

ஆருத்திரை—திருவாதிரை நட்சத்திரம்.

ஆரோகணதிசை — நீசத்தை விட்டு உச்சத்திற் போகுங் கிரகதிசை.

ஆர்த்தானந்தத் திருதிகை—உத்திராடாம், பூராடம், மிருகசீரிடம், அத்தம், மூலம் இவற்றுளெதிலாவது பூருவபக்கத் திருதிகை சேர்ந்து வருவதாம்.

ஆர்மதி — கர்க்கடகவிராசி.

ஆலோன்—சந்திரன்.

ஆவணம்—புனர்பூச நட்சத்திரம்.

ஆவணி — ஆவணிமாதம் அவிட்டநட்சத்திரம், சிராவணமாதம்.

ஆவணிமுழக்கம்— மழைக்குறியினென்று. இது-ஆவணிமாதம், ஆரூர்

தேதி மேகமுழங்கினல் மழை யுண்டென்று சொல்வது.

ஆவணியவிட்டம்—ஆவணிமாதத்தில் வரும் அவிட்டநட்சத்திரம்; இது-பூணூலிடுவோர்கட்கோர் விசேட நாள்.

ஆவர்த்தம்--- சத்தமேகங்களினென்று;இது-நீர்பொழிதல், சுழல்காற்றுண்டாதல்.

ஆவி—உயிர், சென்மலக்கினம்.

ஆவேசனம்—சூரியமண்டலம்.

ஆளி—சிங்கவிராசி.

ஆறுமிடத்தின் காரகப்பெயர்—அவஸ்தை, பிணி, யுத்தம், ரோகம், சோரம், ஆயுதபீடை, துயரம், இரணம், ஆபத்து,வயிறு, சத்துரு, கடன், அவமிருத்து, பசி, தெய்வ சிந்தனை என்பனவாம்.

ஆறுமீன்—கார்த்திகை நட்சத்திரம்.

ஆறு—ஒரெண். அது-சடு, சட்.

ஆற்றுநட்சத்திரம்—அபிசித்து, ஆயிலியம், உரோகணி, சேட்டை, சதயம், பரணி, பூரம், விசாகம் என்பனவாம்,

ஆனந்த—நாற்பத்தெட்டாவது வருடம்.

ஆனந்த வருடப்பலன்—நல்ல மழையுண்டு, நெல் முதலிய நஞ்சைத் தானியங்கள் கரும்புப்பயிராகிய இவைகள் விருத்தியும்,மனிதர்களுக்கு எல்லாவகையிலும் நன்மையுமுண்டாம். என்றாலும் காய்த் தானியங்கள், கொட்டை முத்து முதலிய தயிலப்பொருள்கள் குறையும். உதாரணம்:— ஆனந்த ஆண்டதனிலாகாததொன்றுமில்லை, வானம்பொழியும் வரிவிளையும்--தேனே, கரும்புண்டாமாமணக்குக் காணாது காயில்,வருந்தானியங்குறைவாம் வந்து. (இடைக்காடர்.)

ஆனுமை—உத்திராட நட்சத்திரம்.

ஆனி—உத்திராடம், கேட்டை, மூலம், ஆனிமாதம்.

ஆனிமாதம்--சுக்கிரம்,சேட்டமாதம்.

ஆனியம்—நாள், பகல், பருவம், பொழுது, மூலநட்சத்திரம்.

ஆனைத்திசை—வடதிசை.

ஆன்—இடபவிராசி.

# இ

இகழ்ச்சித்தானம் — இலக்கினத்திற் காறுமிடம்.

இகுள் — இடி, கார்த்திகை நட்சத்திரம்.

இங்கிலீஷ் கரிநாள்—தமிழ் மாதங்களில் நற்காரியங்களுக்கு விலக்கப்பெற்ற தேதிகள் வருவது போல், இங்கிலீஷ் மாதத்தில் விலக்கப்பெற்ற தேதிகளாம். இது-பிரான்சு தேசத்திய நெப்போலியனென்னும் வீரன் தன் சுயானுபவத்தில் கண்டு நற்காரியங்களுக்கு விலக்கப்பெற்றது. விபரம்:—ஜெனவரிமீ 1, 2, 4, 6, 11, 12, 20. பிப்பிரவரிமீ 1, 6,

8, 9, 17, 18. மார்ச்சுமீ 11, 12 14,16. எப்பிரல்மீ 7, 8, 10, 17, 18. மேமீ 1, 3, 5, 6, 7, 8. சூன்மீ 1, 5, 17. சூலைமீ 4, 6. 17, 21. ஆகஸ்ட்டுமீ 6, 13, 20, 21. செப்டம்பர்மீ 3, 6, 10, 18, அக்டோபர்மீ 10, 15, 16. நவம்பர்மீ 6, 8, 16, 20. டிசம்பர்மீ 8, 16, 19, 22 தேதிகளாம்.

இங்கிலீஷ்மாதம் — கிறிஸ்துமாதம். இது-செனவரி, பிப்பிரவரி, மார்ச்சு, எப்பிரல், மே, சூன், சூலை, ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர்.

இங்கிலீஷ் வருடம் — கிறிஸ்து வருடம். இது-ஐரோப்பாக் கண்டத்தில் ஏசுகிறிஸ்து காலமுதற் கணிக்கப்பெற்றுவருகிறது. இதுஇந்திய கணிதப்படி, கலியுகம், மூவாயிரத்தி நூற்றொன்றும் வருடம் ஜெனவரிமாத முதல்தேதி வியாழக்கிழமை ஆரம்பமாகிறது.

இவ்வருடம் ஐரோப்பிய காலண்டர்ப்படி முன்னூற்று அறுபத்தைந்து நாளென்று ஆதியிற் கணிக்கப் பெற்றுவந்தது, பின்னோர்கள் இதின் ஒருதினத்தில் சொற்பப்பாகம் சேர்க்கவேண்டுமென்று முடிவுகட்டி, கிறிஸ்துவுக்குமுந்தி நாற்பத்துநாலாவது வருடத்தில் அலக்சாண்டிரியாவிலிருந்த (Soosiginus) சூசிஜினஸ் என்ற கணிதமேதாவி அறிந்து தெளிந்த சித்தாந்தப்படி திருத்தியமைத்தனர். இவ்வமைப்பினுல் நானூறு வருடத்திற்கு மூன்றுநாளும் சொற்ப நாழிகையும் அதிகப்பட்டுவருவதை பின்னுல் ஆராய்ந்தவர்களறிந்து, கிறிஸ்துபிறந்த ஆயிரத்து ஐநூற்று எண்பத்திரண்டாம் வருடத்தில் ரோமாதேசத்திய பதின்மூன்றுவது (Pope) மதாசிரியர் மேற்படி மூன்றுநாள் சொச்சத்தின் வித்தியாசத்தைச்சேர்ப்படுத்த நினைத்து நாலு நூற்றாண்டுகளுள் மூன்று நூற்றாண்டுகளின் ஒவ்வொரு நூற்றாண்டின் கடைசியில் வருகிற வருடத்தை லீப்பியராகக் கணக்கிடாமல் சாதாரணமான வருடங்களாகப் பாவித்து அந்தந்த வருடம் பிப்ரவரி மாதம் இருபத்தெட்டாந் தேதிகளென்றும், நாலாவது நூற்றாண்டின் கடைசியில் வருகிற வருடத்தைமாத்திரம் லீப்பியராக வைத்து அதற்கு இருபத்தொன்பது தேதியாக்கினர். இத்திருத்தத்தால் ஈடான மூன்றுநாள்போக மீதமிருக்குஞ் சொச்சத்தால் நாலாயிரவருடத்திற்கொருதரம் ஒருநாள் பேதமாகும். மேற்கூறிய ஏற்பாடு செய்கிறவரைக்கும் கிரமப்படி பத்துநாள் குறைந்திருந்தது. இந்த வித்தியாசத்தையுஞ் சேர்ப்படுத்துவதற்காக மேற்

படி கிறிஸ்து பிறந்த ஆயிரத்து ஐநூற்று எண்பத்திரண்டாம்வருடம் அக்டோபர் மாதம் நாலாந் தேதிக்குப்பிறகு பதினைந்தாந்தேதியென்று வைத்துக்கொண்டார்கள். இந்தப்புதிய ஏற்பாட்டை ஆயிரத் தெழுநூற்று ஐம்பத்து இரண்டாம் வருடத்தில் இங்கிலாந்தில் அனுட்டானத்திற்கொண்டு வந்தபோது பதினொருநாள் பிந்தியிருந்ததால் அவர்கள் ஆயிரத்தெழுநூற்று ஐம்பத்திரண்டாம் வருடம் செப்டம்பர்மாதம் இரண்டாந் தேதிக்குப்பிறகு பதினாலாந் தேதியென்று கணக்குவைத்துக் கொண்டார்கள்.

இஜரிமாதம் } முகம்மதிய மாதம்,
இசரிமாதம் } இது-முஹற்ரம்,ஸபர் ரபியுல்லவ்வல்,ரபியுல்லாகிர்,ஜமாதியுல்லவ்வல், ஜமாதியுல்லாகிர், ரஜப், ஜாபான், ரம்ஸான், ஷவ்வால், துல்கயிதா, துல்ஹச் என்பனவாம்.

இஜரிவருடம் } மகமதியர் ஆண்டு.
இசரிவருசம் } இது-மகமதுநபி மக்காவிலிருந்து மதினாவுக்கு ஓடிய காலம். இதையே மகமதியர் தங்களுக்குரிய வருட ஆரம்ப கால மாகக் கொண்டு வருகின்றனர். இது நமது பஞ்சாங்க கணிதப்படிகலியுகாதி 3723 ஆம் வருடத்திலும், சாலி வாகனன் 506 ஆம் வருடத்திலும் சந்திக்கின்றது. இங்கிலீஷ் கணிதமுறைப்படி கிறிஸ்து பிறந்த 622 ஆம்வருடம் ஜூலை 16 ஆந் தேதி வெள்ளிக்கிழமை முதல் மொகர மாதம் முதல்தேதி ஆரம்ப மாகிறது. இதன் கால அளவு வருடம் ஒன்றுக்கு 354 நாள், 48 நாழிகை, 8 விநாடி 36 தற்பரையாம். இக்கணிதப்படி, 210வருடத்திற் கொருமுறை முன் வந்ததுபோல தேதியும் கிழமையும் ஒன்றாக வரும்.

இசைஞானியார் திருநாள் — சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரம்.

இசைத்தேவர்—சந்திரன், சூரியன்.

இசைநாள்—உத்திரட்டாதி, பூரட்டாதி.

இஸ்திரிதீர்க்கப்பொருத்தம் } மணப்
ஸ்ரீ தீர்க்கப்பொருத்தம் } பொருத்தத்தொன்று.இது-பெண் நட்சத்திரம் முதல் ஆண் நட்சத்திரம் 13-க்கு மேற்பட்டிருத்தலாம்.

இடகலை—சந்திரகலை.

இடச்சுத்தம்—இன்ன இன்ன காரியங்களுக்கு இன்ன இன்ன இடம் சுத்தமென்பது; விபரம்-குடிபுகப் பன்னிரண்டு, முடிசூட்டப் பதினொன்று; அன்னம் ஊட்டப் பத்து; மயிர்கழிக்க ஒன்பது; உபநயனத்திற்கு எட்டு; விவாகத்திற்கு எழு; கோடியுடுக்க ஆறு,யாத்திரைசெய்ய ஐந்து, வித்தியாரம்பத்திற்கு நாலு; பொன்பூண இர

ண்டு ஆகிய இடங்களும் நீசேகாதிகளுக்கு இலக்கினமும் சுத்தமாயிருப்ப தென்பதாம்.

இடது கன்னம்
இடது கால்
இடது செவி
இடது தொடை } பதினொராமிடம்.

இடப அங்கம்—மூகம்.

இடப உருவம்—எருது.

இடப நிறம்—வெள்ளை.

இடபத்திக்கு
இடபத்திசை } கிழக்கு.

இடப மாதம்—வைகாசி மாதம்.

இடபம்—இடபவிராசி.

இடபயோகம் — சந்திரன் கேந்திமேறி சுக்கிரன் செவ்வாய் பதினொன்றில் நிற்க சந்திரனுக்குஒன்பதில் குருவிருப்பதாம்.

இடபாவி--ரிஷபத்திில்சூரியனிற்றல், வைகாசி மாதம்.

இடபவிராசி—இடபம்—இருல், உக்கம், எருது, ஏறு, குண்டை, சே, நந்தி, நரை, பசு, பாண்டில், பாறல், புல்லம், பூணி, பெற்றம், மூரி, விடை என்பனவாம்.

இடபவிரதம்—வைகாசி மாதத்திய சுக்கில பக்கத்து அட்டமியிற்செய்யும் விரதமுறை.

இடபவீதி—சூரியன் மூவகை வீதியின் நடுவீதி; இது-மீனம், மேடம், கன்னி, துலாம்.

இடப்பக்கம் — இடதுபக்கம், இது, அபசவ்வியம்.

இடவோட்டு—இடப்புறஞ் செல்லுதல், இது-இராகு, கேதுக்களின் நடை.

இடவோட்டு நட்சத்திரம் — உரோகணி, மிருகசீரிடம், திருவாதிரை, மகம், பூரம், உத்திரம், விசாகம், அனுசம், கேட்டை, திருவோணம், அவிட்டம், சதயம் என்பனவாம்.

இடை—சந்திரகலை-பௌரணை,

இடைநிலைக்கிரகம்
இடைநிலைக்கோள் } சந்திரன், புதன்.

இடைநிலைநாள்—அஸ்தம், அனுசம், ஆயிலியம், உத்திரட்டாதி, உரோகணி, கேட்டை, சதயம், சுவாதி, திருவாதிரை, திருவோணம், புனர்பூசம், பூசம், பூரட்டாதி, ரேவதி, விசாகம் என்பனவாம்.

இடையெழுஞ்சனி--பூரநட்சத்திரம்.

இடைராசி—உபயராசிகளாகிய மிதுனம், கன்னி, தனுசு, மீனம் என்பதாம்.

இட்டங்கட்டல் — இராசி நிலைவரைதல்.

இட்டம்—கிரகநிலையாலாகும் பலன்.

இந்தரி—இராகு.

இந்திரதிக்கு
இந்திரதிசை } கிழக்கு.

இந்திரவிகூடல்
இந்திரவிகூட்டம் } சூரியனுஞ்சந்திரனும் ஒன்றுசேர்தல். இது-அமாவாசை.

இந்திரயோகம்—ஐந்தாதிபதியும், பதினொன்றாதிபதியும், கிரகமாறி

நின்று, காலுக்குடையவனுடன் சந்திரன் கூடிநிற்பதாம்.

இந்திரனாள்—கேட்டை.

இந்திரன்—மிருகசீரிட நட்சத்திரம்.

இந்திரி—கிழக்கு.

இந்திரியக்கோள்—கண், காது, தோல், நாக்கு, மூக்கு முதலிய பஞ்சேந்திரியங்களுக்குரிய கிரகம். அதாவது:-சந்திரன், சூரியன், இராகு, கேது நீங்கிய ஐந்து கிரகங்களாம்.

இந்து—சந்திரன்.

இந்துபம்—மிருகசீரிட நட்சத்திரம்.

இந்துபுத்திரன்-சந்திரன்மகன், இது-புதன்.

இந்துமதி—பூரணை.

இந்துரவி கூட்டம்—அமாவாசை; சந்திரனும், சூரியனும், ஒரு ராசியில் சந்தித்தல்.

இந்துரேகை } சந்திரகலை.
இந்துலேகை }

இபவ—விபவ.

இமகரன்—சந்திரன்.

இமபடி—சூரியன்.

இயக்கம்—வடதிசை.

இயங்காத்திசை—சூனியதிசை.

இயங்குதிசை—பூரணதிசை.

இரங்கும்ராசி—கடகமுதல் தனுசுவரையுள்ள ஆறு ராசிகளாம்.

இரசகல்யாணதிருதிகை--மாசிமாதம் பூருவபக்கத்திய மூன்றாந்திதி.

இரசனி—இராத்திரி.

இர்சனிகரன் } சந்திரன்.
இரசனீகரன் }

இரசிதநாள் — சுக்கிரவாரம், வெள்ளிக்கிழமை.

இரசிதம்—இடி, வெள்ளி.

இரச்சுப்பொருத்தம் } மணப்பொருத்தத்திஞென்று, கயிற்றுப் பொருத்தம், நூற்பொருத்தம்.
இரட்சுப்பொருத்தம் }

இரச்சுயோகம் } சரராசி நான்கிலும் சூரியன் முதல் ஏழு கிரகங்கள் நிற்பதாம்.
இரட்சுயோகம் }

இரட்டை — இரண்டொன்ருனது, மிதுனவிராசி.

இரட்டைக்கை—கர்க்கடகவிராசி.

இரட்டைராசி—உக்மராசி, பெண்ராசி; இது-இடபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம். மிதுனவிராசிக்கும் பெயர்.

இரணத்துருவம் — கிரக புடத்தில் கழிக்கப்படுவது.

இரணியநேரம்—மாலைநேரம், அதாவது-பகலுமிரவுஞ் சந்திக்கும் வேளை.

இரண்டாமிடத்தின் காரகப்பெயர் - நேத்திரம், வலதுகண், பல், வாக்கு, வாய், மூக்கு, நாக்கு, முகம், புருவம், மாரகம், குடும்பம், தனம், சௌபாக்கியம், முற்சென்மம், நெற்றி, பாத்திரம், சனரச்சகம், கல்விக்கேள்வி முதலியனவாம்.

இரண்டு—யுகளம், உபயம், இணை, துணை, துவந்துவம், துவி, மிதுனம், யுகம், யுகளி.

இரதசத்தமி—மாசிமாதத்திய பூருவ பக்கத்தில் வரும் எழாந்திதி.

இரக்தாட்சி } ஐம்பத் தெட்டாவது
இரத்தாட்சி } ஆண்டு.

இரத்தாட்சி வருடப்பலன் — நல்ல மழையும், விபசாய விருத்தியும், நாற்காலுள்ள மிருகங்களுக்குப் பயமும், வேந்தர்பகையும், கடற் கரைப் பக்கங்களில் பஞ்சமுமுண்டாம். உதாரணம்—ரத்தாட்சியாண்டதனில் நாற்காலிக்கும் பயமாம். மெத்தமழையுண்டு, விளைவுண்டு, இத்தரையில், வேந்தர்பகைத்திடுவார், வெய்திக்குவாருதியிற், சார்ந்தபஞ்சமாகிவிடும் தான். (இடைக்காடர்)

இரத்தினவளிமாவிகாயோகம்— இரண்டாமிடமுதல் எட்டாமிடம்வரை எழு கிரகங்கள் நிற்பது. இதன்பலன்-அழகு, பிதிர்பத்தி, கணிதவித்தை, தனம், தீரம், வருங்காலமறியுந் தன்மை முதலியன வுண்டாம்.

(2) மூன்றாமிடமுதல் ஒன்பதாமிடம்வரை எழு கிரகமிருந்து, அதிவிரண்டு கிரகம் கேந்திரம் பெற்று நிற்பது. இதன்பலன்-யோகி, வித்துவான், வெற்றி, வாய்ச்சாலன், எக்காரியமுஞ் செய்து முடிக்கும் ஆற்றலுள்ள தீரனுமாவான்.

இரம்பாதிருதிகை — ஆவணிமாதம் பூருவபக்கத்து மூன்றாந்திதி.

இராஜை—அசுபதி நட்சத்திரம்.

இராவருமதி— இரவுதோறும் வருஞ் சந்திரன்.

இரவி—சூரியன்.

இரவிகன்னம்—சூரியனுக்கும் பூமிக்குமுள்ள தூரம்.

இரவியாமயோகம்— இரண்டில் பத்தில் சூரியன் செவ்வாயுச்சனுக ஒன்பதில் குரு நிற்பதாம்.

இரவிநாள்—இரேவதி நட்சத்திரம்.

இரவிபுடபுத்தி—சூரியனது உத்தம புடம்.

இரவிமைந்தன்-சூரியன்மகன். இது-சனி.

இரவிக்ஷேபம்—கிரணகாலத்தில் சூரியன் கிராந்திமார்க்கத்தில் சாய்ந்திருக்கை.

இரவு—இரா, இராத்திரி, நிசி.

இரவோன்—சந்திரன்.

இரா—இரவு, நிசி.

இராகப்புள்—மிதுனம்.

இராகு—கரும்பாம்பு, தமம், மதிப்பகை, மதியுணி, சாயாக் கிரகங்களிளொன்று.

இராகுகாரகப்பெயர் — தீர்த்த யாத்திரை, சாஸ்திர ஆராய்ச்சி, செல்வம், காமசம்போகம், வஞ்சகம், சூது முதலிய எச்சணி என்னும் பொய்யாட்டங்கள், குடிலம், வைத்தியம், தைரியம், பலகமை, பாண்டுரோகம், ரோகம், பொய், களவு, பரகிரகப்பிரவேசம் என்பனவாம்.

அன்றியும், தகப்பனைப் பெற்ற பாட்டன். யோகமிவைகளுக்கும் பெயர்.

இராகுகாலம் — நற்காரியங்களுக்கு விலக்கப்பட்டவேளை, விபரம்—ஞாயிறு, ௨௬¼, திங்கள், ௩¾, செவ்வாய், ௨௨½, புதன், ௰௫, வியாழம் ௰௮¾, வெள்ளி, ௰௧¼, சனி, ௭½ ஆகிய இந்த நாழிகைக்கு மேல் ௩¾ நாழிகைகொண்ட நேரமாம். உதாரணம்: அரியிருபத்தாறேகால் அம்புலி மூன்றே முக்கால், எரிவண்ண னிருபதோடு இரண்டரை புதன் மூவைந்து, குருபதி னெட்டேமுக்கால் குளிர் வெள்ளி பதினொன்றேகால், கரியனேழரை யிராகு காலமென்ற றிந்து கொள்ளே. என்னுஞ் செய்யுளாலு மறிக.

இராகுக்கிராகம்—சந்திரகிரணம்.

இராகுதிக்கு—வடகீழ்த்திசை.

இராகுதிசை } இராகுவின்அனுபவ பலாபலம் நடக்குங் காலம், இதன் வருசம் பதினெட்டு.

இராகு நிறம்—கறுப்பு.

இராகுபணிச்சக்கரம்—விதை விதைக்க நாட்பொருத்தம் பார்க்குஞ் சக்கரம்; விபரம்-சர்ப்பம் போல் ஒரு உருவம் வரைந்து தலையில் மூன்று, கழுத்தில் மூன்று, முதுகில் பன்னிரண்டு, வாலில் ஆறு, வயிற்றில் மூன்று, ஆக இருபத்தேழு வரைகளையும் உருவத்தின் குறுக்கே கீறி, தலையின் குறுக்கு வரையின் முதற்கோட்டிற் சுக்கிரன் எந்த நட்சத்திரத்தி லிருக்கின்றானோ, அந்த நட்சத்திரத்தை வைத்து, நேரே யெண்ணிவர தலையிலுள்ளமூன்றும் பயிர்தீயும், கழுத்துமூன்றும் நீர்ச்சாவி, முதுகு பன்னிரண்டும் பயிர்விருத்தி, வால் ஆறும் அற்பவிளைவு, வயிறு மூன்றும் பயிர்நாசம் என்பதாம்.

(2) ராகு நின்ற நாளை வயிற்றின் கடைசிக்கோட்டில்வைத்து இடது பக்கமாக எண்ணும்போது, நாலு ஐந்து ஆறு இந்த நட்சத்திரங்கள் கறுப்புத்தானியம் விதைக்க நல்லதென்றும், ஏழுமுதல் பன்னிரண்டுவரையுள்ள ஆறு நட்சத்திரங்களும் நெற்பயிர் செய்ய உத்தமமென்றும், மற்றவைகள் ஆகாதென்றுஞ் சொல்வாரு முளர்.

இராகுபுத்தி—ஒவ்வொரு கிரகதிசைகளின் உள் நடக்குங்காலம்.

இராகுபுத்திரன்—அமுதகடிகன்.

இராகுலிங்கம்—அலி.

இராகுவடிவம்—நெடுமை.

இராகுவின்குணம்—தாமதம்.

இராகுவின் சமித்து—அறுகு.

இராகுவின் சுவை—புளிப்பு.

இராகுவின் தானியம்—உழுந்து.

இராகுவின் திக்கு—தென்மேற்கு.

இராகுவின் பாஷை—அன்னிய பாஷை.

இராகுவின் பார்வை—குரூரம்.

இராகுவின் பிணி—பித்தம்.

இராகுவின் புட்பம்—மந்தாரை.

இராகுவின் ரத்தினம் — கோமேதகம்.

இராகுவின் ராசி—சரராசி.

இராகுவின் லோகம்—கறுங்கல்.

இராகுவின் வாகனம்—ஆடு.

இராகு வேளை—இராகு காலத்திற் காண்க.

இராகை—பூரணை.

இராக்கதிர்—சந்திரன்.

இராக்காலக் கிரகம்—இரவுக் குரிய கிரகம்; இவை சந்திரன், இருபாம்புகள், சனி, செவ்வாய் என்பனவாம்.

இராக் குளிகன்—இராத்திரிக் குளிகன், விவரம்-குளிகை காலத்திலறிக.

இராக்காலக் கோள்—இரவிற் குரிய கிரகம்; இது-இராகு, கேது, சந்திரன், சனி, செவ்வாய்.

இராசக் கிரகம் } இராசக் கோள் } சந்திரன், சூரியன், வியாழன்.

இராசதக் கிரகம்—சுக்கிரன்.

இராசதவேளை — முக்குணவேளையிலொன்று. இது-ஊக்கம், ஞானம், வீரம், நல்வழி, ஈகை, கல்வி, கேள்வி என்னும் எழு குணமுடையது.

இராசயோகம் } இராஜயோகம் } விசேஷ நல்லயோகம் இது—

(1) தருமகருமாதிபதிகள் கூடிநற்ருனத்தில் நின்ருலும்.

(2) தருமகருமாதிபதி சந்திர கேந்திரம் பெற்று ஐந்தாதிபன் அல்லது பதிஞெருதிபன், குருவாய் நின்ருலும்

(3) ஒன்பதுக் குடையவனேறிய அங்கிசாதிபதி குருவோடு கூடி இரண்டில் நின்று, அவனும் இரண்டு ஒன்பதுக் குரியவனுகி நிற்ருலும்

(4) இராகு நின்ற வீட்டோன் உச்சகோணத்திருக்க செவ்வாய் வலுவுற்றிருந்தாலும்

(5) நாலுக் குடையவன் நின்ற ராசி யாதிபதி பத்தில் நிற்க, இலக்கிஞதிபதி கூட அல்லது பார்வை பெற்றிருந்தாலும்

(6) சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, இந்த ஏழுகிரகங்களும் சரராசியில் நின்ருலுமாம்.

இராசமந்திரியோகம் } இராஜமந்திரியோகம் } ஐந்தோன் கோபுராங்கிசமேற குருஇலக்கினத்திருக்க, இலக்கிஞதிபனும் ஐந்தோனும் பார்க்க, புதன்நின்ற வீட்டோன் கேந்திரித்திருப்பது

(2) இலக்கிஞதிபன் குருவோடு கூடிகேந்திரிக்க, செவ்வாய்பார்க்க

அல்லது சூரியன், செவ்வாய் குரு கூடி நிற்பது

(3) சூரியன், சந்திரன், குரு, சுக்கிரன், இவர்கள் சேர்ந்தாலும், அல்லது தனித்தனியே பரவிநின்றாலும், சுக்கிரனை சுபர்பார்த்தாலும் அல்லது இரண்டாமிடமுதல் எட்டாமிடம்வரை ஏழு கிரகம் நின்றாலும்.

(4) அசுபதி, புனர்பூசத்தில் சனி இருக்க, மகம், மிருகசீரிடத்தில் குருவிருக்க, சித்திரை, பூசத்தில் புதனிருக்க, மகத்தில் சுக்கிரனிருக்க, பரணி, சுவாதி, இந்த நட்சத்திரங்களில் பிறந்தாலும்

(5) பத்தில் சூரியன் செவ்வாய் நின்றாலும், மூன்றில் சனிநின்றாலும், ஒன்பதில் குருவும், பத்தில் செவ்வாயும், நாலில் சுக்கிரனும் நின்றாலுமாம்.

இராசன்—சந்திரன்.

இராசா, இராஜா — இலக்கினதிபதி, அன்றியும் ஒவ்வொரு தானத்திற் கதிகாரியுமாம்.

இராசி—ஓரை, மத்தியானம், கூட்டம், மேடமுதலிய வீடு, சந்திரன் நிற்குமிராசி, சென்மலக்கினம்.

இராசி அங்கம்—இன்னராசி இன்ன அவயவமென்பதாம். அவை-மேடம் தலை, இடபம் முகம், மிதுனம் கழுத்து, கடகம் தோள், சிங்கம் மார்பு, கன்னி பக்கம், துலாம் முதுகு, விருச்சிகம் பீசம், தனுசு தொடை, மகரம் முழங்கால், கும்பம் கணுக்கால், மீனம் பாதம் என்பதாம்.

இராசி அதிபதி—இராசியில் ஆட்சி பெற்றவன், சொச்சேத்திரன், இராசிக்கு உடையவன்.

இராசி அதிபதிப் பொருத்தம்—இராசிக்குரிய கிரகங்களின் இணக்கம், அது-மணப்பொருத்தத்தொன்று. விவரம்-சூரியனுக்குக் குருவும். சந்திரனுக்குக் குரு புதனும், செவ்வாய்க்குப் புதனும், சுக்கிரனும், நட்பு, மற்றவர்சத்துரு. புதனுக்குச் சூரியனும், குருவுக்குச் செவ்வாயும், சுக்கிரனுக்குச் சூரியனும், சந்திரனும், சனிக்குச் சூரியனும், சந்திரனும், செவ்வாயும் சத்துரு. மற்றவர் மித்துரு என்பதாம்.

இராசி உருவம்—இன்னராசி இன்ன வடிவமென்பதாம். அவை-மேடம், வெள்ளாடு, இடபம் எருது, மிதுனம் ஆண் பெண், கடகம், நண்டு, சிங்கம், சிங்கம், கன்னி பெண், துலாம் தராசு; விருச்சிகம் தேள், தனுசு வில், மகரம் முதலை, கும்பம், குடம், மீனம், மீன் என்பதாம்.

இராசிகம்—அட்சரக்கணிதம், அம்சம், ஓரிராசி.

இராசிச்சந்தி. — இராசிநாதன்.

இராசிகளிற் கிரகங்கள் நிற்குங் காலம்— இன்னராசியில் இன்ன கிரகம் இவ்வளவுகாலம் நிற்பதென்பது; விவரம்-சூரியன், சுக்கிரன், புதன் இவர்கள் ஒரு மாதமும், செவ்வாய் ஒன்றரை மாதமும், குரு ஒருவருடமும், சனி இரண்டரை வருடமும், இராகு கேது ஒன்றரை வருடமும், சந்திரன் இரண்டேகால் நாளும் நிற்குமென்பதாம்.

இராசிகளின் பெயர்—மேடம், இடபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்பனவாம்.

இராசிகளின்பொதுப்பெயர்--இடம், இல், ஓரை, பவனம்.

இராசிக்காரன்--அதிட்டமுள்ளவன், இராசிக்கதிபதி.

இராசிச்சக்காம்—இராசிமண்டலம்.

இராசிச்சந்தி—ஒருராசிவிட்டு அடுத்தராசி எற்குஞ் சமையம். இதில்—மேடம், சிம்மம், தனுசு இவைகளுக்கு முதலில் அரைநாழிகையும், கடகம், விருச்சிகம், மீனம் இவைகளுக்கு முடிவில் அரைநாழிகையும் சந்தியாம். எல்லா இராசிகளிலும் கடைசிப்பாகம் இலக்கின சந்தியுமாம். எல்லா இராசிகளுக்கும் கடைசியில் அதாவது முடிவில் சந்தியுண்டென்பாருமுளர்.

இராசியின்சாதி--இன்னராசி இன்னசாதி யென்பது. அது—கடகம், விருச்சிகம், அந்தணச்சாதி, சிங்கம், தனுசு, மேடம், சத்திரியச்சாதி, துலாம், கும்பம், மிதுனம் வைசியசாதி, கன்னி, இடபம், மகரம் சூத்திரச்சாதி, அன்றியும் மேடம் வேளாளன், இடபம் இடையன், மிதுனம் சக்கிலி, கடகம் கன்னன், சிங்கம் அந்தணன், கன்னி நாவிதன், துலாம் செட்டி, விருச்சிகம் வேடன், தனுசு தட்டான், மகரம் வண்ணான், கும்பம் குயவன், மீனம் பறையன் என்பதுமாம்.

இராசித்தலைவர் — இராசிக்குரியவர்.

இராசிப் பொருத்தம்-மணப் பொருத்தத் தொன்று.

இராசித்திசை—இன்ன இராசிக்கு இன்ன திக்கு என்பது. விவரம்—மேடம், இடபம், மிதுனம், கிழக்கு. கடகம், சிங்கம், கன்னி, தெற்கு. துலாம், விருச்சிகம், தனுசு மேற்கு, மகரம், கும்பம், மீனம் வடக்கு என்பதாம்.

இராசியத்தானம்—மறைவிடம்.

இராசித்தியாச்சியம்--இன்னராசிக்கு இவ்வளவு நாழிகைத் தியாச்சியம் என்பது. விவரம் இலக்கினத்தியாச்சியம் பார்க்க.

இராசிநாதன் — அவ்வவ்விராசிக்கு அதிபதியான கிரகம்.

இராசி நிறம்—இன்னராசிக்கு இன்னநிறமென்பதாம். இது-மகரம், கன்னி, மிதுனம் கருப்பு, விருச்சிகம், மீனம் கும்பம் பச்சை, மேடம், தனுசு, சிங்கம் செந்நிறம், இடபம், கடகம், துலாம் வெண்மையாம்.

இராசிப்புடம்—இராசிகளில் நிற்குங் கிரகங்களின் நிலை.

இராசிப்பொருத்தம்— மணப்பொருத்தத் தொன்று, இது-பெண்ணுக்கும் புருடனுக்கும் ஒரேராசியானாலும், பெண்ணிராசிக்குப்புருடனிராசி ஆறுக்கு மேற்பட்டாலும் உத்தமம், மூன்று நான்கு இராசியாகில் மத்திமம், இரண்டு ஐந்து இராசியாகில் அதம மென்பதாம்.

இராசி மண்டலம்—இராசிச்சக்கரம், இராசிவட்டை, ஓரை.

இராசியாதாயவிரையம்—ஒவ்வொரு வருடத்திற்கும் இராசியின் சுபா சுப பலன்களை எட்டுவகையாகப் பகுத்துச் சொல்வது.

இராசிவக்கிரகம் — இராசிப் பிரிவினொன்று.

இராசிவசியம் — மணப்பொருத்தத் தொன்று.

இராசிவட்டம்—இராசிச்சக்கரம்.

இராசிவருக்கம்--தசவருக்கத்துளொன்று.

இராசிவீதி—மேடவீதி, இடபவீதி, மிதுனவீதி.

இராவலிக்கோள் — இரவில் வலியுள்ள கிரகம்; இது-சந்திரன், சனி, செவ்வாய்.

இராவிழிப்புராசிகள்—இரவில் விழிக்கு மிராசிகள்; இவை-மேடம், இடபம், மிதுனம், கடகம், தனுசு, மகரம் என்பனவாம்.

இராட்சத—நாற்பத்தொன்பதாவது வருடம்.

இராட்சதவருடப் பலன்—மழையில்லை, ஆகாயத்தில் வால் வெள்ளி முதலிய தூமகேதுக்களுண்டாகும், தேசத்தில் பஞ்சமுண்டாய் மனிதர்கள் கஷ்டமடைவார்கள், சூது வஞ்சனைகள் உலகிலதிகரிக்கும், அரசர் பயமும் உணவுப்பொருள் நட்டமு முண்டாம்.

உதாரணம்-"ராட்சதத்தில் மாரியறும் நல்வானிற் றூமமெழும், தாட்சியோடு தேயந் தயங்குமே, சூட்சியுடன், மன்னர் பயமிகுதி மாதே யுலகினிலே, அன்னமறுமென்றுணருவாய்" [இடைக் காடர்)

இராதம்—வைகாசிமாதம்.

இராதை—மின்னல், விசாக நட்சத்திரம்.

இராத்திரம், இராத்திரி } இரவு.

இராமன்—சந்திரன்.

இராமாணம், இராமானம் } இரவு நாழிகை.

இருது. இருது

இராவலிதுள்ள ராசிகள் — இரவில் வலிமை பெற்ற ராசிகள், விபரம்-காலுதையம் பார்க்க.

இரிசிபஞ்சமி—புரட்டாசிமாதம் பூருவபக்கத்தில் வரும் ஐந்தாந்திதி. இது-புராணமுறைப்படி ஓர் விரத நாள்.

இருகண் விழிப்புநாள்—இன்ன கிழமை விழிப்பதென்பது, விபரம் நாள்விழிப்பைப் பார்க்க.

இருகாற்கிரகம் } இரண்டு காலுள்ள
இருகாற்கோள் } கிரகம்; இவை-புதன், குரு, சுக்கிரன், சனி என்பனவாம்.

இருகால்ராசி—மிதுனம், கன்னி, துலாம், கும்பம்.

இருக்குங்கிரகம் }
இருக்குங்கோள் } புதன்,வியாழன்.

இருசட்—பன்னிரண்டு.

இருசுடர்—சூரியன், சந்திரன்.

இருதயம் — இலக்கினத்திற்கைந்தாமிடம்.

இருது — இரண்டு மாதங்கொண்ட ஒரு பருவகாலம்;குறிப்பு-சூரியன் பூமியின் கீழ்த்திசையின் தென் பாகத்திற் சில காலமும், வடபாகத்திற் சில காலமும், பூமத்திய ரேகைக்கு நேராகச் சில காலமுமிருப்பதால் சூரியகிரணம் பூமியின்மேல் ஒரே அளவாக விழாமல் பேதமாக விழுகிறது. இக்கிரணவீழ்ச்சியின் பேதத்தன்மையை யனுசரித்தே குளிர்வெப்பமாகிய சீதோஷ்ண நிலைகளும் வேறுபடுகின்றன. அப்படிப் பேதப்படும் இயல்பை அனுசரித்தே ஒருவருடகாலமாகிய பன்னிரண்டு மாதங்களையும் ஆறு வகுப்புக(பருவங்க)ளாகக் கீழ்க்கண்டவாறு பிரிக்கப் பெற்றிருக்கின்றன. எவ்வகையெனின்-சித்திரை, வைகாசி இளவேனிற் பருவம்; இது-வசந்தருது எனவும், ஆனி, ஆடி முதுவேனிற் பருவம். இது-கிரீஷ்மருது எனவும், ஆவணி, புரட்டாசி மழைப் (கார்காலம்) பருவம். இது-வருஷருது எனவும், ஐப்பசி, கார்த்திகை கூதிர்ப்பருவம். இது-சாருது எனவும், மார்கழி, தை முன்பனிப் பருவம். இது-ஹேமந்தருது எனவும். மாசி, பங்குனி பின்பனிப் பருவம். இது-சசிருது எனவும் சொல்லப்படும். அன்றியும் இங்கிலீஷ் கணிதமுறைப்படி மார்ச்சு முதல் மே வரையுள்ள மூன்று மாதங்களும் இளவேனிற் காலமென்றும், ஜுன் முதல் ஆகஸ்டு வரையுள்ள மூன்று மாதங்களும் வேனிற்காலமென்றும், செப்டம்பர் முதல் நவம்பர் வரையுள்ள மூன்று மாதங்களும், இலையுதிர் காலம்-அதாவது கூதிர்காலமென்றும், டிசம்பர் முதல் பிப்ரவரி வரையுள்ள மூன்று மாதங்களும்

பனிக் காலமென்றுஞ் சொல்லப் படும்.

இருதுகாலம்—பக்குவகாலம், பருவ காலம்; இது-கருப்பந்தரிக்கத் தகுந்தநாள். மற்றைய விபரம் இருதுவிற்காண்க.

இருதுக்கள்—இருதுவைப் பார்க்க.

இருதுசாஸ்திரம், இருதுநூல் } பெண்கள் பக்குவ காலத்தைக் கொண்டு நன்மை தீமையறிவிக்கும் நூல்.

இருதுவிருத்தி—வருடம்.

இருதொண்டு—பதினெட்டு.

இருத்தை—இருபத்துநாலு நிமிடங் கொண்ட ஒரு நாழிகை. இருபட்சங்களிலும்வரும் சதுர்த்தி, நவமி, சதுர்த்தசியாகியதிதிகளாம். நாழிகை வட்டிலுக்கும் பெயர்.

இருபிறப்பு, இருபுட்சன் } சந்திரன்.

இருவேளை—கெட்டநேரம், நல்ல நேரம்; இரவுபகல்.

இருள்—அந்தகாரம், அந்தரம், அல், கங்குல், கச்சளம், கருவரி, கருள், கார், சருவரி, தமம், திமிரம், துணங்கறல், துவாந்தம், நத்தம், நிசி, நீலம், மங்குல் என்பனவாம்.

இருள்வலி—சூரியன்.

இரேகாயோகம் — குரு, சுக்கிரன், சூரியன், இலக்கினாதிபன் ஆகிய இவர்கள், பாவவருக்கமேறி, நீசமூடம் பெற்றும், நாலுக்குடையவர் பாவரோடு கூடி ஆறெட்டுப் பன்னிரண்டில் நிற்றலுமாம்.

இரேவதம்—இரேவதி நட்சத்திரம்.

இரேவதி—இரவிநாள், கடைநாள், கலம், குலம், சூலம், தொழு, தோணி, நாவாய், பஃறி, புருடநாள், பெருநாள் என்பனவாம்.

இரைத்து—இரண்டு.

இரௌத்ரி — ஐம்பத்து நாலாவது வருடம்.

இரௌத்ரி வருடப்பலன் — மழையில்லை, வான்பயிர் விளையாது, வேளாண்மை குறையும், மக்கள் நோயினால் மடிய பெண்கள் அதிககஷ்டப் படுவார்கள், பொருள் நஷ்டமும் வடதேசத்திற் கொடிய பஞ்சமு முண்டாம்.

உதாரணம்—மிக்க ரௌத்திரியில் வேளாண்மை யற்பமாம், மக்கள் நோயால்மடிவர் வான் பொருள் போந்-தொக்க, மனக்கவலை யுற்றுழல்வர் மாதர் வடக்கில், கனக்க வறுமை வருங்காண். (இடைக் காடர்)

இலக்கம்—இலட்சம், எண்.

இலக்கின சட்டு வருக்கம்—இராசிக் குரியவாறு கணிக்கப்படு முறை.

இலக்கின காரகப் பெயர் — தலை, நிறம், சொரூபம், மூடி, மூர்த்தி, மெய், கீர்த்தி, ஜென்மம், அபிஷே

கம், கல்வி, சிந்தித்தல், பிரகிருதி, (இயற்கை) சந்தோஷம், மலை, உயிர், தேகம், மானிடம் என்பனவாம்.

இலக்கினசந்தி — இராசிச் சந்தியிலறிக.

இலக்கினத்தியாச்சியம்—மேடம், இடபம், கன்னி, தனுசு ஆகிய இவைகளுக்கு முதலில் அரை நாழிகையும், மிதுனம் சிங்கம் துலாம் கும்பம் ஆகிய இவைகளுக்கு நடுவில் அரை நாழிகையும், கடகம் விருச்சிகம் மகரம் மீனம் ஆகிய இவைகளுக்கு முடிவில் அரை நாழிகையுமாம்.

இலக்கினஸ் புடம் / இலக்கின புடம் } இராசியையொட்டிவருஞ் சுத்தபுடம்.

இலக்கினம் — இராசி, உதையம், ஓரை, கல்வியம், சென்மம், தேகம், முகூர்த்தம், ரூபம், சிரசு, மலை, வர்த்தமான சென்மமென்பதாம்.

இலக்கினவகை — இலக்கினத்தின் பகுப்புகள். இவை-பன்னிரண்டு வகைப்படும். விபரம்-(1) சென்மலக்கினம். (2) ஓரலக்கினம், (3) கடிகாலக்கினம், (4) ஆரூடலக்கினம். (5) நட்சத்திரலக்கினம். (6) காரகலக்கினம். (7) ஆதெரிசனலக்கினம். (8) ஆயுர் லெக்கினம். (9) திரேக்காண லெக்கினம், (10) அங்கிச லெக்கினம். (11) நவாங்கிஷ லெக்கினம். (12) பாவலக்கின மென்பனவாம்.

இலங்காபுரி / இலங்கை } இராவணேசுரன் இராஜதானி; இது-தென் சமுத்திரத்திலுள்ள திரிகூடமலையிலே விசுவகர்மாவால் ஆக்கப்பெற்றதாகச் சொல்லும் பட்டணம்; இது-சூரிய சித்தாந்தத்திலே சொல்லப்பட்ட மேசலா நகரங்கள் நான்கனுளொன்று; இதன் உள்நாட்டுச் சுற்றளவு எழுநூறு காதம் வெளிப்பரப்புள்ளது; சோதிட கணிதத்திற்கு நாடித்தானமாயிருந்தது, இப்போதுள்ள இலங்கை மேகலா ரேகைக்கு வடக்கே அதிதூரத்திலிருப்பதாலும் ஆதிலங்காபுரி மேகலாரேகையிலிருந்தமையாலும் கடலாற் கொள்ளப்பட்ட இலங்கையின் ஒரு சிறுகூறே தற்காலத் துளதாதல் வேண்டும்.

இலட்சம் / இலட்சியம் } இலக்கம், நூறாயிரம்.

இலட்சுமியோகம் — ஓர் சுபயோகம். விபரம்.

(1) பாக்கியாதிபனும் சுக்கிரனும் ஆட்சி உச்சம் கேந்திரம் திரிகோணம் இவைகளில் நின்றாலும்,

(2) இலக்கினாதிபதி கேந்திரம் மூலத்திரிகோணம் உச்சம் இவைகளில் வலுவுற்று நின்றாலும்,

(3) பாக்கியாதிபன் நாலில் நிற்க சுக்கிரன் தேவலோகாங்கிஷத்திலிருந்தாலும்,

(4) பாக்கியாதிபனோடு சுக்கிரன் கூடி பாரி சாதாங்கிஷம் பெற்றிருந்தாலும்,

(5) பஞ்சமலாபாதிபர் வீடு மாறி நின்று இலக்கினாதிபதி கேந்திர கோணத்தி லிருந்தாலும்,

(6) சூரியன்பர்வதாங்கிஷத்திலிருக்க, கருமாதிபதி வலுக்க, நாலுக்குடையவன் உச்சத்திருந்தாலும்,

(7) கேந்திரத்திலாவது திரிகோணத்திலாவது செவ்வாய் சுபருடனே கூடியிற்க, இலக்கினாதிபதி ஒரு பாவியுடனே யாவது கூடி பலத்துநின்றாலும்,

(8) குருலக்கினத்திலிருக்க, அல்லது பார்க்க,சூரியன் உச்சம்பெற, மூன்று அல்லது நான்காமிடத்தில் சுக்கிரன் நின்றாலும்,

(9) சுக்கிரன் உத்தமாங்கிஷம் பெற்று ஒன்பதில் சுபரிருக்கமூன்றில் உச்சக்கோள் நின்றாலும்,

(10) சந்திரன் குருசுக்கிரன் இவர்கள் பர்வதாங்கிஷம், பாரி சாதாங்கிஷம்,தேவலோகாங்கிஷமாகிய இவைகளில் எவை யேனுமாய் ஆட்சி பெற்று நின்றாலும்,

(11) சூரியன் சுக்கிரன் சிங்காசனாங்கிஷம் தேவலோகாங்கிஷம் ஆகியஇவைகளிலெதிலாவதிருக்க, சக்கிரன் உச்சம்பெற்றிருந்தாலும்,

(12) கேந்திரகோணத்தில் மூன்று கோளிருக்க நான்கு கோள்கள் மித்துருபார்வைபெற, சந்திரனுக்கு முன்பின் சுபக்கிரகமிருக்க, இலக்கினத்திற் குருவும் ஏழில் சுபக்கிரகமும் இரண்டில் புதனும் பன்னிரண்டில் சுக்கிரனுமிருக்க அமைதலும்,

(13) ஏழுகிரகங்கள் நட்பு, ஆட்சி, உச்சம், கேந்திரமாகிய இவைகளிலிருக்க, கேந்திரத்திலிருக்கும் இரண்டொன்பதுக்குடையவரை சுக்கிரன் பார்த்தலும்,இவ்யோகமாம்.

குறிப்பு;—இவை பல தீபிகை முதலிய பல நூல்களின் கருத்தாம்.

இலத்தை—சூரியனிருக்கிற நட்சத்திரத்திற்கு பன்னிரண்டாவதுநட்சத்திரமும், சந்திரனிருக்கிறதற்கு ஏழாவதும்,செவ்வாயிருக்கிறதற்கு மூன்றாவதும், புதனிருக்கிறதற்கு இருபத்துமூன்றாவதும், குருவிருக்கிறதற்கு ஆறாவதும், சுக்கிரனிருக்கிறதற்கு இருபத்தைந்தாவதும், சனி இருக்கிறதற்கு எட்டாவதும், இராகு கேதுக்களிருக்கிறதற்கு இருபத்தோன்றாவது நட்சத்திரமுமாம்.

இலம்பம், இலம்பனம் } உச்சத்திற்குத் துருவத்திற்குமுள்ள தூரம்.

இலம்பிதச்சா—சூரியன் மேலிராசியின் மேலேறும் பாகஅளவு.

இலம்பிதம், இலம்பிதமதி } சந்திர புட்த்தைச் சூரிய பாதையிற் சேர்க்குமோரளவு.

இலாடம்—சூரியன் நின்ற நட்சத்திர முதல் மூலம்வரை யெண்ணிக்

கண்ட தொகையைப் பூராடமுதல் எண்ணவரும் நாளாம்.

இலாபதி—புதன்.

இலாபத்தானம்—பதினொன்றாமிடம்.

இலாபாதிபன்—பதினொன்றுக்குடையவன்.

இலாவண்யயோகம் — இலக்கினாதிபனும் நாலுக்குடையவனும் சந்திரனோடுகூடி மூன்றாக் குடையவன் உச்சம்பெற்று நிற்பதாம்.

இலீலாவதி—ஓர் கணிதநூல், இது பாஸ்காராசாரியாற் செய்யப் பெற்றது. பிரகலாதன்றாயும் பாஸ்கராசாரியன் புத்திரியுமாகிய லீலாவதி (தன்பெயராற்) செய்யப் பெற்ற சோதிடசாஸ்திர மென்பாரு முளர்.

இலீனத்தானம்—மூன்று, ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகிய ராசிகளாம்.

இல்—இடம், இராசி, வீடு.

இல்வலை—மிருகசீரிடத்தின் தலையிலிருக்கும் நட்சத்திரம்,

இழைத்தநாள்—நியமித்தநாள், முடிவுநாள்.

இளங்கதிர்—காலையிற்றோன்றுஞ் சூரியகிரணம்.

இளமத்தியானம்—மத்தியானத்தின் முன் பொழுது.

இளவாதித்தன்—வாலசூரியன்.

இளவேனில்—சித்திரை வைகாசியாகிய பருவம்.

இறங்குபொழுது—சாயங்காலம்.

இறங்குமிராசி—கடகமுதல் தனுசுவரையிலுமுள்ள ஆறு ராசிகளாம்.

இறந்தகாலம் — சென்றகாலம், பூதகாலம்,

இறந்தகாலராசி— மேடம், கடகம். துலாம், மகரம் என்பனவாம்.

இரல்—இடபவிராசி, எருது, கார்த்திகை நட்சத்திரம்.

இறுதி—சாவு, முடிவு.

இறை—அதிபதி, அரசன், கடவுள், காலவிரைவு, நுட்பம்.

இனன்—சந்திரன், சூரியன்.

## ஈ

ஈசனாள்—திருவாதிரை நட்சத்திரம்,

ஈசானதிசை } வடகீழ்த்திசை.
ஈசானம்

ஈசுர } பதினோராவது வருடம்.
ஈச்சுர
ஈஸ்வர

ஈசுவரவருடப்பலன்—நல்லமழையும் நன்செய் புன்செய் முதலிய எல்லாப் பூமிகளிலும் பதினெட்டு வகைத் தானியங்கள் விருத்தியும், மனிதருக்கு ஆரோக்கியமும், விலங்கினங்கள் விருத்தியுமுண்டாம், உதாரணம்-நக்கனெனு மீசுர வருடநாமமதில், மிக்க பதினெட்டு வகை வெள்ளாண்மை, தக்க-விளைவுண்டு மாரியுண்டு மேதினியில் மாக்கள், தளர்வின்றி வாழ்வார் தழைத்து. (இடைக்காடர்)

ஈரவன் } சந்திரன்.
ஈர்ங்கதிர்

ஈனத்தானம்—மூன்று, ஆறு, எட்டு, பன்னிரண்டாமிடங்களாம்.

## உ

உ—இரண்டென்னும் எண்ணின் குறி.

உகசூரியர்—பன்னிரு சூரியர்.

உகம்—யுகம்.

உகாதி—யுகாதி.

உகாந்தம்—யுகப்பிரளயம், முடிவு.

உக்கம்—இடபம்.

உக்கிரநாள்—பரணி, மகம், பூரம், பூராடம், பூரட்டாதி என்பனவாம்.

உக்கிரம்—உத்திரம், பரணி, மகம்.

உக்மராசி — இரட்டைராசி. இது பெண்ராசி. விபரம்-இடபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் என்பனவாம். அன்றியும், மிதுனத்திற்கும் பெயர்.

உசம்—விடியற்காலம்.

உசற்காலம்—சூரியோதயம்.

உசனன்—சுக்கிரன்.

உசாகாலம்
உஷாகாலம் } சூரியோதயத்திற்கு நான்கு கடிகை முற்பட்ட காலம்.

உஷை
உசை } காலை, மாலை, இரவு.

உச்சக் கிரகம்
உச்சக் கோள் } அதிகநன்மை பெற்ற கிரகம், சுபக்கிரகநிலை.

உச்சசமயம்—மத்தியானம்.

உச்சத்தானம்—உச்சநிலை, உச்சவீடு.

உச்சநிலைக்கிரகம்
உச்சநிலைக்கோள் } சுக்கிரன், வியாழன், உச்சத்திலிருக்குங் கிரகம்.

உச்சநிலைநாள்—மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம். அன்றியும் உச்சத்திலிருக்கும் நட்சத்திரமுமாம்.

உச்சபங்கநீசயோகம் — ஆறெட்டுப் பன்னிரண்டில் உச்சரிருந்து சத்துருவினால்பார்க்கப்பெற்று சராங்கிச மேறியிருந்தாலும், அல்லது சத்துருவைக்கூடி உச்சமாயிருந்தாலும் இவ்யோகமாம்.

உச்சம்—உயர்ச்சி. அன்றியும் கிரகம் நட்சத்திரமாகியவைகளின் உச்சமும் மத்தியானமுமாம்.

உச்சராசி
உச்சவீடு } கிரகங்கள் உச்சம்பெறுமிடம். அன்றியும், உதயத்திற்கேழாம்வீடு, கிரகங்களின் உச்சவீடு, கிரகங்களின் நீசத்திற்கேழாம் வீடுமாம்.

உச்சி—நண்பகல், மத்தியானம்.

உச்சிக்கிழான்—சூரியன்.

உச்சசமயம்
உச்சிச்சமயம் } மத்தியானம். அன்றியும் கிரகம், நட்சத்திரம் ஆகியவைகள் உச்சம்பெறுங் காலமுமாம்.

உடலற்றநாள்— மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம். விபரம்-காலற்றநாளிற் காண்க.

உடலாதிபன்—சந்திரனிருந்த வீட்டுக்குடையவன்.

உடலுதயராசி—மீனம்.

உடல்ராசி—சந்திரனிருக்கும் வீடு.

உடற்கோள்—சந்திரன்.

உடு—நட்சத்திரம்.

உடுதிசை—நட்சத்திரதிசை. இது-சந்திர சூரியருடைய புடங்களைக் கூட்டிக்கண்ட நட்சத்திரதிசை.

உடுபதி } சந்திரன்.
உடுபன் }

உடுப்பகை—சூரியன்.

உடுவின்காந்தன் } சந்திரன்.
உடுவின்வேந்தன் }

உடைகுளம்—பூராடநட்சத்திரம்.

உட்டணகாரகன்—சூரியன்.

உட்டணசிகை — செவ்வாய், சனி, சூரியன் இவர்கள் நின்ற நட்சத்திரக் கால்களாம். அதாவது நட்சத்திர பாதமாம்.

உட்டணுசகம்—குளிர்காலம்.

உட்டணோபகமம்—வேனிற்காலம்.

உதக்கு—வடதிசை.

உத்தியானுசன்—வியாழன்.

உதயகாரகன்—சூரியன், இலக்கினாதிபனுமாம்.

உதயகாலம் } சூரியனுதிக்கும்நேரம்,
உதயகாலை } விடியற்காலம். அன்றியும் குழந்தை சென்னமாகும் நேரமுமாம்.

உதயமனம்—உதயம், உதயகாலம், விடியற்காலம்.

உதயம்—அதிட்டம், இலாபம், உதயவிராசி, கிரகம், நட்சத்திர முதலிய உதயங்கள்.

உதயலக்கினம் — சென்மலக்கினம் புலரி, விடியல், வைகறை; அன்றியும் ஆருடத்திற்கு அப்போது உதிக்குமிராசியுமாம்.

உதயன்—சூரியன், உதயராசிக்குரியவன், இலக்கினாதிபனுமாம்.

உதயாதி— விடியல். அதாவது பொழுது விடிந்தது முதலாம்.

உதயாதிபன்— உதயத்திற்குரியவன், சென்மராசியில் சொச்சேத்திரம் பெற்ற கிரகம், இலக்கினாதிபதியுமாம்.

உதயாஸ்தமனம் } கிரகங்கள் உதய
உதயாத்தமனம் } மாதல் அத்தமித்
உதயாத்தம் } தல். அதாவது கிரகங்கள் தோன்றுதல் மறைதல். அன்றியும் காலை மாலையுமாம்.

உதாதி—சூரியன்.

உதள்—மேடவிராசி.

உதித்தல்—உதயமாதல், தோன்றுதல், பிறத்தல்.

உதிப்பு—உதயமாதல்,பிறப்பு,தோற்றம்.

உதிரன்—செவ்வாய்.

உதிர்காலம்—இலையுதிர்காலம்,இது-உத்தராயன காலத்தின் முற்பகுதி.

உத்கீதன்—சந்திரன்.

உத்தமவிமிசதி — வருட மறுபதில் முதலில்வரும் இருபது வருடமாம். இவை-நல்லனவாகக்கொள்ளப்படுவன.

ஈனத்தானம்—மூன்று, ஆறு, எட்டு, பன்னிரண்டாமிடங்களாம்.

## உ

உ—இரண்டென்னும் எண்ணின் குறி.

உகசூரியர்—பன்னிரு சூரியர்.

உகம்—யுகம்.

உகாதி—யுகாதி.

உகாந்தம்—யுகப்பிரளயம், முடிவு.

உக்கம்—இடபம்.

உக்கிரநாள்—பரணி, மகம், பூரம், பூராடம், பூரட்டாதி என்பனவாம்.

உக்கிரம்—உத்திரம், பரணி, மகம்.

உக்மராசி — இரட்டைராசி. இது பெண்ராசி. விபரம்-இடபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் என்பனவாம். அன்றியும், மிதுனத்திற்கும் பெயர்.

உசம்—விடியற்காலம்.

உசற்காலம்—சூரியோதயம்.

உசனன்—சுக்கிரன்.

உசாகாலம், உஷாகாலம் } சூரியோதயத்திற்கு நான்கு கடிகை முற்பட்ட காலம்.

உஷை, உசை } காலை, மாலை, இரவு.

உச்சக் கிரகம், உச்சக் கோள் } அதிகநன்மை பெற்ற கிரகம், சுபக்கிரகமில்லை.

உச்சசமயம்—மத்தியானம்.

உச்சத்தானம்—உச்சநிலை, உச்சவீடு.

உச்சநிலைக்கிரகம், உச்சநிலைக்கோள் } சுக்கிரன், வியாழன், உச்சத்திலிருக்குங் கிரகம்.

உச்சநிலைநாள்—மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம். அன்றியும் உச்சத்திலிருக்கும் நட்சத்திரமுமாம்.

உச்சபங்கநீசயோகம் — ஆறெட்டுப் பன்னிரண்டில் உச்சரிருந்து சத்துருவினால்பார்க்கப்பெற்று சாரங்கிச மேறியிருந்தாலும், அல்லது சத்துருவைக்கூடி உச்சமாயிருந்தாலும் இவ்யோகமாம்.

உச்சம்—உயர்ச்சி. அன்றியும் கிரகம் நட்சத்திரமாகியவைகளின் உச்சமும் மத்தியானமுமாம்.

உச்சராசி, உச்சவீடு } கிரகங்கள் உச்சம்பெறுமிடம். அன்றியும், உதயத்திற்கேழாம்வீடு, கிரகங்களின் உச்சவீடு, கிரகங்களின் நீசத்திற்கேழாம் வீடுமாம்.

உச்சி—நண்பகல், மத்தியானம்.

உச்சிக்கிழான்—சூரியன்.

உச்சசமயம், உச்சிச்சமயம் } மத்தியானம். அன்றியும் கிரகம், நட்சத்திரம் ஆகியவைகள் உச்சம்பெறுங் காலமுமாம்.

உடலற்றநாள்— மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம். விபரம்-காலற்ற நாளிற் காண்க.

உடலாதிபன்—சந்திரனிருந்த வீட்டுக்குடையவன்.

உடலுதயராசி—மீனம்.

உடல்ராசி—சந்திரனிருக்கும் வீடு.

உடற்கோள்—சந்திரன்.

உடு—நட்சத்திரம்.

உடுதிசை—நட்சத்திரதிசை. இது சந்திர சூரியருடைய புடங்களைக் கூட்டிக்கண்ட நட்சத்திரதிசை.

உடுபதி } சந்திரன்.
உடுபன் }

உடுப்பகை—சூரியன்.

உடுவின்காந்தன் } சந்திரன்.
உடுவின்வேந்தன் }

உடைகுளம்—பூராடநட்சத்திரம்.

உட்டணகாரகன்—சூரியன்.

உட்டணசிகை — செவ்வாய், சனி, சூரியன் இவர்கள் நின்ற நட்சத்திரக் கால்களாம். அதாவது நட்சத்திர பாதமாம்.

உட்டணசகம்—குளிர்காலம்.

உட்டணோபகமம்—வேனிற்காலம்.

உதக்கு—வடதிசை.

உத்தியானுசன்—வியாழன்.

உதயகாரகன்—சூரியன், இலக்கினதிபனுமாம்.

உதயகாலம் } சூரியனுதிக்கும்நேரம்,
உதயகாலை } விடியற்காலம். அன்றியும் குழந்தை சென்னமாகும் நேரமுமாம்.

உதயமனம்—உதயம், உதயகாலம், விடியற்காலம்.

உதயம்—அதிட்டம், இலாபம், உதயவிராசி, கிரகம், நட்சத்திர முதலிய உதயங்கள்.

உதயலக்கினம் — சென்மலக்கினம் புலரி, விடியல், வைகறை; அன்றியும் ஆரூடத்திற்கு அப்போது உதிக்குமிராசியுமாம்.

உதயன்—சூரியன், உதயராசிக்குரியவன், இலக்கினதிபனுமாம்.

உதயாதி— விடியல். அதாவது பொழுது விடிந்தது முதலாம்.

உதயாதிபன்— உதயத்திற்குரியவன், சென்மராசியில் சொச்சேத்திரம் பெற்ற கிரகம், இலக்கினதிபதியுமாம்.

உதயாஸ்தமனம் } கிரகங்கள் உதய
உதயாத்தமனம் } மாதல் அத்தமித்
உதயாத்தம் } தல். அதாவது கிரகங்கள் தோன்றுதல் மறைதல். அன்றியும் காலை மாலையுமாம்.

உதாதி—சூரியன்.

உதள்—மேடவிராசி.

உதித்தல்—உதயமாதல், தோன்றுதல், பிறத்தல்.

உதிப்பு—உதயமாதல்,பிறப்பு,தோற்றம்.

உதிரன்—செவ்வாய்.

உதிர்காலம்--இலையுதிர்காலம்,இது உத்தராயன காலத்தின் மூற்பகுதி.

உத்கிதன்—சந்திரன்.

உத்தமவிமிசதி — வருட மறுபதில் முதவில்வரும் இருபது வருடமாம். இவை-நல்லனவாகக்கொள்ளப்படுவன.

உத்தரகாலம்—அடுத்தகாலம். அன்றியும் சாந்திரமாதம். இது-பூரணை தொடங்கி மற்றைப் பூரணைவரை வருங்காலம்.

உத்தரகிராந்தம்—மேற்செல்லுகை.

உத்தரதிசை—வடதிசை.

உத்தரபக்கம் / உத்தரபட்சம் } அபரபக்கம், கிருட்டிணபக்கம், வடபாகம்.

உத்தரபாத்திரபதம்--உத்திரட்டாதி, ரேவதி.

உத்தரபார்க்குனி—உத்திரம்.

உத்தரமத்திமபூமி—சீதோட்டின சமத்துவபூமி, துருவச்சக்கரத்திற்கும் சூரியமண்டலத்திற்கும் நடுவி லியங்கும் பூமி.

உத்தரமந்தோச்சம் — சூரியனுக்குங் கிரகத்திற்குமுள்ள தூரம்.

உத்தரம்— உத்திரநட்சத்திரம், வடக்கு.

உத்தராசாடம் / உத்தராஷாடம் } உத்திராடம்.

உத்தராசை—வடக்கு.

உத்தராடம்—உத்திராடம்.

உத்தரார்ட்சம்—பூகோளத்தின் வடபாகம்.

உத்தராதி—வடக்கு.

உத்தரார்த்தகோளம்—பூமியின் வடபாதி உண்டை.

உத்தராபதம்—வடக்கு.

உத்தராயனம் — சூரியன் வடக்கிற் சஞ்சரிக்குங் காலம். இது-தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி என்னும் ஆறுமாதமாம்.

உத்தாளம்—அஸ்த நட்சத்திரம்.

உத்தியோகஅதிபதி — நாலுபத்துக்குடையவன், கேந்திராதிபதி.

உத்தியோக காரகன்—சூரியன்.

உத்தியோகத்தானம்— கேந்திரத்தானம், பத்தாமிடம்.

உத்தியோகம்—கௌரி பஞ்சாங்க உறுப்பினென்று, சுகசீவன யோகம்.

உத்திரட்டாதி—அறிவனுள், நீபம், பிற்கொழுங்கோல், மன்னன், முரசு.

உத்திரம்—கடையெழுஞ்சனி, கதிர் நாள், செங்கதிர் நாள், செங்கதிர் பிறந்தநாள், பங்குனி, பார்குனி, மானேறு என்பனவாம்.

உத்திராடக் காற்று—மழைக் குறியினென்று; இது-ஆடிமாதம் உத்திராட நட்சத்திரத்தின் உதயத்தில் கீழ்காற்றடித்தால் பின் மழையும், அக்கினி மூலைக்காற்றும் தென் காற்று மடித்தால் கலகமும், பஞ்சமும், தென்மேற்குக் காற்றடித்தால் நல்லமழையும், வடமேற்குக் காற்றடித்தால் மிருகப்பலிதமும், விட்டிலும், புழுவும், வடகிழக்குக் காற்றடித்தால் முன் மாரியும்உண்டாம். அப்போது பூரணையுங் கூடி உதயகாலத்தில் பொழுதுங் கட்டினல் நல்லமழை உண்டாகுமென்பதாம்.

உபரக்தர். ருசக்யோகம்.

உத்திராடம்—ஆடி, ஆனி, கடைக்குளம், விசுவநாள்.

உத்திராசாடம் } உத்திராட நட்சத்
உத்திராஷாடம் } திரம்.

உத்பாதம்—குறைக்கொள்ளி, விண்வீழ் கொள்ளி.

உத்பாதயோகம்—அசுபயோகம்.விபரம்-அமிர்தாதியோகத்திற்காண்க.

உப—இரண்டு.

உபசயம்—இலக்கின விராசி முதல் மூன்று, ஆறு, பத்து, பதினொன்றுமாகிய விராசிகள்.

உபயசரியோகம்—சூரியனுக்கு இரண்டிலும், பன்னிரண்டிலும்,சந்திரன் நீங்கிய மற்றைய சுபக்கிரகங்கள் நிற்பதாம்.

உபசருக்கம்—உற்பாதம்.

உபசருச்சனம்—கிரணம்.

உபதேசத்தானம் — இலக்கினத்திற்கொன்பதாமிடம்.

உபயமாதம்—ஆனி, புரட்டாசி, பங்குனி, மார்கழி ஆகிய மாதங்களாம். இந்நான்கையும் மத்திமமாகக் கொள்வர்.

உபயம்—இரண்டு.

உபயராசி—மிதுனம், கன்னி,தனுசு, மீனம்.

உபரக்தர்—இராகு வினற் பீடிக்கப்பெற்ற சந்திர சூரியருக்குப் பெயர்.

உபராகம்—இராகு. அன்றியும் கிரகணத்திற்கும்,தொடுதற்கும் பெயர்.

உபற்பவம்—இராகு, கிரகணம்.

உபாகிதை — விண்வீழும் நட்சத்திரம்.

உமாபதி சிவாச்சாரியார் திருநட்சத்திரம்—சித்திரை மாதத்தில்வரும் அஸ்தநட்சத்திரம்.

உயர்தினம்—சுபநாள், நல்லநாள்.

உயிராதிபன் } இலக்கினத்திற் குடை
உயிரோன் } யவன், இலக்கினாதிபதி, அன்றியுஞ் சூரியனுமாம்.

உயிருடல் விவரம்—சூரியன் வீடாகிய சிங்கவீடுமுதல் மகரம்வரையுள்ள ஆறு ராசிகளும் உயிரென்றும், கும்பமுதல் சந்திரன் வீடாகிய கடகம் வரையுள்ள ஆறு ராசிகளும் உடலென்றுஞ் சொல்லப்படும்.அன்றியும் சென்மலக்கினம் உயிரென்றும்,சந்திரலக்கினம் உடலென்றுங் கூறப்படும்.

உயிர்ராசி — உயிருடல் விவரத்திற் காண்க.

உயிர்—இலக்கினம், உதயவிராசி.

உயிர்க்கோள்—இலக்கினாதிபதி,உயிர்க்குரிய கிரகம். அன்றியும் சூரியனுக்கும் பெயர்.

உயிர்த்தானம்—சென்மலக்கினம்.

உருசக்யோகம் } பஞ்சக் கிரகங்கள்,
ருசக்யோகம் } ஆச்சி, உச்சம், கேந்

திரம் இவைகளில் நிற்றல். இது-விசேட நல்ல யோகமாம்.

உருத்திரோற்காரி — ஐம்பத்தேழாவது வருடம்.

உருத்திரோற்காரி வருடப்பலன்— சொற்பமான முன் மழையால் தானியங்குறையும், ஆனல் பின் மழையினல் வலுத்த வித்துக்கள் பலன் தரும், ஆயினும் திருடர் பயமுமுண்டாம்.

உதாரணம்;— ஆருத்தி ரோற்காரி யஃகங் குறையுமே, மாரியற்பஞ் சோரர்பய மாகுமே பாரிற்கடைமாரி பெய்யுங் கனவித்து நன்ருய்த், தடையறவே யுண்டாகுந் தான். (இடைக்காடர்)

உருமம்—மத்தியானம், உச்சிநேரம்.

உருளி, உருளை, உருள் — உரோகணி நட்சத்திரம்.

உரோகணி நட்சத்திரம்—அயனுள், உருளி, உருளை, உருள், ஊற்ருல், சகடம், சகடு, சதி, தேர், பண்டி, பார், விமானம், வையம் என்பனவாம்.

உரோகணிநாள்— உரோகணிநட்சத்திரம்.

உரோகத் தானம் — இலக்கினத்திற்காருமிடம்.

உரோகிணி—உரோகணி.

உரோகிதம்—ஆகாயத்திற்ருேன்றும் இந்திரவில்.

உரோணி—உரோகணி நட்சத்திரம்.

உரோமகசித்தாந்தம்—சோதிடநூல்களுளொன்று. இது-உரோமகனென்னும் பண்டிதனுற் செய்யப்பெற்றது.

உரோமகபுரி—இது-முற்காலத்திலே மேகலா இரேகையிலே இலங்கைக்கு மேற்கே தொண்ணூறு பாகை தூரத்திலிருந்த பட்டணம்.

உலகநேத்திரன், உலகபாந்தவன் — சூரியன்.

உலக்கை—திருவோண நட்சத்திரம்.

உலக்கைத்திங்கள்—ஆவணிமாதம்.

உலோகபாந்தவன்—சூரியன்.

உலோகபாலர்—பூமிக்கு நாற்புறத்திலும் லோகாலோக பர்வதத்திலே இருந்து பூமியைக் காக்கின்ற சுதந்தவன், சங்கன், இரண்யரோமன், கேதுமந்தன் எனும் நால்வராம்.

உலோகாலோகம் — சக்கரவாளகிரி. இது-வட்டவடிவாயிருப்பது, இதுவரைக்குந்தான் சூரியகிரணம் வியாபிக்கும். இதில் மனிதர் வசிக்கவொண்ணுத பூப்பிரதேசத்தை அலோகமென்றும், வசித்தற்குரியதை லோகமென்றும் சொல்லப்படும். பூகோளத்தின் அதியுத்தாபாகத்தையும் அதிதெட்சண பாகத்தையும் அலோக மென்றும், இரண்டையும்பிரிக்கு மெல்லையையே லோகாலோக பர்வதமென்றுஞ் சொல்லப்படும்.

ஊர்த்தமுகராசி. எக்காளயோகம்.

உலோகிதம் } செவ்வாய்.
உலோகிதாங்கம் }

உவராகம்—கிரகண காலம்.

உவா } அமாவாசை, பூரணை.
உவாந்தம் }

உவாமதி—பூரணைச் சந்திரன்.

உவாவறுதி— அமாவாசை, பூரணை யிவைகளின் மூடிவு.

உழை—வைகரை.

உள்ராசி—திராசி நான்கு. இவை- இடபம், சிங்கம், விருச்சிகம், கும்பம் என்பவைகளாம்.

உள்ளமுடையான்— ஓர் சோதிட நூல்.

உற்கை—நட்சத்திரம், விண்விழும் நட்சத்திரத்திற்கும் பெயர்.

உற்பன்னதிசை — சென்ம நட்சத்திரத்திற்கு ஆறாவது நட்சத்திர திசை.

உற்பாதம்—கெட்டபலன், பூமியதிர்ச்சி, விண்வீழ் நட்சத்திரம், சூரியன் நின்ற நட்சத்திரத்திற்கு ஏழாவது நட்சத்திரமுமாம்.

உற்றூழி—வருத்தமான காலம்.

## ஊ

ஊ—சந்திரன்.

ஊசம்—விடியற்காலம்.

ஊர் } பரிவேடம்.
ஊர்கோள் }
ஊர்கோள்வட்டம் }

ஊர்ச்சம்—கார்த்திகை மாதம்.

ஊர்த்தமுகராசி—அதோமுக ராசிக்கு எதிர்ராசி.

ஊர்த்துராசி—மேனோக்கும் ராசி.

ஊர்த்துவம்—மேனோக்குதல்.

ஊர்த்துவராசி—மேனோக்குமிராசி.

ஊழி—நெடுங்காலம், யுகமுடிவு.

ஊழிக்காலம்—யுகமுடிவு.

ஊழ்—உலகமுடிவு, பழவினை, பூர்வ கன்மம், முடிவு, வெயில்.

ஊற்றால்—உரோகணி நட்சத்திரம்.

## எ

எ—ஏழென்னுந் தமிழெண்ணின் குறி.

எக்காளயோகம்—ஓர்சுபயோகம் விபரம்(1) நாலுபத்துக்குடையவர்கள் ஒன்றுக்கொன்று நட்பாகக் கேந்திரத்திலிருக்க இலக்கினாதிபதிவலுத்திருந்தாலும்,

(2) நாலுக்கதிபன் கேந்திரமூலத் திரிகோணத்தில் உச்சமாக இருந்தாலும்,

(3) உச்சாதிபதியுடன் இலக்கினாதிபதிகூடி உச்சாங்கிஷம் பெற்றிருந்தாலும்,

(4) ஒன்பதில் பாவருஞ் சுபருங் கூடிநிற்கப் பத்திற் சனி சூரியன் கூட இலக்கினம் உபயராசியாக விருந்தாலும்,

(5) நாலெட்டுக்குடையோர் கிரகமாற அல்லது கூடிக்கேந்திரத்தி விருந்தாலும்,

(6) இலக்கினாதிபதி பாக்கியாதிபதி இவர்கள் உச்சமூலத் திரிகோ

ணங்களில் பெலத்து இருந்தாலும்,

(7) சனி-வர்க்கோத்தமமாய் உச்ச மூலத் திரிகோணங்களிலிருந்தாலும், குரு அல்லது புதன் ஏழில் உச்சம் பெற்றிருந்தாலும்,

(8) சராசி இலக்கினமாகி குருவினுற் பார்க்க சுபர்கள் கேந்திரம் பெற்று இரவிற் செனனமானுலும் இவ்யோகமாம்.

எச்சில்தோசம்—பாலாரிட்டதோசத் தொன்று.

எட்டாமிடத்தின் காரகப்பேர்—தண்டனை, கொடுமை, அபானநோய், ஆயுள், கொலை, அவமதிப்பு, அவமிருத்து,விதி, அறிவின்மை,எளிய சீவனம்,துன்மரணம்,ஆயுதபீடை, விரோதம், பெருந்துயர், விக்கினம்,பாழ்,பிழை என்பவைகளாம்.

எட்டு—ஓரெண்.இது-அட்டம், மரணச்சடங்கிஞென்று.

எட்டுத்திக்கு—கிழக்கு,தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு.

எண்—இலக்கம், எண்ணிக்கை,கணிதம், கணக்கு, காரணம், சோதிட நூல்.

எண் கூட்டிப் பெருக்கல்—உறழல், உறழ்தல். அன்றியும் ஒற்றைபட எண்ணல் ஒன்றித்தல், இரட்டைபடவெண்ணல், இரட்டித்தல்.

எண்டிசையானை—எட்டுத்திக்குகளிலுமுள்ளயானை.இவை-ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், பட்பதந்தம், சாருவபூமம், சுப்பிரதீபம் என்பனவாம்.

எண்டிசையோனி — எட்டுத்திக்குகளிலுமுள்ள குறி. இவை-கொடி, புகை,சிங்கம், நாய், இடபம், கழுதை,காகம், மான் என்பனவாம்.

எண்சாஸ்திரம் } கணித நூல்.
எண்சாத்திரம் }

எண்டிக்கு—எட்டுத்திசை.

எண்டிசை—எட்டுத்திக்கு.

எண்டிசைப் பாலர்—அஷ்டதிக்குப் பாலகர். இவர்கள்-இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்பவராம்.

எண்ணப்படுதல்—கணிக்கப்படுதல்,

எண்ணர்—கணிதர்.

எண்ணலளவு— இலக்கத்தால் எண்ணும் அளவு,

எண்ணல்—எண்ணுதல், கணித்தல்.

எண்ணிக்கை—எண், கணிப்பு.

எண்ணிடல்—கணக்கிடல்.

எண்வகுப்பு—ஒன்று முதல் முப்பத்தாறு தானம் வரை வ்ருவன.

எண்வகைக்கணிதம்—எட்டுவகையாகச் கணக்கிடுதல். அவை-சங்கிவிதம், விபகலிதம், குணனம், பாகரம்,வர்க்கம், வர்க்கமூலம், கனம், கனமூலம் என்பனவாம். இவை-முறையே கூட்டல்,கழித்தல்,பெருக்கல்,பங்கிடல்,சமமாகிய இரட்

டை எண்ணின் பெருக்கம், வர்க்கத் தொகையி லிருந்து அதன் மூலமாகிய வரம்பறிதல், சமமாகிய மூவெண்ணின் பெருக்கம், கனத்தொகையி லிருந்து அதன் மூலமாகிய ஒரு மூலையறிதல் முதலியனவாம்.

எதிர்காலம்—பவுடியகாலம், வருங்காலம்.

எதிர்காலராசி — உபயராசி நான்குமாம். இவை-கன்னி, தனுசு, மிதுனம், மீனம் என்பனவாம்.

எதிர்நோக்கு—ஏழாம் பார்வை, நேர் பார்வை.

எதிர்நோக்குக்கிரகம் } நேர் பார்வை
எதிர்நோக்குக்கோள் } யுள்ளகிரகம்.
இவை-சந்திரன், குருவுமாம்.

எதிர்நோக்கு நாள் — நேர் பார்வையுள்ள நட்சத்திரம், பக்க நட்சத்திரம்.

எதிர்நோக்கு ராசி—நேர் பார்வையுள்ள விராசி.விபரம்-இருகால் ராசியைக் காண்க.

எயிறிலி—சூரியன்.

எரி—கேட்டை, புனர்பூசம்.

எரிதிங்கள்—ஆனிமாதம்.

எரிநாள்—கார்த்திகை நட்சத்திரம்.

எரிபொழுது—இலங்கு பொழுது, செவ்வானப் பொழுது.

எருது—இடபவிராசி.

எருதுக்கரணம்—கரணம் பதினொன்றிலொன்று.

எலி—பூரநட்சத்திரம்.

எலித்திலசை—வடமேற்குத்திசை.

எல்—இரவு, சூரியன், நாள், பகல், வெயில்.

எல்லவன்—சந்திரன், சூரியன்.

எல்லி—இராத்திரி, சூரியன்.

எல்லிநாதன் } சந்திரன்.
எல்லிநாயகன் }

எல்லிப்பகை—சூரியன்.

எல்லு—சூரியன், நாள்.

எல்லை—சூரியன், நாள், பகற்பொழுது.

எல்லைப் பொருள் — உத்தரார்த்த கோளத்திற்குத் தெற்கே யுள்ள சமரேகை.

எல்லோன்—சூரியன்.

எல்வை—காலம், நாள், பொழுது, பருவம்.

எழுவகைப்பிறப்பு—தேவர், மனிதர் விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்பனவாம்.

எழுவகைப் பெண்பருவம்—பெண்களின் வயதை ஏழு பருவங்களாகப் பிரிக்கப்படுவது.எவ்வகையெனில்,

(1) பேதைப்பருவம்,இதன்வயது ஏழு.

(2) பெதும்பைப் பருவம், இதன் வயது பதினொன்று.

(3) மங்கைப்பருவம், இதன்வயது பதின்மூன்று.

(4) மடந்தைப் பருவம், இதன் வயது பத்தொன்பது.

(5) அரிவைப்பருவம், இதன்வயது இருபத்தைந்து.

(6) தெரிவைப்பருவம், இதன் வயது முப்பத்தொன்று.

(7) பேரிளம் பெண்பருவம், இதன் வயது நாற்பது, அன்றியும் காலத்திற்கிணங்கப் பருவங்கொள்வாருமுளர்.

எழுவா யெழுஞ் சனி—மகநட்சத்திரம்.

எழுவான்—கிழக்கு.

எற்பாடு—மாலைப்பொழுதுக்கு முன் பத்து நாழிகை நேரம், மாலைப் பொழுதுமாம்.

எற்றேகரம்—சூரியோதயம்.

என்றவன் } சூரியன்.
என்று }

என்றூழ்—கோடை, சூரியன், வெயில்.

## ஏ

ஏகதினப் பொருத்தம்—மணப்பொருத்தத்தி னொன்று. விபரம்-சோதிட சாரப் பொக்கிஷ புத்தகத்திற் காண்க.

ஏகதேகம்—புதன்.

ஏகம்—ஒன்று, தனிமை.

ஏகாங்கம்—புதன்.

ஏகாட்சி—சுக்கிரன்.

ஏகாதசம்—பதினொன்று.

ஏகாதசி—பதினொன்றாந் திதி.

ஏகாந்தம்—புதன்.

ஏகார்க்களம்—உழுவதற்கு நாள் பார்ப்பது.

ஏதியம்—கிரணம்.

ஏமந்தம் } முன் பனிக் காலம்.
ஏமந்தருது } இவை-மார்கழி, தை.

ஏமம்—இரவு.

ஏரி—புனர்பூச நட்சத்திரம்.

ஏர்பு—கிரக கதி.

ஏர்மங்கலம்—ஏர்பூட்டுஞ் சுப நாள்.

ஏர்வாரம்—சுமவாரம்.

ஏர்விளம்பி } முப்பத் தொன்றாவது
ஏவிளம்பி } வருடம்.

ஏர்விளம்பி வருடப்பலன்—எங்கும் மழைக்குறைவும் வேளாண்மைநட்டமும் தானியவிலை ஏற்றமும் அநியாயக் காரர்களாற் சனங்களுக்கும் அரசர்களுக்கும் கலகங்களும் மரணங்களும் நெருப்புப் பயமு முண்டாம்.

உதாரணம்—ஏர்விளம்பி மாரியற்பம் எங்கும் விலை குறைவாம், பூவில் விளைவரிதாம் போர்மிகுதி, சாவதிகம்-ஆகுமேவேந்தரனியாயமேபுரிவர், வேகுமே மேதினிமேல். (இடைக்காடர்)

ஏழாமிடத்தின் காரகப்பெயர்—களத்திரம், மனைவி, போகம், சுகம், விவாகம், வர்த்தகம், சத்குருமம், யாத்திரை, மனமகிழ்ச்சி, நல்யோகம், மாரகம் என்பனவாம்.

ஏழு—சத்தம்.

ஏழுமேகங்கள் — மழை பெய்வதற்கமைந்த மேகங்கள். இவை எழுவகைப்படும். எவ்வகையெனில்,

(1) சம்வர்த்தம்; இது-முத்து முதலிய நவமணிகளைப் பெய்வது.

(2) ஆவர்த்தம்;இது-நீரைப் பெய்வது.

(3) புட்கலா வர்த்தம். இது-பொன் முதலிய உலோகங்களைப் பெய்வது.

(4) சங்காரித்தம். இது-பூ முதலியவற்றைப் பெய்வது.

(5) துரோணம். இது-மண் முதலியவற்றைப் பெய்வது.

(6) காளமுகி. இது-கல் முதலியவற்றைப் பெய்வது.

(7) நீலவருணம். இது-தீமுதலியவற்றைப் பெய்வது,

ஏழ்பரியோன்—சூரியன்.

ஏறு—அசுபதி நட்சத்திரம், இடபவிராசி, சிங்கம்.

ஏறுபொழுது—இளநேரம்.

ஏறுமிராசி—மகரமுதல் மிதுனம்வரையிலு முள்ள ஆறுராசிகள்.

## ஐ

ஐசிரசு—சுபகாரியங்களுக்கு விலக்காயுள்ள வீதிபாத யோகத்தின் பிற்பாதி.

ஐஞ்ஞூறு—ஒரெண்.

ஐந்தங்கம்—பஞ்சாங்கம். அவை-வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் என்பனவாம்.

ஐந்தவம்—மிருகசீரிட நட்சத்திரம்.

ஐந்தாமிடத்தின் காரகப் பெயர்—தந்தை, பிதிர், தகப்பன், பக்தி, புத்தி, மந்திரம், அன்பு, ஞானம், போசனம், பிரபு, மார்பு, புத்திரப்பேறு, மாமன், இருதயம், பாசம், சிந்தனை, சித்தம், கர்ப்பம், பஞ்சமத்தானம் என்பனவாம்.

ஐந்தாம்பக்கம் — சுக்கில பக்கத்து ஐந்து, பத்து, பதினைந்தாம் நாட்கள்.

ஐந்தானம்—மிருகசீரிடம்.

ஐந்திரம்—கிழக்கு, சிற்பநூல்முப்பத்திரண்டி ளொன்று, நித்திய யோகத் தொன்று, இந்திரனாற் செய்யப்பெற்ற ஓர் இலக்கணம்.

ஐந்திரி—கிழக்கு, கேட்டை.

ஐந்து—அஞ்சு, பஞ்சம்.

ஐந்தொகைவினு—ஒரு கணக்கு.

ஐப்பசி—அசுபதி நட்சத்திரம், ஆசுவீசம், ஐப்பசிமாதம்.

ஐமீன்—அஸ்த நட்சத்திரம், உரோகணி நட்சத்திரம்.

ஐம்பூதம்—பஞ்சபூதம் பார்க்க.

ஐயானனம்—சிங்க விராசி.

ஐவகைப்பொழுது —சிறுபொழுதில் வகையைந்து; அவை-காலை, நண்பகல், மாலை,யாமம், வைகறை,

ஐவிரல்—அஸ்த நட்சத்திரம்.

## ஒ

ஒட்டுருவம்
ஒட்டுவிசேடம் } மாலிக் கிரகம்.

ஒதுக்கிடம்—மறைவிடம்.

ஒருகண் விழிப்பு நாள்—நாள்விழிப்பறிய.

ஒருகலை—அமாவாசி, திதி, பக்கம்.

ஒருகாலிலி—சனி.

ஒருபொழுது—ஒருகாலம், ஒருசந்தி.

ஒருவேளை—ஒருபொழுது.

ஒளி—சந்திரன், சூரியன், நட்சத்திரம்.

ஒளியோன்—சூரியன்.

ஒள்ளியோன், ஒற்றைக்கண்ணோன் } சுக்கிரன்.

ஒற்றையாழித்தேரோன், ஒற்றையாழியோன் } சூரியன்.

ஒற்றைராசி—ஆண்ராசி, இவை—மேடம், மிதுனம், சிங்கம், துலாம், தனுசு, கும்பம் என்பனவாம்,

ஒன்பதாமிடத்தின் காரகப்பெயர்—நிதி, திரவியம், பாக்கியம், சினேகம், குருபத்தி, திருப்பணி, தருமம், தவம், கடவுள் பத்தி, நவமணி, புத்திரர், வித்தை, மாளிகை, தகப்பன், பிதிர், அகம், உபதேசம், யோகம், ஞானம் என்பனவாம்.

ஒன்பது—ஒன்பான், தொண்டு, நவம்.

ஒன்பான்—ஒன்பது.

ஒன்று—ஏகம்.

## ஓ

ஓசைஇராசி—ஆண்ராசி; இது-பன்னிருஇராசிகளையும், ஓசை உக்மமாகப் பிரிக்கப் பெற்றது.

ஓடதிபதி, ஓஷதீசன் } சந்திரன்.

ஓணம்—திருவோண நட்சத்திரம்.

ஓராதிபன்—இலக்கினதிபதி, இராசிக்கதிபதி.

ஓரை—இரண்டரை நாழிகை கொண்ட நேரம், இராசிப்பொது, இலக்கினம், ஐந்து நாழிகை கொண்ட நேரம், சமயம், முகூர்த்தம், ஒருமணி நேரங்கொண்டதுமாம்.

ஓரைக்கதிபதி—இலக்கினதிபதி, இராசிக்கதிபதி.

## ஔ

ஔத்தாநபாதி—துருவநட்சத்திரம்.

## க

க, ககன் } சூரியன்.

ககுபம்—திசை.

ககோளசாஸ்திரம்—வானசாஸ்திரம்.

ககோளம்—கோளம், வானவட்டம்.

ககோளவித்தை—வானசாஸ்திரம்.

கங்குல்—இரவு, பரணிநட்சத்திரம்.

கங்குற்கிறை—சந்திரன்.

கசரிபு—சிங்கம்.

கஞ்சரன்—சூரியன்.

கடகஅங்கம்—தோள்.

கடகஉருவம்—நண்டு.

கடகசாதி—கன்னன்.

கடகதிக்கு—தெற்கு.

கடகநிறம்—வெள்ளை.

கடகமாதம்—ஆடிமாதம்.

கடகரவி—ஆடிமாதம், கடகத்தில் சூரியனிற்றல்,

கடகராசி—அலவன், கள்வன், குளிர், சேக்கை, ஞெண்டு, நண்டு, நள்ளி, மதி,

கடன் ஸ்தானம் — இலக்கினத்திற் காருமிடம்.

கடி — கல்யாணம், காலநுட்பம், காலம், பொழுது, நாள், பருவம்.

கடிகாசூத்திரம் — கடிகாரம், நாழிகை வட்டம்.

கடிகை — நாழிகை.

கடிகையாரம் — கடிகாரம்.

கடியாரம் — நாழிகைவட்டம்.

கடைக்குளத்திங்கள் — ஆடிமாதம்.

கடைக்குளம் — உத்திராட நட்சத்திரம்.

கடைநாள் } இரேவதி.
கடைமீன் }

கடையுவா — பௌரணை, பூரணை.

கட்கயோகம் — ஓர்சுபயோகம். இவை

(1) இலக்கினத்திற் சூரியனும், பாக்கியத்தில் மதிசெவ்வாய் கூடி நிற்கினும்,

(2) செவ்வாய் அங்கிசாதிபதி, கேந்திர கோணத்திற் குரு பார்க்க நின்றாலும்,

(3) எழிற் குருவும், ஒன்பதிற்சுக்கிரனும், நாலிற் சனியுமிருக்க, இலக்கினத்திற் புதன் பாவர்களாற் பார்க்கப்படாமலிருந்தாலும்,

(4) ஐந்தொன்பதுக் குடையோர் கூடிக் கேந்திரிக்க, இலக்கினுதிபதி கேந்திரகோணம் பெற்றாலும்,

(5) நாலொன்பதுக் குடையோர் கூடிக் கேந்திரிக்க, ஒன்றேழுக்குடையவர் கிரகமாறிநிற்க, பாக்கியத்தோன் கேந்திரகோணமிருந்தாலும்,

(6) கருமாதிபன் நான்கிலும், பாக்கியாதிபன் சிங்காசனுங்கிசம் பெற்றும், அட்டமாதிபன் உச்சம் பெற்றுமிருந்தாலுங் கட்கயோகமாம்.

கட்டகாலம் } கிரகந் தீங்கான காலம்.
கஷ்டகாலம் }

கட்டளை — துலாராசி.

கணகன் — கணிதன்.

கணக்கன் — கணிதன், புதன்.

கணக்கு — எண், எழுத்து.

கணக்குவகை — சங்கிலிதமென்னுந் தொகை, பாகரமென்னும் பிரிவு, குணனமென்னும் பெருக்கல், விவகலிதமென்னுங் கழித்தல் ஆகிய நான்கு வகைகளாம்.

கணப்பொருத்தம் — விவாகப் பொருத்தத்தொன்று. விவரம்:- பெண்ணினுடைய நட்சத்திரமும், புருஷனுடைய நட்சத்திரமும், ஒரே கணமானால் உத்தமம். இராட்சதகணமும் தேவ கணமுமாகிற் சண்டையுண்டாம். இராட்சதகணமும் மனிதகணமுமாகில் மரணமுண்டாம். மனிதகணமும், தேவகணமுமாகில் மத்திபமாம். அன்றியும் செய்யுட் பொருத்தத் தொன்றுமாம்.

கணப்பொழுது — நொடி நேரம்.

கணம் — காலநுட்பம், கான்குமிடம், அல்லது முப்பது கலை கொண்ட காலஅளவு, பதினெட்

டென்னும் ஓரிலக்கம், மாத்திரை, வட்டம், வருக்கம், நட்சத்திரம். அன்றியும்-மூக்கணமுமாம்.

கணம்மூன்று—இராக்கதகணம், தேவ கணம், மனிதகணம். அன்றியும் எண்கணம், பதினெண் கணமு முண்டாம்.

கணிகம்—நூறுகோடி.

கணி—கணிதஞ் செய்வோன்.

கணிதசாஸ்திரம்— ககோள சாத்திரம்.

கணிதசிந்தாமணி } ஓர் சோதிட
கணிததீபிகை } நூல்.

கணிதம்—எண், எண்ணிக்கை, சோதிட நூல்.

கணிதர்—கணக்கர், சோதிடர்.

கணித்தல்—அளவு குறித்தல், எண்ணல், மதித்தல்.

கணிப்பு—கணித்தல்.

கணை—பூரநட்சத்திரம்.

கண்டகம்—ஏழாமிராசி.

கண்டங்கள்—நான்கு கேந்திரங்கள். இவை;-ஒன்று, நான்கு, ஏழு, பத்து என்னும் இடங்கள். இவற்றுள்;- உதயகேந்திரத்தை உதய கண்டமென்றும், நான்காங் கேந்திரத்தைக் கீழ்நீர்க்கண்ட மென்றும், ஏழாங்கேந்திரத்தை பாட்டுக்கண்ட மென்றும்,பத்தாங்கேந்திரத்தை உச்சிக்கண்ட மென்றுஞ் சொல்வர்.

கண்டத்தானம்—கேந்திரஸ்தானம்.

கண்டம்—நவகண்டங்களாக வகுக்கப்படும் பூப்பிரதேசம், நித்திய யோகத் தொன்று.எல்லை, தத்து. அதாவது அவமிருத்து, பங்கு.

கண்டாந்தநாழிகை—அசுபதி, மகம், மூலம் ஆகியவைகளின் முதற்காலும், ஆயிலியம்,கேட்டை, இரேவதி ஆகியவைகளின் கடைக்காலுமாம். இவற்றில்,முன் மூன்றுக்கும் முதலில் எட்டு நாழிகையும், பின் மூன்றுக்கும் கடையில் எட்டு நாழிகையுமாம். அன்றியும் கடகம், விருச்சிகம்,மீனம் இவைகட்கு அந்தியத்திலும், மேடம், சிங்கம், தனுசு இவைகட்கு ஆதியிலுமாம்.

கண்டீரவம்—சிங்கம்.

கதவாக்கியம்— பஞ்சாங்கக் கணன வாக்கியத்துளொன்று.

கதவு நிலை நிறுத்தல்—சித்திரையில் வடக்கே வாசலும், ஐப்பசி தெற்கே வாசலும், ஆடி கிழக்கே வாசலும், தை மேற்கே வாசலுமாக வைத்தல் நன்றென்பதாம்.

கதாயோகம்—ஓர் சுபயோகம். விபரம்:—(1) சூரியாதி ஏழு கிரகங்கள்-இலக்கினத்திலும், நான்கினிலுமிருந்தாலும்,

(2) மேற்படி கிரகங்கள்-நான்கிலும், ஏழிலுமிருந்தாலும்,

(3) மேற்படிகிரகங்கள்—ஏழிலும், பத்திலுமிருந்தாலும்,

(4) மேற்படிகிரகங்கள்-பத்திலும், இலக்கினத்திலு மிருந்தாலும்.

(5) இரண்டிற்-குரு, சுக்கிரன், சந்திரன் ஆகிய இவர்கள் கூடி நிற்கப் பாக்கியனாற் பார்க்கப் பெற்றாலும் இவ் யோகமாம்.

கதி—அதிட்டம், கிரகநடை.

கதிரவன்—சூரியன்.

கதிரெழு துகள் — அணு எட்டுக் கொண்டது, சூரியகிரணத்தெழுந் துகள்.

கதிரோன்—சூரியன்.

கதிர்—சூரியன், கிரணம்.

கதிர்நாள்—உத்திரநாள்.

கதிர்ப்பகை—இராகு, கேது.

கதிர்மகன்—சனி.

கத்தரி---வேனிற் காலத்துக் கடுங் கோடையாகிய சித்திரை மாதம் இருபத்து மூன்றாந் தேதி முதல் வைகாசி மாதம் ஏழாந்தேதி வரையிலுள்ள அக்கினி நாள்.

கத்தரிப் பிரவேசம்—சூரியன், மேடராசியிற் பரணி மூன்றாம் பாதத்திற் செல்வதாம்.

கந்தகிரகதோசம்—பாலாரிட்ட தோசத் தொன்று.

கந்தகிரகம்—பாலக்கிரகத்தைக் காண்க.

கந்தசஷ்டி, கந்தசட்டி—ஐப்பசிமாதத்தின் சுக்கிலபட்சத்து ஆறாந்திதி.

கந்தருவம்—எட்டுவித விவாகங்களி னொன்று.

கந்தாயம்—பங்கு, வருடத்தின் மூன்றத் தொருகூறு, வினைவுகாலம்.

கந்தாய பலன்—வருடத்தின் மொத்தபலனை நட்சத்திரத்தாற் சொல்வது, விபரம்;-நட்சத்திர கந்தாயத்திலறிக.

கந்துகயோகம்—ஓர் சுபயோகம். விபரம்:-கருமாதிபன் பாக்கியத்திருக்க, இரண்டாதிபன் இலக்கினத்திருக்க, இலக்கினாதிபன் நாலில் நிற்பது.

கபஸ்தி—சூரியகிரணம்.

கபிலாட்டமி—புரட்டாசிமாதம் அபரபக்கத்தில் வரும் எட்டாந்திதி.

கமலசத்தமி—சித்திரை மாதம் அபரபக்கத்தில் வரும் ஏழாந்திதி.

கமலயோகம்—ஓர் நல்ல யோகம். இது;-நான்கு கேந்திரங்களிலும் ஏழு கிரகங்கள் நிற்றலாம்.

கமவாரம்—நிலவிளைவுக்கியைந்த வாரம்.

கயினி—அஸ்த நட்சத்திரம்.

கர—இருபத்தைந்தாவது வருடம்.

கரசை—யானைக்கரணம்.

கரணம்—பஞ்சாங்க உறுப்பினுளொன்றாகிய பதினொன்றுகரணங்கள். இவற்றுள்,

(1) பவகரணம். இது-சிங்க உருவுள்ளது.

(2) பாலவ கரணம். இது-புலியுருவுள்ளது.

(3) கவுலவ கரணம். இது-பன்றியுருவுள்ளது.

(4) தைதுலைக் கரணம். இது-கழுதையுருவுள்ளது.

(5) கரசைக் கரணம். இது-யானை யுருவுள்ளது.

(6) வனசைச்கரணம். இது-எருது உருவுள்ளது.

(7) பத்திரைக் கரணம். இது-கோழியுரு வுள்ளது.

(8) சகுனிக்கரணம். இது-காக்கை யுருவுள்ளது.

(9) சதுர்ப்பாத கரணம். இது-நா யுருவுள்ளது,

(10) நாகவகரணம். இது-பாம்பு உருவுள்ளது.

(11) கிமிஸ்துக்கின கரணம். இது புழுஉருவுள்ளது.

காந்துறைக்கோள்—காணுக்கிரகம்.

கரம்—கிரணம்.

கரவருடம்—இருபத்தைந்தாவது வருடம்.

கரவருடப்பலன்—எங்கும் நல்ல மழை பெய்யும். ஆறு, ஏரி, கண்வாய் முதலிய நீர்நிலைகள் பெருகும், உலகஞ் செழிக்கும். ஆடு மாடு முதலிய விலங்கினங்களுக்கு நோயும், மரணமும், பால், நெய் முதலியன குறைவு முண்டாம்.

உதாரணம்;-கரவருட மாரிபெய்யுங் காசினியு முய்யும், உரமிகுத்து வெள்ளமெங்கு மோடுமே-நிரைமிகுத்து,நாலுகாற் சீவன் நலியும்நோ யான்மடியும், பாலு நெய்யு மேசுருங்கும் பார்.

(இடைக்காடர்.)

கரி—சனி.

கரிநாள்—சகல காரியங்களுக்கும் ஆகாதநாள். விபரம்;— சித்திரை மாதம்-ஆறு, பதினைந்து தேதிகளும், வைகாசி மாதம்-ஏழு, பதினாறு, பதினேழு தேதிகளும், ஆனி மாதம்-ஒன்று, ஆறு தேதிகளும், ஆடி மாதம்-இரண்டு, பத்து, இருபது தேதிகளும், ஆவணி மாதம்-இரண்டு, ஒன்பது, இருபத்தெட்டு தேதிகளும், புரட்டாசி மாதம்-பதினாறு, இருபத்தொன்பது தேதிகளும், ஐப்பசி மாதம்-ஆறு, இருபது தேதிகளும், கார்த்திகை மாதம்-முதல் திங்களும், ஒன்று, பத்து, பதினேழு தேதிகளும், மார்கழி மாதம்-ஆறு, ஒன்பது, பதினொரு தேதிகளும், தை மாதம், ஒன்று, இரண்டு, மூன்று, பதினொன்று, பதினேழு தேதிகளும், மாசி மாதம், பதினைந்து, பதினாறு, பதினேழு தேதிகளும், பங்குனி மாதம் ஆறு, பதினைந்து, பத்தொன்பது தேதிகளுமாம்

கரியவன்—சனி.

கரீரம்—கும்பவிராசி.

கருகுமாலை—மாலைநேரம், மசண்டை நேரம், அந்திநேரம்.

கருக்கல்—இருள், மாலைநேரம், விடியற்காலம்.

கருங்கோள்—இராகு.

கருட்திசை—கிழக்கு.

கருடபஞ்சமி—ஆவணி மாதம் சுக்கில பக்கத்தில் வரும் ஐந்தாந் திதி.

கருடக்கண்ணன்—புதன்.

கருடயோகம்—ஓர் நல்ல யோகம். இவை:-வளர்பிறைச் சந்திரனிருந்த அங்கிசாதிபதி உச்சனுயிருந்து பூரணையில் பிறப்பதாம்.

கருநாகம்—இராகு.

கருநாள்—கரிநாள், சகல காரியங்களுக்கும் ஆகாத நாள். விபரம்;—கரிநாளைப் பார்க்க.

கருப்பநாள்—பிறந்த நாளுக்கு ஒன்பதாம் நாள்.

கருப்பத்தானம் — இலக்கினத்திற்கைந்தாமிடம்.

கருமகர்த்தா — கருமாதிபதி. இவன் ஏழு பத்துக்குடையவன்.

கருமகாண்டம்—கன்மநிவர்த்தி முதலியவற்றைச் சொல்லுஞ் சாஸ்திரம்.

கருமசம்—கலியுகம்.

கருமத்தலைவர்—சோதிடஞ் சொல்லுவோர்.

கருமத்தானம் — இலக்கினத்திற்கேழாமிடம், பத்தாமிடமுமாம்.

கருமபாவம்—கிரியாபாவம், தொழில் முதலிய காரியம், இலக்கினத்திற்கேழு பத்தாமிடங்களின் பலன்.

கருமபூமிக்குரிமை—சிற்பம்.

கருமம்— இலக்கினத்திற் கேழாமிடம், பத்தாமிடம், தொழிற்குரிமை, முன் சென்மம், வேனிற்காலம்.

கருமாதிகாரம் — கருமங்கள், அதாவது காரியங்கள் செய்து முடிக்கும் அதிகாரம், பத்து ஏழாமிடத்து ஆதிபத்தியங்கள்.

கருமாந்தம் — கார்காலம்.

கரும்பாம்பு—இராகு.

கரும்பு—புனர்பூசம்.

கரைவாடை—மேல்காற்று.

கர்க்கடகவிராசி—அலவன், கள்வன், குளிர், சேக்கை, ஞெண்டு, நண்டு, நள்ளி, மதி.

கர்த்தரியோகம் } செய்யும் நற்காரி
கர்த்தாரியோகம் } யங்களுக்கு ஆகாதநாள். இது;-இலக்கினத்திற்கு இரண்டு பன்னிரண்டிற் பாவிகளிருத்தல்.

கர்ப்பவோட்டம் — கருக்கொள்ளுமேகஓட்டம். இது;-மார்கழிமாதம் பூராட நட்சத்திரத்தின் முதற் பாதத்தில் சூரியன் வருங்காலம். குறிப்பு;-இதனை, பானுதனுவிற் பதின்மூன்றே முக்கால் மேல், ஆனிக்குக் கர்ப்ப மறுகாலாம்-மானேகேள், நண்டுமுதற் றேளளவு நாலரைநான் மாகாணி, கொண்டதனு வுக்கென்றே கூறு என்னுஞ் செய்யுளாலுணர்க.

கர்வம்—இலச்சங்கோடி.

கர்னவேதை—சனி, செவ்வாய் இவ்விரண்டும்நின்ற நட்சத்திரத்திற்கு இரண்டு, பதினைந்து, பதினாறு ஆகிய நட்சத்திரங்களாம்.

கலப்பைச் சக்கரம்—ஏர்ப் பொருத்தம் பார்க்கும் சக்கரம். விபரம்;—ஆறு மூலையுள்ள கோடுகீறி, ஆறு

மூலேகளிலுஞ் சூலமிடப் பதினெட்டு முனையாம். சதுரத்தின் கிழக்கு, மேற்கு, நடுப்பக்கங்களிலும் ஐந்துவரை கீறில் இருபத்தெட்டு முனையாம். இச்சக்கரத்தின், இடது பக்கத்தின் நடு முனைச்சூலத்தின் நடுவில், சூரியன் நின்ற நட்சத்திரத்தை வைத்து அபிஜித்துடன் வலமாக எண்ண சூரியன் நின்ற நட்சத்திரமும் அதற்கு முன்னும் பின்னுமுள்ள நட்சத்திரமுந்தீமை தரும். பின்னெட்டு நட்சத்திரமும் நன்மை தரும். அதன் பின் ஒன்பது நட்சத்திரங்களும் மத்திபம், மற்ற ஏழு நட்சத்திரங்களும் நன்மையாம்.

கலம்—இரேவதி நட்சத்திரம்.

கலயோகம்—பரிவர்த்தன யோகத்தொன்று. அவை:-மூன்றுக்குடையவன், நான்கு, ஐந்து, ஏழு, ஒன்பது, பத்து, பதினொன்று, ஒன்று, இரண்டு இவ்விடங்களிலிருக்க, அவ்வீட்டதிபர்கள் மூன்றில் நிற்றலாம்.

கலாநிதி }
கலாபதி } சந்திரன்.
கலாபம் }

கலாபினி—இராத்திரி.

கலாபூரணன்—பதினறுகலேயுடைய சந்திரன், பூரணசந்திரன்.

கலாமிருது—சந்திரன்.

கலாமிசம் }
கலாம்சம் } தசவர்க்கத்தொன்று.

கலி—சனி, கலியுகம்.

கலி சுத்ததினம்—ஒரு வருடத்துக்குள்ள, முன்னூற்றறுபத்தைந்து நாள், பதினைந்து நாழிகை, முப்பத்தொரு விநாடி, பதினைந்து தற்பரையைக் கலியுக வருடத்தாற் பெருக்கவருந் தொகையில் இரண்டு நாள், எட்டு நாழிகை, ஐம்பத்தொரு விநாடி, பதினைந்து தற்பரைஆகியவைகளைக் கழிக்க வருவதாம்.

கலிந்தன்—சூரியன்.

கலியத்தம்—கலியுகத்திற் சென்ற வருடம்.

கலியப்தம்—கலியுக வருடம், கலியுகம் பிறந்த காலம். இது;-பிரமாதி வருடம்.

கலியன்—சனி.

கலியாத்தம் }
கலியாப்தம் } கலி வருடம்

கலியுகம்—கடையுகம். இது;-நாலுலட்சத்து முப்பத்தீராயிர வருடங்கொண்டது.

கலே—எட்டு விநாடி, அல்லது முப்பது காட்டை கொண்ட ஒருகால நுட்பம், ஒரு பாகையின் அறுபதிலொன்று, சந்திரன், மகரராசியுமாம்.

கலேஞானபாத நட்சத்திரம்—ஜென்மநட்சத்திரத்திற்குப் பதினறாம் நட்சத்திரம்.

கலேயினன்—சந்திரன்.

கல்யாண சத்தமி— பூருவபக்கத்தில் ஆதிவாரத்தன்று வரும் ஏழாந் திதி.

கல்வித்தானம் — இலக்கினத்திற்கு நான்காமிடம்.

கவி—சுக்கிரன், சூரியன்.

கவிப்பு—ஆரூடத்திற்கு சூரியன் நிற்கும் நிலையாம்.

கவிப்பு ராசி—ஆரூடத்தைப்பிடித்து சூரியவீதிவரை யெண்ணி, அவ்வெண்ணிய தொகைக்கு உதைய விராசியைப் பிடித்தெண்ணிக்கண்டவிராசியாம்.

கவுலவம் — கரணம் பதினொன்றி னொன்று. இது;-பன்றிக் கரணம்.

கவை, கவ்வை — ஆயிலிய நட்சத்திரம்.

கழற்சிங்கநாயனார்திருநட்சத்திரம்—வைகாசி மாதத்தில் வரும் பரணி நட்சத்திரம்.

கழுதைக்கரணம்—பதினோர் கரணத்தொன்று. இது;-தைதுலை.

கழுதைத் திசை—வடமேற்றிசை.

கழை—புனர்பூச நட்சத்திரம்.

களங்கன்—சந்திரன்.

களத்திரகாரகன்—சுக்கிரன்.

களத்திரத்தானம்—குடும்பம், சென்மலக்கினத்திற்கு ஏழாமிடம், மனைவி.

களத்திரயோகம்—இராசயோகம். விபரம்—இராஜயோகத்திற் காண்க. இதன் பலன்;-வீரம், அழகு, கல்வி, ஆண்மை, புத்திரமித்திர பாக்கியம் இவைகளமைந்து வாழ்வது.

களவன்—கர்க்கடகவிராசி.

களாபதி—சந்திரன்.

களிறு—அஸ்த நட்சத்திரம்.

கள்வன்—கர்க்கடகவிராசி.

கறுகிறக்கிரகம், கறுகிறக்கோள் — சனி, இராகு.

கறை—இருள்.

கற்கடகம்—கர்க்கடகவிராசி.

கற்கிச்சா—பஞ்சாங்கக் கணிதத்தின்ச்சாவாக்கியத்தொன்று.

கற்கு—கர்க்கடகவிராசி.

கற்பம் — ஆயிரக்கோடி, இரண்டிரவும் ஒரு பகலுங்கொண்டது,உலகமுடியுங் காலமுமாம்.

கற்பாரியம்—சிற்பநூல் முப்பத்திரண்டினொன்று.

கனத்தநாள்—கெட்டநாள், தாக்குக்கொண்டநாள்.

கனமூலம்--கணிதமுறையினொன்று. அது;—கணத்தொகையிலிருந்து அதன் மூலமாகிய ஒரு மூலையறிதல்.

கனம் — கணிதமுறையினொன்று, அது;-சமமாகிய மூவெண்ணின் பெருக்கம்.

கனலி—சூரியன்.

கனவு—கனா.

கனவுநூல்— கனவின் பலனறியுஞ் சாத்திரம்.

கனகதிர்ச் செல்வன்—சூரியன்.

கன்மகாண்டம்—கருமநிவர்த்தி சொல்லுஞ் சாஸ்திரம்.

கன்னல்—நாழிகை, நாழிகை வட்டில்.

கன்னி—கன்னியாராசி.

கன்னிக்கால்—கன்னி மூலைக்காப்பு, முதலில் நாட்டுந்தம்பம்.

கன்னிச்சாதி—நாவிதன், பெண் வகுப்பு.

கன்னித்தம்பம்— கன்னிமூலைக்காப்பு, முதலில் நாட்டுங் கால்:

கன்னித்திங்கள்—கன்னி மாதம், புரட்டாசி மாதம்,

கன்னித்திசை—தெற்கு.

கன்னிநிறம்—கருப்பு.

கன்னிமாதம்—புரட்டாசி மாதம்.

கன்னியங்கம்—பக்கம்.

கன்னிரவி— கன்னியிற் சூரியனிற்றல், புரட்டாசி மாதம்.

கன்னியாராசி—க்ன்னிராசி, பெண்ணின் பொதுப் பெயரெல்லாம் பொருந்தும், அஸ்தநட்சத்திரம்.

கன்னியுருவம்—பெண்.

## கா

காககேது—சனி.

காகசாஸ்திரம் — காகங் கரைதலைக் கொண்டு நன்மை தீமை யறிவித்தல். விபரம்;-நாழிகை30 கொண்டபகலின்

1-வது நாழிகையில்—காகமானது முதல் நாழிகையின் முதற்பாகத்தில் "அய அய" என்று சப்திக்குமாயின் அப்பொழுது நகரத்துள்ள மனிதர்களுக்கு அத்தியந்த சுகத்தை வெளிப்படுத்துவதாம்.

2-வது நாழிகையில்—காகம், அக்கினி மூலையில் "அய அய" வென்று சப்திக்குமாயின் சோகமுண்டாகின்றது. "ஆ ஞ வி து மேல்நோக்கிச் சப்தித்தால் வேறு சோகசமாசாரம் வரும்; அதோமுகமாக (கீழ்நோக்கி) அப்படிச் சப்தித்தால் சந்தானத்தின் சோகமுண்டாகும்.

3-வது நாழிகையில்—காகம், தென்றிசையில் "மூய மூய" என்று சப்திக்குமாயின் அகஸ்மாத்தாக தனலாபத்தைச் சொல்வதாம்.

4-வது நாழிகையில் — காகமானது,நிருதிமூலையில் "மூய மூய" வென்று சப்திக்குமாயின் அக்கினி அல்லது திருடர்கள் பயமுண்டாம்.

5-வது நாழிகையில் — காகம் மேற்குத்திசையில்"ஆஹா ஆஹா" வென்று சப்திக்குமாயின் தனலாபத்தைச் சூசனை செய்கின்றது. அது ஊர்த்துவ (மேல்) முகமானால் தனப்பிராப்தியும்,கீழ்முகமானால்சீக்கிரம் தனப்பிராப்தியுமாம்.

6-வது நாழிகையில் — காகம் மேற்குத்திக்கில்"காஹா காஹா" வென்று சப்திக்குமாயின் காரியசித்தியைச் சூசனை செய்வதாம்.

7-வது நாழிகையில்— காகம் வாயுமூலையில் "ஆஹே ஆஹே" என்று சப்திக்குமாயின் ரோகத்தையும், மிருத்தியுவையும் அறிவிப்பதாம்.

வடக்குத்திக்கில் "யா யா" வென்று சப்திக்குமாயின் பிறதேசத்தினின்றும் சமாசாரம் வரும்.

8-வது நாழிகையில் — காகம் ஈசானிய மூலையில் "ஹா ஹா" வென்று சப்திக்குமாயின் மிருத்யு சமாசாரம் அறிவிப்பதாம்.

9-வது நாழிகையில்—காகம் தலைக்குமேல் "ஹா ஹா" வென்று சப்திக்குமாயின் அதற்கு முந்திய தினத்திற் செய்யப்பட்ட பிரார்த்தனை சித்திப்பதாம்.

10-வது நாழிகையில்—காகம் (தனக்கு நேராக) "ஆவாஆவா" என்று சப்திக்குமாயின் சுபவார்த்தையைத் தெரிவிப்பதாம்.

11-வது நாழிகையில்—காகம் அக்கினி மூலையில் "பஜ பஜ" வென்று சப்திக்குமாயின் தனக்கு புத்திரோற்பத்தி யுண்டாகும்.

12-வது நாழிகையில்—காகம் வாயுமூலையில் "ஜயஜய" வென்று சப்திக்குமாயின் அன்று அவனுக்கு ஒரு சோகமுண்டாகும்.

13-வது நாழிகையில்— காகம் நிருதிமூலையில் "கா கா" வென்று சப்திக்குமாயின் அன்று மகாதுக்கத்தை அறிவிப்பதாம்.

14-வது நாழிகையில்— காகம் வடக்குத்திக்கில் "கோவாகோவா" வென்று சப்திக்குமாயின் சத்துரு பயமுண்டாம்.

15-வது நாழிகையில் — காகம் ஈசானிய மூலையில் "யா யா" வென்று சப்திக்குமாயின் மிகுந்த துக்கத்தைத் தெரிவிப்பதாம்.

16-வது நாழிகையில் — காகம் கிழக்குத்திக்கில் "கோவாகோவா" என்று சப்திக்குமாயின் மனிதர்களின் பொருட்டு மித்திர லாபமுண்டாம்.

17-வது நாழிகையில்— காகம் தெற்குத்திக்கில் "ஆய ஆய" என்று சப்திக்குமாயின் அத்தியந்த துக்கமுண்டாம்.

18-வது நாழிகையில்— காகம் வாயு மூலையில் "காவா காவா" என்று சப்திக்குமாயின் நிச்சயமாகக் காரியசித்தி யுண்டாம்.

19-வது நாழிகையில்— காகம் மேற்குத்திக்கில் "மக மக" வென்று சப்திக்குமாயின் அவனுக்குப்பிறதேச யாத்திரையுண்டாம்.

20-வது நாழிகையில்— காகம் வடக்குத் திக்காக முகம்செய்து "அய அய" வென்று சப்திக்குமாயின் தனலாபத்தை அறிவிப்பதாம்.

## காகசாஸ்திரம்.

21-வது நாழிகையில்— காகம் தலைக்குமேல் "ஸா ஸா" வென்று சப்திக்குமாயின் பூமிலாப முண்டாம்.

22-வது நாழிகையில்— காகம் கிழக்குத் திக்கில் "ஆகா ஆகா" வென்று சப்திக்குமாயின் இருப்பிட லாபமுண்டாம்.

23-வது நாழிகையில்— காகம் அக்கினி மூலையில் "அத்வை அத்வை" என்று சப்திக்குமாயின் சகல லாபமும் உண்டாம்.

24-வது நாழிகையில்— காகம் தெற்குத் திக்கில் "வயா வயா" வென்று சப்திக்குமாயின் காரணமின்றியேநிச்சயமாகப் பூ சஞ்சாரமுண்டாம்.

25-வது நாழிகையில்— காகம் நிருதி மூலையில் "காய காய" வென்று சப்திக்குமாயின் நாற்புறமும் பயமுண்டாம்.

26-வது நாழிகையில்— காகம் மேற்குத் திசையில் "ஆஹா ஆஹா" வென்று சப்திக்குமாயின் சகல லாபத்தையும் அறிவிப்பதாம்.

27-வது நாழிகையில்— காகம் வடக்குத் திக்கில் "ஆகா ஆகா" வென்று சப்திக்குமாயின் பிரயத்தனமின்றிய சகல சுகமுமுண்டாம்.

28-வது நாழிகையில்— காகம் ஈசானிய திக்கில் "ஸா ஸா" வென்று சப்திக்குமாயின் மனோரதம் சித்தியாம்.

## காகசாஸ்திரம்.

29-வது நாழிகையில்— காகம் தலைக்குமேல் "ஆகா ஆகா" வென்று சப்திக்குமாயின் அகஸ்மாத்தாக சுகமுண்டாம்.

30-வது நாழிகையில்— காகம் பூமிக்குமேல் "ஆவா ஆவா" என்று சப்திக்குமாயின் ஜீவர்களின்பொருட்டு துக்கமுண்டாம்.

அன்றியும் மற்றொரு விதம்;— காகம் தானே சப்திக்குமாயின் எச்சமயம் அது பேசினதோ அச்சமயத்தின் சாயையை அங்குலமாக அளவிட்டு அதில் எவ்வளவு அங்குலமிருக்கின்றதோ அதை யிருமடங்காக்கி அதிற்கூடிய தொகையை எ-ல் கழித்து எஞ்சியிருப்பதில் பயனைத் தெரிந்துகொள்ள வேண்டும். எஞ்சிய தொகை 1-ல் போஜனம் கிடைக்கும். 2-ல் ஜீவஸஞ்சார முண்டாகும். 3-ல் யாத்திரை மிருத்தியுவைத் தருகின்றது. 4-ல் கிலேசமுண்டாகும் அல்லது வீட்டில் தீப்பிடிக்கும். 5-ல் எங்கேனுமிருந்து க்ஷேமசமாசாரம் வரும். 6-ல் காகம் தனது வார்த்தையைப் பேசுகிறது,பயன் ஒன்று மில்லையென்று தெரிந்துகொள்ள வேண்டும்.

குறிப்பு;—இது நாகார்ச்சுனவாக்கியப்படிக்குள்ளது.

இதுவன்றி வேறொரு விதமாகக் காண்பதும் உண்டு. அவையாவன:—

எந்தத்திசையில் காகங்கத்துகிறதோ அதையறிந்து பலாபலன் காண்பது.விவரம்.—மேடத்திசை சண்டை, இடபத்திசை இடம்பேர்தல், மிதுனத்திசை நன்மை, கடகத்திசை விருந்து, சந்தோஷம். சிங்கத்திசை தனநட்டம். கன்னித்திசை நன்மை, துலாத்திசை அடுத்தவர் வரவு, விருச்சிகத்திசை கல்யாணம், தனலாபம், தனுத்திசை விருந்துணவு, மகரத்திசை வெகுநன்மை, கும்பத்திசை பிணிகாணும், மீனத்திசை சந்தோசம் என்பனவாம்.

காகபதம் — காலதசப் பிரமாணத்தொன்று; இது-குரு இரண்டு கொண்டது.

காகப்புள் } அவிட்ட நட்சத்திரம்.
காகம் }

காகவ்ாகனன்—சனி.

காகளயோகம்—ஓர் சுபயோகம். இது-இலக்கினத்திபதி சத்தமாதிபதி இவர்களிலெவரேனுமிருந்த ராசிநாதன், கேந்திரகோணமாகியவைகளில் ஆட்சியிலேனும் உச்சத்திலேனும் நிற்றலாம்.

காக்காய் } அவிட்ட நட்சத்திரம்.
காக்கை }

காக்கேயர்நாடி—ஓர் சோதிடநூல்.

காடயோகம்—ஓர் நல்ல யோகம். இவை-ஒன்று, ஐந்து, ஒன்பது ஆகிய விடங்களில் எல்லாக்கிரகங்களும் கிரவிநிற்றல். இதன் பலன் வெகு காலம்வரை நல்லயோகமுண்டாம்.

காடு—பரணிநாள்.

காட்டை — காலதசப் பிரமாணத்தொன்று. அது - இலவமெட்டுக் கொண்டது, காலம், இசை.

காணுக்கிரகம் } காந்துறைகோன்.
காணுக்கோள் }

காணுப்புள்தோசம் — குழந்தைகளுக்கு வரும் பாலாரிட்ட தோசத்தொன்று.

காணி—ஓரெண். இது-ஒன்றிலெண்பது பங்குகொண்டது. மனையிருபது கொண்ட நிலம்.

காண்டீபம்—தனுராசி.

காந்தருவயோகம் } ஐந்துக் குடையவன் மூன்றிலேனும் பதினொன்றிலேனு மிருக்க,
காந்தர்வயோகம் }

குருவும் இலக்கினதிபதியுங் கூடிநின்று, சூரியன் உச்சமாயும் சந்திரன் ஒன்பதிலும் நிற்றல்.

காபிலகாபயூபம்—சிற்பநூல் முப்பத்திரண்டினொன்று.

காப்பியன் } சுக்கிரன்.
காமகாரகன் }

காமசகம்—வசந்தகாலம்.

காமபதி—எழுக்குடையவன்.

காமம்—எழாமிடம்,

காமரம்—அத்தநட்சத்திரம்.

காமன்—சுக்கிரன்,

காமமாலிகாயோகம்—ஏழாமிட முதல் இலக்கினம் வரை ஏழு கிரகங்கள் நிற்றல். இதன் பலன்-இராசயோகம், சுகபோகம், பலதாரம், தீர்க்கமானகல்வி, அறிவுவிருத்தி, திருப்பணி முதலியன பெறுதல்.

காமாதி தேவதை—திரயோதசிதிதி.

காமி—ஏழுக்குடையவன்.

காமினியோகம்—சந்திரனும் சுக்கிரனும் ஏழில் நிற்க, செவ்வாய் பதினொன்றிலிருக்க குரு பாக்கியமடைய இலக்கினதிபதி சுபருடன் கூடி நிற்றலாம்.

காரகம்—காரணத்துவம், செயல், இன்னவைக்கு இன்னவை காரகமென்பதாம்.

காரகர்கள்—இன்னவைக்கு இன்ன கிரகங் காரகரென்பது. அவை-சூரியன், பிதிர்காரகன்; சந்திரன், மாதுர்காரகன்; செவ்வாய், சகோதரகாரகன்; புதன், வித்தியாகாரகன்; குரு, புத்திரகாரகன்; சுக்கிரன், களத்திரகாரகன்;சனி,ஆயுள்காரகன்; இராகு, ஞானகாரகன்; கேது,மாமகாரகன்.விவரம்-தனித்தனி கிரகங்களிற் காண்க.

காரகன்—இன்ன திசையில் இன்ன கிரகம் பலன்றருங் காரகனென்பது. சூரியனிற் குருவும், மதியிற் சனியும், சேயிற்சனியும், புதனிற் சுக்கிரனும், குருவில் மதியும், சுக்கிரனில் சூரியனும், சனியிற் குருவும் காரகராம். இவ்வகை பாம்புகளுக்கில்லையாம்.

காரகாதிபர் திசை—வேதகாதிபர் திசையிற் காண்க.

காரி—சனி.

காரியத்தானம்—பத்தாமிடம்.

கார்—ஆவணி, புரட்டாசி மாதமாகிய பருவம், இருள்.

கார்காலம்—ஆறு பருவத்தொன்று. அது-ஆவணி, புரட்டாசி மாதமாகிய பருவம். கார், சரர்க்காலம், மாரிகாலம்.

கார்கோள்—சனி.

கார்த்தாந்திகன்—சோதிட நூல் வல்லோன்.

கார்த்திகம்—கார்த்திகை மாதம்.

கார்த்திகை—கார்த்திகைநட்சத்திரம், கார்த்திகை மாதம்.

கார்த்திகை நட்சத்திரம் — அங்கி, அழகு, அளக்கர், அறுமீன், அறுவாய், ஆரல், இருல், எரிநாள், தழல்,நாடன்,நாவிதன்,வாணன்.

கார்த்திகைநாள் வடிவு — அறுமீன் கூட்டம்.

கார்த்திகை மாதம்—ஊர்ச்சம், பாகுலம், தேட்டிங்கள், தேள்மாதம், விருச்சிகரவி.

கார்முகயோகம்—தனுர்யோகம் பார்க்க.

காலஅளவு—காலப்பிரமாணம். விவரம்-காலப்பிரமாணத்திலறிக.

காலக்கணிதர்—சோதிடர்,

காலக்குறி—காலவேற்றுமையைக் காட்டும் அடையாளம்.

காலச்சக்கரம்—ஆயுட்காலம், ஆயுள் நியதிச்சக்கரம், கிரகபலச் சக்கரம்.

காலச்சக்கரதிசை—கிரகபலச் சக்கர திசை, விவரம்—மேடம் விருச்சிகம் ஆகிய இவைகளுக்கு செவ்வாய் திசைவருடம் ஏழு;இடபம் துலாம் ஆகிய இவைகளுக்கு சுக்கிரதிசை பதினாறு; மிதுனம் கன்னி ஆகிய இவைகளுக்கு, புததிசை ஒன்பது; கடகத்திற்குச் சந்திரதிசை இருபத்தொன்று; சிங்கத்திற்குச் சூரியதிசை ஐந்து; தனுசு மீனம்ஆகிய இவைகளுக்கு குருதிசை பத்து. மகரகும்பம் ஆகிய இவைகளுக்கு சனி திசை நான்காம்.

காலசந்தி—வைகறை.

காலஞ்சொல்லி—காகம், பல்லி.

காலத்திரயம்—மூன்றுகாலம்; இவை செல்காலம், நிகழ்காலம், வருங்காலம் என்பனவாம்.

காலநிரூபணம்—காலக்கணிதம்.

காலநுட்பம்—கலை, துடி, விகலை.

காலநெடுமை—சிரகம், நீட்டிப்பு, பரிதம், அமையம்,எல்வை, காலை; கொன், செவ்வி, பதம், பாணி, பொழுது, போழ்து.

காலநேரம்—காலம்.

காலபுருடம்—ஓர் சோதிடநூல்.

காலப்பிரமாணம்—கால அளவு. அதாவது-நுட்பமானகாலமுதல் பெருங்காலம்வரை எவ்விதமாகக்காண்பதென்பது. விவரம்-சுவாசம் ஆறு கொண்டது ஒரு வினாடி; விநாடி அறுபது கொண்டது ஒரு நாழிகை;நாழிகையறுபது கொண்டது ஒரு நாள்; நாள்-365-15-நாழிகை 31-விநாடி 15-தற்பரை ஆகிய இவைகள் கொண்டது ஒரு வருடம் என்பதாம்.இன்னும் விவரம்-காலத்திலறிக.

காலமழை—பருவமழை.

காலமறிதல்—திரிகால வர்த்தமான மறிதல்; இது - சோதிடத்தினால் மூன்று காலத்தின் பலாபலன்களை அறிந்து சொல்வது;மற்றவை காலப்பிரமாணத்திலறிக.

காலம்—(1) இறந்தகாலம், எதிர்காலம், நிகழ்காலம்.

(2)சமையம், பருவம், பொழுது, முடிவு, யுகம்,விடியல்;

அன்றியும்:- கண்ணிமை இரண்டு கொண்டது கைநொடி; கைநொடி இரண்டுகொண்டதுமாத்திரை; மாத்திரை இரண்டுகொண்டது குரு; குரு இரண்டுகொண்டது உயிர், உயிர் ஆறுகொண்டது க்ஷணிகம்; க்ஷணிகம்பன்னிரண்டுகொண்டது விநாடி;விநாடிஅறுபதுகொண்டது நாழிகை;நாழிகை ஏழரை கொண்டதுசாமம்; சாமம் நாலு கொண்டதுபொழுது; பொழுது இரண்டு கொண்டது நாள்; நாள் முப்பது

கொண்டது மாதம், மாதம் பன்னிரண்டு கொண்டது வருடம்; வருடம் பதினேழு லட்சத்து இருபத்தெண்ணாயிரங் கொண்டது இரேதாயுகம்; வருடம் பன்னிரண்டு லட்சத்துத் தொண்ணூற்றாறாயிரங்கொண்டது திரேதாயுகம்; வருடம் எட்டுலட்சத்து அறுபத்து நாலாயிரங் கொண்டது துவாபரயுகம்; வருடம் நாலுலட்சத்து முப்பத்திராயிரங் கொண்டது கலியுகம். இந்த நாலுயுகங்கொண்டது ஒரு சதுர்யுகம்; இந்தச் சதுர்யுகம் இரண்டாயிரங் கொண்டது பிரமனுக்கு ஓர் நாளாம்; இந்த நாள் முன்னூற்றறுபது கொண்டது ஓர் வருடமாம்; இந்த வருடம் நூறு கொண்டது பிரமாவின் ஆயுள் முடிவு காலமாம்.

மற்றொருவகை:-நிமிடம் பதினைந்துகொண்டதுகாட்டை; காட்டை முப்பது கொண்டதுகலை; கலைமுப்பதுகொண்டதுமுகூர்த்தம்; முகூர்த்தம்முப்பது கொண்டதுஓர்நாள்; நாள் ஏழு கொண்டது ஒருவாரம்; நாள் பதினைந்து கொண்டது பக்(பக்ஷம்) கம்; பக்கம் இரண்டு கொண்டது மாதம்; மாதம் இரண்டு கொண்டது இருது; இருது மூன்று கொண்டது அயனம்; அயனம் இரண்டு கொண்டது வருடம் என்பதாம்.

காலவகை—நிமிடம், காட்டை, கலை, முகூர்த்தம், சாமம், பகல், இரவு நாள், வாரம், பக்கம், மாதம், இருது, அயனம், வருடம், சந்தியம்சம், சந்தியுகம், சதுர்யுகம், மகாயுகம், பிரளயம், கற்பம், பரார்த்தம், பரம் என இருபத்துமூன்று விதங்களாம்.

காலவித்தியாசம்—காலவேற்றுமை.

காலவிரைவு—இலேசம், இறை, ஒல்லை, கணம், சிறுவரை, மாத்திரை, வல்லை.

காலவுரிமை—பருவமும் பொழுதுமாம்.

காலவேகம்—காலத்தின் கதி, மிகு கதி.

காலவோரை—நாள் ஒன்றுக்கு ஓரை இருபத்துநான்கு; ஓரை ஒன்றுக்கு நாழிகை இரண்டரை; மணியொன்றுகொண்டது ஓரையாம்.

காலற்றநாள்—கார்த்திகை, உத்திரம், உத்திராடம்.

காலன்—காணுக்கிரகத்தொன்று, சனி, சூரியன் நின்ற நட்சத்திரத்திற்கு இருபத்தொன்றும் நட்சத்திரம்.

காலாகாலம்—அந்தந்தக்காலம், ஏற்றகாலம், ஏற்றகாலமும் ஏலாத காலமுமாம்.

காலி—கழிவுநாள்.

காலிகை—யோகினி.

காலியம்—வைகறை, விடியல்.

காலுதயராசி—மேடம், இடபம், கடகம், தனுசு, மகரம். இவை:-இராவலியுள்ளன.

காலை—சமயம், பொழுது, விடியற் காலம், வைகறை.

காலைவெள்ளி—விடிவெள்ளி.

காலோசிதம்—உத்தமகாலம்.

கால்—காலம், காற்று, பாதம், பருவம், பொழுது.

கால்நோக்கு—கிரகநோக்கிமென்று. அது-காற்பார்வை.

காவியன்—சுக்கிரன்.

காளம்—சூலம்.

காளயுத்தி — ஐம்பத்திரண்டாவதாண்டு.

காளயுத்தி வருடப்பலன்— சரியான காலங்களில் மழைபெய்யாது, கோடைமழை பெய்யும், காஞ்சிபுரம் பக்கங்களிற் பஞ்சமுண்டாம், தெலுங்கு நாடுகளிற் சொற்பமழையுண்டு, தெட்சண தேசம் நன்மையடையும்.

உதாரணம்—காளயுத்தி யாண்டதனிற் காஞ்சியிலே பஞ்சமிகுங், காலமழை பெய்யாது கரசினியில்-மேலும், தெலுங்கத்திற் கொஞ்சமழை தென்திசையி லின்பம், நலங்காணு மென்றே நவில்.

(இடைக்காடர்)

காளி—யோகினி.

காற்குளம்—பூசநட்சத்திரம்.

காற்று—சோதிநட்சத்திரம்.

காற்றுத்திங்கள்—வைகாசி மாதம்.

காற்றுநாள்—சுவாதிநட்சத்திரம்.

காற்றுமுந்துநாள்— விசாக நட்சத்திரம்.

கானல்—சூரியகிரணம்.

கானோக்கு—கால்நோக்கு, இது-கால் பார்வை.

## கி

கிசோரன்—சூரியன்.

கிடக்குங்கிரகம் } சனி, சூரியன்.
கிடக்குங்கோன் }

கிட்ணசென்மாட்டமி — ஆவணி மாதம் அமரபக்கத்து எட்டாந் திதி.

கிட்ணாட்டமி — மார்கழி மாதத்திய அமரபக்கத்து எட்டாந்திதி.

கிணறுவெட்டகூபாரூடம்—கிணறு, கேணி முதலிய நீர்நிலைகள் வெட்டுவதற்கு பூமிக்குக்கீழுள்ளவற்றை ஆரூடமுறையாகக் காண்பது. விவரம்-கிணறு முதலியவை வெட்ட உத்தேசித்த விடத்தை சுத்தஞ்செய்து குலதேவதையைத் தொழுது அவ்விடத்தில் ஒருவனை கிழக்கு முகமாக வைத்து அவன் அங்கத்தில் மற்றொருவனைக்கொண்டு தொடச்செய்து தொட்ட அங்கத்தைக் கொண்டு அறிதலாம். அவை யாவன—(1) தலையைத் தொட்டால் நாலு முழத்துக்குக்கீழ் வடமேல் மூலையில் அதிகநீரூற்றும், தவளையும், அதன்கீழ் மூன்று முழத்தில் வெகு நீரூற்றுமுண்டாம்.

(2) நெற்றியைத் தொட்டால்-கற்பாறையும் பதினொரு முழத்தில் குறைந்த ஊற்றுமுண்டாம்.

கிணறுவெட்டகூபாரூடம். கிரககாரகன்.

(3) கன்னத்தைத் தொட்டால்—ஆறு முழத்தில் நல்லதண்ணீர் ஊறும்.

(4) வாயைத் தொட்டால்-ஏழு முழத்தில் நீரூற்றும் கல்லுமுண்டாம்.

(5) முகத்தைத் தொட்டால்—ஆறு முழத்தில் நீரூற்றுண்டாம்.

(6) கழுத்தைத் தொட்டால்-பதினொரு முழத்தில் நீரூற்றுண்டாம்.

(7) தோளைத் தொட்டால்—ஏழு முழத்தில் பெருமடையான நீரூற்றுண்டாம்.

(8) மார்பைத் தொட்டால் - கற்பாறையும், அதன்கீழ் மூன்று முழத்தில் தென்கீழ் மூலையில் நல்ல ஊற்றுமுண்டாம்.

(9) கையைத் தொட்டால்-வெகு சமீபத்தில் ஊற்றுண்டு.

(10) விரலைத் தொட்டால் — ஒன்பது முழத்தில் பெருமடையுண்டாம்.

(11) நகத்தைத் தொட்டால்-பழையகிணறு, பத்துமுழத்திற்குக் கிழக்கில் சிறு ஊற்றுண்டு.

(12) இடுப்பைத்தொட்டால்-ஊற்றில்லை.

(13) தொடையைத் தொட்டால், ஆறு முழத்தில் ஊற்றுண்டு.

(14) முழங்காலைத் தொட்டால்—ஐந்து முழத்தில் பெருமடையுண்டு.

(15) கணுக்காலைத் தொட்டால்—பெருமடையுண்டாம்.

(16) பாதத்தைத் தொட்டால்—நீரில்லையாம்.

குறிப்பு;—இது என் தந்தையாரெழுதிவைத்திருந்த பழைய ஏட்டுப் பிரதியிலிருந்து எடுத்தெழுதப் பெற்றது.

கிதி—ஓரெண். அது - பத்துலட்சங் கோடாகோடி.

கிமுஸ்துக்கினம்—புழுக்கரணம்.

கிரகஆட்சிவீடு—கிரகங்களின் சொச்சேத்திரம், அல்லது சொந்தவீடு, அவை-சூரியனுக்குச் சிங்கமும், சந்திரனுக்குக் கடகமும், செவ்வாய்க்கு மேடமும் விருச்சிகமும், புதனுக்கு மிதுனமுங் கன்னியும், வியாழனுக்குத் தனுசும் மீனமும், சுக்கிரனுக்கு இடபமும் துலாமும், சனிக்கு மகரமும் கும்பமும், இராகுக்குக் கன்னியும், கேதுக்குச் சிங்கமும், குளிகனுக்கு மீனமும் ஆம். அன்றியும் ராகுக்கு மகரமும், கேதுக்கு மேஷமும் என்றும் பிரஞ்ஞானதீகையிற் சொல்லப்பட்டிருக்கிறது; மற்றும் இருபாம்புகட்குஞ் சொந்தவீடில்லையென்பது வேறு சில நூல்களின் துணிபுமாம்.

கிரககாரகன் — இன்னவன் இன்னவைக்குக்காரகனென்பது. விவரம்-சூரியன் பிதிர்காரகன், சந்திரன் மாதுர்காரகன், செவ்வாய் சகோ

கிரகணம்.

தாகாரகன். புதன் கல்விகாரகன். வியாழன் புத்திரகாரகன். சுக்கிரன் களத்திரகாரகன். சனி ஆயுள்காரகன். இராகு ஞானகாரகன். கேது மாதுலகாரகனுமாம்.

அன்றியும்:-வேறுகாரகமு முண்டு. விவரம்-தனிப்பெயர்களிற்காண்க.

கிரககேந்திர சதுட்டயம் — கிரகங்கள் கேந்திரித்து நிற்கும் நான்கு தானங்களாம். அவை- இலக்கின கேந்திரம், நாலாங்கேந்திரம், ஏழாங்கேந்திரம், பத்தாங்கேந்திரமாம்.

கிரகசாரம்—கிரகநடை. இது-கிரகங்கள் நட்சத்திரக்கால்களிற் செல்லுதல்.

கிரகச்சுற்று— கிரகங்கள் சுற்றிவருதல்.

கிரகணம்—கிரகித்தல், பற்றுதல், பீடித்தல், சூரியசந்திரர்கள், இராகு கேதுக்களால் மறைவு பெறுவது. விபரம்;—எல்லாக் கிரகங்களும் பூமியின் கோளாகிருதிகளாக இருக்கின்றன. அவற்றுள் சூரியவொளியால் மற்றக் கிரகங்களும்,பூமியும், பிரகாசத்தோடு கூடி இருக்கின்றன. அவ்வொளி கிரகம் பூமியின் ஒரு புறத்தைப் பிரகாசப் படுத்தும்போது அவற்றின் மறுபக்கம் இருளாகின்றது. இவ்விருளுக்கு நேரே அகப்பட்ட கிரகங்களும், இவ்விருளால் தடுக்கப்பட்ட கிரகங்களும், நட்சத்திரங்களும் காணப்படமாட்டா. அவை

கிரகணம்.

தான் சூரிய சந்திர அங்காரகனுதியாகிய ஐந்து கிரகங்களின் கிரகணங்கள். இவற்றுள்,

(1) சூரிய கிரகணமாவது-சந்திரன் தன்னுடைய உபரிபாகத்திற் சஞ்சரித்துவரும் ஆதித்தனுக்கு நேராக வருங்காலத்தில், ஆதித்தனுடைய ஒளி சந்திரனுடைய மேற்பாகத்தைப் பிரகாசப்படுத்துகின்றது. நாம் காணுகிற மறுபுறத்திற்குச் சூரியனுடையஒளியில்லாதபடியால் இருளாகிறது. இவ்வகை இருள்வடிவாகத் தோன்றுஞ் சந்திரபிம்பம் சூரியபிம்பத்தினுடைய நேர்விலகிப் போகிறவரையிற் சூரியனை மறைத்து நாம் காணமற் செய்கிறது. இதுதான் சூரியகிரகணம் என்பதாம்.

சூரியனும் சந்திரனும் நேராக வருவது அமாவாசையின் முடிவிலானதால் அது சந்திரானுட்டானப்படி மாசாந்தமெனச் சொல்லப்படும். இதனைத்தவிர வேறெந்த திதிகளிலும் சூரிய கிரகணம் வரமாட்டாது. இவ்வாறே,

(2) சந்திரகிரகணமாவது—சந்திரன், சூரியனுக்கு ஆறு இராசி தாண்டி நோாகப்பிரிந்து வருகிற போது சந்திரனுடைய மேற்புறம் இருளாகவும் நாம் காணும் மறுபுறம் பிரகாசமாகவும் வரும். அந்தச் சமயத்தில் சூரியனுடைய ஒளி பூமியின் மறுபுறத்தில் இல்

லாதபடியால் பெரியதாகிய பூச்சாயையுண்டாகும். சந்திரன் பூச்சாயைக்கு நேராக அதிலே மறைந்து வெளியில் வருகிறவரையில் சந்திரனை நாம் காணமாட்டோம். இதுதான் சந்திரகிரகணம். இவ்வகை சூரியனுக்கு ஆறு இராசி பிரிந்து பூச்சாயைக்கு நேராகச் சந்திரன் வருவது பூரணையின் முடிவிலானதால் அதற்குச் சந்திரானுட்டானப்படி பட்சாந்தம் எனவுங் கூறப்படும். இதனைத் தவிர வேறெந்தத் திதிகளிலும் சந்திர கிரகணம் உண்டாகமாட்டாது. இவ்வாறே அங்காரகாதி நட்சத்திர கிரகணங்களையும் நிச்சயித்தல் வேண்டும். அன்றியும் ஒன்றுக்கொன்று நேரேதடுத்து வரும்போது கிரகணம் நிச்சயிக்கலாம். இதனாலே சந்திரன் பூச்சாயையிலே பிரவேசித்து மறைந்து தன் கிரணத்தை யுண்டுபண்ணிக் கொள்ளுகின்றானென்றும், உபரி பாகத்தில் வரும் சூரியனை மறைத்து சூரிய கிரணத்தை யுண்டு பண்ணுகிறானென்றும், நிச்சயமாகவும், யுத்தி அனுபவங்களுக்கும் பொருத்தமாகவும் கொள்ளவேண்டும். இஃது இவ்வாறாக நம் பழம் புராணக் கதைகள் எழுதியவர்கள் தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்து அமுதம் உண்டகதையிற் கிரணத்தின் இயற்கை சம்பவத்தைப் புகுத்தி வைத்திருக்கின்றனர். ஆராய்ச்சியாற் கண்டுதெளிக.

கிரகணித்தல்—கிரகணம் பற்றுதல்.

கிரகத்திரயம்—மூவகைக் கிரகம், இவை-சரக்கிரகம், திரக்கிரகம், உபயக்கிரகம் என்பனவாம்.

கிரகநட்பு, கிரகநட்புக்கோள் } ஒன்பது கிரகங்களுக்குள் இன்ன கிரகத்திற்கு இன்ன கிரகம் நட்பு அல்லது மித்துருவென்பது விபரம்;—

(1) சூரியனுக்கு-சந்திரனும், செவ்வாயும், வியாழனும்.

(2) சந்திரனுக்கு-புதனும், சூரியனும்.

(3) செவ்வாய்க்கு-வியாழனும், சந்திரனும், சூரியனும்.

(4) புதனுக்கு-சுக்கிரனும், சூரியனும்.

(5) வியாழனுக்கு-சூரியனும், சந்திரனும், செவ்வாயும்.

(6) சுக்கிரனுக்கு – சனியும், புதனும்.

(7) சனிக்கு—புதனும், சுக்கிரனுமாம்.

உதாரணம்:—ஆதவனுக் குறவுதிங்கள் செவ்வாயும் பொன்னும், அம்புலிக்குப் புதனுஞ்செங் கதிரிருவர் நேசம்; நீதிசெறி சேய்க்குறவு குருதிங்கள் வெய்யோன், கின்ற புதன் றனக்குச்சுக் கிரனிரவி நேசம்; ஓதியபொன் றனக்குறவாங் கதிர்திங்கள் செவ்வாய், உயர்

| கிரகநட்புராசி. | கிரகநோக்கு. |
|---|---|

வெள்ளிக் குறவுசனி யுடன்புந்தி இருவர்; பூதலமேற் சவுரிக்கே புதனுஞ்சுக் கிரனும், பொருந்திய நல் லுறவென்றே போற்றிடுவர் புலவர். (சாதக அலங்காரம்.)

அன்றியும் இராகுக்கு—சனியும், சுக்கிரனும், வியாழனும்.

கேதுக்கு - சனியும், செவ்வாயும், சுக்கிரனும் நட்பென்று சாதகசிந்தாமணியிற் சொல்லப்பெற்றிருக்கிறது. மற்றும் வேறு விதமாக வேறு சில நூல்களிலுஞ் சொல்லப்பெற்றிருக்கிறது.

கிரகநட்புராசி—இன்ன கிரகம் இன்ன ராசியில் நட்புப்பெறுவதென்பதாம். விபரம்:—

(1) மேடத்தில் – சுக்கிரனும், புதனும்.

(2) இடபத்தில் – சனியும், செவ்வாயும், புதனும், வியாழனும்.

(3) மிதுனத்தில்—சந்திரனும், சனியும், சுக்கிரனும், செவ்வாயும், வியாழனும், இருபாம்புகளும்.

(4) கடகத்தில்-புதனும்.

(5) சிங்கத்தில்-வியாழனும்.

(6) கன்னியில்-சந்திரனும், சனியும், செவ்வாயும், வியாழனும், இருபாம்புகளும்.

(7) துலாத்தில்-செவ்வாயும், புதனும், வியாழனும், இருபாம்புகளும்.

(8) விருச்சிகத்தில்-சுக்கிரனும், புதனும்.

(9) தனுசில்-சந்திரனும், சனியும், சுக்கிரனும், சூரியனும், புதனும், இருபாம்புகளும்.

(10) மகரத்தில்—சுக்கிரனும், புதனும், இருபாம்புகளும்.

(11) கும்பத்தில்-சுக்கிரனும், சூரியனும், புதனும், வியாழனும்.

(12) மீனத்தில்—சந்திரனும், சனியும், சூரியனும், இருபாம்புகளும் நட்பு என்பதாம்.

குறிப்பு;—இவைகள் சாதக அலங்காரத்திற்சொல்லப்பட்டபடியாம். இதற்கு மாறாகச் சொல்லும் நூல்களுமுண்டு.

கிரகநிலை—கிரகம் நிற்கும் நிலை.

கிரகநீசம்—கிரகங்கள்நீசம்பெறுதல். இது;— சூரியனுக்குத் துலாமும், சந்திரனுக்கு விருச்சிகமும், செவ்வாய்க்குக் கடகமும், புதனுக்கு மீனமும், வியாழனுக்கு மகரமும், சுக்கிரனுக்குக் கன்னியும், சனிக்கு மேடமும், இராகு கேதுக்களுக்கு இடபமுமாம். அன்றியும் இராகுவுக்குத் தனுசும், மகரமும், கேதுவுக்கு மிதுனமும், கடகமும் நீசம் என்று கூறும் நூல்களுமுள.

கிரகநோக்கு—கிரகபார்வை. இது:— எல்லாக் கிரகங்களும் ஏழாமிடத்தை முழுப்பார்வையாயாகப் பார்ப்பது. அன்றியும் வியாழன் ஐந்தாமிடத்தைக்கால்பார்வையாயும், ஒன்பதாமிடத்தை முக்காற்பார்

| கிரகபகை. | கிரகராசிப்பகை. |
|---|---|

வையாயும், செவ்வாய் காலாமிடத்தை கால்பார்வையாயும், எட்டாமிடத்தை முக்கால் பார்வையாயும், சனி மூன்றாமிடத்தை அரைப்பார்வையாயும், பத்தாமிடத்தை முக்கால் பார்வையாயும் பார்த்தலாம். அன்றியும் குளிகனுக்குப் பனிரண்டாமிடப் பார்வையுண்டென்று சொல்லும் நூல்களு முள.

கிரகபகை—கிரகங்களுள் இன்ன கிரகத்திற்கு இன்ன கிரகம் பகையென்பதாம். விபரம்:-சூரியனுக்கு சனியும், சுக்கிரனும், செவ்வாய்க்கு புதனும், புதனுக்கு சந்திரனும், வியாழனுக்கு சுக்கிரனும், புதனும், சுக்கிரனுக்கு சூரியனும், சந்திரனும், சனிக்கு சந்திரனும், சூரியனும், செவ்வாயும் பகையாம். உதாரணம்;—சொல்லிரவிக் குறுபகைசுக் கிரன்சனியோ டிருவர், சோமனுக்குப் பகையில்லை சொல்லவுமெக் காலே, அல்லலுறுஞ் செவ்வாய்க்குப் பகைபுந்தி யொருவன், ஆனபுந்திக் குற்றபகை யம்புலியொன் றாகும், நல்லவியாழன்றனக்குப் புதன்வெள்ளி பகையாம், நாடியசுக் கிரர்க்கிரவி நவின்றிங்கள் பகையே, வல்லசனி தனக்கிரவி திங்களுடன் செவ்வாய், மட்டுமே பகையென்று வழுத்துவரெக் காலும். (சாதகாலங்காரம்.)

அன்றியும்-சூரியனுக்கு-குருநீங்கிய கிரகங்களும், சந்திரனுக்கு-புதன், குருநீங்கிய கிரகங்களும், செவ்வாய்க்கு-புதன், சுக்கிரன் நீங்கிய கிரகங்களும், புதனுக்கு சூரியனும், வியாழனுக்கு-செவ்வாயும், சுக்கிரனுக்கு - சூரியனும், சந்திரனும், சனிக்கு-சூரியனும், சந்திரனும், செவ்வாயும் பகையென்றும் வேறு சிலநூல்களில் சொல்லப்பெற்றிருக்கிறது.

கிரகராசிப்பகை— இன்ன கிரகத்திற்கு இன்ன ராசி பகை யென்பது. விபரம்;—

(1) மேடராசி-இராகு, கேது, சந்திரன், வியாழன் ஆகியவர்களுக்குப் பகையாம்.

(2) இடபராசி-சூரியனுக்குப் பகையாம்.

(3) மிதுனராசி-சூரியனுக்குப் பகையாம்.

(4) கடகராசி-இராகு, சனி, சுக்கிரன், சூரியன் ஆகியவர்களுக்குப் பகையாம்.

(5) சிங்கராசி- இராகு, சந்திரன், சனி, சுக்கிரன், புதன் ஆகியவர்களுக்குப் பகையாம்.

(6) கன்னிராசி-சூரியனுக்குப் பகையாம்.

(7) துலாராசி-சந்திரனுக்குப் பகையாம்.

(8) விருச்சிகராசி-சனி, சூரியன், வியாழன் ஆகியவர்களுக்குப் பகையாம்.

(9) தனுசுராசி - செவ்வாய்க்குப் பகையாம்.

(10) மகரராசி-சந்திரன், சூரியன் ஆகியவர்களுக்குப் பகையாம்.

(11) கும்பராசி - இராகு, கேது, சந்திரன், செவ்வாய் ஆகியவர்களுக்குப் பகையாம்.

(12) மீனராசி - செவ்வாய்க்குப் பகையாம்.

இவை சாதகஅலங்காரத்தின் கருத்து. அன்றியும்;—மேடராசி-இருபாம்புகளுக்கு மட்டும் பகையென்றும், இடபராசி - சூரியனையன்றி சனி, செவ்வாய், புதன், வியாழன் ஆகியவர்களுக்கும் பகையென்றும், மிதுனராசி-சூரியனையன்றி சந்திரன், சுக்கிரன் ஆகியவர்களுக்கும் பகையென்றும், கடகராசி-இராகு, சனி, சுக்கிரன், ஆகியவர்களையன்றி கேது, புதன் ஆகியவர்களுக்கும் பகையென்றும், சிங்கராசி-சந்திரன், சுக்கிரன், இராகு ஆகியவர்களையன்றி, வியாழன்கேதுஆகியவர்களுக்கும் பகையென்றும், கன்னிராசி-சூரியனையன்றி இருபாம்புக்கள்செவ்வாய், வியாழன் ஆகியவர்களுக்கும்பகையென்றும், துலாராசி - சந்திரனையன்றி புதன், வியாழன் ஆகியவர்களுக்கும் பகையென்றும், விருச்சிகராசி-சனி, சூரியன் அன்றி சுக்கிரனுங்கும் பகையென்றும், தனுசுராசி - செவ்வாயன்றி புதன், சனி, இருபாம்புக்களாகியவர்களுக்கும் பகையென்றும், மகராசி - சந்திரன், சூரியன் இவர்களையன்றி சுக்கிரனுக்கும் பகையென்றும், கும்பராசி-இருபாம்பு, சந்திரன், செவ்வாய் ஆகியவர்களன்றி புதனுக்கும் பகையென்றும், மீனராசி-சனி, சந்திரன் ஆகியவர்களுக்கும் பகையென்றும் சொல்லும் நூல்களுமுள.

கிரகபதி—அக்கினி, சூரியன்.

கிரகபலக்காலம்— இன்ன கிரகம் இன்ன காலத்திற் பலமுள்ளன வென்றல். இவை - உத்தராயண வளர்பிறையிற் சுபக்கிரகங்களும் தெட்சணயனத் தேய்பிறையில் அசுபக்கிரகங்களும் பலமுள்ளன வென்பனவாம்.

கிரகபலதுட்டயம்—கிரகங்கள் பலம் பெற்றிருக்கும் நான்கு இடங்கள். இவை-தனம், இலாபம், கேந்திரம், திரிகோணம் என்பனவாம்.

கிரகபாடு—சூரியனும் மற்றைக் கிரகமும் ஓரிராசியில் நிற்றல்.

கிரகபார்வை—கிரகநோக்கு.விபரம்—கிரகநோக்கைப் பார்க்க.

கிரகபுடம் — கிரகங்களின் தற்கால நிலையின் கணக்கு.

கிரகப்பிரவேசம்--கிரகங்கள் ஓரிராசியினின்று மற்றொரு ராசியிற் செல்லுதல், குடிபுகுதல்.

கிரகமாலிகை } இராசிச் சக்கரத்திற்
கிரகமாலே } கிரகங்கள் ஒழுங்காய் தொடர்ந்து நிற்றல்.

கிரகம்—சூரியன் முதலாவுள்ள நவக்கிரகங்கள், வீடு.

கிரகவட்டம்—கிரகசக்கரம், கிரகச்சுற்று.

கிரகவகை மூன்று—ஆண் கிரகம், பெண்கிரகம், அலிக்கிரகமென்பனவாம்.

கிரகவடிவம்—நெடுமை, குறுமை, சமம்.

கிரகவாசற் பொருத்தம் — இன்ன ராசியிற் செனனமானவர்களுக்கு இன்னபக்கந் தலைவாசல் வைப்ப தென்பதாம்.

விபரம்;— இடபம், மிதுனம், கடகம் இவைகட்கு கிழக்கும் வடக்கும், சிங்கம், கன்னி, துலாம் இவைகட்கு கிழக்குந் தெற்கும், விருச்சிகம், தனுசு, மகரம் இவைகட்கு தெற்கும், மேற்கும். கும்பம், மீனம், மேடம் இவைகட்கு மேற்கும், வடக்குமாகிய இத்திசைகளில் வாசல் வைத்தல் நலமாம்.

கிரகாங்கங்கள் — கிரகங்கள், உறுப்புக்களில் உரிமை பெறுதல்.

விபரம்;—செவ்வாய்க்குத் தலையும், சுக்கிரனுக்கு முகமும், புதனுக்குக் கழுத்தும், சந்திரனுக்குத் தோளும், சூரியனுக்கு மார்பும், குருவுக்கு வயிறும், சனிக்குத் தொடையும், இராகுவுக்கு முழங்காலும், கேதுவுக்கு உள்ளங்காலுமாகிய இவ்வங்கங்கள் இடங்களாம்.

கிரகாசனம்—வட்டம், திரிகோணம் சதுரம், நெடு (அம்பு)மை, நீண்ட சதுரம், ஐங்கோணம், வில்வடிவம், கொடிவடிவம், (முச்சில்) சிறமுறமுமாகிய இவைகளாசனங்களாம்.

கிரகாச்சி / கிராகட்சி — கிரகத்தின் சொந்தவீடு.

கிரகாரம்பராசிப்பொருத்தம் —வீட்டிற்குரிய தலைவன் இராசிக்கு மூன்று, பத்து, பதினொன்றும் ராசி உத்தமமாம். இரண்டு, நாலு, ஐந்தாம் ராசி மத்திமமாம். ஒன்று, ஆறு, எட்டு, பன்னிரண்டாம் ராசி அதமமென்பதாம்.

கிரகாவக்ரகணி—இடங்கழி யென்னும் நடை.

கிரஸ்டி / கிரட்டி — சூரியகிரணம்.

கிரணமாலி—சூரியன்.

கிரணம்—ஒளி, கதிர், கற்றை, காந்தி, பிரபை.

கிரணன்—சூரியன்.

கிரணி—சூரியகிரணம்.

கிராசாங்குலம்—கிரகண அளவு.

கிராணம்—கிரகணம்.

கிராந்தி—கிரகவட்டத்தின் சரிவு.

கிராந்திமண்டலம்—சூரியனது சுற்றோட்டப் பாதை.

கிரி—இலக்கினம்.

கிரீஸ்மருது — முதுவேனிற்காலம் அவை—ஆனி, ஆடி.

| கிழமைபிறந்தநாள். | கீலக வருடப்பலன். |
|---|---|

கிருஸ்துஅப்தம் } இங்கிலீஷ் வருடம்.
கிருஸ்துவருடம் }

கிருட்டிணபக்கம் } அமரபக்கம், குரு,தேய்பிறை,
கிருட்டிணபட்சம் } பின் பக்கம் பூரணைகருப் பின் கிழங்காலம்.

கிருட்டிணம்—கிருட்டிணபட்சம்.

கிருட்டிணசயந்தி— ஆவணி மாதத்திய அமரபக்கத்து அட்டமி. அன்றியும் அட்டமியோடு ரோகணி நட்சத்திரமுங் கூடிவருவதுமாம்.

கிருதகோடி — அளவை நூற்செய்த ஓர் மேதாவி.

கிருதம்—கிரேதாயுகம்.

கிருதயுகம்—முதல்யுகம். இது - பதினேழு லட்சத்து இருபத்தெண்ணாயிர வருடங்கொண்ட காலவட்டம்.

கிருதாந்தசனகன்—சூரியன்.

கிருத்தி—கிருத்திகை.

கிருத்திகை—கார்த்திகை. இது-ஆறு நட்சத்திரங்களின் கூட்டம்.

கிருபீடசன்மம் } சந்திரன்.
கிருபீடயோனி }

கிரேதம்—கிரேதாயுகம்.

கிரேதாயுகம்—கிருதயுகம், முதல் யுகம்,

கிழக்கு—இந்திரி, ஐந்திரம், கீழ்,கீழ்திசை, குணக்கு,பிராசி, பூருவம்.

கிழமை—வாரம். இது-ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி, சனி என்பவைகளாம்.

கிழமைபிறந்தநாள்—இன்ன நட்சத்திரத்தில் இன்னவாரம் பிறந்ததென்பது. விபரம்;—பரணியில் ஞாயிறும்,சித்திரையில் திங்களும், உத்திராடத்தில் செவ்வாயும்,அவிட்டத்தில் புதனும், கேட்டையில் வியாழனும், பூராடத்தில் வெள்ளியும், இரேவதியில் சனியும் பிறந்தனவாம்.

கிழமைவட்டம்—எழுநாள்.

கிழலே—திசை.

கிழவன் — பரணி நட்சத்திரம்.

கிழான்—சூரியன்.

கின்னரம்—மிதுனம், வீணை.

## கீ

கீசன்—சூரியன்.

கீரிடம் — ஆறு பருவத்தொன்று. இது-ஆனி, ஆடியாகிய பருவம்.

கீர்த்தித்தானம்—இலக்கினம்.

கீர்த்திமாலிகாயோகம்— பத்தாமிட முதல் நான்காமிடம் வரை ஏழு கிரகங்கள் நிற்றல். இதன் பலன், கலைவல்லவன், கவிஞன், கோபி, அரசநேசன், உலகப்பிரசித்தியும் பந்துசன பூசிதனுமாம்.

கீலக—நாற்பத்தெட்டாவதுவருடம்.

கீலக வருடப்பலன்—நல்ல மழை பெய்து எங்குஞ் செழிக்கும்.நல்ல விளைவுண்டாம், மனிதர்களுக்குச் சந்தோசமுஞ் சகல நன்மையுமுண்டாம். உதாரணம்:—கீலகத்தில் மாரிமிகுங் கெம்பீர மெத்தவனு, கூலமுறு மானிடர்க்குக் கொண்டாட்டம்- ஞாலமதில் நல்லவிளை வுண்டாகும் நாடெங்கு

மேசெழிக்கும், பல்வளமு மோங்குமெங்கும் பார். (இடைக்காடர்)

கீழைத்திசை—கீழ்த்திசை.

கீழ்—கிழக்கு, கயம்.

கீழ்காற்று—கொண்டல்.

கீழ்த்திசை—கிழக்கு.

கீழ்நோக்கு—கீழ்ப்பார்வை

கீழ்நிலைநாள் — அசுபதி, உத்திரம், உத்திராடம், கார்த்திகை, பரணி, பூரம், பூராடம், மகம், மூலம் என்பனவாம்.

கீழ்நோக்குக்கிரகம் }
கீழ்நோக்குக்கோள் } கீழ்ப் பார்வையுள்ள கிரகம், அவை-புதன், சுக்கிரன்.

கீழ்நோக்குநாள்—அவிட்டம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, உரோகணி, சதையம், திருவாதிரை, திருவோணம், பூசம் என்பனவாம்.

கீழ்நோக்குராசி—பலகால்ராசியைக் காண்க.

கீழ்பால்—கிழக்கு, கீழ்ப்பக்கம்.

கீழ்மகன்—சனி.

கீற்றுமதி—மூன்றாம்பிறைச் சந்திரன்.

## கு

குகு—அமாவாசை.

குசவாரம்—செவ்வாய்க்கிழமை.

குசன் }
குஜன் } செவ்வாய்.

குசேசயகாரகன்—சூரியன்.

குடகம் }
குடக்கு } மேற்கு.

குடக்கோடுவான்—சூரியன்.

குடங்கர்—கும்பவிராசி.

குடதிசை—மேற்குத்திசை.

குடம்—கும்பவிராசி.

குடா—கோணம், மூலை.

குடார்த்தகோளம்—பூமியின் மேற்குப்பாதி யுண்டை.

குடும்பத்தானம்—இரண்டாமிடம்.

குணகாரம்—பெருக்கற்கணக்கு.

குணக்கு }
குணதிசை } கிழக்கு, கீழ்திசை.

குணனம்—கணக்குப்பெருக்கல்.

குணனீயம்—பெருக்கப்படுந்தொகை.

குணார்த்தகோளம்—பூமியின் கிழக்குப்பாதி உண்டை.

குணிக்கரித்தல் — கணக்குப்பெருக்கல்.

குணிதம் —பெருக்கிக்கண்ட பாகம், மடங்கு.

குணித்தல்—எண் பெருக்கல்.

குண்டை—இடபவிராசி.

குண்ணியம்—கணக்கிற் பெருக்குதல்.

குதபன்—சூரியன்.

குதுபம் — தினத்தின் எட்டாவது முகூர்த்தகாலம்.

குபளம்— கிருட்டிணபக்கம். இது;-தேய்பிறை.

குபேரன்—சந்திரன், வடக்கு. வடதிசைப் பாலன்.

குமாரசாமியம்—ஓர் சோதிட நூல். இது-அறிஞரால் போற்றப்பெறுவது.

குமுதசகாயன்
குமுதபாந்தவன்
குமுதநண்பன்
குமுதேசன் } சந்திரன்.

கும்பஅங்கம்—கணுக்கால்.

கும்பவுருவம்—குடம்.

கும்பத்திசை—வடக்கு.

கும்பநிறம்—பச்சை.

கும்பமாதம்—மாசிமாதம்.

கும்பம்—கரீரம், குடங்கர், குடம், சாடி.

கும்பரவி—கும்பத்தில்சூரியன்நிற்றல். மாசிமாதம்.

கும்பி
கும்பை } கும்பவிராசி.

குரங்கி—சந்திரன்.

குரு— இருமாத்திரை கொண்டது. இது-இலகு இரண்டு கொண்டது, நிமிடம், அறுபத்துநாலு கொண்டது, பிரகஸ்பதி, வியாழன்.

குருகு—மூலநட்சத்திரம்.

குருடன்—சுக்கிரன்.

குருட்டுநாள்—நாள் விழிப்பறிய.

குருச்சந்திரயோகம் — வியாழனுஞ் சந்திரனுங் கூடிநிற்றல்.

குருசாரபலன்—வியாழகதியின் பலன்.

குருதி—செவ்வாய்.

குருநாடி—ஓர் சோதிடநூல்.

குருநாள்—பூசநட்சத்திரம்.

குருபுகர்சந்திரயோகம் — வியாழன், சுக்கிரன், சந்திரன் இவர்கள் ஓர்ராசியிற் கூடிநிற்றலாம்.

குருபுடம்—வியாழபுடம்.

குருவாரம்—வியாழக்கிழமை.

குரூரக்கிரகம்—இராகு, கேது, சனி, சூரியன், செவ்வாய், அமரபக்கத்துச் சந்திரனுமாம்.

குரோதயோகம்—இலாபாதிபதி நின்ற திரேக்காண ராசியில், சூரியன், செவ்வாய், இராகு இவர்கள் நிற்றலும், பார்த்தலுமாம்.

குரோதன— ஐம்பத்தொன்பதாவது வருடம்.

குரோதன வருடப்பலன்— கூர்ச்சர தேசத்தில் மழையில்லை, பஞ்சமும் அரசாங்கக் கலகமும் தட்சண தேசத்தில் நல்ல மழையும் விவசாய விளைவும், மனிதர்களுக்குச் சுகமுமுண்டாம்.

உதாரணம்:— குரோதனத்திற் பஞ்சமாங் கூர்ச்சர தேசத்திலே, விரோதத்தால் வேந்தர் மெலிவர்-சரோருகத்து, மானேதென் பூமி மகிழுந் திடமுடனே, தானே விளைவுண்டு தான்.

(இடைக்காடர்.)

குரோதி—முப்பத்தெட்டாவது வருடம்.

குரோதி வருடப்பலன்:— சொற்பமான மழைபெய்யும், தானிய விளைவு குறையும், இக்குறைவால் நாட்டிற் சிறிதுபஞ்சமுண்டாகும், திருடரால் கொள்ளை கொலை முதலியனவும் நடக்கும், மனிதர்கள் சஞ்சலப்பட்ட வாழ்க்கையடைவார்கள்.

உதாரணம்;—சோரக் குரோதி தனிற் கொள்ளைமிகுங் கள்ளரினாற், பாரிற் சனங்கள் பயமடைவர்-காரமிக்க, அற்ப மழைபெய்யு மஃகங் குறையுமே, சொற்பவிளைவுண்டெனவே சொல்.

(இடைக்காடர்.)

குலதிதி—நான்காம், எட்டாம், பனிரண்டாந் திதிகள்.

குலம்—இரேவதி.

குலவாரம்—செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை.

குலாகுலதிதி—ஆறாந்திதி.

குலாகுலவாரம்—புதன்கிழமை.

குவலயப்பிரியன்—சந்திரன்.

குழவி—பாலசந்திரன்.

குளிகன்—காந்துறைகோட்களினொன்று.

குளிகைகாலம்—சில காரியாதிகளுக்கு ஆகாதென்று விலக்கப்பட்ட நேரம். அது ஒவ்வொரு கிழமையிலும் வரும் மூன்றேமுக்கால் நாழிகை கொண்ட காலஅளவு. இதில் பகற்குளிகை காலமென்றும் இராக்குளிகை காலமென்றும் இருவகைப் படும்.

(1) பகற்குளிகை காலத்தின் விபரம்:—ஞாயிறில் இருபத்து இரண்டரைக்கு மேலும், திங்களில்-பதினெட்டே முக்காலுக்கு மேலும், செவ்வாயில்-பதினைந்துக்கு மேலும், புதனில்-பதினொன்றே காலுக்கு மேலும், வியாழனில்-ஏழரைக்கு மேலும், வெள்ளியில் மூன்றேமுக்காலுக்கு மேலும், சனியில்—சூரிய உதயத்திற்கு மேலும் வரும், முற்கூறியபடி மூன்றேமுக்கால் நாழிகைகொண்ட நேரம். உதாரணம்;— 'ஞாயிறு மூகூர்த்தமேழாம் நன்மதிக் காறுஞ் செவ்வாய்க், கேயவைந் தாகும் புந்திக் கீரிரண்டாம் பொன் மூன்றாம், தூயநற் புகர்க்கிரண்டாஞ் சுன்னவன் றனக்கொன்றாகும், ஆயவிம் முகூர்த்தத் தோடே யற்றிடுங் குளிக னெல்லில்' என்னுஞ் செய்யுளாலறிக.

(2) இராக்குளிகை காலத்தின் விபரம்:—ஞாயிறில் ஏழரைக்கு மேலும், திங்களில்-மூன்றேமுக்காலுக்கு மேலும், செவ்வாயில்—சூரிய அஸ்தமனத்தின் மேலும், புதனில்-இருபத்து இரண்டரைக்குமேலும், வியாழனில்-பதினெட்டேமுக்காலுக்கு மேலும், வெள்ளியில்-பதினைந்துக்கு மேலும், சனியில்-பதினொன்றேகாலுக்கு மேலும் முற்கூறியபடி வரும் மூன்றேமுக்கால் நாழிகை கொண்ட நேரமாம். உதாரணம்;—'கதிரவன் றனக்கு மூன்றாங் கவின்மதிக் கிரண்டதாகுஞ், சதிர்பெருஞ் செவ்வாய்க் கொன்றாஞ் சாற்றிய புதனுக்கேழாம், மதிவளர் பொன்னுக் காறும் மன்புகர்க்கைந்தாம் நான்கு, கதிர்மகற் காமுகூர்த்தந்

காட்டிய பகல்போற் கொள்ளே'
என்னுஞ் செய்யுளாலறிக.

குளிர்—கடகவிராசி.

குறி—நினைத்தவை யுணர்த்துஞ் சாஸ்திரம், சகுனம், நிமித்தம்.

குறிக்கோள்—கணித்தல்.

குறுங்கோள்—குட்டைவடிவுள்ள கிரகம். இது-சந்திரன், சனி, செவ்வாய்.

குன்று—சதைய நட்சத்திரம்.

## கூ

கூகைதோஷம்—அமாவாசை முடிவிலும் பிரதமை முதலிலும், தியாச்சியம் வருங்காலம்.

கூடயோகம்—சூரியாதி எழுவர், நாலாமிட முதற் பத்தாமிடம் வரை நிற்பதாம்.

கூட்டுக்கணக்கு—எண்கூட்டுதல்.

கூதிர்—ஐப்பசி,கார்த்திகையின் பருவம்.

கூதிர்காலம், கூதிர்ப்பருவம் } குளிர்காலம்.

கூபயோகம்—இராகு நின்ற இராசியாதிபதிக்கு ஐந்திலாவது ஒன்பதிலாவது சூரியன், செவ்வாய் கூடிநிற்றல்.

கூர்த்தவி — சித்திரைமாதப் பௌர்ணை.

கூர்மயோகம்—ஒன்று, இரண்டு, மூன்று, ஒன்பது, பத்து, பதினொன்று ஆகிய இவ்விடங்களில் சுபரும் பாவருங் கூடிநின்றாலும்,

(2) நாலு,ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, பன்னிரண்டு ஆகிய இவ்விடங்களிற் சுபரும் பாவருங்கூடி நின்றாலும்,

(3) ஐந்து, ஆறு, ஏழு ஆகிய இவ்விடங்களிற் சுபக்கிரகங்கள் கூடி நிற்க, ஒன்று, மூன்று, ஒன்பது, பதினொன்று ஆகியஇவ்விடங்களிற் பாவக்கிரகங்கள் கூடி நின்றாலும்,

(4) மூன்று, பதினொன்று இவைகளிலெதிலேனும் குரு நிற்க, சுக்கிரன், ஆச்சியிலாவது ஐந்திலாவது நிற்க, உயிராதிபன் வலுத்து நின்றாலும்,

(5) இலக்கினாதிபதி ஆச்சியிலிருக்க,பாக்கியாதிபதி பலத்து நின்றாலும்,

(6) இலாபாதிபதி ஐந்திலிருக்க, புதன் கேந்திரதிரிகோணம்பெற, இலக்கினாதிபதி வலுத்து சுபக்கிரகம் பார்க்கப் பெற்றாலும்,

(7) சராராசி இலக்கினமாகி, இலக்கினாதிபதி வலுத்து திராராசியிலிருந்தாலும்,

(8) திராராசி இலக்கினமாகி இலக்கினாதிபதி கேந்திரதிரிகோணமான சராராசியிற் பலத்து நின்றாலும் இவ்யோகமாம்.

கூனல்—பிறைச்சந்திரன்.

கூவநூல்—கூபசாஸ்திரம். இது-நீர்நீர்க்குறியறிவிக்கும் நூல்.

## கெ

கெசகேசரியோகம், கெஜகேசரியோகம் } ஓர் சுபயோகம். இது-தனு

சில் குருவும், மீனத்தில் சந்திரனும், அல்லது கும்பத்தில் குருவும், மீனத்தில் சந்திரனும் நிற்பதாம்.

கெதவாக்கியம்—கதவாக்கியம். இது-பஞ்சாங்கக் கணிதவாக்கியத்துளொன்று. விபரம்:-நட்சத்திரத்தையறியவேண்டியதற்காக, 248-வாக்கியங்கள் ஏற்படுத்தப்பெற்றிருக்கின்றன. அவைகளுக்குப் பஞ்சாங்கவாக்கியங்களென்றும், நக்ஷத்திரவாக்கியங்க ளென்றும், சந்திரவாக்கியங்களென்றும் பெயர். ஒரு குறிப்பிட்ட தினம்வரை கழிந்த (நாளுக்கு) வாக்கியத்திற்கு கதவாக்கியமென்றும், அல்லது அற்றைவாக்கிய மென்றும் பெயர். மேலே குறிப்பிட்ட 248-எண்ணுகிய வாக்கியங்களையும், நாள் ஒன்றுக்கு ஒன்ருகக் கணக்கிட்டதன் பின் மறுபடியும் முதல்வாக்கியந் தொடர்ந்து நடத்திவருவது முறையாம். விரிவாயறியவேண்டுமானல் பஞ்சாங்கக் கணிதநூலிலறிக.

கெவுளிசாஸ்திரம் — கெவுளிநூல், பல்லிக்காதல். விபரம்:—பல்லிக்காதலைப் பார்க்க.

கெற்பராசி—உபயராசி நான்குமாம், இது-கன்னி, தனுசு, மிதுனம், மீனம்.

கெற்போட்டம்—மார்கழி மாதத்தில் அந்தந்த மாதத்தைப்பற்றி ஓடும் மேகோட்டம். விபரம்-கர்ப்பஓட்டத்திற் காண்க.

## கே

கேசரியோகம்— ஓர் நல்லயோகம். அவை நாலு, ஏழு இவைகளிற் சந்திரன் நின்ருலும், அல்லது சந்திரனுடன் குரு கூடிநின்ருலும், அல்லது குருவிற்குக் கேந்திரத்தில்சந்திரன் நின்ருலுமாம்.

கேட்டை—இந்திரநாள், எரி, செந்தழல், சேட்டை, வல்லாரை, வேதி.

கேட்டைநாள்—கேட்டை நட்சத்திரம்.

கேதாரகௌரிவிரதம்—ஐப்பசி மாதத்திய அமரபக்கத்துப் பதினலாந்திதியில் வரும் ஒரு நோம்புநாள்.

கேதாரயோகம் — ஓர் சுபயோகம். இவை-சூரியனுதி எழுவர் நான்கு ராசியில் நிற்பதாம்.

கேது—கதிர்ப்பகை, சிகி, செம்பாம்பு, மதிப்பகை, மதியுண்ணி, மற்றும் பாம்பின் பெயர்களெல்லாம்பொருந்தும்.

கேதுகாரகம் } ஞானம்,
கேதுகாரகாதிபத்தியம் } கேவலம்,

தெய்வத்தியானம், தவம், மௌனம், வைராக்கியம், சன்னியாசம், நிதானம், திடசித்தம், மனவெறுப்பு, மயக்கம், வீடில்லாமை, மோட்சம், தாயைப்பெற்ற பாட்டன், வாழ்வு ஆகிய இவைகளுக்குக் காரகனும்.

கேதுவின் குணம்—தாமதம்.

கேதுவின் சமித்து—தருப்பை.

கேதுவின் சுவை—புளிப்பு.

கேதுவின் தானியம்—கொள்ளு.

கேதுவின் திக்கு—வடமேற்கு, வடகிழ்த்திசை யென்பாருமுளர்.

கேதுவின்தசை } கேதுவில் நடக்
கேதுவின்திசை } குங்காலம், இதன் வருடம் ஏழு.

கேதுவின் நிறம்—சிவப்பு.

கேதுவின் பாஷை—அன்னியபாஷை.

கேதுவின் பார்வை—குரூரம்.

கேதுவின் பிணி—பித்தம்.

கேதுவின் புத்திரன்—அவமிருத்து.

கேதுவின் புட்பம்—செவ்வல்லி.

கேதுவின் ரத்தினம்—வைடூரியம்.

கேதுவின் ராசி—சராராசி.

கேதுவின் லிங்கம்—அலி.

கேதுவின் லோகம்—துருகல், செம்பூராண், சுகல்.

கேதுவின் வடிவம்—நெடுமை.

கேதுவின் வாகனம்—சிங்கம்.

கேந்திரம்—இலக்கினம், எழாமிடம், நான்காமிடம், பத்தாமிடம் ஆகியவைகளாம்.

கேந்திரித்தல் — கேந்திரம் பெற்று நிற்றல்.

கேமுத்திரியோகம் — சந்திரனுக்கு இரண்டு, பன்னிரண்டு ஆகியவைகளில் குசாதிபஞ்சக் கிரகங்கள். அதாவது செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி ஆகியவர்கள் ஒருவர் அல்லது இருவர் இல்லாதிருந்தாலும், அல்லது இருந்தும் சூரியன்கூடி நின்றாலுமாம்.

கேரலி—வானசாஸ்திரம்,

கோளம்—சோதிட நூலினொன்று.

## கை

கைமீன் } அஸ்தநட்சத்திரம்.
கைனி }

## கொ

கொக்கு—மூலநட்சத்திரம்.

கொடி — அவிட்டநட்சத்திரம், உச்சம்.

கொடித்தாம்—அட்டமிச் சந்திரன்.

கொடியன்—கேது.

கொடிவாகனன்—சனி.

கொடிறு—பூசநட்சத்திரம்.

கொடுநுகம்—மகநட்சத்திரம்.

கொடுமரம்—தனுசுராசி.

கொடும்புலி—சிங்கவிராசி.

கொண்டல்—கிழக்கு.

கொய்யான்—பரணி.

கொலைத்தானம்—எட்டாமிடம்.

கொல்லமாண்டு— பரசுராமன் வருடம். இது மலையாள தேசத்தில் கொல்ல மென்ற பட்டணமுண்டான காலந்தொட்டு வருவது. இதன் ஒரு வட்டம் ஆயிரவருடமாம். இதன் வருடாரம்பம் தென்மலையாளத்தில் ஆவணி மாதமும், வடமலையாளத்தில் புரட்டாசி மாதமுமாகக் கொள்வர். இவை சாலியவாகனவருடம் 747க்குபிற்பட்டன.

| கோபதி. | கௌரிபஞ்சாங்கம். |
|---|---|

கொடுநுகம்
கொடுமுகம் } மகநட்சத்திரம்.

கொறி—மேடவிராசி.

கொன்—காலம், பொழுது.

## கோ

கோ—கிரணம், சந்திரன், சூரியன், திசை.

கோகபந்து—சூரியன்.

கோகிலாட்டமி — ஆவணிமாதத்து அமரபக்கத்து எட்டாந்திதி.

கோசாரம்—இராசி, கிரகங்கள் நிற்கும் நிலை.

கோசாரபலன்—தற்கால கிரகங்கள் நிற்கும் நிலையின் பலன்.

கோடி—நூறுலட்சம்.

கோடீரம்—இந்திரன் வில்.

கோடை—வேனிற்காலம்.

கோட்சாரம்—கோசாரம்.

கோட்டை—பரிவேடம்.

கோணம்—சனி, செவ்வாய், திசை, மூலை, அன்றியுந் திரிகோணம், மூலத்திரிகோணமுமாம்.

கோணங்கள்—திரிகோணங்கள். அவை உதையவிராசி,ஐந்தாமிராசி, ஒன்பதாமிராசி என்பனவாம்.

கோணி—பதினாயிரங் கோடாகோடி.

கோணைமாதம்—மார்கழி மாதம்.

கோதை—கன்னியாராசி.

கோத்திரப் பொருத்தம் — மணப் பொருத்தத்தொன்று.

காபதி—சூரியன்.

கோபாட்டமி—கார்த்திகைமாதத்துப் பூர்வபக்கத்தில் வரும் எட்டாந் திதி.

கோய்—பரணி நட்சத்திரம்,

கோல்—துலாராசி.

கோழிக்கரணம — கரணம் பதினொன்றினொன்று.

கோளம்—உண்டை, வட்டம்,

கோளம்பம்—கிரகணம்.

கோளயோகம்—சூரியனாதி எழுவர் ஓரோராசியில் நிற்பதாம். இதிற் பிறந்தவன் நூல்கள் பல கற்றுந் தரித்திரவானுயிருப்பான்.

கோளரி—சிங்கம்.

கோள்—கிரகம், நட்சத்திரம், நாள்.

கோள்சாரம்—கோசாரம்.

கோன்—சூரியன், சந்திரன், வியாழன்.

## கௌ

கௌசிகம்—ஓர் சோதிடநூல், வியாழம்.

கௌசிகாயுதம்—வானவில்.

கௌஸ்துவம்
கௌஸ்துவம்
கௌத்துவம் } அஸ்த நட்சத்திரம், அனுபவகாலம், திருநாள்.

கௌமுகம்—கார்த்திகை மாதம்.

கௌமுகி—நிலவு.

கௌமுதிபதி—சந்திரன்.

கௌமோதம்—கார்த்திகை மாதம்.

கௌரிபஞ்சாங்கம் — தினந்தோறும் அந்தந்தக் கிழமைகளின் பகற்காலத்தையும், இராக்காலத்தையும் தனித்தனி எட்டு முகூர்த்தங்களா

கப் பிரித்து நன்மைதீமை உணர்த்துவது. விபரம்:— ஞாயிற்றுக்கிழமை பகல் முதலாவது-உத்தியோகம், இரண்டாவது-இலாபம், மூன்றுவது - விஷம், நாலாவது-அமிர்தம், ஐந்தாவது-சுபம், ஆறுவது—தனம், ஏழாவது-அமிர்தம், எட்டாவது - ரோகம். மேற்படி இரவில் முதலாவது-தனம், இரண்டாவது-சுகம், மூன்றுவது—சோரம், நான்காவது—விஷம், ஐந்தாவது-கலகம், ஆறுவது—அமிர்தம், ஏழாவது-இலாபம், எட்டாவது-ரோகம் என்பதாம்.

திங்கட்கிழமை பகல்முதலாவது-அமிர்தம், இரண்டாவது-விஷம், மூன்றுவது-உத்தியோகம், நாலாவது-இலாபம், ஐந்தாவது-சோரம், ஆறுவது- சுகம், ஏழாவது-இலாபம். எட்டாவது-தனம். மேற்படி இரவு முதலாவது-ரோகம், இரண்டாவது-இலாபம், மூன்றுவது-உத்தியோகம், நாலாவது-தனம், ஐந்தாவது - ரோகம், ஆறுவது-அமிர்தம், ஏழாவது—விஷம், எட்டாவது-சோரம்.

செவ்வாய்க்கிழமை பகல் முதலாவது-ரோகம், இரண்டாவது-உத்தியோகம், மூன்றுவது—சோரம், நாலாவது—இலாபம், ஐந்தாவது-அமிர்தம், ஆறுவது - உத்தியோகம், ஏழாவது-விஷம், எட்டாவது—தனம். மேற்படி இரவு முதலாவது-சோரம், இரண்டாவது-உத்தியோகம், மூன்றுவது-விஷம், நாலாவது-இலாபம், ஐந்தாவது-சோரம், ஆறுவது—தனம், ஏழாவது-சுகம், எட்டாவது-அமிர்தம்.

புதன்கிழமை பகல் முதலாவது-விஷம், இரண்டாவது-அமிர்தம், மூன்றுவது-சுகம், நாலாவது - உத்தியோகம், ஐந்தாவது-சோரம், ஆறுவது-இலாபம், ஏழாவது-தனம், எட்டாவது-அமிர்தம். மேற்படி இரவு முதலாவது-இலாபம், இரண்டாவது-ரோகம், மூன்றுவது-விஷம், நாலாவது - உத்தியோகம், ஐந்தாவது—சுகம், ஆறுவது-அமிர்தம், ஏழாவது-தனம், எட்டாவது-லாபம்.

வியாழக்கிழமை பகல் முதலாவது - உத்தியோகம், இரண்டாவது-விஷம, மூன்றுவது-சோரம், நாலாவது-இலாபம், ஐந்தாவது-அமிர்தம், ஆறுவது-ரோகம், ஏழாவது-கலகம், எட்டாவது-சோரம். மேற்படி இரவு முதலாவது-சுகம், இரண்டாவது - ரோகம், மூன்றுவது-கலகம், நாலாவது - லாபம், ஐந்தாவது - உத்தியோகம், ஆறுவது-சோரம், ஏழாவது - தனம், எட்டாவது-உத்தியோகம்.

வெள்ளிக்கிழமை பகல் முதலாவது - ரோகம், இரண்டாவது-சோரம், மூன்றுவது - அமிர்தம், நாலாவது-விஷம், ஐந்தாவது-லா

பம், ஆறாவது-சுகம், ஏழாவது-தனம், எட்டாவது-அமிர்தம். மேற்படி இரவு முதலாவது-அமிர்தம், இரண்டாவது - சோரம், மூன்றாவது-விஷம், நாலாவது-இலாபம், ஐந்தாவது-சுகம், ஆறாவது-தனம், ஏழாவது-உத்தியோகம், எட்டாவது-ரோகம்.

சனிக்கிழமை பகல் முதலாவது-விஷம், இரண்டாவது-அமிர்தம், மூன்றாவது-ரோகம், நாலாவது - உத்தியோகம், ஐந்தாவது-சுகம், ஆறாவது-இலாபம், ஏழாவது-தனம், எட்டாவது-இலாபம். மேற்படி இரவுமுதலாவது-விஷம், இரண்டாவது-உத்தியோகம், மூன்றாவது-சுகம், நாலாவது - அமிர்தம், ஐந்தாவது-கலகம், ஆறாவது-ரோகம், ஏழாவது-அமிர்தம், எட்டாவது-இலாபம் என்பனவாம்,

கௌமோதம்—கார்த்திகை மாதம்.

கௌரியோகம்—ஓர் நல்ல யோகம். இது-சந்திரன் ஆச்சியாவது உச்சமாவது பெற்று கேந்திரதிரிகோணங்களிலெதிலாவதிருக்க குருவால் பார்க்கப் பெறுவதாம்.

கௌலவம்—பன்றிக்கரணம்.

கௌவை—ஆயிலிய நட்சத்திரம்.

## ச

சககலிதம்—எண்கூட்டல், கலத்தல்.

சகசட்சு } சூரியன்.
சகசாட்சி }

சகடம்—உரோகணி, சகடயோகம்.

சகடயோகம்—குருநின்ற ராசிக்கு ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகிய இவ்விடங்களில் சந்திரன்நிற்பது; இதிற் பிறந்த சாதகன் செல்வத்தைச்சிறிதுசிறிதா யிழந்துமீண்டும் அவ்வண்ணமே செல்வத்தை அடைந்து, உலகத்தில் அதிகக் கீர்த்தியும், சிலகாலம் இன்பமும், சிலகாலம் துன்பமுமனுபவிப்பான்.

(2) இராகு கேதுக்கள் நீங்கிய சூரியனாதி ஏழுகிரகமும், இலக்கின கேந்திரம், ஏழாங்கேந்திரமாகிய இவைகளில் நிற்பது. இதிற் பிறந்த சாதகன் சகடை அதாவது வண்டி இயந்திரமுதலியவைகளால்தனந்தேடி நோயினாற் பீடிக்கப் பெற்று வாழுவான்.

சகடபங்கயோகம் — சந்திரனாவது, வியாழனாவது இலக்கினத்திற்குக் கேந்திரத்தில் நிற்பது. இதன் பலன் சகடயோக பலனுக்கு மாறுபட்டவையாம்.

சகடு—உரோகணி நட்சத்திரம்.

சகத்திரபாதன் } சூரியன்.
சகத்திராமிசன் }

சகத்திரம்—ஆயிரம்.

சகன்—சாலிவாகனன்.

சகாந்தகன் — சாலிவாகனன், விக்கிரமாதித்தன்.

சகாதேவன் — சோதிட நூல் வல்லோன்.

சகுனசாஸ்திரம் } நிமித்தசாஸ்திரம்.
சகுனசாத்திரம் }

சகுனம்—நிமித்தம். இது பறவை மிருகமுதலியவை சந்திப்பதிலிருந்து நன்மை தீமையறிவது. விபரம்:—கரிக்குருவி, கருடன், கட்டுக்காடை, கழுகு, உடும்பு, ஆந்தை, கீரி, குரங்கு இவைகள் வலமிருந்து இடம்போவது நன்றாம். நாரை, விச்சுளி, காக்கை, செம்போத்து, கிளி, கொக்கு, மயில், கோழி, ஓணான், புள்ளிமான், புனுகுப்பூனை, புலி, நரி இவைகள் இடமிருந்து வலம்போவது நன்றாம். பாம்பு, பூனை, முயல் இவைகள் குறுக்கே செல்லல் தீதாம். குடை, கொடி, சாமரம், கரும்பு, அரிசி, மாமிசம், தயிர், கள், தேன், பொரி, ரிஷபம், யானை, குதிரை, பசு, பறவைக்கூட்டம், வெள்ளாடை, வாத்தியம், புட்பம், மணக்கோலம், சுபவரிசை, மங்கிலியப்பெண், கன்னிகை, நீர்க்குடம், பழவர்க்கம், தீ, அன்னம், அரசன், முத்து, பால் இவைகள் எதிர் வருதல் நன்றாம். பயித்தியகாரர், அங்கவீனர்கள், விறகு, மொட்டைத்தலையர், விரிதலையர், எண்ணெய்த்தலையர், நோயாளி, வாணியன், தட்டான், பார்ப்பான், கோமட்டி, கணக்கன், கணக்கோலை, வேடதாரி, சடாதாரி, துட்டப்பெண்கள், அலி, எண்ணெய்க்குடம், ஆயுதங்கள், புதுப்பானை இவைகள் எதிர்வருதல் தீதாம். மூஞ்சூறு, படிப்பு, கழுதை, குதிரை இவைகளின் சத்தமும், நாய்குலுக்கலும், ஆந்தை கிளைகூட்டலும் நன்மையாம். அழுகை, ஒற்றைச்சத்தம், பன்றியுறுமல், அபானவாயு பறிதல், கொக்கரிப்புச் சத்தம், ஓங்காரச் சத்தம், காலிடறல், தலைதட்டல், தடைச்சொல், அகாலமழைதூறல் முதலியன தீமையாம்.

சகுனி—காக்கைக்கரணம்.

சகுனிகிரகம்—குழந்தைகளுக்கு வரும்பாலாரிட்டதோஷத்தொன்று. இது-குழந்தை பிறந்த ஆறாம் நாளிலாவது, ஆறுமாதத்திலாவது, ஆறாம் வருடத்திலாவது குழந்தையை அல்லது தாயைப் பீடிப்பதாம்.

சகோதரத்தானம்—இலக்கினத்திற்கு மூன்றாமிராசி.

சக்கரம் — அறுபது வருடங்கொண்டது, கிரகநடை, சீவியநாள், செவ்வாய் நின்ற நட்சத்திரத்திற்குப் பத்தாம் நட்சத்திரம் என்பனவாம்.

சக்கரதிசை — ஆயுள் முடிவறியுந் திசைகளிலொன்று.

சக்கரயோகம்—இராசயோகத்தொன்று. அது-பத்தில் இராகுவிருக்க பத்துக்கதிபதி இலக்கினத்திருக்க இலக்கினாதிபன் பாக்கியத்திலிருப்பதாம்.

(2) சூரியாதி எழுவர், ஒன்று, மூன்று, ஐந்து, எழு, ஒன்பது, பதினொன்று இவைகளில் நிற்பதாம்.

**சக்கிரபந்து**—சூரியன்.

**சக்கிரம்**—திசை.

**சக்கிரபாந்தவன்**—சூரியன்.

**சக்கிரவேதினி**—இரவு.

**சக்கிராணி**—நவக்கிரகம்.

**சக்தியோகம்**—இருபாம்பு நீங்கிய சூரியாதி எழுவரும் எழு, எட்டு, ஒன்பது, பத்து இவைகளிலிருப்பதாம். இது-கெட்டயோகங்களிலொன்று.

**சங்கடசதுர்த்தி**—ஆவணிமாதம்அமரபக்கத்திய நாலாந்திதி. இது-ஓர் விரதநாள்.

**சங்கம்**—நூறு கோடாகோடி.

**சங்கமயோகம்**—ஐந்தாறுக் குடையவர் ஒருவர்க்கொருவர் பார்வைபெற, அல்லது கேந்திரத்திலேற இலக்கினாதிபன் பெலம் பெற்றிருந்தாலும்,

(2) ஐந்தெழுக்குடையவர் புதனோடு கூடி யாரேனும் உச்சமாயிருக்க பாக்கியாதிபன் சுபனாய் ஆச்சி பெற்றிருந்தாலும்,

(3) பதினொன்றில் குருவிருக்க ஐந்தில் புதனிருக்க இலக்கினாதிபன் வலுத்து நின்றாலும்,

(4) சந்திரன், சுக்கிரன் இவர்கள் கூடி நட்பு வீட்டிலிருக்க, பாக்கியாதிபன் செவ்வாயைப் பார்த்தாலும்,

(5) இலக்கின கருமாதிபதி பாக்கியத்திலிருக்க, பாக்கியாதிபன் பெலம் பெற்றிருந்தாலும்,

(6) மூன்றுக்குடையவன் அல்லது ஒரு பாவியாவது நாலாமிடத்திலிருக்கும் உச்சக்கிரகத்தோடு கூடியிருந்தாலும் இவ்யோகமாம்.

**சங்கயோகம்**—ஓர் சுபயோகம். இது-தரும கருமாதிபதிகளோடு இதர கேந்திரதிரிகோணாதிபர்கள் கூடி நிற்றலாம்.

**சங்கலிதம்**—கூட்டுக்கணிதம்.

**சங்கியை**—எண்.

**சங்கிரமம்**—கிரகநடை, மாதப்பிறப்பு.

**சங்கிரமித்தல்**—சூரியன் முதலிய கிரகங்கள் ஓரிராசியிலிருந்து மற்றோரிராசிக்குச் செல்லுதல்.

**சங்கியாயோகம்**—எழுகிரகங்கள் ஒன்றின்மேலொன்றாய் அட்டமத்தானம் வரை நிற்பது.

**சங்கிராந்தி**—மாதப்பிறப்பு, சூரியன் தனுசுராசியிலிருந்து மகாராசிக்குச் செல்லுங்காலம்.

**சசதரன்**—சந்திரன்.

**சசயோகம்**—பஞ்சக்கிரகங்கள் ஆச்சியுச்ச மிவைகளிற் கேந்திரித்து நின்றாலும், சனி வலுவுற்றிருந்தாலுமாம்.

**சசாங்கம்**, **சசாங்கன்**, **சசி**—சந்திரன்.

**சசிகன்னம்**—சந்திரனுக்கும் பூமிக்குமுள்ள தூரம்.

சசித்துருவம்—சந்திரன் நிலை.

சசிப்பிரபை—நிலவு.

சசிபுடம்—சந்திரனின் சுத்தபுடம்.

சசியாதிபதி—விளைவுகாரகக் கிரகம்.

சசிருது — பின்பனிக்காலம். இவை-மாசி, பங்குனி ஆகிய மாதங்கள்.

சடாயோகம்—இலக்கினத்தில் உச்சனிருக்க, அதைச் செவ்வாய் பார்க்க பாக்கியாதிபதி மூன்றுமிடத்தில் நிற்பதாம்.

சட்டாட்டகம் } ஆறும், எட்டாமிடங்கள்.
சஷ்டாட்டகம் }

சஷ்டி } ஆறாந்திதி, ஆறு.
சட்டி }

சஷ்டிபூர்த்திநாள் } அறுபது வயதிற் செய்யுமோர் சடங்கு.
சட்டிபூர்த்திநாள் }

சஷ்டியாம்சம் } தசவர்க்கத் தொன்று. அது இராசியை அறுபது பங்கிடுவது.
சட்டியாம்சம் }

சட்டு—ஆறு.

சட்டுவர்க்கம்—இலக்கினத்திலிருந்து பிரியும் ஆறுவித வர்க்கம். இது-இராசி, நவாம்சம், திரேகாணம், தசாமிசம், துவாதசாமிசம், திரியாம்சம் என்பனவாம்.

சண்டயோகம்—பத்தாமிடத்திற்சனியும், கருமாதிபதியும் இராகுடன் கூடி நிற்பதாம்.

சண்டன்—சூரியன்.

சதகோடி—நூறு கோடி.

சதம்—நூறு.

சதயம்—குன்று, சுண்டன், செக்கு, போர், வருணனுள்.

சதாசிவநாள்—உரோகணி, பூசம், உத்திரம், அத்தம், அனுசம், உத்திராடம், திருவோணம், உத்திரட்டாதி, இரேவதி.

சதி—உரோகணி நட்சத்திரம்.

சதுஷ்கம் } நான்கு.
சதுட்கம் }

சதுஷ்டயம் } நான்கு மடங்கு கொண்டது, நான்காங்கேந்திரமுமாம்.
சதுட்டயம் }

சதுரசிரராசி—சாலாம், எட்டாமிராசிகள்.

சதுர்த்தசம்—பதினான்கு.

சதுர்த்தசி—பதினான்காந் திதி.

சதுர்த்தம்—நான்காவது.

சதுஷ்பாதம் } கரணம் பதினொன்றில் ஒன்று. இது-நாய்க்கரணம்.
சதுர்ப்பாதம் }

சதையம்—சதையநட்சத்திரம்.

சத்தமண்டலம்—எழுமண்டலம். இவை-அக்கினிமண்டலம், சந்திரமண்டலம், சூரியமண்டலம், திருசங்குமண்டலம், நட்சத்திரமண்டலம், வருணமண்டலம், வாயுமண்டலம் என்பனவாம்.

சத்தமாமிசம்—தசவர்க்கத்தொன்று.

சத்தமி—ஏழாந்திதி.

சத்தமேகம்—ஏழுமேகம் பார்க்க.

சத்தவருஷங்கள்— ஏழுகண்டங்கள். இது-இவ்விந்திய தேசத்தை ஏழுபாகமாகப் பிரிக்கப்பெற்றது.

சத்தியயுகம்—கிரேதாயுகம்.

சத்துரு—பகைமை.

சத்துருத்தானம் — இலக்கினத்திற்காறுமிடம்.

சத்துவிசு—சூரியகிரணத்தொன்று.

சத்ரயோகம்—இராகு கேது நீங்கிய சூரியனாதி எழுகிரகங்களும், ஏழா மிடமுதல் இலக்கினம் வரை நிற் பதாம். இவை-நண்பர்களால் உத வியையும், அந்தியகாலத்தில் சகல செல்வத்தையும் கொடுக்கும்.

சநி—ஓர் கிரகம், ஓர் கிழமை.

சநீசுவரன்—நவக்கிரகங்களுள்ஒன்று.

சந்தகன்—சந்திரன்.

சந்தர்ப்பம்—காலம், தருணம்.

சந்தானதீபிகை—ஒரு சோதிடநூல், இது-புத்திர பாகத்தை விரித்துக் கூறும் நூல். இதைச் சந்திரசேகர முனிவர் புதல்வர் இராமலிங்க முனிவரால் சாலிவாகனசகாப்தம், ஆயிரத்து அறுநூற்று முப்பத்து நாலுக்கு நந்தன வருஷம் தை மாதம் மூன்றாந்தேதி வியாழக்கிழ மை பூசநட்சத்திரத்தில் எழுதிய தாகத் தெரிகிறது.

சந்தி—காலைநேரம், மாலைநேரம்.

சந்திமிதித்தல்—குழந்தை பிறந்த ஆறுமாதத்தில் செய்யுமோர் சட ங்கு.

சந்திரஉலகம்—சந்திரமண்டலம்.

சந்திரலோகம்—ஈயம், வெள்ளி.

சந்திரகலை—இடகலை, சந்திரன்கூறு.

சந்திரகாந்தை—இரவு.

சந்திரகாரகாதிபத்தியம்— மாதர், இடப்பாகம், அழகு, குளிர்ச்சி, முகம்,சிலேத்துமம்,வாசனைத் திர வியங்கள், கருமம், சிநேகம் என் பனவாம்.

சந்திரசமித்து—முருக்குமரம்.

சந்திரசம்பவம்—புதன்.

சந்திரசியா—கணிதவாக்கியத்து ளொன்று.

சந்திரசுவை—தித்திப்பு.

சந்திரதசை—சந்திர திசை.

சந்திரதானியம்—நெல்.

சந்திரதிக்கு—தென்கிழக்கு. வட திசை யென்பாருமுளர்.

சந்திரதிசை—சந்திரனில் நடக்குங் காலம். இதன் வருஷம் பத்து.

சந்திரதிருஷ்டி } சந்திர பார்வை.
சந்திரதிருட்டி } இது - ஞாயிற்றுக் கிழமை முதல் அன்றைய வரை யிற் சென்ற கிழமையை மூன்றிற் பெருக்கிவந்த தொகையை அசு பதி முதலாகக் கழித்துநின்ற நட் சத்திரத்தில் ஒன்பது நட்சத்திரம் சந்திரனுக்கு ஒரு கண்பார்வையு டையநாளென்றும், அதற்குமேல் பனிரண்டு நட்சத்திரம் இருகண் பார்வையுடையநாளென்றும், அத ற்கு மேலுள்ள ஆறு நட்சத்திரங் களுங் குருட்டுநாளென்றுங் கொள் வதாம்.

சந்திரநட்சத்திரம்—ஆயிலியம்,பூரம்.

சந்திரநாகம்—இராகு.

சந்திரநாள்—கலை, சுக்கிலம், திங்கட் கிழமை, திதி, பூருவம், விளக்கம். அன்றியும் சந்திரனோடு கலைதெரி யுமிரவுக்கு சினிவாலி யென்றும், கலைதெரியாத இரவுக்குக் குகு வென்றும் பெயர், மற்றும் இருத்

தை, சயை, நத்தை, பத்திரை இவைகள் சந்திரன் கூறுபாடுகளாம்.

சந்திரநிறம்—வெண்மை.

சந்திரபாகை—சந்திரனின் பங்கு.

சந்திரபாஷை—தமிழ்.

சந்திரபார்வை—சாந்தம்.

சந்திரபுட்பம்—வெள்ளல்லி.

சந்திரபுத்திரன்—கலைஞானபாதன்.

சந்திரமங்களயோகம் — சந்திரனுஞ் செவ்வாயுங்கூடி ஏழாங்கேந்திரமேறி நிற்றல்.

சந்திரமண்டலம்— சந்திரனிருக்கும் மண்டலம்.

சந்திரமானம்—சந்திரன் சஞ்சரிக்குமளவு.

சந்திரரத்தினம்—முத்து.

சந்திரராசி—சரராசி, சந்திரனிருக்குமிராசி, கடகம்.

சந்திரரேகை—சந்திரகலை.

சந்திரலக்கினம் — சந்திரனிருக்குமிராசி.

சந்திரயோகம்—ஏழாமிடமுதல் பனிரண்டாமிடம் வரை ஏழு கிரகம் வரிசையாய் நிற்பது.

சந்திரலோகம் — சந்திரமண்டலம், ஈயம், வெள்ளி.

சந்திரவடிவம்—குறுமை.

சந்திரவாகனம்—விமானம்.

சந்திரவாக்கியம்—பஞ்சாங்க கணித வாக்கியத்துள் ஒன்று.

சந்திரவோரை—சந்திரன் காலம், மேற்படி இலக்கினம்.

சந்திரன் — அமுதகதிரோன், அம்புலி, அரி, அரிச்சிகன், அலவன், அல்லோன், ஆலோன், இந்து, இமகரன், இராக்கதிர், இனன், உடுபதி, உடுவின்வேந்தன், கலாநிதி, கலைஞினன், களங்கன், குபேரன், குமுதநண்பன், குரங்கி, குழவி, சசி, சீதன், சுதாகரன், சோமன், தண்சுடர், தண்ணவன், தாராபதி, தானவன், திங்கள், தெவ்வு, நிசகரன், நிசாபதி, நிலவு, பசுங்கதிர்த்தே, மதி, மதியம், மானேந்தி, முயலின்கூடு, விது, வீபத்து, வெண்கதிரோன், வேந்தன். அன்றியு மிளஞ்சந்திரன் பெயர் பிறை, குழவி.

சந்திரன்குணம்—சத்துவம்.

சந்திரன்நிற்குமிராசி — நட்சத்திரம் நிற்குமிராசியிலறிக.

சந்திரன்பிணி—சிலேத்துமம்.

சந்திரன்புத்தி—ஒவ்வொரு கிரகதிசையினுள் நடக்குங்காலம்.

சந்திராஸ்தமனம் } சூரியனுக்குமுன்
சந்திராத்தமனம் } பின் பனிரண்டு பாகைக்குள் சந்திரன் வருவதாம்.

சந்திரரபதம்—சந்திரகிரணம்.

சந்திரிகாயோகம்—பாக்கியாதியனிருந்த வீட்டுக்குடையவன், சுக்கிரன், செவ்வாய் ஆகியவர்களுடன் கூடி ஐந்தாமிடத்தில் நிற்பதாம்.

சந்திரிகை—சந்திரகிரணம்.

சந்தில்—சனி.

சந்தோசகாரகன்—வியாழன்.

சப்பன்னம்—ஐம்பத்தாறு.

சமசந்திரன்—கிரணமத்தியகாலத்துக்குச் சந்திரபுடம்.

சமரவி — கிரண மத்தியகாலத்துக்குச் சூரியபுடம்.

சமவடிவக்கிரகம் — சுக்கிரன், சூரியன்.

சமனேக்குநாள்—அசுபதி, அத்தம், அனுசம், கேட்டை, சித்திரை, சோதி, புனர்பூசம், மிருகசீரிடம், இரேவதி.

சமன்சங்கிலிதம் — இரட்டை நிரை இலக்கங்களைக் கூட்டல்.

சமன்வியன்சங்கிலிதம்— இரட்டைத் தானத் தொற்றைநிரை கூட்டல்.

சமாதி—பனிரண்டாமிடம்.

சமிதை—விறகு. இது-அத்தி, அரசு. ஆல், இத்தி, கருங்காலி, நாயுருவி, பலாசு, மா, வன்னி என்பனவாம்.

சமீனம்—வருடாந்தம்.

சமூகவேதை—சனிசேய் நின்ற நட்சத்திரத்துக்கு நாலு, ஒன்பது, பத்து, பதினொன்று, இருபத்துமூன்று, இருபத்திநாலு, இருபத்தைந்து,இருபத்தேழாவது நட்சத்திரங்களாம்.

சமூதயம்—இலக்கினம், நாள்.

சமூதாயம் — அஷ்டவர்க்கத்திலொன்று. அது-அதிபால்.

சமுத்திரநட்சத்திரம்—அனுசம், அவிட்டம், கார்த்திகை, மகம்.

சமுத்திரநவநீதகம் }
சமுத்திரநவநீதம் } சந்திரன்.

சமுத்திரம்—ஒரெண், கடல்.

சமுத்திரயோகம்— விசேட இராசயோகம். அவை:-இராகு, கேது நீங்கிய சூரியனாதிஏழு கிரகங்கள், இரண்டு, நாலு, ஆறு,எட்டு,பத்து, பனிரண்டு ஆகிய இவ்விடங்களில் நிற்பது.

சமுத்திராயோகம்—கருமாதிபன் பாக்கியத்திருக்க அவ்வீட்டோன் ஏழிலிருக்க ஏழுக்குடையவனும் ஒன்பதுக்குடையவனும் கிரகமாறி நிற்பதாம். இவை:-விசேட நல்ல யோகம்.

சமை—அமாவாசை, வருடம்.

சமையம்—காலம், வாரம்.

சம்பற்கார்த்தம்—இராகுதேகஞ் சசிதேகமிவற்றின் தொகை.

சம்பாசஸ்டி — மார்கழி, புரட்டாசி ஆகிய மாதங்களில் வரும் பூருவ பக்கத்திய ஆறாந்திதி.

சம்பு—சூரியன்.

சம்வற்சரம் — வருடம். இது:-அயனம், இருது,மாதம், வாரம் ஆகிய அவயவங்கள் கூடியது. அது:-பனிரண்டு மாதங்களுடையது. இவ்வருடம் சாந்திரமானம், சௌரமானம், சாவனம் என மூவகைப்படும். இதில் சாந்திரமானமென்பது சித்திரை மாதஞ் சுக்கிலபட்சப் பிரதமைமுதல் பங்குனிமாதம் பௌரணை வரை கணிப்பதாம்.

சௌரமான மென்பது சித்திரை முதல் பங்குனி கடைசிவரை கணிப்பதாம். சாவனமென்பது முன்னூற்றறுபத்தாறு நாள் கொண்டதாம்.

சய—இருபத்தெட்டாவது வருடம்.

சயந்தமாலை—ஓர் சோதிடநூல்.

சயந்தன்—சந்திரன்.

சயமகள்—மிதுனவிராசி.

சயம்—சூரியன், சாரம்.

சயனத்தானம் — ஏழாம் பனிரண்டாமிடங்கள்.

சயத்தகம்—சிற்பநூல் முப்பத்திரண்டினொன்று.

சயித்திரம்—சித்திரைமாதம்.

சயை—சந்திரனின் மூன்ரும் எட்டாம் பதின்மூன்ரும் பக்கங்கள்.

சரசுவதியோகம் } ஓர்நல்லயோகம்.
சரஸ்வதியோகம் } இவை-இலாபாதிபதியின் அங்கிசாதிபதி பதினோராமிடத்தில் பாக்கியாதிபதியோடு கூடி உச்சம்பெற்று நின்ருலும், (2) குரு, சுக்கிரன், புதன் ஆகிய இவர்கள் கேந்திரகோணம் அல்லது வாக்கிலாவது நின்று குரு ஆச்சியுச்சம் நட்பு இவற்ருல் வலுத்து நின்ருலுமாம்.

சரசோதிமாலை—ஓர் சோதிடநூல்.

சரதலம்—கிரக கதியறிகைக் குறி.

சரநட்சத்திரம் } இயங்குநட்சத்திரம்.
சரநாள் } இவை-சோதி, திருவோணம், புனர்பூசம், அவிட்டம், சதயம் என்பனவாம்.

சரநூல் — நிமித்தம் பார்க்கும் ஓர் சாத்திரம்.

சரமாதம்—சித்திரை, ஆடி, ஐப்பசி, தை.

சரம்—ஆறு பருவத்தொன்ருகிய ஐப்பசி, கார்த்திகையின் பருவம், சரராசி.

சரயோகம் — சூரியாதி எழுவரும், நாலு, ஐந்து, ஆறு, ஏழு இத்தானங்களிலிருப்பதாம்.

சரராசி—மேடம், கடகம், துலாம், மகரம்.

சரருது—கூதிர்காலம். இது-ஐப்பசி, கார்த்திகை.

சரற்காலம் — மாரிகாலம். இது-ஐப்பசி, கார்த்திகை மாதங்கள்.

சராங்கிசம்—சரராசியங்கிசம்.

சருவசாட்சி—சூரியன்.

சருவசித்து—இருபத்தோராவது வருடம்.

சருவசித்து வருடப்பலன் — காலத்தில் நல்லமழையும், நவதானிய முதலிய பதினெட்டுவகை விளைபொருள்கள் விருத்தியும், மனிதர்கள் நல்ல சுகவாழ்வுடனு மிருப்பர்.

உதாரணம்:—சருவசித்து தன்னிற் றலத்திற் பலவும், ஒருபதினெட்டுவித்து மோங்கும்-பெருமையுடன், மிக்கவிளை வுண்டாமேன்மேலு மாரியுண்டாம், தக்க சுகம்பெருகுந் தான்.

(இடைக்காடர்.)

சருவதாரி—இருபத்தெட்டாவதுவருடம்.

சருவதாரி வருடப்பலன் — நல்ல மழையும், ஐந்துவகைத்தானியங்களாகிய கோதுமை, நெல், துவரை, மொச்சை, கடலை முதலியன விருத்தியும், சொற்பக்காலத்தில் விளையக்கூடிய இளவித்துக்கள் நட்டமுமுண்டாம். ஆகினும் மனிதர்கள் பிணிவாதையற்றுச் சுகமாயிருப்பார்கள்.

உதாரணம்;--நற்சருவதாரிதனின் நல்லமழை யுண்டாகும், அற்பவித்து ஆனதெல்லாம் ஆகாது-சொற்பெரிய, ஐந்து வகைவிளைவுமாகுஞ் சுகமுடனே, மைந்தரெல்லாம் வாழ்ந்திருப்பர் மற்று.

(இடைக்காடர்)

சருவரி—இரவு.

சர்க்கராசத்தமி — மாசி மாதத்தின் பூருவபக்கத்து ஏழாந்திதி.

சர்ப்பயோகம்—சூரியன், செவ்வாய், சனி இவர்கள் மூன்று கேந்திரங்களிலிருக்க, மற்றொரு கேந்திரத்திற் சுபர்களில்லாமலிருப்பதும்,

(2) பாக்கியாதிபதி மூன்றுமிடமிருக்க அதைக் குருபார்வை பெற்றிருந்தாலும்,

(3)ஒன்பதில் சுக்கிரன் குரு இலாபாதிபதி இவர்கள் கூடி நிற்க இவர்களைத் தனுதிபதி பார்த்து நிற்பதுமாம்.

சர்வசங்கிரகநாடி—ஓர்சோதிட நூல்.

சர்வசித்து—சருவசித்து வருடம்.

சர்வதாரி—சருவதாரி வருடம்.

சலகன்னம்—பூமிக்கும் கிரகத்துக்குமுள்ள தூரம்.

சலக்கிரகம் } நீர்முதலியவற்றிற்கு
சலக்கோள் } அதிகாரம் அல்லது காரகாதி பத்தியம் பெற்ற கிரகம். அது—சுக்கிரன், சந்திரன், ராகு.

சலசரம்—மீனவிராசி.

சலநாள் — அத்தம், ஆயிலியம், உரோகணி, கேட்டை, சித்திரை, சோதி, திருவோணம், புனர்பூசம், பூசம், பூராடம், மிருகசீரிடம், விசாகமென்பனவாம்.

சலராசி—நீர்முதலியவற்றிற்கு அதிகாரம் அல்லது காரகாதிபத்தியம் பெற்ற இராசி. இது—கடகம், கும்பம், மகரம், மீனம், விருச்சிகமென்னும் ஐந்து ராசிகளுமாம். அன்றியும், இடபம், துலாமாகியவைகள் சேர்ந்து ஏழுராசிகளுமாமென்னும் நூல்களுமுள.

குறிப்பு;—முற்கூறியவைகளில் கடகம், மீனமிவ்விரண்டும் முழுச்சலராசியென்றும், கும்பம், மகரமிவ்விரண்டும் முக்காற்சலராசியென்றும், துலாம் அரைச்சலராசியென்றும், இடபம் விருச்சிகம் காற்சலராசியென்பாருமுளர்.

சலவிசுவம்—ஐப்பசி மாதந்தொடங்கி பங்குனிமாதமட்டும் சூரியன் நிற்குமிடம்.

சல்லியம்—சிற்பநூல் முப்பத்திரண்டினென்று. அது:—தலையோடு, எலும்பு, செங்கல், ஓடு, விறகு, விக்கிரகம், சாம்பல், கரி, பிணம், தானியம், பொன், கல், தேரை, விலங்கின்கொம்பு, சாடி முதலியவைகள் புதைந்து கிடப்பதை யறிந்து கூறும்.

சல்லியன் — சுக்கிரன்.

சவலைமதி—அமாவாசை.

சவிதா—சூரியன்.

சவுமம்—சிற்பநூல் முப்பத்திரண்டினென்று.

சவுமன்—புதன்.

சவுமிய—சௌமியவருடம்.

சவுரமானதினம்—அறுபது நாழிகை கொண்ட ஒருநாள். இது தற்காலம் மூன்றுவகையாகக்கணிக்கப் பெற்று வருகிறது.

(1) இந்துக்களாற் சூரியவுதய முதல் மறுநாட் சூரியவுதயம் வரை ஒருநாளென்றும்,

(2) முகம்மதியர்களாற் சூரிய அத்தமன முதல் மறுநாட் சூரிய அத்தமனம் வரை ஒருநாளென்றும்,

(3) இங்கிலீஷ் முறைப்படி இரவு பனிரண்டு மணிமுதல் மறுநாளிரவு பனிரண்டு மணிவரை ஒரு நாளென்பதாம். சவுரமான தினம் ஆரம்பிக்கும்போது கிழமையும் ஆரம்பமாகும்.

சவுரமானம்—சூரியமாதம், சூரியனை முதலாகக்கொண்டு கணிக்கு முறை. இது—சூரியன் ஒரு ராசியிற் பிரவேசித்தது முதல் அவ்விராசியைவிட்டு நீங்கும் வரையுள்ளகாலம். இதில் மாதம் ஒன்றுக்கு இருபத்தொன்பது தேதி முதல் முப்பத்திரண்டு தேதிக்கு அதிகப்படாமல் சூரியகதியை யனுசரித்து வித்தியாசப்பட்டுவரும்.

சவுரமானவருடம் — பனிரண்டு சவுரமான மாதங்கொண்டது.

அவை — பரகிதப்படி மூன்னூற்றறுபத்தைந்துதினம், பதினைந்து நாழிகை, முப்பத்தொருவினாடி, பதினைந்துதற்பரையாகிய இவைகள் கொண்டதுமாம்.

சவுரி—சனி.

சவ்வியம்—வலப்பக்கம்.

சவ்வியை—தெற்கு.

சற்கருமத்தானம்—ஏழாமிடம்.

சனி—அந்தகன், அந்தணன், அந்தன், கதிர்மகன், கரியவன், காரி, கீழ்மகன், சந்தில், சவுரி, சாவகன், தமனியன், நீலன், நோய்முகன் பங்கு, பங்குபாதன், மந்தன், முடவன், முதுமகன், மேற்கோள், சனிக்கிழமைக்கும் பெயர்.

சனிகாரகாபத்தியம் — ஆயுள், பசி, தாகம், துர்ப்பலம், ஆபத்து, அவத்தை, வாதரோகம் என்பனவாம்.

சனிசமித்து—வன்னி.

சனிசுவை—கசப்பு.

சனிதானியம்—எள்.

சனிதிக்கு—மேற்கு, வடமேற்றிசை என்பாருமுளர்.

சனிதிசை—சனிதசை, சனியில் நடக்குங் காலம், இதன் வருஷம் பத்தொன்பது.

சனிநட்சத்திரம்—அவிட்டம், உத்திராடம்,சதயம், திருவோணம், பூரட்டாதி என்பனவாம்.

சனிநிறம்—கறுப்பு.

சனிபாஷை } அன்னியபாஷை.
சனிபாடை }

சனிபார்வை—குரூரபார்வை.

சனிபுட்பம்—கருங்குவளை.

சனிபுத்தி — ஒவ்வொரு திசையின் உள்நடக்குங் காலம்.

சனிபுத்திரன்—குளிகன்.

சனிப்பிரதோசம்—பூருவம் அபரமாகிய இருபக்கங்களிலும் சனிவாரத்தோடு வரும் திரயோதசி திதி.

சனிமூலை—வடகிழக்கு.

சனியன்—அதிட்டக் குறைவு, சனிக்கிரகம்.

சனியின்குணம்—தாமதம்.

சனியின்பிணி—வாதம்.

சனிரத்தினம்—நீலம்.

சனிலிங்கம்—அவி.

சனிலோகம்—இரும்பு.

சனிவடிவம்—குறுமை, குட்டை.

சனிவாகனம்—காகம்.

சனிவேதை — சனியினுல் வரும் நோய்.

சனீச்சுவரன்—சனிபகவான்.

சன்மவாரம்—பிறந்தநாள்.

சன்மினி—யோகினி.

சன்னியாசம் — பனிரண்டாமிடம்.

## சா

சாகம்—சகவருடம், மேடம், வெள்ளாடு.

சாகரம்—பதினுயிரங்கோடி கோடாகோடி.

சாகாடு—உரோகணி.

சாக்கை—சோதிடன்.

சாடி—கும்பவிராசி.

சாட்டம்—நூற்றெட்டு.

சாதககணிதாமிர்தம்—ஓர் சோதிட நூல்.

சாதகசிந்தாமணி—ஓர் சோதிடநூல்.

சாதகபலன்—பிறப்பின்படி கிரகங்களாலாகும்பலாபலன்.

சாதகபஞ்சசித்தாந்தம்—ஓர் சோதிட நூல்.

சாதகம்—திதி முதலிய எழ்வகையுறுப்புக்களின் நிலையை சோதிட நூலாலுணர்ந்து அவற்ருல் வரும் பயன் கூறுவது.

சாதகன் — சாதகத்திற்குரியவன்.

சாதகாலங்காரம் —சோதிட நூல்களிற் பழமைபெற்றது. இது-கீரனூர் நடராஜரென்பவரால் சாலிவாகன சகாப்தம், ஆயிரத் தைநூற்று எண்பத்தேழாவது விசுவாவசு வருடத்தில் ஆக்கப்பெற்றது.

சாதம்—பிறப்பு.

சாதல்—இறப்பு.

சாதாரண—நாற்பத்து நாலாவது வருடம்.

சாதாரணவருடப்பலன்— பின்மழையும், வேளாண்மை பலிதமும், வெண்மைப் பொருள்களாகிய பருத்தி, உப்பு முதலியன குறைவும், இலாட தேயத்திற் சிறிது பஞ்சக்குறியு முண்டாம்.

உதாரணம்;— சாதா ரணவருடந் தானியங்க ளோங்குமே, ஆதார மாமழைபின் ஞகு மே— தீதாக, இல்லையெனும் பஞ்சமிலாடத்திற்ரேன் றும் மென்றே,சொல்லுப்பு வெள்ளைசுருங் கும்.

(இடைக்காடர்.)

சாதுர்ப்பாகம்—நாலத்தொன்று.

சாத்திகம் — சிற்பநூல் முப்பத்திரண்டிஞென்று.

சாத்தியம்--சாத்மீகம்,சித்தியயோகத்தொன்று.

சாத்திரக்காரர்—சோதிடர்.

சாஸ்திரம், சாத்திரம் } சோதிடநூல்.

சாஸ்திரி, சாத்திரி } கணிதன், நிமித்தஞ்சொல்வோன்.

சாத்மீகம், சாத்துவிகம், சாத்வீகம் } முக்குணவேளையிஞென்று.

சாத்துவீகக்கிரகம்—சந்திரன், சூரியன், வியாழன்.

சாந்தபனம்—ஓர் விரதநாள்.

சாந்தன்—சந்திரன்.

சாந்திரமாசம், சாந்திரமாதம், சாந்திரமானமாசம், சாந்திரமானமாதம் } சந்திரன் சுற்றிவருவதைக் கொண்டு கணிக்கப்படும் மாதம். அவை-சுக்கில (வளர்பிறை) பக்கம் பிரதமை முதல் கிருட்டிண (தேய்பிறை) பக்கம் அமாவாசி முடிய மேடராசி முதற்கொண்டு ஒவ்வொரு ராசியிலும் சூரியனிருக்கும்பொழுதுகணிக்கப்படுவது: அன்றியும், அந்த அந்த சாந்திரமான மாதத்தின் பூரணையன்று சந்திக்கும் நட்சத்திரத்தின் பெயரை யொட்டியே மேற்படி மாதங்களுக்குப் பெயரிடப்பெற்று வழங்குகின்றது.

சாந்திரமானம்--சாந்திரமாதங்களால் வரும் வருடம்.

சாந்திரமானதினம்—சந்திரன்,சூரியனில் நின்றும் பனிரண்டு பாகைகள் பிரிவதற்கு வேண்டிய காலம். இதுவே திதி.

சாந்திரமானவருடம் — சந்திரமான மாதங்களால் வரும் வருடம்.இது-சவுரமான வருடத்தைப் பார்க்கிலும் சிறிது குறைந்தது. சாதாரணமாய் பனிரண்டு, அலலது பதின்மூன்று சாந்திரமான மாதத்துடனும் வரும்.

சாந்திரம்—சந்திர சம்பந்தமுள்ளது, சுக்கிலபட்சம்.

சாந்திராண்டு — சாந்திரமான வருடம்.

சாந்திராயணம்—ஓர் நோம்புநாள்.

சாந்திராயனம்—சந்திரன் வீதி,

சாபம்—தனுசுராசி.

சாபலம்—சாஞெண்டு பெற்றபலம்.
இது-கணிதமுறையிஞென்று.

சாமம்—இரா, எழரை நாழிகை கொண்ட காலம், பாதிராத்திரி, இயாமம்.

சாமரயோகம்--ஓர்சுபயோகம்,இவை இலக்கினத்தோன் கேந்திரம், உச்சமிவைகளிலிருக்க குரு நேர்பார்வை பெற்று நின்றாலும்,

(2) இலக்கினத்தோன் குருவோடு கூடி பணபரத்திருக்க, அதைச் சுக்கிரன் பார்த்தாலும்,

(3) இலக்கினம் சராராசியாக இலக்கினத்தோன் ஒன்பது, பத்து இவைகளில் நின்றாலும்,

(4) இலக்கினத்தில் இரண்டு சுபக்கிரகமிருக்க, அல்லது வேறு கிரகங்களிலிருந்து எழு, ஒன்பது இவ் வீட்டதிபர்கள் பத்திலிருந்தாலும்,

(5) மூன்று, பதிஞென்றில் பாவரிருக்க, அல்லது சுபக்கிரகமாவது இருக்க, இலக்கிஞதிபன் அதிக வலுவுற்றிருந்தாலும்,

(6) சூரியன் வர்க்கோத்தமமாகவும் இலக்கிஞதிபன் உச்சமாயும் ஐந்து, ஒன்பதில் புதனிருந்தாலும்,

(7) இலக்கினம் சராராசியாக விருந்து நாலேழுக்குடையவர்கள் அதிபெலம் பெற்றிருந்தாலும்,

(8) இலக்கினம் சராராசியாக பனிரண்டில் இலக்கிஞதிபனிருக்க, குரு கேந்திரித்து பூர்வபட்சமாக விருந்தாலும்,

(9) திரராசி உதயமாகி இலக்கிஞதிபதி உச்சத்திலிருந்து இலாபாதிபன் பாக்கியமேறி யிருந்தாலும்,

(10) பூரணையிற் பிறந்த சாதகருக்கு, இலக்கிஞதிபன் உச்சத்திருக்க இலக்கினத்தில் கிரகங்களிலிருந்தாலும்,

(11) புதன், சுக்கிரன், சூரியன் ஒன்றுக்கொன்று கேந்திரிக்க அல்லது கூடிநின்றாலும்,

(12) இலக்கினத்தில் ●பர்களிலிருக்க, அல்லது பார்க்க, இலக்கிஞதிபதி ஆறெட்டுப் பனிரண்டு நீங்கிய இடங்களில் ஆச்சி யுச்சம் பெற்று நின்றாலுமாம்,

சாமன்—புதன்.

சாமி, சாமிநாதன் } இக்கிஞதிபன், குரு.

சாமுத்திரீகம், சாமுத்திரீகாலட்சணம் } அங்கலட்சணம், அங்க இலக்கண நூல்.

சாயந்திரம்—அந்திப்பொழுது.

சாயரட்சை—அந்தி.

சாயனம்—கிரகபுடம்.

சாயாக்கிரகம்—இராகு, கேது, தூமாதிபஞ்சக்கிரகம்.

சாயாதனயன்—சனி.

சாயாபதி—சூரியன்.

சாயாபுத்திரன்—சனி.

சாயாபுருடதரிசனம்—தன்னிழலால் ஆயுள் அறிவது. அது:-சூரியனை யாவது சந்திரனையாவது தன்பின் புறமாகவிட்டு சித்தசுத்தியாய் தனது சாயையைப் பூமியிற் பார்த்து அவ்வகையாகவே ஆகாயத்தைநோக்க அவ்வுரு ஆகாயத்தில் தோன்றும். இவ்வுரு தலையில்லாது தோன்றுமானல் ஆறு மாதத்தில் மரணமென்பதாம்.

சாரங்கம்—இரா, பூமி, மேகம்.

சாரஸ்வதம்—தாரா பல சந்திர பல பொருத்தமுள்ள ஆதிவாரம்.

சாரதயோகம்—ஓர்சுபயோகம். இவை இலக்கினம் வர்க்கோத்தமமாக, இலக்கினுதிபதி சுபக்கிரகத்தோடு கூட, இவர்களை இலாபாதிபன்நோக்கி நிற்பதாம்.

சாரதீயம்—குளிர்காலம்.

சாரவாக்கியம்—கிரகமானம்.

சார்வரி—முப்பத்து நாலாவது வருடம்.

சார்வரிவருடப்பலன்—மழையில்லை, பூமி விளையாது, பதினெட்டு வகையான தொழிலாளிகளும் பஞ்சத்தாலேங்கியும் நோயால்மெலிந்தும் மரணங்களுமடைவார்கள்.

உதாரணம்—சாருவரி யாண்டதனிற் சாதிபதி னெட்டுமே, தீரமறு நோயாற் றிரிவார்கள்-மாரியில்லை, பூமிவிளை வில்லாமற் புத்திரரு மற்றவரும், ஏயமின்றிச் சாவா ரியம்பு. (இடைக்காடர்)

சாலயோகம்—ஓர்சுபயோகம். இதுநாலோன் பத்தோன் கிரக மாறியிருக்க இலக்கினுதிபன்உச்சம்பெற்று நிற்பதாம.

சாலிவாகனசகாப்தம் — சாலிவாகன வருடம். இது — சாலிவாகனன், விக்கிரமார்க்கனேடு போர்புரிந்து நருமதா நதிக்கு வடக்கில் முறிய அடித்தோட்டி, தன்னரசாட்சியை நிலை நாட்டிய வருடமானதால், நருமதாநதிக்கு வடக்கிலுள்ளோர் விக்கிரமார்க்க சகாப்தத்தையும், மேற்படி நதிக்குத் தெற்கிலுள்ளோர், சாலிவாகன சகாப்தத்தையும் ஆதியாயனுஷ்டித்து வருகின்றனர். இவ்வரசாட்சி கலியுகாதி வருடம் மூவாயிரத்து நூற்றெழுபத்தொன்பதில் தொடங்கிற்று. இவன் அரசுபூண்ட மூன்னூற்றைம்பதாம் வருடத்துவக்கத்தில் கணிதசாஸ்திரிகளால் வரையறுத்து இதன் முன்சென்ற மூன்னூற்று நாற்பத்தொன்பது கணக்கையே கணிதத்திற்குத் துருவமாக வகுத்து வைத்திருக்கின்றனர்.

அவ்விதம் மூன்னூற்று நாற்பத்தொன்பதாம் வருடத்துடன் அட்சய முடிந்தபடியால் பிரபவ முதல் அட்சய கடையாகவரும் ஒரு சுற்றைப் பரிவிர்த்தியாகக்கொண்டு கணிக்கப்பெற்று வருகின்றது.

அதன்படி இப்போது நடக்கும் இங்கிலீஷ் ஆயிரத்துத் தொளாயிரத்துஇருபத்துநாலாவது வருடமானது இருபத்து மூன்றாவது பரிவிர்த்தியாகும்.

சாவகன்—சனி.

சாவாக்கியம் — கணிதமுறையினொன்று.

சாவித்திரன்—சூரியன்.

சாவித்திரி—சூரியகிரகணம்.

சாவித்திரி விரதம்—ஆனிமாதத்துப் பூரணையில், மங்கிலியப் பெண்கள் கணவன் ஆயுளைக்கோரிச் செய்யும் விரதம்.

சான்றோன்—சூரியன்.

## சி

சிகண்டிசன் } வியாழன்.
சிகண்டிதன் }

சிகம்—கிரணம்.

சிகரகேந்திரம்—சூரியனுக்கும் மற்றக் கிரகத்துக்கு முள்ள தூரம்.

சிகி—கேது.

சிகை—கிரணம்.

சிங்கிறம்—சிவப்பு.

சிங்கத்திக்கு } தெற்கு.
சிங்கத்திசை }

சிங்கமாதம்—ஆவணிமாதம்.

சிங்கம்—அரிமா, ஆளி, ஐயானனம், புலி, சிம்மம். இன்னுஞ் சிங்கத்தின் பெயரெல்லாம் பொருந்தும்.

சிங்காவி—ஆவணிமாதம், சிங்கத்தில் சூரியனிற்றல்.

சிங்கவுருவம்—சிம்மம்.

சிங்காங்கம்—மார்பு.

சிங்கிலி—இரண்டு.

சிசிரம் — ஆறு பருவத்தொன்றாகிய மாசி, பங்குனியின் பருவம்.

சிதகன்—சுக்கிரன்.

சிதம்—நட்சத்திரம், வெள்ளி.

சிதன்—சுக்கிரன்.

சித்தம் — சித்தியயோகத்தொன்று, இலக்கினத்திற்கைந்தாமிடம்.

சித்தயோகம்—சுபயோகம்.

சித்தாந்தி—கணிதன்.

சித்தார்த்தி—ஐம்பத்து மூன்றாவது வருடம்.

சித்தார்த்தி வருடப்பலன்—குறைந்த மழையும், இளம்வித்தாகிய தினை முதலிய தானிய விளைவும், வடதேசத்தில் அரசர்களுக்குள் சண்டையும், கெடுதியுமுண்டாம்.

உதாரணம்:—ஆனசித் தார்த்தி தனில் அற்பமழை யுண்டாகும், ஏனல்கப்பிராச்சியத்தி லேமிகுதி- ஊனமுடன், வெட்டிமடி வாரா சர் வேற்றரசர் நாடாகும், நட்டி வடக்கிலென்றே நாட்டு.

(இடைக்காடர்.)

சித்தி—சித்தியயோகத் தொன்று.

சித்திரகெண்டிசன்—வியாழன்.

சித்திரபானு — சூரியன், பதினாறாவதாண்டு.

சித்திரபானு வருடப்பலன்—எல்லாவிடங்களிலும் நல்லமழையும், நாலுவகைமூலப்பொருள்களைவிருத்தியும், எல்லாவகைத் தானியங்கள்

விளைவும், அரசாங்கத்திற்கு நன்மையும், அதனல் குடிகளுக்குச் சுகமும்,இதற்கு இடையூறு யிருக்கும் பார்ப்பாருக்குத் தீங்கும், சிறிது பூமி பயமு முண்டாம்.

உதாரணம்:— சித்திர பானிற் சிறக்க மழைமிகுத்து, வித்துள்ள தெல்லாம் விளையுமே-எத்திசையும், பார்ப்பாருக் காகாது பார் வேந்தர்க் கேநலமாம், தீர்ப்பாகப் பூமிபயஞ் செப்பு.(இடைக்காடர்)

சித்திரயோகம் — ஓர் சுபயோகம். இதுதனுதிபன் ஒன்பதி லிருக்க, பாக்கியாதிபன் லாபமுற, இலா பாதிபன்உச்சம்பெற் றிருப்பதாம்.

சித்திரம்—சிற்பநூல்முப்பத்திரண்டி லொன்று, கிரகங்களினது திசையில், உள்ளுக்குள்ளான காலம்.

சித்திராதன்—சூரியன்.

சித்திராபூரணை — சித்திரை மாதத்திய பௌரணை.

சித்திரை—அறுவை, ஆடை, சுவை, செவ்வி, தச்சன், துவட்டாநாள், தூசு, நெய், பயறு, மீன், சித்திரைமாதத்திற்கும் பெயர்.

சித்திரைமாதப்பிறப்பின்பலன்—சித்திரைமாதப் பிறப்பு, ஞாயிறில் வரில் அற்பமழை,திங்களில்வரில் வெள்ளங் காணும், செவ்வாயில் வரில் கலகம்,புதனில் வரில் காற்றதிகம், வியாழனில் வரில் சுகம், வெள்ளியில் வரில் பெருமழை, சனியில்வரில்மழையில்லை,சஷ்டி, அஷ்டமி, உவா, இருத்தை இவைகளில் வரில் கெடுதி.உத்திரம்,உத்திராடம், உத்திரட்டாதி, அத்தம், திருவோணம், அவிட்டம்,ரேவதி, மிருகசீரிடம், மூலம் இவைகளில் வரில் உத்தமம். சோதி,சித்திரை, ரோகணி, சதயம், புனர்பூசம், பூசம், மகம், அசுபதி, அனுசம், இவைகளில் வரில் மத்திமம்.மற்றவை ஆகாவாம்.

சித்திரைமாதம்—காலச்சக்கரம், சைத்திரம், மது, முதல்மாதம்.

சிநேந்திரமாலை—ஆரூட சாஸ்திரங்களில் முதன்மை பெற்ற அருமையான நூல். இது;—சங்க காலத்திய சைநமுனிவராகிய, சிநேந்திரராற் செய்யப் பெற்றது.

சிந்திதம்—இலக்கினம்.

சிந்துநந்தனன்—சந்திரன்.

சிந்தை
சிந்தைசூரியன் } புதன்.

சிம்சுமாரம் — வானத்தின் கண்ணுள்ள சோதிச்சக்கரம். இச்சக்கரம் துருவன், இந்திரன். வருணன், கசியன் முதலியோர் கூடி பிரதட்சணமாகத் தினந்தோறுஞ் செல்லப் பெற்றுள்ளது. இதன் வாற்பாகத்திற் பிரசாபதி, அக்கினி, இந்திரன், தருமன் முதலியோரும், வால்மூலத்திலே தாதா, விதாதாவும், கடிதடத்திலே சத்தரிசிகளும், மேல்வாயிலே அகத்தியரும், கீழ்மோவாயிலே யம

னும், முகத்திலே அங்காரகனும், குய்யத்திலே சனியும், பீசத்திலே குருவும், பக்கத்திலே சூரியனும், நாபியிற் சுக்கிரனும், நெஞ்சிற் சந்திரனும், ஸ்தனத்திலே அசுவினி தேவர்களும், பிராணவாயு, அபானவாயுஆகியவைகளிலே புதனும், சர்வாங்கத்தில் சனி கேதுக்களும், ரோமங்களிலே நட்சத்திரங்களுமாக, அதிகரித்து நிற்பர். இச்சக்கரம் (மகரம்) முதலே வடிவ முள்ளதாம்.

சிம்மம்—சிங்கவிராசி.

சிரகயோகம்—ஓர் சுபயோகம். இது-குரு, புதன், சுக்கிரன், இவர்கள் அமிசராசியில் மூன்று கேந்திரங்களிலிருக்க, மற்றொரு கேந்திரத்தில் பாவரில்லா திருப்பதாம்.

சிரபிருட்டோதயக்கோள் — சந்திரன், கேது.

சிரபிருட்டோதயராசி—மீனம்.

சிரவணத்துவாதசி—திருவோணநட்சத்திரத்தோடு கூடிய துவாதசி.

சிரவணம்—திருவோணநட்சத்திரம்.

சிராமம்—காலம், மாதம்.

சிராவணம்—ஆவணிமாதம், திருவோண நட்சத்திரம்.

சிரீமுகம்—ஸ்திரிமுகவருடம்.

சிருட்டம்—சிற்பநூல் முப்பத்திரண்டினொன்று.

சிரோதயக்கோள்—தலையுதயக் கிரகம். இவை—புதன், குரு, சுக்கிரன், இராகு என்பனவாம்.

சிரோதயராசி—தலையுதயராசி. இவை-மிதுனம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், கும்பம் என்பனவாம்.

சிலை—தனுவிராசி, மூலநட்சத்திரம்.

சில்லிகை—சூரியகிரணம்.

சிவகன்மகன்—செவ்வாய்.

சிவசதுர்த்தசி — மார்கழிமாதத்தின் பூருவபக்கத்துப் பதினலாந் திதி.

சிவசன்—சுக்கிரன்.

சிவசேகரன்—சந்திரன்.

சிவம்—நித்திய யோகத்தொன்று.

சிவயோகம் — (1) பனிரண்டாமிடம்.
(2) பஞ்சமலாபாதிபர்கள் பாக்கியத்திருக்க, தர்மகர்மாதிபர் ஐந்தாமிடத்திருப்பதாம். இது ஓர் நல்ல யோகம்.

சிவராத்திரி—மாசிமாதத்து அமரபக்கத்து சதுர்த்தசியோடு கூடிய அர்த்தராத்திரி காலம்.

சிவேதை—தெற்கு.

சிறுக்கால்ராசி—பறக்கும் ராசி. இது-மகரம், மீனம்.

சிறுத்தொண்ட நாயனர் திருநட்சத்திரம்—சித்திரை மாதத்தில் வரும் பாணி நட்சத்திரம்.

சிறுபொழுது—மாலை, யாமம், வைகறை.

சிற்பசாஸ்திரம் } சில்ப சாஸ்திரம்.
சிற்பநூல் } இது - முப்பத்திரண்டு விதமுள்ளது. விபரம்;-விச்சுவதருமம், விச்சுவேசம், விச்சுவ

சாரம், விருத்தம், தாவட்டம், நளம், மயம், அனுமான், பானு, கற்பாரியம், சிருட்டம், மானசாரம், வத்துவித்தியாபதி, பாராசாரியம், அருடிகம், சயித்தகம், வாத்துபோதம், வித்தாரம், இந்திரம், வச்சிரம், சவுமம், விச்சுவகாசிபம், மகதநதிரம், விசாலம், சித்திரம், காபிலகாலயூபம், நாமசங்கிதை, சாத்திகம், விச்சுவபோதம், அதிசாரம், வெகுச்சுருதம், மானபேதம் என்பனவாம்.

சிற்பம்—சிற்பநூல். அது கோயில் வீடு முதலிய கட்டுவதற்குள்ள முறையறிதல்.

சிற்பாசாரியார் — மண்ணீட்டாளர், முறையறிந்தோர்.

சினீவாலி—அமாவாசைக்கு முதனளிரவு, சுக்கிலபக்கம்.

## சீ

சீகண்டயோகம் — ஓர் சுபயோகம். இது இலக்கினதிபன், சூரியன், சந்திரன் இம்மூவர்களும கேந்திர திரிகோணங்களில் ஆச்சியுச்சம், நட்புப்பெற்று நிற்பதாம்.

சீக்கிரகேந்திரம்—சூரியனுக்குங் கிரகத்துக்கு முள்ள தூரம்.

சீணசந்திரன்—அமரபக்கத்துச் சந்திரன், தேய்பிறை.

சீதகரன்—சந்திரன்.

சீதகன்—சந்திரன், சுக்கிரன்.

சீதகிரணன் }
சீதபானு }
சீதமயூகன் } சந்திரன்.
சீதமரீசி }

சீதம்—நீர், மாரிகாலம், மேகம்.

சீதளன் }
சீதன் } சந்திரன்.

சீமந்தம் — கருப்பந்தரித்த ஆறுமாதம் உச்சிவகிர்ந்து செய்யுமோர் சடங்கு.

சீமுக }
ஸ்ரீமுக } சீமுக வருடம்.

சீமுகவருடம்—ஏழாவதாண்டு.

சீமுகவருடப்பலன்—முன்பாகத்தில் மழையில்லை. பின்பாகத்தில் நல்ல மழை பெய்து நவதானிய முதலிய வேளாண்மை விருத்தியுண்டாகி நாடு செழிக்கும், என்றாலும் நோயினால் சனங்களுக்குப் பீடையுண்டாகும்.

உதாரணம்—தேடுநற் சீமுகத்திற் றேசஞ் செழித்தோங்கும், நாடியே முன்மழைதான் கல்காது-நீடியபின், னனமழை யுண்டு நவதானியம்பெருகுந், தானேவு முண்டென்றே சாற்று. (இடைக்காடர்)

சீயம்—சிங்கவிராசி.

சீரம்—சூரியன்.

சீராமநவமி — சித்திரை மாதத்திய முன் பக்கத்து ஒன்பதாந் திதி.

சீருங்காடயோகம்—ஓர் சுபயோகம். இது ஒன்று, ஐந்து, ஒன்பது ஆகிய இவ்விடங்களில் சூரியாதி ஏழுகிரகங்கள் நிற்பதாம்.

சீர்—துலாராசி.

சீவக்கிரகம் } சந்திரன், குரு,
சீவக்கோள் } புதன்.

சீவதிசை—பிராணதிசை.

சீவநாள்—ஆயுள்காலம்.

சீவராசி—மிதுனம், கன்னி, தனுசு, மீனம்.

சீவனம்—பனிரண்டாமிடம்.

சீவன்—வியாழன்.

சீவிதேசன்—சந்திரன், சூரியன்.

சீவியம்—ஆயுள்.

## சு

சுகம் } நாலாமிடம்.
சுகத்தானம் }

சுகருமம்—நித்தியயோகத்தொன்று.

சுக்கிரகாரகம்—களத்திரம், சந்தோஷம், சுகம், மாணிக்கம், மந்திரம், சம்போகம், வாசனைத் திரவியம், மங்கள்கரம், அலங்காரம், வாகனம், பசுமந்தை, சுகிர்தம், மற்றும் சுகமுள்ளவைகளுமாம்.

சுக்கிரகுணம்—இராசதம்.

சுக்கிரசமித்து—அத்தி.

சுக்கிரசுவை—தித்திப்பு.

சுக்கிரதானியம்—மொச்சை.

சுக்கிரதிக்கு—சுக்கிரனுக்குரியதிக்கு, இது மேற்றிசை, கீழ்த்திசை என்பாருமுளர்.

சுக்கிரதிசை—சுக்கிரனில் நடக்குங்காலம். இதன் வருடம் இருபது.

சுக்கிரநட்சத்திரம்—உரோகணி, கார்த்திகை, சோதி, மிருகசீரிடம், விசாகம் என்பனவாம்.

சுக்கிரகிறம்—வெள்ளை.

சுக்கிரபகவான்—வெள்ளி.

சுக்கிரபாசை } வடமொழி.
சுககிரபாடை }

சுக்கிரபார்வை—ஒரு கண் பார்வை, சாந்தபார்வை.

சுக்கிரபிணி—சிலேத்துமம்.

சுக்கிரபுட்பம்—வெண்டாமரை.

சுக்கிரபுத்தி—ஒவ்வொரு திசையினுள் நடக்குங்காலம்.

சுக்கிரபுத்திரன்—விசகடிகன்.

சுக்கிரம்—ஆனிமாதம்.

சுக்கிரரத்தினம்—வயிரம்.

சுக்கிரராசி—இடபம், துலாபம்.

சுக்கிரலிங்கம்—பெண்.

சுக்கிரவடிவம்—சமம்.

சுக்கிரவாகனம்—கருடன்.

சுக்கிரவாரம்—வெள்ளிக்கிழமை.

சுக்கிரவார விரதம் — உமாதேவி, விநாயகர், சுப்பிரமணியர் இவர்களைக் குறித்துச்செய்யும் நோன்புநாள்.

சுக்கிரன்—அசுரமந்திரி, அநாவிலன், ஆசான், உசனன், ஒள்ளியோன், கவி, காப்பியன், சல்லியன், சிதன், சிதகன், சுங்கன், தயித்தியமந்திரி, நற்கோள், பளிங்கு, பார்க்கவன், பிரசுான், பிருகு, புகர், புயல், மழைக்கோள், வெள்ளி.

சுக்கிரனுலோகம்—வெள்ளி.

சுக்கிராசாரியன்—சுக்கிரன்.

சுக்கிரோதய அஸ்தமனபலன்—சுக்கிரன் ஒவ்வொரு காலத்திலும் உதயமாவதற்கும் அஸ்தமனமாவ

தற்கு முள்ள பலன். விபரம்;— சித்திரையில் உதய அஸ்தமனமா ஞல் அரசனுக்குச் சம்பத்து. மனி தர்களுக்கு நன்மை. வைகாசியி லானல் உலகத்திற்குக் கேடு. ஆடு மாடு முதலிய கால்நடைகளு க்கு நாசம். ஆனியிலானல் மனி தர்கட்கு நோய். ஆடியிலானல் மழையில்லை, நீர்வற்றும். ஆவணி யிலானல் பயமுண்டாம். புரட் டாசியிலானல் தானிய விருத்தி. ஐப்பசி, கார்த்திகை, மார்கழி இவைகளிலானல் தேசத்திற்குக் கெடுதி. தை, மாசி இவைகளிலா னல் தேசத்திற்கு நன்மை. பங் குனியிலானல் அஃகமலிவும், பொ ருள் விருத்தியுமுண்டாம்.

சுக்கில—மூன்றுவது வருடம்.

சுக்கில கிருட்டிண ஏகாதசி — மார் கழி மாதம் பூருவபக்கத்தில் வரும் பதினேராந்திதி.

சுக்கிலபக்கம் } பூருவபக்கம், சிநீ
சுக்கிலபட்சம் } வாலி.

சுக்கிலம்—வெள்ளி.

சுக்கில வருடம்—மூன்றுவதாண்டு.

சுக்கிலவருடப் பலன்—எல்லாவிடங் களிலு மழை பெய்யும், நீர்நிலை கள் நிறைந்து நாடு செழிக்கும், மனிதர்கள் கெடுதியுண்டாகுங் காரியங்களை விட்டுப் பொருள் சேர்க்கு முயற்சியிற் முற்படுவார் கள், பாற்பசு விருத்தியுண்டாகும், ஆனல் வெண்மைப் பொருளாகிய பருத்தி, உப்பு முதலியன குறை யும்.

உதாரணம்; — நன்மைபெருஞ் சுக்கிலத்தில் நாடெங்கு மேசெழி க்கும், புன்மைவினை நீங்கிப் பொ ருள்சேரும் - நன்மை, இருக்கும் பசுக்கறக்கு மெங்குமழை யோங் கும், பருத்தியுப்புந் தான்குறையும் பார். (இடைக்காடர்)

சுக்கை—நட்சத்திரம், மாலை.

சுங்கன்—சுக்கிரன்.

சுசி — ஆடிமாதம், கோடைகாலம், சந்திரன், சுக்கிரன், சூரியன்.

சுசிரோசி—சந்திரன்.

சுசுபயோகம்—ஓர் நல்ல யோகம். இது தனத்தானத்திற் சுபக்கிரகங் களிருக்க,பாவிகள்பார்க்காதிருப்ப தாம்.

சுடரோன்—சூரியன்.

சுடர்—சந்திரன், சூரியன்.

சுட்டநாள்—வறட்சிநாள். அது அசு பதி, பரணி, கார்த்திகை, திருவா திரை, மகம், பூரம், உத்திரம், அனு சம், மூலம், உத்திராடம், அவிட் டம், சதயம், பூரட்டாதி, உத்தி ரட்டாதி, ரேவதி.

சுட்கராசி—மிதுனம், சிங்கம், கன்னி.

சுணங்கத்திசை—தென்மேற்றிசை.

சுண்டன்—சதயம்.

சுதாகரன்
சுதாங்கன்
சுதாசூதி
சுதாதாரன்
சுதாநிதி
சுதாபிரீதி } சந்திரன்.

சுத்ததினம்—சென்றநாள், வருடத்தின் முதல்நாள், நல்லநாள்.

சுத்தம்—பூரணை.

சுபகிருது — முப்பத்தாறுவது வருடம்.

சுபகிருது வருடப்பலன் — நாட்டில் நல்ல மழையும், வேளாண்மைப் பலிதமும், மனிதர்களுக்கு நன்மையுமுண்டாம், என்றாலும் சோழதேசத்தில் வேளாண்மை நட்டமும், பசுவினங்களுக்கு மரணமுமுண்டாம்.

உதாரணம்;— சுபகிருது தன்னிலே சோழதே சம்பாழ், அபமாம் விலைகுறையும் ஆன்சாம்- சுபமாகும், நாடெங்கு மாரிமிகும் நல்லவிளை வுண்டாகும், கேடெங்கு மில்லையிதிற் கேள்.

(இடைக்காடர்)

சுபக்கிரகம்—சுபக்கோள், இது-சந்திரன், சுக்கிரன், வியாழன், புதன்.

சுபசத்தமி—ஐப்பசிமாதத்து பூருவபக்கத்து ஏழாந்திதி.

சுபமாலாயோகம்—ஓர்நல்லயோகம். இது எல்லாக்கிரகங்களும் ஐந்து, ஆறு, ஏழு இத்தானங்களில் வரிசையாய் நிற்பதாம்,

சுபமாலிகாயோகம்—ஓர் நல்ல யோகம். அதுஒன்பதாமிடமுதல்மூன்றுமிடம் வரை ஏழு கிரகங்கள் நிற்பது.

சுபம்—நித்தியயோகத்தொன்று.

சுபயோகம்—ஒரு நல்ல யோகம். இது இரண்டாமிடத்தில் சந்திரனும் சுக்கிரனும நிற்க பதினொன்றுக்குடையவன்ஒன்பதாமிடத்தில் நின்றாலும்,

(2) இலக்கினாதிபதி உச்சம்பெற்றிருக்க இரண்டுக்குடையவன் சொட்சேத்திரமடைய ஏழுக்குடையவன் மூலத்திரிகோணம் பெற்று நின்றாலும்,

(3) ஒன்பதுக்குடையவன் நின்ற அங்கிசாதிபதி உச்சம் பெற்றும் இரண்டுக்குடையவனும், ஒன்பதுக்குடையவனும் இரண்டாமிடத்தில் நின்றாலும் சுபயோகமாம். அன்றியும், ஞாயிறில் அட்டமியும், திங்களில் நவமியும், செவ்வாயில் சஷ்டியும், புதனில் திருதியையும், வியாழனில் ஏகாதசியும், வெள்ளியில் திரயோதசியும், சனியில் சதுர்த்தசியும் வந்தாலும் சுபயோகமாம்.

சுபவாரம்—திங்கள், புதன், வியாழம், வெள்ளி.

சுபாவநாள்—கார்த்திகை, விசாகம்.

சுபானு—பதினேழாவது வருடம்.

சுபானுவருடப்பலன்--சொற்பமழையும், பிற்பாகத்தில் விளைச்சல் குறைவும், விண் வீழ் கொள்ளி முதலியஉற்பாதங்களும், ஆடு மாடு முதலிய விலங்கினங்களுக்கு மரணமும், மனிதர்களுக்குக் கெடுதியும் உண்டாகும்.

உதாரணம்; — சொன்னேன் சுபானுதனிற் றேன்றுமழை கொஞ்சமாம், பின்னே விளைவு பெருகாது-மன்னேதுன், மத்திமக் கோளுண்டாம் மடியும்நாற் காற் சீவன், சற்றுஞ் சுகமில்லை தான். (இடைக்காடர்)

சுப்பிரம்—நித்தியயோகத் தொன்று.

சுரகுரு, சுரர்குரு } வியாழன்.

சுரபி—சித்திரை மாதம்.

சுரன்—சூரியன்.

சுராட்புருடன்—வாஸ்துபுருடன்.

சுரோத்தமன்—சூரியன்.

சுவசந்தம்—சித்திராபூரணை.

சுவர்ப்பானன்—இராகு.

சுவனன்—சந்திரன், சூரியன்.

சுவாதி, சுவாதிநாள் } அனிலநாள், காற்று, சோதி, தீபம், துணி, துளக்கம், மரக்கால், விளக்கு, வீழ்க்கை, பெறநுகம் என்பனவாம்.

சுவாமி—வியாழன், லக்கினுதிபதி.

சுவேதன்—சுக்கிரன்.

சுவை—சித்திரை நட்சத்திரம்.

சுளகு—விசாகம்.

சுறு—மகரராசி.

சுற்றத்தார்பதி—நாலாமிடம்.

சுனகன்—திருதிமூலை.

சுனபாயோகம்—ஒரு நல்ல யோகம் இது சந்திரனுக்கு இரண்டில் சூரியனைத் தவிர மற்றக்கிரகங்கள் நிற்பதாம்.

சுன்—சனி.

## சூ

சூடாமணியுள்ளமுடையான் — ஓர் சோதிட நூல்.

சூதன்—சூரியன்.

சூது—பதினேராமிடம்.

சூரசூதன்—புதன்.

சூரன், சூரி } சூரியன்.

சூரியன் ஆட்சிவீடு—சிங்கம்.

சூரியநீசராசி—துலாம்.

சூரியவுச்சராசி—மேடம்.

சூரியகடியாரம்—பகல்நாழிகை யறிவிக்கும் ஓர் கருவி.

சூரியகதி—சூரியசெலவு.

சூரியகாந்தி—சூரியப்பிரபை.

சூரியகாரம்—பகல்.

சூரியகாரகம் — தகப்பன், கீர்த்திப் பிரதாபம், உஷ்ணம், சத்தியம், ஞானம், ஆன்மா, உத்தியோகம், பயித்தியம், பரிபாலிப்பு, சித்தம் இவைகட்கு அதிபதி யென்பதாம்.

சூரியகிரகம்—இராகு, கேது.

சூரியகிரகணம்—கிரகணத்திற் காண்க.

சூரியகிரணம்—கதிர், கரம், தீவிரம், வேகம், சூரியனைச் சூழத்தோன்றும் வட்டம், பரிவேடம், உட்கோள்.

சூரியகுணம்—தாமதம்.

சூரியசங்கரமம், சூரியசங்கராந்தி } மாதப்பிறப்பு.

சூரியசமித்து—எருக்கு.

சூரியசித்தாந்தம்—ஓர் சோதிடநூல்.

சூரியசுவை—கார்ப்பு.

சூரியதானியம்—கோதுமை.

சூரியதிக்கு—நடு.

சூரியதிசை — சூரியனில் நடக்குங் காலம், இதன் வருடம் ஆறு, கீழ்த் திசை.

சூரியதிருட்டி—ஆதித்தபார்வை. விபரம்:-ஆதித்த பார்வையிற் காண்க.

சூரியநட்சத்திரம்—பூரம், மகம்.

சூரியநட்புவீடு—கடகம், தனுசு, கும்பம், மீனம்.

சூரியநிறம்—செவப்பு.

சூரியபகவான்—சூரியன்.

சூரியபாசை } வடமொழி.
சூரியபாடை }

சூரியபார்வை—குரூரபார்வை.

சூரியபிணி—பித்தம்.

சூரியபுத்தி—ஒவ்வொரு திசையிலும் உள்நடக்குஞ் சூரியனின் காலம்.

சூரியபுத்திரன்—காலன், சனி.

சூரியப்பிரபை—பரிவேடம்.

சூரியமண்டலம்—சூரியபதவி, சூரியனிருக்குமண்டலம்.

சூரியமலர்—செந்தாமரை.

சூரியமூர்த்தி—சூரியன்.

சூரியரத்தினம்—மாணிக்கம்.

சூரியலிங்கம்—ஆண்.

சூரியலோகம்—தம்பாக்கு.

சூரியவடிவம்—சமம்.

சூரியவாகனம்—தேர்.

சூரியவிம்பம்—சூரியனொளி.

சூரியன்—அண்டயோனி, அரி, அரியமா, அழலோன், அழற்கதிரோன், அருணன், அலரி, அருக்கன், அனலி, ஆதபன், ஆதவன், ஆதித்தன், ஆயிரஞ் சோதி, இரவி, இருள்வலி, இனன், உதயன், எல், எல்லை, எல்லோன், என்று, என்றூழ், எழ்பரியோன், ஒளி, ஒளியோன், ஒற்றையாழியோன், கதிரவன், கனலி, கிரணமாலி, சண்டன், சவிதா, சான்றோன், சித்திரபானு, சுடரோன், சூரன், செங்கதிரோன், சோதி, ஞாயிறு, தபனன், தரணி, திவாகரன், தினகரன், தினமணி, நபோமணி, பகலோன், பகல், பங்கயன், பதங்கன், பரிதி, பார்க்கன், பார்க்கரன், பனிப்பகை, பானு, மார்த்தாண்டன், மித்திரன், விகர்த்தனன், விண்மணி, விரிச்சிகன், விரோசனன், வெஞ்சுடர், வெயில், வெய்யவன், வெய்யோன் என்பதாம்.

சூரியன்வீதி—மேட, இடப, மிதுன வீதிகள்.

சூரியாஸ்தமனம் }
சூரியாத்தமனம் } சூரியன் அத்தமித்தல், மாலைப்பொழுது.
சூரியாஸ்தம் }
சூரியாத்தம் }

சூரியாலோகம்—சூரியகிரணம்.

சூரியேந்துசங்கமம்—அமாவாசை.

சூரியோதயம்—உதயகாலம்.

சூரியோரை } சூரியனிருக்குமிராசி, சூரியன்காலம், சூரிய ஓரை.
சூரியவோரை }

சூர் } யோகினி.
சூர்மகன் }

சூலம்—இரேவதி நட்சத்திரம், நித்திய யோகத்தொன்று. செவ்வாய் நின்ற நட்சத்திரத்துக்கு ஏழாம் நட்சத்திரம், அன்றியும் வாரசூலையுமாம். விபரம்;-வாரசூலம் பார்க்க.

சூலயோகம் — ஒரு கெட்டயோகம். இது இராகு, கேதுகளல்லாத சூரியனுதி எழுவரும் மூன்று ராசியில் நிற்பதாம்.

சூலவிரதம்—தை அமாவாசையன்று சூலத்திற்குச் செய்யும் ஓர் பூசை.

சூலி—யோகினி.

சூனன் } சூரியன்.
சூனியன்

சூனியமாதம்—ஆடி, புரட்டாசி, மாசி, மார்கழி மாதங்கள்.

சூனியதிசை—இயங்காத்திசை, தென்கீழ்த் திசை.

சூனு—சூரியன்.

## செ

செகராசசேகரமாலை—ஓர் சோதிட நூல். இது ஈழத்தரசனுலியற்றப் பெற்றது.

செக்கு—சதயநட்சத்திரம்,

செஙகதிரோன் } சூரியன்.
செங்கதிர்

செங்கதிர்நாள் } உத்திர
செங்கதிர்பிறந்தநாள் } நட்சத்திரம்,

செங்கை—திருவாதிரை நட்சத்திரம்.

செச்சை—உதயசந்திரன்.

செஞ்சுடர் } சூரியன்.
செஞ்சுடர்ப்பகவன்

செந்தழல்—கேட்டை.

செந்தீவண்ணன்—செவ்வாய்.

செந்நாகம்—கேது.

செந்நிறக்கிரகம் } சூரியன், செவ்
செந்நிறக்கோள் } வாய், கேது.

செம்பாம்பு—கேது.

செய
ஜெய } இருபத்தெட்டாவதாண்டு.
செயவருடம்

செயவருடப் பலன்—எல்லா நாடுகளிலும் வேளாண்மை விளையும், தானியங்கள் பொலிவுறும், அரசர்களும் ஆசைகொள்ளும் வண்ணம் குடிகள் சுகவாழ்வை யடைவார்கள்.

உதாரணம்;—செயவருடந்தன்னிற் செய்புவன மெல்லாம், வியனுறவே பைங்கூழ் விளையும்-நயமுடனே, அஃகம் பெரிதா மளவிற்சு கம்பெருகும், வெஃகுவார் மன்னரிறை மேல்.

(இடைக்காடர்)

செய்யவன்—சூரியன், செவ்வாய்.

செய்யோன்—செவ்வாய்.

செலவு—பனிரண்டாமிடம்.

செல்காலம்—கிகழ்காலம், யோககாலம்.

செவ்வாயின் சுவை—துவர்ப்பு.

செவ்வாய்--செவ்வாய்க்கிழமை, நவக்கிரகங்களிலொன்று. இது அங்காரகன், ஆரத்தன், அழலோன், அழல், அறிவன், ஆரல், உதிரன், குசன், குருதி, செந்திவண்ணன்,

சேனனபத்திரிகை. சென்மலக்கினம்.

சேய், நிலமகன், பௌமன், மங்கலன், வக்கிரன் என்பனவாம்.

செவ்வாய்காரகம்—சகோதரம், சிறந்தபோர், பூமி, பித்தரோகம், பராக்கிரமமுமாம்.

செவ்வாய்சமித்து—கருங்காலி.

செவ்வாய்த்தானியம்—துவரை.

செவ்வாய்திக்கு } செவ்வாயில் நடக்
செவ்வாய்திசை } குந் திசாகாலம்,
இதன் வருசம் எழு, தென்கிழ்த்திசை யென்பதுமாம்.

செவ்வாய்தோசம்—அங்காரக தோசம். விபரம்:-அங்காரக தோசத்திற் காண்க.

செவ்வாய்நட்சத்திரம் —அசுபதி, கேட்டை, பரணி, விசாகமென்பதாம்.

செவ்வாய்நோக்கு } எட்டு,ஏழு, நாலு
செவ்வாய்பார்வை } இவ்விடங்களைப்
பார்க்கும். அன்றியும் குரூர பார்வையுமாம்.

செவ்வாய்நோய் } பித்தம்.
செவ்வாய்பிணி }

செவ்வாய்புட்பம்—செண்பகம்.

செவ்வாய்புத்தி — ஒவ்வொரு கிரகதிசையினுள் நடக்குங் காலம்.

செவ்வாய்புத்திரன்—கரேசன்.

செவ்வாய்லிங்கம்—ஆண்.

செவ்வாய்லோகம்—செம்பு.

செவ்வாய்வடிவம்—குறிமை.

செவ்வாய்வாகனம்—அன்னம்.

செவ்வி—காலம், சித்திரை நட்சத்திரம், பருவம், பொழுது.

சேனனபத்திரிகை—சாதகக்குறிப்பு.

சென்மநாள்—பிறந்த நட்சத்திரம்.

ஜென்மம் } உதயலக்கினம்.
சென்மம் }

சென்மானுசென்மநாள் — சென்மநட்சத்திரந்தொட்டு பத்தாவது நட்சத்திரம். விபரம்:-அசுபதிக்கு மகமும் மூலமும், பரணிக்கு பூரமும் பூராடமும்,கார்த்திகைக்கு உத்திரமும் உத்திராடமும், ரோகணிக்கு அஸ்தமும் திருவோணமும், மிருகசீரிடத்திற்கு சித்திரையும் அவிட்டமும், திருவாதிரைக்கு சுவாதியும் சதயமும், புனர்பூசத்துக்கு விசாகமும் பூரட்டாதியும், பூசத்திற்கு அனுசமும் உத்திரட்டாதியும், ஆயிலியத்திற்கு கேட்டையும் இரேவதியுமாம்.

சென்மலக்கினம்—உதயலக்கினம்.

இதை அறியும் வகை — உதயலக்கினங்காணும் விபரம்: குறிப்பு—பங்குனி மாதம் பதினைந்தாந்தேதி பகல் முப்பது நாழிகைக்கு ஒரு குழந்தை சனனமானால் சென்மலக்கினங்காணவேண்டிய விபரம்.

மேற்படி மாதத்துக்குரிய மீன இராசியின் மொத்த நாழிகை நாலேகாலில், அந்தமாதத்துக்கு முப்பது தேதியானதால் பதினைந்தாந் தேதியின் உதயகாலத்தில் பாக்கியாயிருந்த விகடிகை நூற்று முப்பத்தாறு, தேதி ஒன்றுக்கு எட்டரை விகடிகை வீதமாய் மேற்படி இராசியில் சூரியன் நட-

ந்து வருவதால் பதினைந்தாந்தேதி பகல் முப்பது நாழிகைக்கும் அரைத் தேதிக்குள்ள வீதமாய்க் கடந்தவிகடிகை நாலேகால், இதை மேற்கண்ட விகடிகை நூற்றுமுப் பத்தாறில் கழித்துவந்த மிச்ச விகடிகை நூற்றுமுப்பத்தொன்றே முக்கால், இதையும் இதுமுதல் மேஷம் நாலேகால், ரிஷபம்நாலே முக்கால், மிதுனம் ஐந்தேகால், கடகம்ஐந்தரை, சிம்மம்ஐந்தேகால் இவ்வாறு இராசிகளின் தொகை களையும் ஒன்று சேர்க்கவந்த நாழி கை யிருபத்தேழு, விநாடி பதி னொன்றே முக்காலுக்குமேல், கன் னிலக்கினம் நாழிகைஐந்து உடன் சேர்க்க, வந்தநாழிகை முப்பத்தி ரண்டு, விநாடி பதினொன்றே முக் கால் வரைக்கும் கன்னியாலக்கி னம். இதில் குழந்தை ஜனனமான நாழிகை முப்பதைக் கழித்து வந்த மிச்சநாழிகை யிரண்டு வினடி பதினொன்றே முக்காலும் மேற்படி இலக்கினத்தில் செல் லானதுபோக பாக்கியாம். ஜனன மான நாழிகை கன்னிராசியி லொட்டினபடியால் கன்னியே சென்மலக்கினமென்பதாம்.

சென்னி—அசுபதி.

## சே

சே—இடபவிராசி.

சேக்கை—கடக விராசி.

சேட்டம்—ஆனிமாதம்.

சேட்டை, சேஷ்டை } கேட்டை, விசாகம்.

சேதம்—விரையம், பனிரண்டா மிடம்.

சேத்திரம்—இடம்.

சேத்துமக்கிரகம், சேத்துமக்கோள் } சந்திரன், சுக்கிரன்.

சேயவன், சேய் } செவ்வாய்.

சேய்த்தானம்—ஐந்தாமிடம், இது புத்திரத்தானம்.

சேவகாவிருத்தித்தானம்—மூன்று மிடம்.

## சை

சைங்கிகேயம்—இராகு.

சைத்திரகம், சைத்திரம் } சித்திரை மாதம்.

சைத்திராவலி—சித்திராபூரணை.

சைத்திரி, சைத்திரிகம் } சித்திரைமாதம்.

## சொ

சொச்சேத்திரம், சொட்சேத்திரம் } கிரக ஆச்சிவீடு, சொந்தவீடு, தனது வீடு.

சொரூபம்—இலக்கினம்.

சொர்க்கவகாதசி—வைகுண்ட ஏகா தசியைக் காண்க.

## சோ

சோசியம்—சோதிடசாஸ்திரம்.

சோசியன் — சோதிடஞ் சொல் வோன்.

சோட்சம்—பதினாறு.

சோடு—இரண்டு.

சோபகிருதுவருடப்பலன். சௌமியன்.

சோதி—சுவாதிநட்சத்திரம்,சூரியன், நட்சத்திரம்.

சோதிடசாஸ்திரம்
சோதிடநூல் } திரிகாலத்தையும் அறிவிக்குஞ் சாஸ்திரம், கணிதநூல்.

சோதிடம்—சோதிடசாஸ்திரம், நன்னிமித்த சாஸ்திரம்.

சோதிடர்—சோசியர்.

சோதிமண்டலம்—வானசோதிகளின் மண்டலம்.

சோதிமின்னல் — மழைக்குறியினென்று, அது ஐப்பசிமாதம் சோதி நட்சத்திரத்தில் சூரியன் வரும் நாளில் கிழக்கில் மின்னினல் மழையுண்டென்பதாம்.

சோதிராத்திரி—நடுஇரவு.

சோத்தியம்—ஏகாதிபத்தியம், இராசிகுணகாரம், கிரககுணகாரம், குணசமூகம், சுத்தபிண்டம், ஏகசமூகமென்பதாம்.

சோபகிருது — முப்பத்தேழாவது ஆண்டு.

சோபகிருதுவருடப்பலன்— எங்கும் நல்லமழைபெய்யும்,கேணி,குளம், குட்டை, ஏரி முதலிய நீர்நிலைகளின் பெருக்கால் உலகஞ் செழிக்கும், மனிதர்கள் நற்குணத்தோடும் இன்பத்துடனு மிருப்பார்கள்.

உதாரணம்;—சோபகிரு தாண்டதனிற் றெல்லுலகெல் லாஞ் செழிக்கும்,கோப மகன்று குணம் பெருகுஞ் - சோபனங்கள், உண்டாகு மாரி யொழியாமற் பெய்யுமெல்லா, முண்டாகு மென்றே யுரை. (இடைக்காடர்)

சோபம்—பத்துக்கோடி கோடா கோடி,

சோபனம்—சுபம், நித்திய யோகத் தொன்று.

சோமசுதன்—புதன்.

சோமபந்து—சூரியன், புதன்.

சோமமண்டலம்—சந்திரமண்டலம்.

சோமம்—ஆகாயம், ஆரியர் செய்யும் கெட்ட யாகங்களுளொன்று.

சோமவாரம்—திங்கட்கிழமை.

சோமன் — அட்டவசுக்களிலொருவன், சந்திரன், புதன்.

சோரத்தானம்—ஆறுமிடம்.

சோழக்கச்சான்—தென்மேற்றிசை.

சோழக்ககொண்டல் — தென்கீழ்த்திசை.

சோழகம்—தெற்கு, தென்காற்று.

சோறு
சோறும் } பரணி நட்சத்திரம்.

சோனை—திருவோண நட்சத்திரம்.

## சௌ

சௌபாக்கியம் — நித்திய யோகத் தொன்று.

சௌமன்—புதன்.

சௌமிய — நாற்பத்துமூன்ருவதாண்டு.

சௌமியக்கிரகம்
சௌமியக்கோள் } சுபக்கிரகம்.

சௌமியன்—புதன்.

சௌமியவருடப்பலன்—எங்கும் நல்ல மழைபெய்யும், நாலுவகை உயிர் வர்க்கங்கள் விருத்தியடையும், மனிதர்கள் கெட்ட காரியங்களைவிட்டு நற்காரியங்களைச் செய்வார்கள், எல்லாவகைச் செல்வங்களும் குறைவில்லாதிருக்கும்.

உதாரணம்:—செய்ய சவுமியத்திற் றேசத்திற் பல்லுயிரும்,உய்ய மழைமிகுதி யுண்டாகும்-வெய்ய, வினையகலும் பூமி விளையுமினுஞ் செல்வம், மனையகலா தென்றே மதி. (இடைக்காடர்)

சௌரமாதம் } சௌரமானம் } சூரியமாதம்.

சௌரம்—சூரியமாதம், நாள்.

சௌரன்—சனி, சூரியன்.

சௌரி—சனி.

சௌரியோகம்—ஒரு நல்லயோகம். அது மூன்றுமிடம் சுபருடைய பார்வைபெற, மூன்றுக்குடையவன் ஆறு, எட்டு, பனிரண்டு நீங்கிய சுபர்வீட்டில் ஆச்சியுச்சத்தோடிருப்பதாம்.

## ஞ

ஞண்டு—கடகவிராசி.

ஞமகண்டன்—காணுக்கிரகத்தொன்று.

ஞெண்டு—கர்க்கடகவிராசி.

## ஞா

ஞாயிறு—சூரியன், ஆதிவாரம்.

ஞானகாரகன் } ஞானகாரன் } கேது.

ஞானத்தானம் — ஐந்தாம் பத்தாமிடங்கள்.

ஞானி—கேது.

ஞான்று—காலம், நாள்.

## ஞெ

ஞெண்டு—கடகவிராசி.

## த

தகர்—மேடவிராசி.

தக்கணம்—தெற்கு, வலப்பக்கம்.

தக்கணயனம் } தக்கணுயனம் } தெட்சணுயனம்.

தசகம்—பத்து.

தசகாதசமி—ஆனிமாதம் பூருவபக்கத்துப் பத்தாந்திதி.

தசகோடி—பத்துக்கோடி.

தசநா—காந்தாரி, குரு,சங்கினி,சுழிமுனை, பிங்கலை.

தசப்பொருத்தம்—செய்யுட்பொருத்தம், மணப்பொருத்தத்தொன்று.

தசமபாகம் } தசமம் } பத்தில் ஒருபங்கு.

தசமி—பத்தாந்திதி, பத்தாவது.

தசம்—பத்து.

தசராத்திரம்—பத்துநாள்.

தசலட்சம்—பத்துலட்சம்.

தசவர்க்கம்— பத்துவர்க்கம், அது (1) கிரகமிருக்கிற ராசிவர்க்கம், (2) சூரியசந்திர வோரை, (3) திரேக்காணம், (4) திரிம்சாங்கிஷம், (5) சத்தமாமிசம், (6) நவாம்சம், (7) தசாம்சம், (8) துவாதசாம்சம், (9) கலாம்சம், (10) சட்டியாம்சம் என்பனவாம்.

தசவாஜி } சந்திரன்.
தசவாசி }

தசாகம்—பத்துநாள்.

தசாசுபன்—சந்திரன்.

தசாமிசம் } தசவர்க்கத்தொன்று.
தசாம்சம் }

தச்சன்—சித்திரை நட்சத்திரம்.

தடம்—துலாராசி.

தடவற்புலு—அறுபது.

தடாகயோகம்—ஒரு நல்ல யோகம். அது இரண்டு, ஐந்து, எட்டு, இவ்விடங்களில்ஏழுகிரகமிருந்தாலும், (2) மூன்று, ஆறு, ஒன்பது இவ்விடங்களில் ஏழு கிரகங்களிருந்தாலுமாம்.

தடி—அளவுகோல், மின்னல், வில்.

தடிகை—மின்னல்.

தடித்துபதி—மேகம்.

தட்சசாபதி } சந்திரன்.
தட்சஜாபதி }

தட்சணதுருவம் — பூமியின் தென்முனை.

தட்சணம்—தெற்கு, வலப்பக்கம்.

தட்சணங்காராசி—மேடம், இடபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி இந்த ஆறு ராசிகளுமாம்.

தட்சணயனம்—சூரியன் தெற்கில் சஞ்சரிக்கும் ஆடிமுதல் மார்கழி வரையிலுள்ள ஆறுமாதங்களாம்.

தட்சணபதம்— தெட்சண வீதி, தென்பக்கம்.

தட்சிணை—தெற்கு.

தட்சிணயனம்—சூரியன் மூவகை வீதியிலொன்று.

தட்சை—பூமி.

தட்டற்புலு—ஐம்பது.

தண்கதிர் } சந்திரன்.
தண்சுடர் }

தண்டனைத்தானம்—எட்டாமிடம்.

தண்டயாமம்—தினம்.

தண்டயோகம்—ஒருமத்திமயோகம். அது இராகு, கேது நீங்கிய சூரியாதி எழுவர் பத்து,பதினொன்று, பனிரண்டுஆகியவைகளில் நின்றாலும், (2) மூன்றோன் உச்சமாக மூன்றிற் குருவிருக்க, சுக்கிரன் பார்வை பெற்றிருத்தலுமாம்.

தண்டு — தராசுக்கோல், மிதுனவிராசி, வில், வீணை.

தண்ணவன்—சந்திரன்.

ததி—கிரகம், பாக்கியம்.

தத்தயோகம் — இன்ன கிழமையில் இன்னதிதி வருவதென்பது. விபரம்;—ஞாயிற்றுக்கிழமையில் துவாதசியும், திங்கட்கிழமையில் ஏகாதசியும், செவ்வாய்க் கிழமையிற் பஞ்சமியும்,புதன்கிழமையில் துதியையும், வியாழக்கிழமையில் சஷ்டியும், வெள்ளிக்கிழமையில் அட்டமியும், சனிக்கிழமையில் நவமியும் வருவதாம்.

தத்தினம்—நடுநாள், நாடோறும்.

தத்து—அவமிருத்து, கண்டம், கிரகவொழுங்கு, சுவிகாரம், பாய்ச்சல்.

தத்துப்புரட்சி — கிரகநடையினோர் விகாரம்.

தபசன்—சந்திரன்.

தபசியம்—பங்குனிமாதம்.

தபம்—மாசிமாதம், வெயிற்காலம்.

தபனகரம்—சூரியகிரணம்.

தபனம்—வெய்யிற்காலம்.

தபனன்—அக்கினிதேவன், சூரியன், நெருப்பு.

தபன்—அக்கினி, சூரியன்.

தமம்—இராகு.

தமனியன்—சனி.

தமன்—இராகு, சந்திரன்.

தமி—இரவு.

தமிசிரப்பக்கம்—அமரபக்கம்.

தமோகரன்—சந்திரன்.

தமோக்கினன்—அக்கினி, சந்திரன், சூரியன்.

தமோபகம்—வெளிச்சம்.

தமோபகன்—சந்திரன், சூரியன்.

தமோனுதன்—சந்திரன், சூரியன், விளக்கு.

தம்—நன்முகூர்த்தம், பங்கிடுதல்.

தயித்தியமந்திரி—சுக்கிரன்.

தரணம்—இமயமலை, சூரியன், தாண்டுதல், பாவம், பூமி.

தரணி—சூரியன், பூமி, மலை.

தரந்தம்—கடல், விடாமழை.

தராம்—கூட்டம், வீதம்.

தரா—பூசநாள், பூமி.

தராசு—துலாராசி, பரணிநாள்.

தராசுக்கோல்—துலாராசி.

தராத்துமசன்—செவ்வாய்.

தராபதி—இராசா.

தரிசயாமினி—அமாவாசியினிரவு.

தரிசவிபத்து—சந்திரன்.

தரித்திர மாலிகா யோகம்—ஒரு கெட்ட யோகம். அது ஆருமிட முதல் பனிரண்டாமிடம் வரை ஏழு கிரகங்கள் நிற்பதாம்.

தருணி—சூரியன்.

தருமஸ்தானம், தருமத்தானம் } ஒன்பதாமிடம்.

தருமநாள்—பரணிநட்சத்திரம்.

தருமவாசரம்—பூரணை.

தலை—இலக்கினம், திசை.

தலைநாள்—அசுபதி நட்சத்திரம் முதல் நட்சத்திரம், முதல்நாள்.

தலைப்பணி—முன்பனி.

தலையற்றநாள்—புனர்பூசம், பூரட்டாதி, விசாகம். விபரம்;-காலற்ற நாளிலறிக.

தலையுதயராசி—மிதுனம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், கும்பம் என்பனவாம். இவைகள் பகல் வலிதுள்ளதென்பது.

தலையுவா—அமாவாசை.

தலைவாசற்கால்வைக்கும் விதி—வீதி வாசற்கால் நாட்டும் விபரம்:-கிழமேல் வீதியானால் ஒன்பது பங்கு கிழக்கே தள்ளியும், தென்வடல் வீதியானால் தெற்கில் மூன்று பங்கு தள்ளியும் வாசற்கால் வைப்பது நன்றென்பதாம்.

தவத்தானம், தவம் } ஒன்பதாமிடம்.

தவலபக்கம், தவலபட்சம், தவளபக்கம், தவளபட்சம் } சுக்கிலபட்சம், வளர்பிறை.

தவனன்—சூரியன்.

தழல்—கார்த்திகை நட்சத்திரம்.

தரிக்கால்ராசி--சூரியனுக்கு-கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், கடகம் இவைகளின் மூன்றாங்காலும், கடகம், சிங்கம், இவைகளின் முதற்காலும், மிதுனத்தில் நாலாங்காலுமாம்.

சந்திரனுக்கு—கும்பத்தில் இரண்டாங்காலும், மிதுனத்தில் மூன்றாங்காலும், மேடத்தில் நாலாங்காலுமாம்.

செவ்வாய்க்கு—சிங்கம், கன்னி இவைகளின் நாலாங்காலும், இடபத்தில் மூன்றாங்காலும், மேடம், தனுசு, விருச்சிகம், மிதுனம் இவைகளில் முதற்காலுமாம்.

புதனுக்கு—தனுசு, மேடம், கடகம், துலாம் இவைகளின் இரண்டாங்காலும், கும்பத்தில் நாலாங்காலுமாம்.

வியாழனுக்கு—விருச்சிகம், தனுசு, துலாம், மீனம் இவைகளின் நாலாங்காலும்,மீனம்,மகரம், கன்னி இவைகளின் முதற்காலும், இடபம் இரண்டாங்காலுமாம்.

சுக்கிரனுக்கு—சிங்கம், மேடம் இவைகளின் மூன்றாங்காலும்,கும்பம், துலாம் இவைகளின் முதற்காலும், இடபம், கடகம் இவைகளின் நாலாங்காலுமாம்.

சனிக்கு — மகரம் நாலாங்காலும், மீனம் மூன்றாங்காலும், இடபம் முதற்காலும், சிங்கம், மிதுனம், கன்னி, மகரம், விருச்சிகம், மீனம் இவைகளின் இரண்டாங்காலுமாம்.

தற்காலக்கிரகநிலை — குறித்தகாலத்துக் கிரகம் நிற்கும் நிலை.

தற்காலசுத்தபுடம்—குறித்த காலத்தில் கிரகங்கள் நிற்கும் நிலையைச் சரியாயறியும் சுத்த கணிதம்.

தற்காலமத்திமம்—குறித்தகாலத்திற்குக் கிரகங்கள் நிற்கும் நிலையைப் பொதுவாக அறியும் மத்திம கணிதம்.

தற்காலமித்துருக்கிரகம்--ஒவ்வொரு கிரகத்திற்கும் தானிருக்குமிராசிக்கு இரண்டு, மூன்று,நாலு,பத்து, பதினொன்று, பனிரண்டு இவ்விராசிகளிலிருக்குங் கிரகங்களாம்.

தனஸ்தானம்
தனத்தானம்
தனம்
} இரண்டாமிடம்.

தனயனம்—கிரகச் சுற்றோட்டவழி, நீண்டவழி.

தனிஷ்டாபஞ்சமி
தனிட்டாபஞ்சமி
} மரணத்திற்காகா நாட்களாம். விபரம்;—அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி இவைகளில் மாணமானல் ஆறுமாதம் வீடுமூடவேண்டுமென்றும், இவை போன்றே ரோகணிக்கு நாலுமாதமும், கார்த்திகை, உத்திரமிவைகட்கு மூன்றுமாதமும், மிருகசீரிடம், சித்திரை, புனர்பூசம், விசாகம், உத்திராடம்

இவைகட்கு இரண்டு மாதமும் வீடு மூடுவதென்பதாம். குறிப்பு:- இக்கொள்கை அநேக நாடுகளிற் கிடையாது.

தனிட்டை—அவிட்டநட்சத்திரம்.

தனிநாள் } அசுபநாள், செய்யுங்
தனியநாள் } காரியகளுக்காகாநாள்.

விபரம்;-சித்திரைமாதம் பதினொன்று,இருபத்தெட்டுத்தேதிகளும், வைகாசிமாதம் பதினாலு, இருபத்தேழு தேதிகளும், ஆனிமாதம் பதினாறு, முப்பது ஆகிய தேதிகளும், ஆடிமாதம் பனிரண்டு, இருபத்தைந்து தேதிகளும், ஆவணிமாதம் பதினைந்து,இருபத்தைந்து ஆகிய தேதிகளும், புரட்டாசிமாதம் பதினாலு, முப்பத்தொன்று ஆகிய தேதிகளும், ஐப்பசிமாதம் பதினாலு இருபத்தேழு, தேதிகளும், கார்த்திகை மாதம் பதினேழு, இருபத்திரண்டு தேதிகளும், மார்கழிமாதம்பதினைந்து, இருபத்தைந்து தேதிகளும், தை மாதம் ஒன்பது, இருபத்தொன்று ஆகிய தேதிகளும், மாசிமாதம் இருபத்தாறு,இருபத்தெட்டு ஆகிய தேதிகளும், பங்குனிமாதம் இருபத்தேழு, இருபத்தெட்டு ஆகிய தேதிகளுமாம்.

தனு } தனுவிராசி, காண்டீபம்,
தனுசு } கொடுமரம், சாபம், சிலை, தனுர், துரோணம், வில், அன்றியும் மார்கழி மாதத்திற்கும் பெயர்.

தனுசுஉருவம்—வில்.

தனுசூரவி } தனுசில் சூரியன் நிற்
தனுரவி } றல், மார்கழிமாதம்,

தனுசு—தனுசு.

தனுர் அங்கம்—தொடை.

தனுர்த்திசை—மேற்கு.

தனுர்நிறம்—செவப்பு.

தனுர்மாதம்—மார்கழிமாதம்.

தனுர்யோகம்—ஒரு நல்ல யோகம். அது இராகு கேது நீங்கிய சூரியாதி எழுவரும் பத்து, பதினொன்று, பனிரண்டு, ஒன்று, இரண்டு, மூன்று நாலு ஆகிய இவ்விராசிகள் வரை நிற்பதாம்.

தனுவிராசி—தனுசு.

தனை—எண்.

தன்வந்திரி—சூரியன்.

தன்னமதி—பிறைச்சந்திரன்.

## தா

தா—பகை, பாய்தல், வியாழன்.

தாசி—பரணிநாள்.

தாசு—இரண்டரை நாழிகை கொண்ட நேரம்.

தாச்சாயணி } இருபத்தேழு நட்சத்
தாட்சாயணி } திரப்பொதுப் பெயர், உரோகணி.

தாட்சாயணிபதி } சந்திரன்.
தாட்சாயணீபன் }

தாது—பஞ்சபூதம், பத்தாவது வருடம்.

தாதுக்கோள் — சனி, செவ்வாய், பாம்பு என்பதாம். அன்றியும் சந்திரனையுஞ் சொல்லும் நூல்களுமுள.

தாதுராசி—மேடம், கடகம், துலாம், மகரம்.

தாதுவருடப்பலன் — காலந்தவறாத மழையும், எல்லாவிதமான விளை பலன்களும், மனிதருக்கு வேண்டியசகலசாதனங்களும் உண்டாகி சனங்கள் சேமமடைவார்கள்.

உதாரணம்:— தாது வருடந்த ராதலத்தோர் வாழ்ந்திருப்பர், வேதனையு மில்லை விளைவுண் டாஞ்-சீதமழை, பெய்யும் பரிவா ரம் பேருடனே யெந்நாளும், உய்யும் படியுலகி லுண்டு. (இடைக்காடர்)

தாதை—ஒன்பதாமிடத்ததிபதி.

தாபநன்—சூரியன்.

தாபனம்—சூரியகிரணம்.

தாமதக்கிரகம் — இராகு, சூரியன், செவ்வாய், புதன், சனி என்பதாம்.

தாமசவேளை } முக்குணவேளையி
தாமதவேளை } ஞென்று, அது மூன்றேமுக்கால் நாழிகைகொண்ட முகூர்த்த காலம்.

தாமநிதி—சூரியன்.

தாமயோகம்—ஒரு நல்ல யோகம். அது இராகு, கேது நீங்கிய சூரியனுதி எழுவர் ஆறுராசிகளிலிருப்பதாம்.

தாமரைநண்பன் } சூரியன்.
தாமரைநாயகன் }

தாமன்பருவம்—சித்திரைமாதம் சுக்கிலபக்கத்து ஏழாந்திதி.

தாயான்—ஒன்பது.

தாரகம்—சூரியனின்ற நட்சத்திரத்திற்குப் பத்தாம் நட்சத்திரம்.

தாரகாபதி—சந்திரன், வியாழன்.

தாரகினி—இரவு

தாரகை—விண்மீன், நட்சத்திரம்.

தாரசங்கிரகம்—விவாகம்.

தாரண—பதினெட்டாவதாண்டு.

தாரணவருடப்பலன் — மழையில்லாததால் உலகத்திற் பஞ்சமும், நோயும், சீவராசிகளுக்கு மரணமும், அஃகவிலைக் குறைவும், துட்டர்களாற் பயமும், சகல சீவராசிகளுக்குங் கஷ்டமுமுண்டாம்.

உதாரணம்:—தாரணத்தில் மாரி யறுந் தாரணியிற் கேடுமுண்டாம், ஓராய்நீ சீவன்க ளுய்யாது-பார் பிணியால், ஐய மடியுமே யஃகங் குறைவாமே, வெய்யர் பயமே மிகும். (இடைக்காடர்)

தாரம்—நட்சத்திரம், விவாகம்.

தாரா—விண்மீன், நட்சத்திரம்.

தாராகணம்—நட்சத்திரம்.

தாராபதம்--நட்சத்திரபதவி, வானம்.

தாராபதி—சந்திரன், வியாழன்.

தாராபலம் — நட்சத்திர பலன்களி ஞென்று. அது சென்மநட்சத்திர முதல் தற்கால நட்சத்திரம் வரை எண்ணிவந்த தொகையில் ஒன்று, பத்தொன்பது மத்திபம். இரண்டு, பதினொன்று, இருபது உத்தமம். மூன்று, பனிரண்டு, இருபத்தொன்று அதமம். நாலு, பதின்மூன்று, இருபத்திரண்டு சேமம். ஐந்து,

பதினொன்கு மத்திபம். ஆறு, பதினைந்து, இருபத்துநாலு உத்தமம். எழு அதமம். எட்டு, பதினேழு, இருபத்தாறு உத்தமம். ஒன்பது, பதினெட்டு சமம். பத்து மத்திபம். பதினாறு அதமம். இருபத்துமூன்று, இருபத்தைந்து அதமாதமம். இருபத்தேழு அதமமென்பதாம்.

தாராபீடன்—சந்திரன்.

தாராபூடணம்—இரவு.

தாராமண்டலம் — நட்சத்திரமண்டலம்.

தாருண—தாரணவருடம்.

தாரை—இராசி, நட்சத்திரம்.

தாரையோன்—இலக்கினாதிபதி.

தார்மிகை—ஏகாதசி திதி.

தாலிப்பொருத்தம்—மங்கிலியப் பொருத்தம்.

தாவட்டம் — சிற்பநூல் முப்பத்திரண்டினொன்று.

தாவுரி—இடபவிராசி.

தாழி—பரணிநாள்.

தாளி—அனுடநாள்.

தானத்திரை—தானாதிபதி.

தானவன்—சந்திரன்.

தானி—இருப்பிடம், தானத்திலுள்ளது.

தானியாதிபதி — தானியத்துக்கதிபதி.

## தி

திகதி—தேதி.

திகை—திசை.

திக்கங்கம்—அட்டபாலகர்குறி. அது கிழக்காதி முறையே கொடி, புகை, சீயம், நாய், இடபம், கழுதை, யானை, காகம் என்பனவாம்.

திக்கடைப்பு—திக்கெல்லை.

திக்கு—திசை, அது கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு. இவையன்றி ஆகாயம், பாதாளம் இவையுஞ்சேர்த்து, பத்துத் திக்கென்பாருமுளர்.

குறிப்பு;— இவற்றுள் கிழக்கு கருடன்திசை, தென்கிழக்கு பூனைத்திசை, தெற்கு சிங்கத்திசை, தென்மேற்கு சுணங்கன்திசை, மேற்கு நாகத்திசை, வடமேற்கு எலித்திசை, வடக்குயானைத்திசை, வடகிழக்கு முயற்றிசை, ஆகாயம் விசும்புத்திசை, பூமி பாதாளதிசை என்பனவாம்.

திக்குபதிக்கிரகம்— இன்னதிக்குக்கு இன்னகிரகம் அதிபதி என்பதாம். விபரம்:— கிழக்காதி முறையே சூரியன், சுக்கிரன், செவ்வாய், இராகு, சனி, சந்திரன், புதன், வியாழன் என்பனவாம்.

திக்குப்பாலகர்—அட்டதிக்குப் பாலகரைப் பார்க்க.

திக்குவிபாகம்—திக்கின்பகுதி.

திங்கள் நாள்—மிருகசீரிடம், திங்கட்கிழமை.

திங்கள் } திங்கட்கிழமை, சந்திரன், மாதம், பன்னிரு மாதங்களுக்கும் பொதுப்பெயர்.

திசி—திசை, திசையையுடையது.

திசிலன்—சந்திரன்.

திசை—ஒவ்வோர்திக்குப்புறமும் அரசாளும் அதிகாரிகளிருக்குந்திசை, நிலை, நோக்கு, ஒவ்வோர் கிரகத்தின் அதிகாரம். இது நட்சத்திர திசை முதலியனவாம். விபரம்;—(1) கிரகங்களுக்கு விதித்த நட்சத்திரதிசை, (2) உற்பன்னதிசை, (3) மிருத்துதிசை, (4) பிராணதிசை, (5) ஆதானதிசை, (6) வாமதிசை, (7) உடுதிசை, (8) கிரியாணதிசை,(9) மகாப்பிராணதிசை,(10) குளிககிரியாணதிசை, (11) காலச்சக்கிர திசை என்பனவாம்.

திசையோகினிநிலை— கருடன் கிழக்கு, பாம்பு மேற்கு, சிங்கம் தெற்கு, யானை வடக்கு, பூனை தென்கிழக்கு, எலி வடமேற்கு, நாய் தென்மேற்கு, முசல் வடகிழக்கு என்பதாம்.

திட்டிதோசம்—கண்ணேறு.

திட்பம்—காலநுட்பம்.

திதி — பஞ்சாங்க உறுப்பிலொன்று. இது சந்திரநாள்.

திதிச்சூலம்—இன்னதிதிக்கு இன்னதிக்கு சூலமென்பது. இவை பிரதமை, நவமி கிழக்கு. துதிகை, சத்தமி தென்கிழக்கு. திருதிகை, ஏகாதசி தெற்கு. சதுர்த்தி, துவாதசி தென்மேற்கு. சஷ்டி, அமாவாசை மேற்கு. தசமி, பூரணை வடமேற்கு. அட்டமி, சதுர்த்தசி வடக்கு. பஞ்சமி,திரயோதசி வடகிழக்கு என்பதாம்.

திதிச்சயம்
திதிட்சயம் } அமாவாசை.

திதித்திரயம்—ஒரு நாளில் மூன்று திதி வருவது.

திதித்தியாச்சியம் — திதியில் கழிவு நாழிகை.விபரம்;—பிரதமை இருபத்துநாலு, அஷ்டமி இருபது, துதிகை பனிரண்டு, திருதிகை ஐம்பத்தைந்து, சதுர்த்தி நவமி ஐந்து, பஞ்சமி சஷ்டி ஐம்பத்துநாலு, சப்தமி முப்பத்தொன்று, தசமி முப்பத்துமூன்று, ஏகாதசி ஒன்று, துவாதசி பதினைந்து, திரயோதசி இருபத்துநாலு, சதுர்த்தசி ஏழு, பூரணை இருபத்தொன்பது, அமாவாசை ஆறு, விஷகடிகை ஆரம்பித்த நாழிகை முதல் மூன்றேமுக்கால் நாழிகை வரை தியாச்சியமாம்.

திதித்துவயம்—ஒரு நாளில் இரண்டு திதி வருவது.

திதிநாசயோகம்
திதிநட்சத்திரநாசயோகம் } நாசயோகம்

விபரம்'-நாசயோகத்திற்காண்க.

திதிநிர்ணயம்--திதியை நிச்சயிப்பது. இது பஞ்சாங்க கணிதமுறையுளொன்று.

திதிப்பிரணி—சந்திரன்.

திதியமிர்தயோகம்—இன்ன கிழமையில்இன்ன திதி வருவதென்பது.

விபரம்:—ஞாயிறில் பிரதமையுஞ் சஷ்டியும், திங்களில் துதிகையுஞ் சத்தமியும், செவ்வாயில் சதுர்த் தசியும், புதனில் அஷ்டமியும், திருதிகையும், திரயோதசியும். வியாழனில் நவமியும், வெள்ளியில் ஏகாதசியும், சனியில் சதுர்த் தசியும் வருவதாம்.

திரீ—இரவு.

திமிதம்—ஒரு கணக்கு.

திமிரம்—இருள்.

திமிரரிபு } சூரியன்.
திமிராரி }

திம்—திக்கு.

தியாச்சியம்—ஒவ்வொருநாளிற் கழிவாகியதாக விலக்கப்பட்ட மூன்றே முக்கால் நாழிகை. அவை லக்கினத்தியாச்சியம், நச்சத்திரத் தியாச்சியம் எனப் பலவகைப் படும்.

தியுகம்—கிரணம்.

தியுதி—கிரணம், வெளிச்சம்.

தியுதிகான்—துருவன்.

தியுநிசம்—இராப்பகல்.

தியுபதி } சனி.
தியுமணி }

திரட்டு—இருது.

திரநாள் — உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, ரேவதி.

திரமாதம்—வைகாசி, ஆவணி, கார்த்திகை, மாசி.

திரயம்—மூன்று.

திரயாங்கம் — மூவாங்கம், மூன்றங்கம்; இது திதி, வாரம், நட்சத்திரம். குறிப்பு;—பலவருடங்களுக்கு முன்னால் தற்காலம் உபயோகப் பட்டு வருகிற பஞ்சாங்கத்திற்குப் பதிலாக இத்திரயாங்கமே சனங் களால் கையாளப்பெற்று வந் தது.

திரயீத்து—சூரியன்.

திரயோதசி—பதின்மூன்ருந்திதி.

திரராசி } இடபம், சிங்கம், விரு
திரலக்கினம் } ட்சிகம், கும்பம்.

திரவியத்தானம் } இரண்டாமிடம்,
திரவியம் } ஒன்பதாமிடம்.

திரி—மூன்று.

திரிகதம்—மூன்றுபங்கு.

திரிகம்—மூன்று கூடியது.

திரிகாலசந்தி—காலை, மாலை, உச்சிகளிற் செய்யும் அனுட்டானம்.

திரிகாலம்—முக்காலம்; அவை உச்சி, காலை, மாலை. அன்றியும் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பதுமாம்.

திரிகாலவர்த்தமானம்—மூன்று காலங்களிலும் நடக்கும் சம்பவங்கள்.

திரிகாலவர்த்தமானி—மூன்றுகாலங் களுமறிந்தோன், சோதிடன், ஞானி.

திரிகோணம் — முக்கோணம். இது இலக்கினம், ஐந்தாமிடம், ஒன்பதாமிடம். அன்றியும் அஷ்டவர்க்கத்தொன்ருகிய திரிகோணசோதனையுமாம்.

திருசங்குமண்டலம்— நட்சத்திர மண்டலம்.

திரிசவனம்—திரிகாலம்.
திரிசிருங்கம்—முக்கோணம்.
திரிதசாசாரியார்—வியாழன்.
திரிதசி—திரயோதசி.
திரிதம்—மூன்று.
திரிதிகை } மூன்றாந்திதி.
திரிதியை }
திரிதினஸ்பிர்க்கு—ஒரு திதியாவது ஒரு நட்சத்திரமாவது, ஒரு யோகமாவது மூன்றுநாளிற் கலந்திருப்பது.
திரிநேத்திரசூடாமணி—சந்திரன்.
திரிமூர்த்தியோகம்—ஒரு ராஜயோகம். இது சந்திரன் சிங்காசனாங்கிசமாகவும், குரு பாரிசாதாங்கிசமாகவும், சுக்கிரன் ஐராவதாங்கிசமாகவு மிருந்தாலும்,

(2) சுக்கிரன் பர்வதாங்கிசத்திலாவது, குரு சிங்காசனாங்கிசத்திலாவது, சந்திரன் ஐராவதாங்கிசத்திலாவது இருந்தாலும்,

(3) இரண்டாமிடத் ததிப திக்கு இரண்டு, எட்டு ஆகிய இவ்விடங்களில் பாபரும் சுபருங்கூடி யிருந்தாலும்,

(4) பத்துக்குடையோன் நின்ற ராசியாதிபதியின் அங்கிசாதிபதி கேந்திர உச்சமாக விருந்தாலும் அல்லது அந்தத்தானத்துக்குடையோனும் ஒன்பது, எட்டு, நாலு ஆகிய இவ்விடங்களில் குரு, புதன், சுக்கிரன் ஆகியவர்கள் தனித்தனியே நின்றாலும், அல்லது நாலு, பத்து, பனிரண்டு ஆகிய இவ்விடங்களில் சூரியன், செவ்வாய், சுக்கிரன் ஆகிய இவர்கள் தனித்தனியே நின்றாலும் இவ்யோகமாம்.

திரிம்சாம்சம்—தசவர்க்கத்தொன்று. இது இலக்கினத்தை முப்பது பங்கு செய்வதாம்.
திரியாங்கம்—திரயாங்கம் பார்க்க.
திரிலோகேசன்—சூரியன்.
திருக்குறிப்புத்தொண்டர் திருநட்சத்திரம்—சித்திரை மாதத்தில் வரும் சுவாதி நட்சத்திரம்.
திருதி—நித்திய யோகத்தொன்று.
திருநாவுக்கரசர் திருநட்சத்திரம் —சித்திரைமாதத்தில் வரும் சதைய நட்சத்திரம்.
திருநாள்—பெருநாள், விசேடநாள்.
திருப்பணி—ஒன்பதாமிடம்.
திருமண்டலம்—துருவமண்டலம்.
திரும்பு—சந்திரன்.
திருவாதிரை—ஆதிரை, ஈசநாள், செங்கை, மூதிரை, யாழ்.
திருவோணம் — உலக்கை, ஓணம், சிரவணம், சோனை, நள்ளு, மாயோனாள், முக்கோல், வயிரம்.
திரேகம்—மூன்று.
திரேக்கரணம்—திரேக்காணம்.
திரேக்காணாதிபன் — திரேக்காணத்ததிபன்.
திரேக்காணம் } தசவர்க்கத் தொன்று; அது உதையராசியை மூன்றாகப் பகிர்தல்.
திரைக்காணம் }

திரேதம்—இரண்டாம்யுகம்

தியுமணி } சூரியன்.
தியுதம் }

திலு—மூன்று.

திலுப்புலு—முப்பது.

திவசகரன்—சூரியன், விடியல்.

திவசமுகம்—உதயகாலம்.

திவசம்—நாள்.

திவசாத்தியம் } அந்தி.
திவசாவசானம் }

திவம்—ஆகாயம், நாள், பகல்.

திவா—நாள், பகல்.

திவாகரம்—ஒரு நிகண்டு.

திவாகரன்—சூரியன்.

திவாநிசம்—பகலிரவு.

திவாமணி—சூரியன்.

திவாமத்தியம்—நடுப்பகல்.

திவாமானம்—பகற்காலம்.

திவாராத்திரம் } பகலிரவு.
திவாராத்திரி }

திவார்த்தம்—பகலிற்பாதி, மத்தியானம், நடுப்பகல், நண்பகல்.

திவேச்சுரன் — பன்னிரு சூரியரிலொருவன்.

திவ்வியவருஷம்—தேவவருடம். இது மானிடவருடம் முன்னூற்றறுபத்தைந்து கொண்டது.

திறி—மூன்று.

தினகரன்—சூரியன்.

தினகேசவம்—இருள்.

தினசேரி—நித்தம்.

தினத்திரயம் — ஒருநாளில் மூன்று பெருநாள் சம்பவிப்பது.

தினந்தினம்—நாளுக்குநாள்.

தினபலம்—ஐந்தாம், ஆறும், ஏழாம், எட்டாம், பதினொன்றும், பனிரண்டாமிராசிகள். நிதம் நடக்கும்பலன்.

தினபலன்—நிதம் நடக்கும் பலன். விபரம்;— சன்மநட்சத்திர முதல் அன்றைய நட்சத்திரவரை எண்ணிக்கண்ட தொகையுடன், ஞாயிறுமுதல் அன்றைய வாரம் வரையிலும் பிரதமை முதல் அன்றைய திதிவரையிலும் கூட்டிக்கண்ட தொகையைச் சேர்த்து, ஒன்பதில் கழித்த மிச்சம் ஒன்றுக்கு வியாகூலம், இரண்டுக்கு சுபம், மூன்றுக்கு துர்வார்த்தை, நாலுக்கு விருந்தினர்வரவு, ஐந்துக்கு பெண்போகம், ஆறுக்கு சுபம், ஏழுக்கு கலகம், எட்டுக்கு ரோகம், ஒன்பதுக்கு ஞானவாக்கியமெனக் கொள்வதாம்.

தினப்பாடு—தினசேரி.

தினப்பிரணி—சூரியன்.

தினமகாதிசை — நித்தம் நடக்குந்திசை. விபரம்—சூரியன் நின்ற நட்சத்திரமுதல் அன்றைய நட்சத்திரம் வரை எண்ணிக்கண்ட தொகையை இரண்டிற் பெருக்கி இதனோடு சென்மநட்சத்திர முதல் அன்றைய நட்சத்திரம் வரை எண்ணிக்கண்ட தொகையையும் ஞாயிறுமுதல் அன்றைய வாரம் வரையுள்ள தொகையை

யும் கூட்டி ஒன்பதில் கழித்து வந்த மிச்சம் ஒன்றுக்குச் சூரிய திசை, இரண்டுக்குச் சந்திரதிசை, மூன்றுக்குச் செவ்வாய்திசை, நான்குக்கு இராகுதிசை, ஐந்துக்கு வியாழதிசை, ஆறுக்குச் சனி திசை, ஏழுக்குப் புததிசை, எட்டுக்குக் கேதுதிசை, ஒன்பதுக்குச் சுக்கிரதிசையாகக்கொள்க.

தினமணி—சூரியன்.

தினமானம்—தினத்தினளவு, நித்தமும்.

தினம்—திருநாள், பெருநாள், முழுநாள்,பகல். குறிப்பு:-இயற்கையை அறிவிக்கும் கணிதசாஸ்திர சித்தாந்தப்படி பூமி துருவச்சக்கரமென்ற நாராசத்திற் சுற்றிவருகின்றது. அப்படிச் சுற்றிவரும் போது சூரியனுக்கு எதிர்ப்படும் பூமியின் பாகத்தில் வாசம்பண்ணுகிறவர்களுக்கு வெளிச்சமுண்டாகின்றது. இதுவே பகற்காலமாகவும், சூரியன் மறைந்தபின் வரும் பூமியின் பாகத்தில் வாசம் பண்ணுகிறவர்களுக்கு இருட்டு உண்டாகின்றது. இதுவே இராக்காலமாகவும், இப்படி இயற்கை முறையாய் நடந்துவரும் இரவு பகலின் மொத்தமாகிய காலத்தை ஒரு தினம் அதாவது ஒரு நாளென்று சொல்லப்படும்.

சூரியன் பூமியைச் சுற்றிவருகிறதென்பது புராணங்களின் கூற்று. இதை ஆரிய கணிதசாஸ்திரசித்தாந்தத்தால் மறுக்கப்பெற்றிருக்கிறது.

உதாரணம்;—"நமக்குக் கிழக்கு முகத்தா லறுபது நாழிகையிற், சுமப்புறு பூட்டையிற் சக்கரம் போற்புவி சூழ்தலினால், இமைக்கும் பகலிரவாகுந் துருவ ரியற்கையிற்குங், குமக்கொங் கையாய்பகலதுசூழு மண்ணெனக் கூறல் பொய்யே" என்னும் செய்யுளாலறிக.

தினவிருத்தி—நாள்தோறும்,நித்தம்.

திஙங்கிசம்—சாமம்.

திஞதி—விடியல்.

திஞதினம்—பிரதானநாள்.

திஞந்தம்—மாலைப்பொழுது.

திஞந்தகம்—இரவு.

திஞந்தரம்—ஒன்றைவிட்டொரு நாள், தினமும்.

திஞமிசம்—நாளின்பங்கு.

திஞரம்பம்—வைகறை.

திஞவசானம்—அந்தி.

## தீ

தீ—பஞ்சபூதத்தொன்று.

தீகன்—சந்திரன்.

தீக்கதிர்—சூரியன்.

தீக்குறி—துற்குறி, அபசகுனம்.

தீதை—கன்னி.

தீத்தம் } சிங்கம்.
தீத்தபிங்கலம் }

தீபகம்—சந்திரகிரணம்.

தீபம்—சோதிநட்சத்திரம்.

தீபாவளி—விசேடமான ஓர் பெருநாள், இது ஐப்பசிமாதம் அமரபக்கத்துச் சதுர்த்தசித் திதியின் இரவு நாலாஞ்சாமத்திற் கொண்டாடுவதாம்.

தீமான்—பண்டிதன், வியாழன்.

தீர்க்கதரிசனம்—முக்காலவர்த்தமானமறிதல்.

தீர்க்கபாதன்—சூரியன்.

தீர்க்கம்—அந்தாம், ஆரும் ஏழாமி ராசிகள்.

தீர்க்கராத்திரம்—நீண்டராத்திரி, நெடுங்காலம்.

தீர்க்காயுசியம்—நெடுங்காலம்.

தீர்த்தம்—திருநாள், திருமஞ்சனநீர், தீ, நீர்.

தீவளி—தீபாவளி.

தீவிரம்—சூரியகிரணம்.

தீவேட்டல் } கலியாணம்.
தீவேள்வி }

## து

துகினம்—சந்திரகிரணம், பனி.

துக்ககாரகன்—சனி.

துங்கமந்தோட்சம் — கிரகவட்டத்தினது தூரமான நிலை.

துங்கன்—கிரகவட்டத்தின் தூரமான முனை.

துங்கி—இரவு.

துங்கீசன்—சந்திரன், சூரியன்.

துங்கீபதி—சந்திரன்.

துடி--காலதசப்பிரமாணத்தொன்று. இது நிமிடம் எட்டுக்கொண்டது, காலநுட்பம்.

துடிநூல்—தேகாங்கத் துடிப்பினால் வரும் சுகதுக்க மறிவிக்கும் ஓர் சாஸ்திரம்.

துடை—பத்தாமிடம்.

துட்டக்கோள்—தீக்கிரம், பாவக்கிரகம்.

துட்டன்—தேள், விருச்சிகம்.

துணங்கால்—இருள், திருநாள்.

துணி—சோதி நட்சத்திரம்.

துணை—அளவு, சல்லியம்.

துதியை—இரண்டாந்திதி.

துது—இருபது.

துந்துபி } ஐம்பத்தாறுவதுவருடம்.
துந்துமி }

துந்துமிவருடப் பலன்—நல்லமழையும், செந்நெல் முதலிய தானியங்கள் அதிக விளைவும், சனங்கள் அநேகநல்ல காரியங்களைச்செய்து மனக்களிப்பையும் இலட்சுமி கடாக்ஷத்தையுமடைவர்.

உதாரணம்;--துந்துமியில் மிக்க சுப சோபனமுண் டாம்புவியிற், சந்ததமும் வாசமலர்த் தாமரைமேல்-இந்திரையும், செல்வ மிகக் கொடுப்பாள் செந்நெல்விளை வுண்டாகும், நல்லமழை யுண்டு நவில். (இடைக்காடர்)

துயம்—இரண்டு.

துரிதநாள்—அசுபதி, அஸ்தம், மூலம்.

துரிதம்—காலதசப் பிரமாணத்தொன்று. அது துடி இரண்டுகொண்டது.

துருவங்கட்டுதல் —சூத்திரமுண்டாக்குதல், வகை பண்ணுதல்.

துருவச்சக்கரம்—துருவத்திற்கு இருபத்து மூன்றரைப்பாகையளவில் நிற்பது, வான்சோதி மண்டலம்.

துருவநட்சத்திரம் — வடதிசையின் அடிவானத்தில் தனித்திருக்கும் பிரகாசமுள்ள ஒற்றை நட்சத்திரம்.

துருவமண்டலம்—துருவபதம்.

துருவம்—அசையாநிலை, கிரகநடையின் தூரம், துருவ நட்சத்திரம், நிச்சயம், சித்தியயோகத்தொன்று, வட்டத்தின் மூனை.

துருவம்பண்ணுதல் — துருவங்கட்டுதல்.

துருவயம்—அளவு.

துருவன்—மூனையில் நிற்கும் நட்சத்திரம்; இது துருவநட்சத்திரம்.

துரோணம் — தனுவிராசி, பதக்கென்னு மோரளவை, மண்மாரி பெய்யும் சத்தமேகங்களுளொன்று, வில்.

துர்க்கை—பூராநட்சத்திரம்.

துர்த்தானம் — எட்டு, ஆறு, பனிரண்டாமிடங்கள்.

துர்த்தினம்—கெட்டநாள், மழை.

துர்துராயோகம்—ஒரு சுபயோகம். இது சந்திரனுக்கு முன்னும் பின்னும் எல்லாக் கிரகங்களும் நிற்பதாம்;

துர்மதி—துன்மதி வருடம்.

துர்முகி—துன்முகி வருடம்.

துலா—துலாராசி, நிறைகோல்.

துலாகோடி—பத்துக்கோடி.

துலாங்கம்—முதுகு.

துலாச்சாதி—செட்டி, வியாபாரி.

துலாதரன்—சூரியன்.

துலாத்திசை—மேற்கு.

துலாநிறம்—வெள்ளை.

துலாமாதம்—ஐப்பசிமாதம்.

துலாமானம்—நிறை.

துலாம்—கட்டளை, கோல், சீர், தராசு, துலை, தூக்கு, நிறை, வணிகன்.

துலாரவி—ஐப்பசி மாதம், துலாத்தில் சூரியனிற்றல்.

துலாவிசுவம், துலாவிடுவம் — துலாராசியிற் சூரியன் வருங்காலம்.

துலாவுருவம்—தராசு.

துலுக்குமாதம் — முகமதிய மாதம் விபரம்-இஜரிமாதத்திற் காண்க.

துலுக்குவருடம்— இஜரிவருடத்திற் காண்க.

துலை—துலா, துலாராசி, நிறை.

துவட்டன்— பன்னிருசூரியருளொருவன்.

துவட்டாநாள் — சித்திரைநட்சத்திரம்.

துவந்தம், துவந்தனை, துவந்துவம் — இரட்டித்தது, இரண்டு ஒன்றிற்கொன்று தொடர்ந்திருப்பது.

துவம், துவயம் — இரண்டு.

துவர்ப்பு—பத்து.

துவா—இரண்டு.

துவாதசம் — பனிரண்டு, பனிரண்டாமிராசி.

துவாதசகரன்—வியாழன்.

துவாதசலக்கினம்—பன்னிரு லக்கினம். விபரம்:-ஒன்று சென்மலக்கினம், இரண்டு ஓராலக்கினம், மூன்று கடிகாலக்கினம், நாலு ஆருடலக்கினம், ஐந்து நட்சத்திரலக்கினம், ஆறு காரக லக்கினம், ஏழு ஆதெரிசலக்கினம், எட்டு ஆயுளிலக்கினம், ஒன்பது திரேக்காணலக்கினம், பத்து அங்கிச லக்கினம், பதினொன்று நவாங்கிசலக்கினம், பனிரண்டு பாவலக்கினம் என்பதாம்.

துவாதசாங்கிசம் } தசவர்க்கத் தொ
துவாதசாம்சம் } ன்று. அது ஒரு இராசியைப் பனிரண்டாய்ப் பகிர்தல்.

துவாதசாதித்தர்—பன்னிரு சூரியர். இவர் தாத்துரு, சக்கரன், அரியமன், மித்திரன், வருணன், அஞ்சுமான், இரணியன், பகவான், திவாச்சுவரன், பூடன், சவித்திரு, துவட்டன் என்பவராம்.

குறிப்பு:—சித்திரை மாதம் மேடவிராசி முதல் ஒவ்வொரு மாதத்தொவ்வொரு ராசியிற் புகுஞ் சூரியனுக்கு முறையே சொல்லும் பெயராம்.

துவாதசான்மா—சூரியன்.

துவாதசி—பனிரண்டாந்திதி.

துவாந்தாராதி—சூரியன்.

துவாபரம்—மூன்றும் யுகம்.

துவாப்புலு—இருபது.

துவாரராசி — சரராசி நான்குமாம். இவை மேடம், கடகம், துலாம், மகரம் என்பனவாம்.

துவி — இரண்டு.

துவிசபதி—சந்திரன்.

துவிதகேந்திரம்—இரண்டாங் கேந்திரம்.

துவிதசம்—இருபது.

துவிதம்—இரண்டு, இருமடங்கு.

துவிதியம்—இரண்டாவது, இரண்டு.

துவியகேந்திரம் — துவிதகேந்திரம், இரண்டாங்கேந்திரம்.

துவிரதாந்தகம்—சிங்கம்.

துளக்கம்—சோதிநாள்.

துளங்கொளி—கேட்டைநாள்.

துற்கரணம்—சுப காரியங்களுக்கு விலக்கப்பட்ட கரணங்கள். அவை வனசை, சகுனி, சதுர்பாதம், நாகவம், கிமிஸ்துக்கினம் என்பனவாம்.

துற்காநவமி—புரட்டாசிமாதம் முன்பக்கத்தில் வரும் ஒன்பதாந்திதி.

துற்பாக்கியமாலிகாயோகம் — ஒரு நல்ல யோகம். இது எட்டாமிடமுதல் இரண்டாமிடம் வரை ஏழு கிரகங்களிருப்பது.

துற்பெலராசி—சரராசி நான்குமாம். இது மேடம், கடகம், துலாம், மகரம் என்பதாம்.

துன்மதி—ஐம்பத்தைந்தாவது வருடம்;

துன்மதி வருடப்பலன் — சொற்ப மழையும், கெட்ட மனிதர்களுக்கும்மிருகங்களுக்கும் கஷ்டமும், துங்கபத்திரி முதற் கோதாவிரி வரை பஞ்சமும், மத்திம மாகாணத்திலும் அவ்விதமேயாம்.

உதாரணம்;— துன்மதியில் மாரியற்பஞ் சோகமுறுங்கீழ்சாதி, நன்மையில்லை மத்தியான் னடுதனில்-உண்மையாய்க், கொண்டுதுங்க பத்ரிமுதற் கோதா விரியளவும், விண்டுபஞ்ச மாகி விடும்.

(இடைக்காடர்)

துன்மரணம்—எட்டாமிடம்.

துன்னிமித்தம்—துற்சகுனம்.

துன்முகி—முப்பதாவது வருடம்.

துன்முகிவருடப்பலன்— முன்மழை கொஞ்சமும், பின்மழை யதிகமுமாகப் பெய்யும், வேளாண்மை பொலிவுடன் விளையும், கூர்ச்சர தேசத்தாருக்கு யாதொரு கெடுதியுமில்லை: ஆனல் பருத்தியுப்பு முதலிய வெண்மைப்பொருள்கள் குறைவுண்டாம்.

உதாரணம்;—மிக்கான துன்முகியில் வேளாண்மை யேறுமே, தொக்கமழை பின்னே சொரியுமே-மிக்கான, குச்சர தேசத்திற் குறைதீர வேவிளையும், அச்சமில்லை வெள்ளையரி தாம்.

(இடைக்காடர்)

## தூ

தூக்கு—துலாவிராசி, நிறைகோல்.

தூசு—சித்திரைநட்சத்திரம்.

தூதன் } புதன்.
தூதுவன் }

தூபயோகம்—ஒரு சுபயோகம். இது செவ்வாயின் அங்கிசாதிபதி சந்திரலக்கினாதிபதி ஆகியவர்களுக்கு ஐந்து, ஒன்பது ஆகிய இவ்விடங்களில் குரு, சுக்கிரன், இருக்க பத்தாமிடத்திற் சனி உச்சமாயிருத்தலுமாம்.

(2) இலக்கினாதிபதி நின்ற அங்கிசாதிபதி ஐந்திலிருக்க, சுக்கிரன் பார்ப்பதுமாம்.

தூமகம்பம்—ஓர் உற்பாதம்.

தூமகேது—அக்கினி, கேது, கொடுமை, வால் நட்சத்திரம், விண்வீழ் கொள்ளி.

தூமன்—உபக்கிரகங்களைந்தினிலொன்று.

தூமாதிகிரகங்கள் — உபக்கிரகங்களைந்து. அவை தூமன், விதிபாதன், பரிவேடம், இந்திரதனுசு, தூமகேது.

தூர்க்கை—பூரநாள்.

தூர்வாட்டமி-புரட்டாசிமாதம்பூருவ பக்கத்து எட்டாந்திதி.

## தெ

தெக்கணம்—தெற்கு.

தெட்சணதுருவம்—தென்முனை.

தெட்சணபூமி—தென்பூமி.

தெட்சணம்—தெற்கு, வலப்பக்கம்.

தெட்சணாதி — மேருவுக்குத் தென் பாரிசமுள்ள பூமி.

தெட்சணவேதை—சனி, செவ்வாய் நின்ற நட்சத்திரத்திற்கு ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, பனிரண்டு, பதின்மூன்று, பதினாலு ஆகிய நட்சத்திரங்களாம்.

தெட்சிணம்—தெற்கு, வலப்பக்கம்.

தெய்வபத்தித்தானம்—டத்தாமிடம்.

தெய்வமந்திரி—வியாழன்.

தெய்வம்—எண்வகை மணத்தினொன்று, வருடம்.

தெய்வதம்—வருடம்.

தெரிமா—சிங்கம்.

தெவ்வு—சந்திரன்.

தெவ்வூன்றி—இராகு.

தெறுக்கால்—தேள், விருச்சிகராசி.

தெற்கு—அவாசி, சிவேதை, தக்கணம், தெக்கணத்திக்கு, தென் யாமம், யாமியம், யாமினியம்.

தெனாது—தெற்கு, தெற்குள்ளது.

தென்—தெற்கு.

தென்கிழக்கு } அக்கினிமூலை.
தென்கீழ்த்திசை

தென்கீழ்த்திசைபாலன் } அக்கினி தேவன்.
தென்கீழ்த்திசையிறை

தென்பாரதம்—நவகண்டத்தொன்று. அது பரதகண்டதிற்றென்பாகம்.

தென்பாரிசம்—தென்றிசை.

தென்பாவிரேபதம் — நவகண்டத் தொன்று.

தென்பால்—தென்பக்கம்.

தென்பால்விதேகம் — நவகண்டத் தொன்று.

தென்புறம்—தென்பக்கம்.

தென்பூமி—மகாமேருவிற்குத் தென் பக்கமுள்ள பூமி.

தென்மூலை — பூமியின் றென்புறக் கோடி.

தென்மேல் } நிருதிதிசை.
தென்மேற்கு

தென்மேற்றிசைப்பாலன்—நிருதி.

தென்யாமம்—தெற்கு.

தென்றல்—தென்காற்று, முன்பனிப் பருவத்தின் காற்று.

தென்றி—தெற்கு, தென்காற்று.

தென்றிசை—தெற்கு.

தென்றிசைக்கோன் } இயமன்.
தென்றிசைப்பாலன்

## தே

தேகபலக்காரகன்—செவ்வாய்.

தேகம் — இலக்கினம், சந்திரலக்கினம்.

தேசகாலம் — இடமும் காலமும், நெடும்பொழுது.

தேசாந்திரம்—பனிரண்டாமிடம்.

தேசிகன்—வியாழன்.

தேட்கடை—மூலநட்சத்திரம்.

தேதிமழை—இன்னமாதம் இன்ன தேதியில் மழை பெய்தால் அவ் வருடம் நல்லமழை யென்பதாம். விபரம்;— ஆனிமாதம் பத்தாந் தேதி, ஆடிமாதம் எட்டாந்தேதி, ஆவணிமாதம் ஆறுந்தேதி, புரட்

டாசிமாதம் நாலாந்தேதி, ஐப்பசி மாதம் இரண்டாந்தேதி, கார்த்திகைமாதம்ஒன்றாந்தேதிஆகிய இத்தேதிகளாம்.

தேயுக்கிரகம்—சூரியன், வியாழன்.

தேப்பிறை, தேய்மதி } அமரபக்கத்துச் சந்திரன், பௌரணைக்குப் பின் வருஞ் சந்திரன்.

தேரோன்—சூரியன்.

தேர்—உரோகணிநாள்.

தேர்ப்பாகன்—புதன்.

தேவதாடம்— இராகு, தீ.

தேவமந்திரி—வியாழன்.

தேவாண்டு — தேவவருடம். அது முன்னூற்றறுபத்தைந்து மானிட வருடங்கொண்டது.

தேவிவிரதம்—ஓர்நோம்புநாள், அது சித்திரைமாதம் பூருவபக்கம் வெள்ளிவாரமுதல் தொடங்கிச் செய்வதாம்.

தேவேந்திரயோகம்—ஒரு நல்லயோகம். இது இலக்கினந்திரராசியாகி இலக்கினுதிபதி இலாபத்திலும் குடும்பாதிபதி கருமத்தானத்திலும், பஞ்சமாதிபதி குடும்பத்தானத்திலும், பாக்கியாதிபதி இலக்கினகேந்திரத்திலும் நிற்றலாம்.

தேள்—விருச்சிகராசி, தெருக்கால், அனுடநட்சத்திரம்.

தேனுயோகம் — ஒரு நல்லயோகம். இது இரண்டில் சுபக்கோள் சம்பந்தம் அல்லது பார்வைபெற்றேனும், தனுதிபன் ஆறு, எட்டு, பனிரண்டு நீங்கிய சுபவீட்டில் ஆச்சியுச்சனுயிருப்பது.

தேனெல்—அசுபதிநாள்.

## தை

தை—தைமாதம், பூசநாள், மகரராசி.

தைடம்—தைமாதம்.

தைசதம்—மகரராசி.

தைதிலம்—தைதுலம்.

தைதுலம், தைதுலே } கழுதைக்கரணம்.

தைத்தியகுரு, தைத்தியபுரோகிதன், தைத்தியமந்திரி } சுக்கிரன்.

தைத்தியமாதுரு—திதி.

தைத்தியயுகம் — சதுர்யுகங்கொண்டது.

தைத்தியாகோராத்திரம்—ஒரு வருடம். அது அசுரர்க்கோரிராப்பகல்.

தைப்பூசம் — தைமாதத்தில் வரும் பூசநட்சத்திரம்.

தையல்—பெண், கன்னிராசி.

தைரியத்தானம்—மூன்றாமிடம்.

தைவலேககன்—சோதிடன்.

தைவாகரி—சனி, நமன்.

தைனம்—தினம்.

தைன்யயோகம் — பரிவர்த்தனயோகம், கிரகமாற்றுயோகம். அது விரையாதிபன் ஒன்றுமுதற் பதினொன்றுவரை எந்தவீட்டிலாவது இருந்து அவ்வீட்டதிபர் பனிரண்டில் நிற்பது. இத்தானமாறுதல் பதினொருவகையாகும்.—

ஆறுக்குடையவன் ஒன்பது, பத்து, பதினொன்று, ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து இவைகளில் எவ்வீட்டிலாவது இருந்து அவ்வீட்டதிபர்கள் ஆறில் நிற்பதாம். இத்தானமாறுதல் பத்து வகையாகும்.

எட்டுக்குடையவன் ஒன்பது, பத்து, பதினொன்று, ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு இவ்விடங்களில் எவ்வீட்டிலாவது இருந்து அவ்வீட்டதிபர்கள் எட்டில் நிற்பதாம். இத்தானமாறுதல் ஒன்பது வகையாகும், பொதுவாய் இவை நல்லயோகமல்ல.

## தொ

தொடை—பத்தாமிடம்.

தொண்டு—ஒன்பது.

தொழில்தானம்—பத்தாமிடம், ஏழாமிடம்.

தொழு—இரேவதிநாள்.

## தோ

தோசம் } இரவு.
தோடம் }

தோணி—இரேவதி நட்சத்திரம்.

தோணியோகம்—ஒருநல்லயோகம். இது பஞ்சமாதிபன் குடும்பத்திலிருக்க இலாபாதிபன் சந்திரனைக் கூடி நிற்பதாம்.

தோரை—ஓரெண்.

தோற்றம் } உதையம், கணிப்பு.
தோற்றரவு }

தோற்றுதல் } உதித்தல், பிறத்தல்.
தோன்றுதல் }

## ந

நகபதி—சந்திரன்.

நடக்கும்ராசி—சராசி நான்குமாம். இது மேடம், கடகம், துலாம், மகரம்.

நடக்குங்கிரகம் } சுக்கிரன்.
நடக்குங்கோள் }

நடிராசி—இடைராசி.

நடுச்சாமம்—அத்தசாமம், பாதிஇரவு.

நடுநாள்—சித்திரை நட்சத்திரம், பாதிநாள்.

நடுப்பகல்—உச்சிநேரம், மத்தியானம்.

நடுமதியம் } உச்சிக்காலம்.
நடுமத்தியானம் }

நடுமையம்—உச்சம், நடு.

நடுராசி—இடைராசி.

நட்சத்திர அதிதேவதை — இன்ன நட்சத்திரத்துக்கு இன்னது அதிதேவதையெனல். விபரம்:-அசுபதிக்கு சரசுவதி, பரணிக்கு துர்க்கை, கார்த்திகைக்கு அக்கினி, உரோகணிக்கு பிரமன், மிருகசீரிடத்துக்கு சந்திரன், திருவாதிரைக்கு ஈசுரன், புனர்பூசத்துக்கு அதிதி, பூசத்துக்கு வியாழன், ஆயிலியத்திற்கு ஆதிசேடன், மகத்திற்கு சுக்கிரன், பூரத்திற்கு பார்வதி, உத்திரத்திற்கு சூரியன், அஸ்

 நட்சத்திர ஆதாயவிரையம்.

தத்திற்கு சாத்தான், சித்திரைக்கு விசுவகன்மா, சோதிக்கு வாயு, விசாகத்திற்கு குமரன், அனுசத்திற்கு இலக்குமி, கேட்டைக்கு இந்திரன், மூலத்திற்கு அசுரர், பூராடத்திற்கு வருணன், உத்திராடத்திற்கு கணபதி, திருவோணத்திற்கு விட்டுணு, அவிட்டத்துக்கு வசுக்கள், சதயத்துக்கு நமன், பூரட்டாதிக்கு குபேரன், உத்திரட்டாதிக்கு காமதேனு, ரேவதிக்கு சனி என்பனவாம்.

நட்சத்திர ஆதாயவிரையம்—நட்சத்திரத்தாற் சொல்லும் வருட மொத்தப்பலன். விபரம்:— (1) சித்திரைமாதம் முதல் தேதியன்று சூரிய உதையகாலத்திலுள்ள திதி வாரம் நட்சத்திரமாகிய இம் மூன்றையுங் கூட்டினது திருவமாம். இத்துருவத் தொகையுடன் ஒன்று கூட்டி ஆறு, இரண்டு, ஐந்து, மூன்று, நான்கு, ஒன்று, ஆறு, ஒன்று இந்தத் தொகைகளால் முறையே பெருக்கி, எட்டால் வகுத்து வந்தமீதங்கள் ஒவ்வொன்றும் அசுபதி, ஆயிலியம், அனுசம், பூரட்டாதி இந்நாலு நட்சத்திரங்களுக்குமுள்ள, ஆதாயவிரையம். ஆரோக்கியம், அரோக்கியம், சுகம், துக்கம், அலேச்சல், ஒரே இடத்திலிருத்தல் என்று சொல்லப்படுகிற சங்கியைகளாகும்.

(2) மறுபடியும் மேற்படி துருவத்திலிரண்டு கூட்டி முன்போற் கணக்குக் கிரியைகள் செய்ய, பரணி, மகம், கேட்டை, உத்திரட்டாதி இந்நாலு நட்சத்திரங்களுக்கும்,

(3) மறுபடியும் மேற்படி துருவத்தில் மூன்றுகூட்டி முன்போற் கிரியைகள் செய்ய, கார்த்திகை, பூரம், மூலம், இரேவதி இந்நாலு நட்சத்திரங்களுக்கும்,

(4) மறுபடியும் மேற்படி துருவத்தில் நான்குகூட்டி முன்போற் கிரியைகள் செய்ய, உரோகணி, உத்திரம், பூராடம் இம்மூன்று நட்சத்திரங்களுக்கும்,

(5) மறுபடியும் மேற்படி துருவத்தில் ஐந்துகூட்டி முன்போற் கிரியைகள் செய்ய மிருகசீரிடம், அஸ்தம், உத்திராடம் இம்மூன்று நட்சத்திரங்களுக்கும்,

(6) மறுபடியும் மேற்படி துருவத்தில் ஆறுகூட்டி முன்போற் கிரியைகள் செய்ய, திருவாதிரை சித்திரை, திருவோணம் இம் மூன்று நட்சத்திரங்களுக்கும்,

(7) மறுபடியும் மேற்படி துருவத்தில் எழுகூட்டி, முன்போற் கிரியைகள் செய்ய, புனர்பூசம், சுவாதி, அவிட்டம் இம்மூன்று நட்சத்திரங்களுக்கும்,

(8) மறுபடியும் மேற்படி துருவத்துடன் எட்டுக்கூட்டி முன்

நட்சத்திர இருப்பிடம். நட்சத்திரகந்தாயம்.

போற் கிரியைசெய்ய, பூசம், விசாகம், சதையம் இம்மூன்று நட்சத்திரங்களுக்கும் முதற்பாராவிற் சொல்லியபடி, ஆதாயவிரையம் முதலியவைகளாம்.

குறிப்பு—முற்கூறியபடி கணக்கிட்டு எட்டால் வகுப்பதில் மிச்சமில்லாமல் (0) பூச்சியமாய் வந்தால், எட்டு என்றும் இதற்கே பூரணமான பலன் என்றும் வைத்துக்கொள்வதாம்.

நட்சத்திர இருப்பிடம்—இன்ன நட்சத்திரத்திற்கு இன்னது இருப்பிடமென்பது. விபரம்;—அசுபதிக்கு ஊர், பரணிக்கு மரம், கார்த்திகைக்கு வனம், ரோகணிக்கு காடிச்சால், மிருகசீரிடத்திற்குக் கட்டிலின்கீழ், திருவாதிரைக்கு தேரடி, புனர்பூசத்துக்கு நெற்குதிர், பூசத்திற்கு மனை, ஆயிலியத்துக்கு கும்பை, அதாவது குடம், மகத்திற்கு நெற்கதிர், பூரத்திற்கு வெறும்வீடு, உத்திரத்துக்கு நீர், அஸ்தத்துக்கு நீர்க்கரை, சித்திரைக்கு வயல், சோதிக்கு பருத்தி, விசாகத்திற்கு முற்றம், அனுசத்துக்கு பாழ்வனம், கேட்டைக்கு கடை, மூலத்துக்கு குதிரைக் கொட்டாரம், பூராடத்திற்குக் கூரை, உத்திராடத்துக்கு வண்ணான் துறை, திருவோணத்துக்குக் கோயில், அவிட்டத்துக்கு ஆலை, சதயத்திற்குச் செக்கு, பூரட்டாதிக்குத் தெரு, உத்திரட்டாதிக்கு அக்கினி, ரேவதிக்கு பூஞ்சோலையென்பனவாம்.

நட்சத்திரகணம்—இருபத்தேழு நட்சத்திரத்தையும் மனிதர், தேவர், இராக்கதர் என்ற மூவகைக்கணங்களாகப் பகுக்கப்படுவது. விபரம்;- பரணி, ரோகணி, திருவாதிரை, பூரம், உத்திரம், பூராடம், உத்திராடம், பூரட்டாதி, உத்திரட்டாதி இவ்வொன்பது நட்சத்திரங்களும் மனிதகணமாம்.

கார்த்திகை, ஆயிலியம், மகம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், அவிட்டம், சதையம் இவ்வொன்பது நட்சத்திரங்களும் இராக்கதகணமாம்.

அசுபதி, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், அஸ்தம், சுவாதி, அனுசம், திருவோணம், ரேவதி இவ்வொன்பது நட்சத்திரங்களுந் தேவகணமாம்.

நட்சத்திரகந்தாயம்— வருடப்பலன். விபரம்;— (1) முதற்கந்தாயமாவது, அவ்வருடத்தின் சித்திரை மாதம் முதற்றேதியன்று வரும் கிழமை, திதி, நட்சத்திரம், யோகம், கரணம் இவ்வைந்து தொகைகளையும் ஒன்ருய்க்கூட்டிவருவது கந்தாயத்துருவமாம். இத்துருவத்துடன் அசுபதிமுதலுள்ள நட்சத்திரங்களுக்கு அர்தந்த நட்சத்திர

சங்கியையைக் கூட்டி மூன்றால் பெருக்கி எட்டால் வகுக்க வருகிற மீதம் முதற்கந்தாயமாகும்.

(2) நடுக்கந்தாயமாவது மூன்றுருவத்துடன் அந்தந்த நட்சத்திர சங்கியையைக்கூட்டி ஏழாற் பெருக்கி மூன்றால் வகுக்க வருகிற மீதமே நடுக்கந்தாய மென்பதாம்.

(3) கடைக்கந்தாயமாவது மூன்றுருவத்துடன் அந்தந்த நட்சத்திரத்தின் சங்கியையைக்கூட்டி மூன்றாற்பெருக்கி ஐந்தால் வகுக்க வருகிற மீதமே கடைக்கந்தாய மென்பதாம். இந்த மூன்று கந்தாயங்களிலும் மீதமில்லாவிட்டால் பூச்சியமாக (0) வைத்துக் கொள்ளவேண்டும்.

(4) கந்தாயபலன் விபரம்;-முதலாவது (0) பூச்சியம் வியாதி, இரண்டாவது(0)பூச்சியம் கடன், மூன்றாவது (0) பூச்சியம் தனவிரையம், அதாவது பலன் சொற்பம், மூன்றும் (0) பூச்சியமானால் ஒரு பலனுமில்லை, மூன்றும் (0) பூச்சியமில்லாமலிருந்தால் நல்ல பலன். இத்தொகை ஒற்றையாய் வரில் தனலாபம், இரட்டையாய் வரில் சமபலன், வகுப்பதில் மிச்சமில்லாது சூனியமானாற் பயனென்றுமில்லை.

வேறொரு வழியாகப் பார்க்கும் விபரம்;—அசுபதிக்கும் ரேவதிக்கும் கந்தாயங்களைக் கணிதஞ்செய்துகொண்டு அசுபதி முதலாக ஆரம்பித்து முதற்கந்தாயத்துக்கு ஒன்று, நான்கு, இரண்டு, ஐந்து,(0) பூச்சியம், மூன்று, ஆறு என்றும் இரண்டாங்கந்தாயத்துக்கு (0) பூச்சியம், மூன்று, இரண்டு என்றும், மூன்றாங்கந்தாயத்துக்கு (0) பூச்சியம், மூன்று, ஒன்று, நான்கு, இரண்டு என்றும் அந்தந்தக் கந்தாயங்களை முறையே யெழுதவேண்டும்.

நட்சத்திர சக்கரம்—நட்சத்திர மண்டலம்.

நட்சத்திர சாகினி — திருவாதிரை நட்சத்திரம்.

நட்சத்திர சூலம்—இன்ன நட்சத்திரத்திற்கு இன்ன திக்கு சூலமென்பது. விபரம்;—அவிட்டம், கேட்டை கிழக்கு. அசுபதி, திருவோணம் தெற்ந. பூசம், ரோகணி மேற்கு. உத்திரம், அஸ்தம் வடக்கு என்பதாம்.

நட்சத்திரதியாச்சியம்—இன்ன நட்சத்திரத்துக்கு இவ்வளவு நாழிகை தியாச்சியமென்பது. விபரம்;—அனுசம், திருவோணம், அவிட்டம் இவைகட்கு பத்து. சுவாதி, விசாகம், கேட்டை, மிருகசீரிடம் இவைகட்கு பதினாலு. பூரட்டாதிக்கு பதினாறு,உத்திரம்,சதையம் இவைகட்கு பதினெட்டு. பூசம், பூரம், மூலம், உத்திராடம்,

இவைகட்கு இருபது. திருவாதிரைக்கு இருபத்தொன்று, அஸ்தத்திற்கு இருபத்திரண்டு, பரணி, பூராடம், உத்திரட்டாதி இவைகட்கு இருபத்துநாலு. கார்த்திகை, புனர்பூசம், மகம், ரேவதி இவைகட்கு முப்பது, ஆயிலியத்திற்கு முப்பத்திரண்டு. உரோகணிக்கு நாற்பது, அசுபதிக்கு ஐம்பது, சித்திரைக்கு ஐம்பததாறு, இவைகள் ஒவ்வொரு தினத்திலும் அன்றைய நட்சத்திரங்கள் ஆரம்பித்து அதின் தியாச்சியதுருவம் எவ்வளவோ அந்த நாழிகைமுதல் விஷகடிகை, மூன்றேமுக்கால் நாழிகை இருக்கும். அன்றியும் திருவாதிரைக்கு பதினொரு நாழிகை முதலும், சித்திரைக்கு இருபது நாழிகை முதலும், மூலத்திற்கு ஐம்பத்தாறு நாழிகை முதலும் விஷகடிகையுண்டாகுங்காலமென்றும், இதையுந் தியாச்சியமென்றுஞ் சொல்லும் நூல்களுமுள.

நட்சத்திர நாசயோகம்—மரணயோகத்துக்குள்ள நட்சத்திரம். விபரம்-நாசயோகத்தைப் பார்க்க.

நட்சத்திரநேமி—சந்திரன், துருவன்.

நட்சத்திரநோக்கு—நட்சத்திர பார்வை. விபரம்:-சூரியன் நின்ற நட்சத்திரத்துக்கு இருபத்தாறு, பதினாறு, எட்டு, ஏழு, இருபத்தொன்று, பதினொன்றும் நட்சத்திரத்தையும் சந்திரன் நின்ற நட்சத்திரத்துக்கு நாலு, எட்டு, பதினெட்டு, பதினைந்து, பத்தாம் நட்சத்திரத்தையும் செவ்வாய் நின்ற நட்சத்திரத்துக்கு, மூன்று, பதினைந்து, ஏழு, எட்டாம் நட்சத்திரத்தையும் புதன், வியாழன், சுக்கிரன், சனி இவர்கள் நின்ற நட்சத்திரங்களுக்கு மூன்று, ஐந்தாம் நட்சத்திரங்களையும் பார்க்கும். சனிக்கு பத்தொன்பது பதினைந்தாம் நட்சத்திரத்தையும், வியாழனுக்கு பத்தொன்பது பத்தாம் நட்சத்திரத்தையும், அதிகபார்வையாகப் பார்க்கும்.

நட்சத்திரபட்சி—இன்ன நட்சத்திரத்திற்கு இன்ன பட்சி யென்பது. விபரம்;—அசுபதிக்கு இராசாளி, பரணிக்கு காக்கை, கார்த்திகைக்கு மயில், உரோகணிக்கு ஆந்தை, மிருகசீரிடத்திற்கு கோழி, திருவாதிரைக்கு அன்றில், புனர்பூசத்திற்கு அன்னம், பூசத்திற்கு நீர்க்காக்கை, ஆயிலியத்திற்கு சிச்சிலி, மகத்திற்கு ஆண்கழுகு, பூரத்திற்கு பெண்கழுகு, உத்திரத்திற்கு சில்வண்டு, அஸ்தத்திற்கு பருந்து, சித்திரைக்கு மரங்கொத்தி, சோதிக்கு ஈ, விசாகத்திற்கு செவ்வாற்குருவி, அனுசத்திற்கு வானம்பாடி, கேட்டைக்கு சக்கரவாகம்,

மூலத்திற்கு செம்போத்து, பூராடத்திற்கு கவுதாரி, உத்திராடத்திற்கு வலியன், திருவோணத்திற்கு நகுரை, அவிட்டத்திற்கு வண்டு, சதையத்திற்கு அண்டங்காக்கை, பூரட்டாதிக்கு உள்ளான், உத்திரட்டாதிக்கு கோட்டான், ரேவதிக்கு வல்லூறு என்பனவாம்.

நட்சத்திரபஞ்சபட்சி— இன்ன நட்சத்திரத்துக்கு பஞ்சபட்சிகளுள் இன்ன பட்சியென்பது. விபரம்;- திருவாதிரை முதல் பூரம் வரை ஆறுக்கும் ஆந்தை, உத்திரமுதல் விசாகம் வரை ஐந்துக்கும் காகம், அனுசமுதல் திருவோணம் வரை ஆறுக்குங் கோழி, அவிட்டமுதல் ரேவதிவரை ஐந்துக்கும் மயில், அசுபதிமுதல் மிருகசீரிடம் வரை ஐந்துக்கும் வல்லூறு என்பதாம்,

நட்சத்திரபதம் } நட்சத்திர மண்ட
நட்சத்திரபதவி } லம்.

நட்சத்திரபார்வை—நட்சத்திரநோக்கிலறிக.

நட்சத்திரப் பொதுப் பெயர் —உடு, உற்கை, ஒளி, கணம், சிதம், சுக்கை, சோதி, தாரகை, தாரா, தாரை, பம், மீன், வெள்ளி யென்பனவாம்.

நட்சத்திரப் பொருத்தம் — மணப் பொருத்தத் தொன்று. விபரம்;— பெண்நட்சத்திர முதல் ஆண்நட்சத்திரம் வரை எண்ணிக்கண்ட தொகையை ஆறில் கழித்து மிச்சம் இரண்டு, நாலு, ஆறு, எட்டு இவைகளுத்தமம். ஒன்று, ஐந்து, ஒன்பதுஆனால் மத்திபம், மூன்று, ஏழு ஆனால் அதமமென்பதாம்.

நட்சத்திர மகாதிசை—நட்சத்திரங்களைக் கொண்டு மகாதிசை கணிப்பது. விபரம்—அசுபதி, மகம், மூலம் ஆகிய இம்மூன்று நட்சத்திரங்களுக்குங் கேதுதிசை வருடமேழு. கார்த்திகை, உத்திரம், உத்திராடம் ஆகிய இம்மூன்று நட்சத்திரங்களுக்கும் சூரியதிசை வருடம் ஆறு. உரோகணி, அஸ்தம், திருவோணம் ஆகிய இம்மூன்று நட்சத்திரங்களுக்கும் சந்திரதிசை வருடம் பத்து. மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் ஆகிய இம்மூன்று நட்சத்திரங்களுக்கும் செவ்வாய் திசை வருடமேழு. திருவாதிரை, சுவாதி, சதையம் ஆகிய இம்மூன்று நட்சத்திரங்களுக்கும் இராகுதிசை வருடம் பதினெட்டு. புனர்பூசம், விசாகம், பூரட்டாதி ஆகிய இம்மூன்று நட்சத்திரங்களுக்கும் வியாழதிசை வருடம் பதினாறு. பூசம், அனுசம், உத்திரட்டாதி ஆகிய இம்மூன்று நட்சத்திரங்களுக்கும் சனிதிசை வருடம் பத்தொன்பது. ஆயிலியம், கேட்டை, ரேவதி ஆகிய இம்மூன்று நட்சத்திரங்களுக்கும் புததிசை வருடம் பதினேழு என்பதாம்.

நட்சத்திரமண்டலம் — நட்சத்திர பதம். இது சத்தஇருடியர், உல்கைகள், மின்னல், தூமகேதுக்கள், உரோகிணேயர், உட்ணபாத முதலிய கணதேவர்களிருக்குமிடம்.

நட்சத்திரமரம்—இன்ன நட்சத்திரத்துக்கு இன்ன மரமென்பது. விபரம்:-அசுபதிக்கு எட்டி, பரணிக்கு நெல்லி, கார்த்திகைக்கு அத்தி, உரோகணிக்கு நாவல், மிருகசீரிடத்திற்குக் கருங்காலி, திருவாதிரைக்கு செங்காலி, புனர்பூசத்திற்கு மூங்கில், பூசத்திற்கு அரசு, ஆயிலியத்திற்குப் புன்னை, மகத்திற்கு ஆல், பூரத்திற்கு பலாசு, உத்திரத்திற்கு அலரி, அஸ்தத்திற்கு ஆத்தி, சித்திரைக்கு வில்வம், சோதிக்கு மருது, விசாகத்திற்கு களா, அனுசத்திற்கு மகிழ், கேட்டைக்கு பிராய், மூலத்திற்கு மரா, பூராடத்திற்கு வஞ்சி, உத்திராடத்திற்கு பலா, திருவோணத்திற்கு எருக்கு, அவிட்டத்திற்கு வன்னி, சதையத்திற்கு கடம்பு, பூரட்டாதிக்கு தேமா, உத்திரட்டாதிக்கு வேம்பு, ரேவதிக்கு இலுப்பையென்பனவாம்.

நட்சத்திரமாலை—ஓர் சோதிடநூல்.

நட்சத்திரமானதினம்—ஒரு நட்சத்திர உதயகாலமுதல் மறுநட்சத்திரம் வரை நிகழுங்காலமாம்.

நட்சத்திரமானவருடம்— சவுரமான வருடத்தைப் பார்க்கினுஞ் சற்றுபெரியதேயாகும். இதன் வருடப்பிரமாணம் மூன்னூற் றறுபத்தாறு நாள், பதினைந்து நாழிகை, முப்பத்தொருவினுடி, பதினைந்து தர்ப்பரையாம்.

நட்சத்திரமிருகம் — இன்ன நட்சத்திரத்துக்கு இன்ன மிருகமென்பது. விபரம்:-அசுபதி ஆண்குதிரை, பரணி ஆண்யானை, கார்த்திகை பெண்ஆடு, உரோகணி பெண்நாகம், மிருகசீரிடம் பெண்சாரை, திருவாதிரை ஆண்நாய், புனர்பூசம் பெண்பூனை, பூசம் வெங்கடா, ஆயிலியம் ஆண்பூனை, மகம் ஆண்எலி, பூரம் பெண்எலி, உத்திரம் ஆண்எருது, அஸ்தம் பெண்எருமை, சித்திரை ஆண்புலி, சுவாதி எருமைக்கடா, விசாகம் பெண்புலி, அனுசம் பெண்மான், கேட்டை ஆண்மான், மூலம் பெண்நாய், பூராடம் ஆண்குரங்கு, உத்திராடம் மலட்டுப்பசு, திருவோணம் பெண்குரங்கு, அவிட்டம் பெண்சிங்கம், சதயம் பெண்குதிரை, பூரட்டாதி ஆண்சிங்கம், உத்திரட்டாதி பாற்பசு, ரேவதி பெண்யானை என்பனவாம்.

நட்சத்திரம்—அசுபதி, பரணி, கார்த்திகை, உரோகணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுசம், கேட்டை, மூலம்,

பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதையம், பூரட்டாதி, உத்திரட்டாதி, இரேவதி ஆக இருபத்தேழு நட்சத்திரங்களாம்· அன்றியுக் உத்திராடத்திற்கும் திருவோணத்திற்கும்இடையில் அபிசித்து என்ற நட்சத்திரத்தைச்சேர்த்து இருபத்தெட்டென்பதுமாம். நாள், விண்மீனுக்கும் பெயர்.

நட்சத்திரராசி—இன்னின்ன நட்சத்திரங்கள் இன்னின்ன ராசிகளில் நிற்குமென்பதாம். விபரம்:—அசுபதி, பரணி, கார்த்திகை முதற்கால் வரை மேடத்திலும், கார்த்திகையின் மற்ற மூன்று கால்களும் உரோகணி மிருகசீரிடத்தின் முன் இரண்டு கால்களும் இடபத்திலும், மிருகசீரிடத்தின் பின்னிரு கால்களும், திருவாதிரை, புனர் பூசத்தின் முன்மூன்று கால்களும் மிதுனத்திலும், புனர் பூசத்தின் நாலாங்காலும், பூசம், ஆயிலியம் கடகத்திலும், மகம், பூரம், உத்திரத்தின் முதற்காலும் சிங்கத்திலும், உத்திரத்தின் மற்றமூன்றுகால்களும் அஸ்தம், சித்திரையின் முன் இரண்டு கால்களும் கன்னியிலும், சித்திரையின் பின்னிருகாலும், சுவாதி, விசாகத்தின் முன்மூன்றுகாலும் துலாத்திலும், விசாகத்தின்நாலாங்காலும் அனுடம், கேட்டை விருச்சிகத்திலும், மூலம், பூராடம், உத்திராடம் முதற்கால் வரை தனுசிலும், உத்திராடத்தின் மற்ற மூன்று காலும், திருவோணம், அவிட்டத்தின் முன்னிரண்டு கால்களும் மகரத்திலும், அவிட்டத்தின் பின்னிரு கால்களும், சதையம் பூரட்டாதி முன் மூன்று கால்களும் கும்பத்திலும்,பூரட்டாதியில் நாலாங்காலும் உத்திரட்டாதி, ரேவதி இவைகள் மீனத்திலும் நிற்குமென்பதாம்.

நட்சத்திரேசன்—சந்திரன்.

நட்சத்திரவாக்கியம்—பஞ்சாங்ககணித முறையுளொன்று.

நட்டசந்திரன்—ஆவணி மாதத்தின் பூருவ பக்கத்திய சதுர்த்தி யன்று தோன்றும் பிறை.

நட்டாமுட்டி, நட்டாமுட்டி சிந்தனை } ஆரூட முறையாக சுக துக்கமறிவிக்கும் சோதிடம். இது சினேந்திர மாலை முதலிய நூல்களிற்சொல்லும் முறையாம்.

நட்டாறு—விதை விதைக்க ஆகாத அக்கினி நட்சத்திர நாளென்னுங் காலம். இது சூரியன் சிம்மராசியிற் பிரவேசித்தது முதல் அதாவது ஆவணி மாதப்பிறப்பு முதல் ஐந்து நாள், ஐம்பத்தைந்து நாழிகைக்கு மேல்வரும் முப்பது நாழிகை நேரங்கொண்ட கால அளவு.

நட்டேந்துகலை—பூர்வபக்கத்துப் பிரதமை.

நட்பு—உறவு, சினேகம்.

நட்புக்கிரகம்
நட்புக்கோள் } கிரகநிலை ஐந்தினென்று, விபரம்; கிரக நட்புவிற் காண்க.

நட்புத்தானம்
நட்பு ராசி
நட்பு வீடு } கிரகம் நட்புப் பெற்றிருக்கு மிராசி. விபரம்கிரக நட்பு ராசியிலறிக.

நண்டு—கடகவிராசி.

நண்பகல்—மத்தியானம்.

நதம்—உச்சத்திலிருந்து கிரகத்துக்குள்ள தூரம்.

நத்தமுகை—இரவு.

நத்தம்—இராத்திரி, இருள், நடு.

நந்தன
நந்தனம் } இருபத்தாறுவதுவருடம்.

நந்தன வருடப்பலன்— தேசத்தில் மழை பெய்யாததால் எல்லாநாடு நகரங்களிலும் பஞ்சமும், கானவித உயிர்வர்க்கங்களுக்கு நோயும் மரணமும் தூமகேது முதலிய விண் வீழ் கொள்ளிகளின் உதிர்ச்சியும் அரசருக்குக்கெடுதியும் உண்டாம்.

உதாரணம் ;—நந்தனத்தில் மாரியறும் நாடெங்கும் பஞ்சமிகும், நந்துமுயிர் நோயால் நலியுமே—அந்தாத்தின், மீனுதிருந் தூமமெழு மிக்க கெடுதி யுண்டாம், கோன்மடிவ னென்றேநீ கூறு.

(இடைக்காடர்)

நந்தி—இடபவிராசி.

நந்தை—பிரதமை, சஷ்டி, ஏகாதசி.

நபச்சட்சு
நபமணி } சூரியன்.

நபம்—ஆகாயம், ஆவணிமாதம்.

நபோமணி—சூரியன்.

நரசிம்மசயந்தி—வைகாசிமாதம் பூர்வபக்கத்தில் வரும் சதுர்த்தசித் திதி.

நரகசதுர்த்தசி—ஐப்பசிமாதம் அமரபக்கத்தில் வரும் பதினாலாந்திதி. இதுவே தீபாவளிநாள்.

நரிப்புறம்—மிருகசீரிடம்.

நரை—இடபவிராசி.

நர்மடன்—சூரியன்.

நல்யோகம்—ஓர் சுபயோகம். இது இலக்கினமுதல் ஏழாமிடம் வரை இராகு கேது நீங்கிய ஏழு கிரகங்கள் ஒன்றின்பின் னொன்றாய் நிற்றல்.

(2) மிதுனம், கன்னி, தனுசு, மீனம் ஆகிய ராசிகளில் இராகு கேது நீங்கியசூரியாதி ஏழு கிரகங்கள் நிற்றல்.

நவகண்டம் — ஒன்பது கண்டம். இது கீழ்விதேகம், மேல்விதேகம், வடவிதேகம், தென்விதேகம், வடவிரேபதம், தென்னிரேபதம், வடபாதம், தென்பாதம், மத்திமகண்டமென்பனவாம்.

நவகம்—ஒன்பது.

நவக்கிரகம்
நவக்கோள் } ஒன்பதுகிரகம். அவை சந்திரன், சனி, சுக்கிரன், சூரியன், செவ்வாய், புதன், வியாழன், இராகு, கேது என்பனவாம்.

நவதானியம்—ஒன்பதுவகைத் தானியம். அவைஉழுந்து,எள்ளு,கடலை,

கொள்ளு, சாமை, தினை, துவரை, நெல்லு, பயறு என்பனவாம்.

நவதி—தொண்ணூறு.

நவமி—ஒன்பதாந்திதி.

நவம்—ஒன்பது, கார்காலம்.

நவராத்திரம் } புரட்டாசிமாதம்பூர்வ
நவராத்திரி } பக்கத்துப் பிரதமை முதல் ஒன்பது இராத்திரி, இதன் ஒன்பதாம் நாளன்று தான், சரசுவதி பூசை அல்லது ஆயுத பூசை செய்வது.

நவாகம்—பிரதமை.

நவாங்கிஷம் } தசவர்க்கத் தொன்று.
நவாமிசம் } அது;-இராசியை ஒன்பது பங்கு செய்வது.

நவ்வி—அஸ்த நட்சத்திரம்.

நள—ஐம்பதாவது வருடம்.

நளம் — சிற்பநூல் மூப்பத்திரண்டினுென்று.

நளயோகம்—ஒருசுபயோகம். இது-பாக்கியாதி பதி நின்ற அங்கிசாதிபதி,இலக்கினுதிபனேடு கூடி உச்சம் பெற்றுநிற்றல்.

நளவருடப்பலன்—மழை பெய்யாததால் விபசாய நட்டமும் பஞ்சமும், வடக்குத் தேசத்தில் அரசர் சண்டையுஞ் சேனைகள் மடிவும் இரத்தப் பெருக்கு முண்டாம்.

உதாரணம்;-சீர்தீர் நளவருடஞ் சேர்வடக்கி லேகலகம், பரரோர் மடிவார் பகரக்கேள்—காரோ, பொழியா தாத்தப் புணரி பெருகும், அழியு மரசர் படை.
(இடைக்காடர்.)

களினம்—நிலம், நீர்.

நன்—உச்சிப்பொழுது, திருவோணம், நடு.

நள்ளி—கடகவிராசி, நண்டு.

நள்ளிருள்—நடு இரவு.

நன்ளு—திருவோண நட்சத்திரம், நடுநாள்.

நற்கடினம்—நன்னிமித்தம்.

நற்கரணம்—சுபகாரியங்களுக்கு நல்லன வாகக் கருதப்படும் பவம், பாலவம், கௌலவம், தைதுலே, கரசை, பத்திரை யென்னும் கரணங்களாம்.

நற்கோள்—சுபக்கிரகம். விபரம்:—சுபக்கிரகத்திற்காண்க.

நற்சங்கலிதம் — ஒன்று தொடுத்து முறையே தானங்களேறி நிற்பது.

நன்பகல்—நண்பகல்.

நன்மை—அதிட்டம்.

நன்மைப்படுதல்—இருதுவாதல், பக்குவப்படுதல், பூத்தல்.

## நா

நாகதைவிகை—தசமித்திதி.

நாகத்திசை—மேற்குத்திசை.

நாகபஞ்சமி—ஆவணிமாதம் பூர்வ பக்கத்து ஐந்தாந்திதி.

நாகப்பகை—கருடன்.

நாகவம்—பாம்புக்கரணம்.

நாக்கு } இரண்டாமிடம்,
நாக்குத்தானம் } வாக்குத்தானம்.

நாசயோகம்—மாரணயோகம். அவை மூன்று வகைப்படும்.

(1) ஞாயிறில் சதுர்த்தசியும், திங்களில் சஷ்டியும், செவ்வாய்,சனியில் சத்தமியும், புதனில் துதிகையும், வியாழனில் அஷ்டமியும், வெள்ளியில் நவமியும் வருவன திதி நாசயோகமாம்.

(2) ஞாயிறில் விசாகமும், திங்களில் சதயமும், செவ்வாயில் அவிட்டமும், புதனில் இரேவதியும், வியாழனில் உரோகணியும், வெள்ளியில் பூசமும், சனியில் உத்திரமும் வருவன நட்சத்திர நாசயோகமாம்.

(3) ஞாயிறில் பஞ்சமியும் கார்த்திகையும், திங்களில் துதிகையும் சித்திரையும், செவ்வாயில் பூரணையும் உரோகணியும், புதனில் சத்தமியும் பரணியும், வியாழனில் திரயோதசியும் அனுசமும், வெள்ளியில் சஷ்டியும் திருவோணமும், சனியில் அட்டமியும் ரேவதியும் வருவது திதிநட்சத்திரநாச யோகமென்பதாம்.

நாசிகாயோகம்—ஒரு நல்லயோகம். இது உயிராதிபன், வியாழன் ஆகிய இவர்கள் பத்திலும், சந்திரன் இரண்டிலும், சத்தமாதிபதி இலக்கினத்திலு மிருக்க, இலக்கினாதிபதியால் பார்க்கப் பெற்றிருத்தலுமாம்.

நாடன்—கார்த்திகை நட்சத்திரம்.

நாடி—இருபத்து நாலு நிமிடங்கொண்டது, நாழிகை.

நாடிக்கிரந்தம், நாடிசாஸ்திரம், நாடிநூல் } சோதிடசாஸ்திரம். அவை சூரிய நாடி, சந்திரநாடி, சுக்கிரநாடி, சாமிநாடி, இராகுநாடி, பாவநாடி, துருவநாடி, சுகர்நாடி, தேவிநாடி, செவ்வாய்நாடி, புதன்நாடி, குருநாடி, கேதுநாடி, சர்வ சங்கிரகநாடி, சர்வநாடி எனப்பலநாடி நூல்களுள்ளன.

நாடிப்பொருத்தம்— மணப்பொருத்தத் தொன்று. அது அசுபதி, திருவாதிரை, புனர்பூசம், உத்திரம், அத்தம், கேட்டை, மூலம், சதையம், பூரட்டாதி இந்த ஒன்பதும் இடைநாடியாம். பரணி, மிருகசீரிடம், பூசம், பூரம், சித்திரை, அனுஷம், பூராடம், அவிட்டம், உத்திரட்டாதி இந்த ஒன்பதுஞ் சுழி மூனைநாடியாம். மற்ற ஒன்பதும் பிங்கலைநாடியாம். பெண் நட்சத்திரமும் ஆண் நட்சத்திரமும் ஒரே நாடியானால் பொருந்தாது. மாறியிருந்தால் நன்மையாம்.

நாடிமண்டலம்—ஆகாயசமரேகை.

நாட்குறித்தல்—நன்னிமித்தம் நியமித்தல், நாள்பார்த்தல்.

நாட்டாச்சால் — விதைவிதைப்புக்கு நீங்கிய அக்கினி நட்சத்திரம்.

நாட்பார்த்தல் — நல்வேளை பார்த்தல்.

நாட்பொருத்தம் — மணப்பொருத்தத்தொன்று. அது சென்மநட்சத்

திரப் பொருத்தம், விபரம்;-நட்சத்திரப் பொருத்தத்திற்காண்க.

நாட்பொருத்தவகை — நட்சத்திரப் பொருத்த வகைகளுளொன்று. அதாவது ஒரு கவிஞன் தெய்வத்தின் பேரிலோ மனிதன் பேரிலோ கவிபாடுவதற்குள்ள பொருத்தம்.

விபரம்:—உயிரெழுத்தும், உயிர்மெய்யெழுத்தும் இருபத்தேழு நட்சத்திரங்களாக வகுக்கப்பெற்றிருத்தலால் பாட்டுடைத் தலைவன் பெயரின் முதலெழுத்துக்கமைந்த முதற்பாட்டின் முதற்சீரிலுள்ள எழுத்தின் நட்சத்திரத்திற்கு பின் வரும் எழுத்திற்கமைந்த நட்சத்திரம் நன்மையாம். அதாவது பாட்டின் முதலெழுத்திற்கும் நான்காமெழுத்திற்கும் ஆறுமெழுத்திற்கும் எட்டாமெழுத்திற்கும் ஒன்பதாமெழுத்திற்குமுரிய நட்சத்திரங்களும் நட்பு நட்சத்திரங்களென்பதாம். எழுத்து நட்சத்திரம் காணவேண்டில் நாமநட்சத்திரத்திற் காண்க.

நாண்மீன்—நட்சத்திரம்.

நாதன் — உடையவன், ஒவ்வொன்றுக்குமதிபதி, குரு, தலைவன்.

நாபியோகம்—ஒரு நல்ல யோகம். இது பன்னொன்றில் குரு நிற்க அதற்குப் பன்னொன்றில் இலாபாதிபன் சந்திரனோடு கூடிநிற்பதாம்.

நாமசங்கிதை—சிற்பநூல் முப்பத்திரண்டினொன்று.

நாமநட்சத்திரம் — பெயரின் முதலெழுத்துக்குள்ள நட்சத்திரம். விபரம்:-சு, சே, சொ, ல அசுபதி. லி, லு, லே, லோ பரணி. அ, இ, உ, எ கார்த்திகை. ஒ, வ, வி, வு உரோகணி. வே, வோ, க, கி மிருகசீரிடம். கூ, க, ங, ச்சா திருவாதிரை. கெ, கொ, ஹ, ஹா புனர்பூசம். ஹு, ஹெ, ஹொ, ட பூசம். டி, டு, டே, டோ ஆயிலியம். ம, மி, மு, மெ மகம். மோ, ட, டி, டு பூரம். டே, டோ, ப, பி உத்திரம். பு, ஷ, ண, டா அஸ்தம். பெ, பொ, ரா, ரீ சித்திரை. ரு, ரே, ரோ, த சுவாதி. தீ, து, தே, தோ விசாகம். ந, நி, நு, நே அனுடம். நோ, ய, யி, யு கேட்டை. யெ, யொ, ப, பி மூலம். பூ, தா. பா, டா பூராடம். பெ, பொ, ஜ, ஜி உத்திராடம். ஜு, ஜெ, ஜொ, கா திருவோணம். க, கீ, கூ, கே அவிட்டம். கொ, ஸ, ஸி, ஸீ சதயம். ஸெ, ஸோ, தா, தீ பூரட்டாதி. து, ச்ச, ஞ, த உத்திரட்டாதி. தெ, தொ,ச, சீ இரேவதி என்பனவாம்.

மற்றொருவிதம்—சு, சூ, செ, சே, சை அசுபதி. சொ, சோ, சௌ பரணி. அ, ஆ, இ, ஈ கார்த்திகை. வ, வா, வி, வீ உரோ

கணி. வெ, வே, வை, வௌ மிருகசீரிடம். கு, கூ திருவாதிரை. கெ, கே, கை, புனர்பூசம். கொ, கோ, கௌ பூசம். மெ, மே, மை ஆயிலியம். ம, மா, மி, மீ, மு, மூ மகம். மொ, மோ, மௌ, பூரம் ப, பா, பி, பீ உத்திரம். பு, பூ அஸ்தம். பெ, பே, பை, பொ, போ, பௌ சித்திரை. த, தா சோதி. தி, தீ, து, தூ, தெ, தே, தை விசாகம். ந, நா, நி, நீ, நு, நூ அனுசம். நெ, நே, நை கேட்டை. யு, யூ மூலம். உ, ஊ, எ, ஏ, ஐ பூராடம். ஒ, ஓ, ஔ உத்திராடம். க, கா, கி, கீ திருவோணம், ஞ, ஞா, ஞி அவிட்டம். தொ, தோ, தௌ சதயம். நொ, நோ, நௌ பூரட்டாதி. யா உத்திரட்டாதி. ச, சா, சி, சீ இரேவதி யென்பனவாம்.

நாமராசி—இராசிப்பொருத்தம், பெயர்ப்பொருத்தம்.

நாயகன்—நடத்துவோன், ஒவ்வொன்றுக்குமதிபதி.

நாயிறு—ஒரு கிழமை, சூரியன்.

நாய்—தென்மேற்றிசை பாலன்குறி.

நாய்க்கரணம்—சதுர்ப்பாதகரணம்.

நாய்த்திசை—தென்மேற்கு.

நாராயணன்—சந்திரன்.

நாலாமிடம்—நான்காமிராசி.

நால்—நான்கு.

நாவாய்—இரேவதி நட்சத்திரம்.

நாவிதன்—கார்த்திகை, பூரம் ஆகிய நட்சத்திரங்கள்.

நாழி—நாழிகை, பூரட்டாதி நட்சத்திரம்.

நாழிகை — உத்திரட்டாதி, விநாடி அறுபது கொண்டது, கடிகை, கன்னல், விகலை.

நாழிகைவட்டம் — கால அளவைக் காட்டுமோர் சூத்திரம், சூரிய கடிகாரம்,

நாழிகைவட்டில்--இருத்தை, கடிகை, கன்னல், நாழி, பதம், விகலை.

நாளம்—நாள்.

நாளயோகம் — ஒரு நல்ல யோகம், அது ஒன்பதில் பூருவபக்கத்துச் சந்திரன், வியாழன், சுக்கிரன் ஆகிய இவர்கள் ஒன்றுபட்டிருக்க புதன் இலக்கினத்திஷம் பெற்று நிற்பதாம்.

நாளெல்லை—அத்தமனம், மரணகலம்.

நாளை—மற்றநாள்.

நாளோலை—சாதகம்.

நாள் — அல்கல், அளவை, இராப்பகல் கொண்ட பொழுது, ஆனியம், எல், எல்லை, எல்வை, காலம், திவசம், திவா, தினம், நட்சத்திரம், நன்முகூர்த்தம், பகல், பெருநாள், முகூர்த்தம், வாசரம், வாரம், வைகல். இதன் பாதி, அரைநாள், அத்தநாள், பானுள்.

நாள்வட்டம்—நாள்சுற்று.

நாள்விழிப்பு—இன்னகிழமைஇன்ன விதமான விழிப்பு, குருடு என்பது. விபரம்;-புதன், வியாழம், வெள்ளி இவைகள் இருகண் விழிப்பு நாள். ஞாயிறு, திங்கள் ஒருகண் விழிப்பு நாள். செவ்வாய், சனி குருட்டு நாள் என்பனவாம். உதாரணம்-“புந்திவியாழம் புகர்க்கிரு கண்ணும், இந்துவ ருக்கரிவர்க்கொரு கண்ணும், செந்துவர்வாயாய் சேய்சனிக் கில்லை, முந்தினரோர்ந்து மொழிந்தனர் மாதோ” என்னுஞ் செய்யுளாலறிக.

நாற்கால்கிரகம் } நாலுகாலுள்ள கிரகம்.அவைசூரியன், செவ்வாய், சனி.
நாற்காற்கோள் }

நாற்கால்ராசி—மேடம், இடபம், சிங்கம், தனுசு.

நாற்கோணவேதை — சனி, செவ்வாய்நின்ற நட்சத்திரத்துக்கு இருபத்தாறு, இருபத்தொன்று, மூன்று, இருபதாவது நட்சத்திரங்களாம்.

நாற்றிசை—கிழக்கு,தெற்கு, மேற்கு, வடக்கு.

நான்காமிடம்—நான்காமிராசி.

நான்காமிடத்தின் காரகப்பெயர் — கல்வி, வாகனம், பூமி, சுகசயனம், சௌக்கியம், பந்துக்கள், நிட்சேபம்,வ[illegible]திரம்,தடாகம்,கிணறு, தாய், வியாபாரம், கண்டம், வலக்கை, வேதநூல், கடவுள்கிட்சேய மென்பவைகளாம்.

நான்காம்பக்கம் — இருத்தை. அதாவது பூர்வபக்கம், அமரபக்கமென்னும் இருபட்சங்களிலும் வரும் நான்காம், ஒன்பதாம், பதினான்காம் பக்கங்களாய் வரும் திதிகளாம்.

நான்கு—சது, நாலு.

## நி

நிசப்பிரபை—இருள்.

நிகழ்காலம் — தற்காலம், நடக்குங்காலம், வர்த்தமானகாலம்.

நிகழ்காலராசி — இடபம், சிங்கம், விருச்சிகம், கும்பம்.

நிகற்பம்—நூறுகற்பங்கொண்ட ஒருகால அளவு.

நிகற்புதம்—பதினாயிரங்கோடி.

நிசமனம்—பார்வை.

நிசா—இரவு.

நிசாகரன் } சந்திரன்.
நிசாகேது }

நிசாந்தகன்—சூரியன்.

நிசாந்தம்—விடியற்காலம்.

நிசாபதி } சந்திரன்.
நிசாமணி }

நிசாமனம்—பார்வை.

நிசாமானம்—இராத்திரிகால அளவு.

நிசாரி—சூரியன், சந்திரன்.

நிசார்த்தம்—பாதிராத்திரி.

நிசார்த்தனன்—சந்திரன்.

நிசி—இரா, இருள்.

நிசிமணி—சந்திரன்.

நிசீதம்—அர்த்தசாமம், இரவு.

நிசிதினி }
நிசித்தியை } இரவு.

நிட்சேபம்—நாலாமிடம், புதையல்.

நிதாககரன்—சூரியன்.

நிதாந்தம்—விடியற்காலம்.

நிதிஸ்தானம் }
நிதித்தானம் } இரண்டாமொன்பதாமிடங்கள்.

நிதேசினி—திக்கு.

நித்தியதிசை—தினமகாதிசை. விபரம்;-தினமகாதிசையிற் காண்க.

நித்தியயோகம்—பஞ்சாங்க உறுப்பொன்றாகிய தினயோகம். இது அதிகண்டம், அரிடணம், ஆயுஷ்மான், ஐந்திரம், கண்டம், சாத்தியம், சித்தம், சித்தி, சிவம், சுகர்மம், சுபம், சுப்ரம், சூலம், சோபனம், சௌபாக்கியம், திருதி, துருவம், பரிகம் பிரமம், பிரீதி, வச்சிரம், வரியான், விட்கம்பம், விதிபாதம், வியாபாதம், விருத்தி, வைதிருதி என்பனவாம். அன்றியும் தின அதிட்டத்திற்கும் பேர்.

நித்தியானத்தியாயம் — அட்டமி, அமாவாசை, சதுர்த்தசி, பூரணை யென்னுந் தினங்களாம்.

நிபுணன்—புதன்.

நிமிஷம் }
நிமிடம் } காலநுட்பம். அது காட்டையெட்டுக்கொண்டது.

நிமித்தகாரன்—வருங்காரியஞ்சொல்வோன்.

நிமித்தசூடாமணி—சகுனசாஸ்திரம்.

நிமித்தம்—பல்லி முதலியவற்றின் குறி.

நிமித்தர் }
நிமித்திகப்புலவன் }
நிமித்திகன் } வருங்காரியஞ் சொல்லுவோன், சோதிடன், வள்ளுவன்.

நிமிர்ச்சி—கிரகநடையிலொன்று.

நியற்புதம்—பதினாயிரங்கோடி.

நியுதம்—எண்வகுப்பிலொன்று. அது இலட்சம், நூறாயிரம்.

நிரஞ்சனை—பூரணை.

நிரட்சதேசம்—இராப்பகல் நாழிகை சரியாயிருக்குந் தேசம்.

நிரட்சம்—பூகோளசமரேகை.

நிரம்புதல்—இருதுவாதல்.

நிராதமை—இரவு.

நிரியாணசக்கிரம்—மரண சக்கிரம்.

நிரியாணதிசை — சனி புடத்திற் கண்ட நட்சத்திரதிசை, மரண திசை.

நிருதி—தென்மேற்றிசைப் பாலன். அஷ்டதிக்குப் பாலகருளொருவன்.

நிருதிதிசை—தென்மேற்றிசை.

நிர்வாணி—அமங்கலை,யோகினிக்கும் பெயர்.

நிர்வாணிநிலை—ஞாயிறு, வியாழன் தென்கிழக்கு. திங்கள், வெள்ளி தென்மேற்கு. செவ்வாய், சனி வடமேற்கு. புதன் வடகிழக்கு. இவள் பின்னிற்குந்திக்கில் பயணத்திற்கு நன்று, எதிர் நிற்குந்திசையின்நேரிற் போகலாகாது.

நிலமகன்—செவ்வாய்.

நிலமெடுத்தல்— மனை முதலியவற்றிற்கு நிலங்குறித்தல்.

நிலவு—சந்திரன், சந்திரிகை.

நிலவுநாழிகை — நிலவின் அடிகொண்டு கணிக்கும் நாழிகை.

நிலா—சந்திரன்.

நிலாக்கிரணம்—சந்திரகிரணம்.

நிலாக்கொழுந்து—இளம்பிறை.

நிலாமண்டலம்—சந்திரமண்டலம்.

நிலை—நேரம், பொழுது, காலம்.

நிலைபோடுதல் — அடியிடுதல், இது சிற்பசாஸ்திரத்தின் விதி.

நிலைமாறுதல்—வைகாசி.

நிறம்—இலக்கினம், குணம், சரீரம்.

நிறுப்பான், நிறை } துலாராசி.

நிறைகலை, நிறைமதி } பூரணசந்திரன்.

நிற்குங்கிரகம், நிற்குங்கோள் } சந்திரன், செவ்வாய்.

நிற்குமிராசி—கன்னி, தனுசு, மிதுனம், மீனம்.

நிற்புதம்—ஓரெண்.

நினைத்தகாரியம் — எண்ணிய பொருள், அது ஆரூடசோதனையிலொன்று.

## நீ

நீகம்—மேகம்.

நீசக்கிரகம், நீசக்கோள் } இராகு, உச்சத்திற்கேழாமிடக்கிரகம், கேது, நீசத்தானமடைந்த கிரகம்.

நீசத்தானம் — உச்சத்திற் கேழாமிடம்.

நீசபங்கராசயோகம்—நீசம் பெற்ற கிரகம், நீசங்கெட்டு இராஜயோகத்தைத் தருவதாம். விபரம்:— நீசக்கிரகமிருந்த வீட்டுக் குடையவன், ஆச்சி அல்லது உச்சம் பெற்றுவது, சந்திரனுக்குக் கேந்திரம் பெற்றுவது நிற்பதாம்.

நீசம்—உச்சத்திற் கேழாமிடம்.

நீசராசி—கிரகங்கள் நீசம் பெறுமிராசி. விபரம் கிரகநீசத்திற் காண்க.

நீபம்—உத்திரட்டாதி நட்சத்திரம்.

நீர்—பூராட நட்சத்திரம்.

நீர்க்கீழ்—உதயத்திற்கு நாலாமிராசி.

நீர்க்கோள்—சலக்கிரகம். விபரம்:— சலக்கோளிற் காண்க.

நீர்நாள்—பூராட நட்சத்திரம்.

நீலவசனம், நீலவண்ணன், நீலவாசான், நீலன் } சனி.

## நு

நுழைச்சல்—எழு.

நுழைச்சற்புலு—எழுபது.

## நூ

நூபம்—இடபவிராசி.

நூல்—சாஸ்திரம்.

நூறாயிரம்—இலட்சம், நியுதம்.

நூறு—சதம்.

## நெ

நெடுங்காலம்—வெகுகாலம்.

நெடுமன்—பாம்பு.

நெட்டைக்கிரகம் } இராகு, குரு
நெட்டைக்கோள் } கேது, புதன்.

நெய்—சித்திரை நட்சத்திரம்.

நெரிவு—பகை.

நெருப்புவட்டம்—அக்கினி மண்டலம்.

நெற்குறி — நெற்கொண்டு சொல்லுஞ் சோதிடம்.

நெற்றித்தானம்—இரண்டாமிடம்.

நென்னல்—முன்னைநாள்.

## நே

நேத்திரயோனி—சந்திரன்.

நேத்திரத்தானம்—இரண்டாமிடம்.

நேமம்—சாயங்காலம், நேரம், பங்கு.

நேரகாலம்—தற்காலம்.

நேர்வான்—சித்திரை நாள்.

நேர்பட எதிர்தல்—கூடுதல்.

நேற்று—மூதனுள்.

நேற்றையத்தினம்—கழிநாள், நெருநல், நென்னல்.

## நை

நைசர்க்கிகதிசை—இருபாம்பு நீக்கிய எழு கிரகங்களில் சந்திரனை ஆதியாக வைத்து, செவ்வாய், புதன், சுக்கிரன், குரு, சூரியன், சனி அந்தமாகக் கொள்வதாம். இவர்களுக்கு திசை வருடமுறையே ஒன்று, இரண்டு, ஒன்பது, இருபது, பத்து, எட்டு, இருபது, ஐம்பது என்பதாம். சந்திரன், சூரியனிவர்களுக்கு சந்திர லெக்கின முதற்கொண்டும், செவ்வாய்க்கு செவ்வாயிருந்த ராசிமுதற்கொண்டும், புதனுக்கு புதனிருந்த ராசி முதற்கொண்டும், சுக்கிரனுக்கு சென்மலக்கின முதற்கொண்டும், குருவுக்கு இலக்கினதிபனிருந்த ராசி முதற்கொண்டும், சனிக்கு சூரியனிருந்த ராசி முதற்கொண்டுந் திசை நடத்துவதாம்.

நைச்சி—பாம்பு.

நைருதி—நிருதி, நிருதிதிசை.

## நொ

நொடி—காலநுட்பம், கைநொடி.

## நோ

நோக்கு—நோக்குதல், பார்வை.

நோய்முகன்—சனி.

## நௌ

நௌயோகம்—ஒருசமயோகம். அது இராகு கேது நீங்கிய சூரியாதி எழுவர் தனித்தனியாக இலக்கின முதல் எழாமிராசி வரையி லிருப்பதாம்.

## ப

ப—இருபதிலோர் பாகத்தைக் காட்டும் கீழ்வாயிலக்கக் குறி, காற்று, பெருங்காற்று.

பஃறி—இரேவதி நட்சத்திரம்.

பகலவன்—சூரியன், பரணி நட்சத்திரம்.

பகலோன்—சூரியன்.

பகல்—சூரியன், தினம், நடு, பகற்காலம், மத்தியானம், முகூர்த்தம்.

பகல்மானம்—பகல் நாழிகை.

பகல்வலிக்கிரகம் } பகலில் வலியுள்
பகல்வலிக்கோள் } ள கிரகம். அவை
சுக்கிரன், சூரியன், வியாழன்.

பகல்விழிப்பு ராசி—சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம்,கும்பம்,மீனம் என்பனவாம்.

பகல்வலி ராசி — தலையுதைய ராசியைக் காண்க.

பகல்வாயில்—கீழ்த்திசை.

பகவதிநாள்—பூரம்.

பகவான்—சூரியன்.

பகற்காலக்கிரகம் } சுக்கிரன், சூரி
பகற்காலக்கோள் } யன்,புதன்,குரு.

பகற்குளிகன்—பகற்கால குளிகை காலம். அவை ஞாயிறு இருபத்தாறேகால்,திங்கள் இருபத்திரண்டரை, செவ்வாய் பதினெட்டேமுக்கால், புதன் பதினைந்து,வியாழன் பதினொன்றே கால்,வெள்ளி ஏழரை, சனி மூன்றே முக்காலென்பதாம்.

உதாரணம்:—"ஞாயிறு முகூர்த்தமேழாம் நன்மதிக் காறுஞ் செவ்வாய்க், கேயவைந் தாகும் புந்திக் கீரிரண் டாம்பொன் மூன்றும், தூயநற் புகர்க்கி ரண்டாஞ் சுன்னவன் றனக்கொன் றாகும், ஆயவிம் முகூர்த்தத் தோடே யற்றிடுங் குளிக னெல்லில்" என்னுஞ் செய்யுளாலு மறிக.

பகற்பாடு—பகற்காலம்.

பகன்—பன்னிருமாதச்சூரியருளொருவன்.

பகுளசத்தமி — கிருட்டிணபக்கத்து ஏழாந்திதி.

பகுளம்—கிருட்டிணபக்கம்.

பகை—விரோதம்.

பகைக்கிரகம்—பகைக்கோள்.

பகைக்கோள்—பகைக்கிரகம். அவை இன்ன கிரகத்துக்கு இன்ன கிரகம் பகையென்பது. விபரம்-கிரக பகையிற் காண்க.

பகைத்தானம்—ஆறுமிடம். அன்றியும் இன்ன ராசி இன்ன கிரகத்திற்குப் பகையென்பது. விபரம்;-கிரக பகையிற் காண்க.

பகைநாள்—பிறந்த நாளுக்கு மூதனாள்.

பகைராசி—பகை வீடு.

பகைவீடு—கிரகராசிப் பகையிற் காண்க.

பக்கசரம் } சந்திரன்.
பக்கசன்மனம் }

பக்கதி—பிரதமை.

பக்தித்தானம்—ஐந்தாமிடம்.

பக்கநோக்குக்கிரகம் } பக்கபார்வை
பக்கநோக்குக்கோள் } யுள்ள கிரகம்.
அவை செவ்வாய்.

பக்கநோக்குராசி—பக்க பார்வையுள்ளராசி. அவை மேடம், இடபம், சிங்கம், தனுசு என்பனவாம்.

பக்கபாதம்—வாரம்.

பக்கம்—சந்திரனுள், பட்சம், பதினைந்து நாள், பூர்வ பக்கம், அமர பக்க மென்பதுமாம்.

பக்காந்தம்—பட்சத்தின் கடைநாள்.

பங்கயன்—சூரியன்.

பங்கு—சனி, மூடவன், நாள், வாரம்,

பங்குக்கிரகம்—மகர விராசி.

பங்குப்பட்டநாள்—இரண்டு ராசியிற் றன் னங்கிசஞ் சேர்ந்து நிற்கும் பெருநாள்.

பங்குபார்தன்—சனி.

பங்குனி—உத்திரநாள், ஒருமாதம்,

பங்குனிமாதம்—பாற்குனம், பாற்குனிகம்.

பசதன்—சூரியன்.

பசந்தம்—நேரம்.

பசலி வருடம்—தற்காலம்பிரிட்டீஷ் இராசாங்கத்தார் அரசிறை நிருவாககாரியங்களுக்காக உபயோகித்து வரும் வருடமாம். இது முகமதிய அரசனுகிய அக்பர் அரசாட்சி காலத்தில் அரசிறை வசூலிப்புக்காக இந்தியாவின் வடபாகத்தில் அனுட்டிக்கப் பெற்றுவந்தது. மேற்படி யரசரின் குமாரன் ஹாஜிகானல் மேற்படி யனுட்டானத்திற்கு இரண்டு வருடத்திற்குப் பின் தென்னிந்தியாவில் வழங்கலாயிற்று. இவ்வருட ஆரம்பம் கர்நாடக தேசத்தில் சூலை மாதம் பதினைலாந்தேதி தொட்டு ஆடி மாதமுதல் தேதியாக வழங்கி வந்தது. இது இருவகைத் தேதிகள் கலந்து குழப்பத்திற் கேதுவாயிருந்ததால் சூலைமாத முதல் தேதியையே ஆங்கில அரசாங்கத்தார் தீர்மானித்து அதன்படி பசலிக்கணக்கு அங்கீகரிக்கப் பெற்று வருகிறது. நமது கணிதப்படி இப் பசலி கலியுகாதி மூவாயிரத்தறுநூற்றுத் தொண்ணூற் றொன்றாம் வருடத்தில் ஆரம்பம்.

பசு—இடபவிராசி.

பசுங்கதிர்
பசுங்கதிர்த்தே } சந்திரன்.

பசுசகன்—சோதிடன்.

பசேவிமன்—சூரியன், தீ.

பச்சிமப்பிறை—இளம்பிறை.

பச்சிமம்—மேற்கு.

பச்சை
பச்சைநிறக்கோள் } புதன்.

பஞ்ச
பஞ்சம் } ஐந்து.

பஞ்சகம்—ஐந்தின் கூட்டம். அவை பார்க்கும் விபரம்-ஞாயிறு முதல் அன்றையவாரம் வரையும், பிரதமை முதல் அன்றையத்திதிவரையும், அசுபதி முதல் அன்றைய நட்சத்திரம் வரையும், மேடமுதல் அப்போது உதய மாகும் இலக்கினம் வரையும் எண்ணிக்கண்ட தொகையை ஒன்பதில் கழித்த மிச்சம் மூன்று, ஐந்து, எழு, ஒன்பது உத்தமம். மற்றவை நீக்கப் படுவதாம். (1) மிருத்து பஞ்சகம், (2) அக்கினி பஞ்சகம், (4) இராஜ பஞ்சகம், (6) சோரபஞ்சகம், (8) ரோகபஞ்சகம் ஆகிய இவற்றுள் இராஜபஞ்சகமும், அக்கினிபஞ்சகமும், இரவில் சோரபஞ்சகமும்,

ரோகபஞ்சகமும், சகலகாரியங்களுக்கு மிருத்து பஞ்சகமும், ஆகாதென்பதாம்.

பஞ்சகாரன்—கணிதசாஸ்திரி.

பஞ்சகோணமண்டலம்— சுக்கிர மண்டலம்.

பஞ்சக்கிரகம் } ஐந்துகிரகம். அவை—
பஞ்சக்கோள் } செய்வாய், புதன், வியாழன் வெள்ளி, சனி என்பனவாம்.

பஞ்சக்கோள் நின்ற தோஷம்—சூரியன் நின்ற நட்சத்திரத்துக்கு ஏழாம் நட்சத்திரம் உற்பாதமெனவும், பத்தாம் நட்சத்திரம் தாரகமெனவும், பனேந்தாம் நட்சத்திரம் பிரமதண்ட மெனவும், இருபத்தொன்ரும் நட்சத்திரம் காலனெனவும் பெயராம்.

செவ்வாய்க்கு ஏழாம் நட்சத்திரம் சூலமெனவும், பதினேந்தாம் நட்சத்திரம் கண்டமெனவும், இருபத்தொன்ரும் நட்சத்திரம் காலனெனவும் பெயராம். அன்றியும் பத்துச் சக்கரமென்றும், பதினைந்து காலமென்று சொல்லும் நூல்களுமுள.

புதனுக்கு எட்டு, பதினெட்டு, இருபத்துநாலு ஆகிய நட்சத்திரங்கள் கண்டமென்பதாம்.

குருவுக்கு ஏழு, ஒன்பது ஆகிய நட்சத்திரங்கள் கொடுமையாம்.

சுக்கிரனுக்கு ஏழு, ஒன்பது ஆகிய நட்சததிரங்கள் கொடுமையாம்.

சனிக்கு ஐந்து, ஆறு, பத்து, பதினொன்று, பனிரண்டு ஆகிய நட்சத்திரங்கள் பந்தமென்பதாம்.

இராகு-கேதுக்களுக்கு ஏழாம் நட்சத்திரம் பரிகமெனவும் பெயராம். இவைகளைச் சுபகாரியங்களுக்குவிலக்கப்பெற்றிருக்கிறது.

பஞ்சசதம்—ஐநூறு.

பஞ்சதசகம் } பதினைந்து.
பஞ்சதசம் }

பஞ்சசநு—நேரம்.

பஞ்சசித்தாந்தம்—ஒருவன் சீவிய காலத்தின் சுகதுக்கத்தை உறுதிசெய்ய ஐந்து வகையாய் ஆராய்ந்து முடிவு சுட்டுவதாம். விபரம்;- (1) நட்சத்திர சுபாசுபம், (2) கிரகங்களின் சீலம், (3) கிரகங்களின் காரகத்தன்மை, (4) உச்சாதிவர்க்கம், (5) ஆதிபத்தியமென்பதாம். சோதிடபஞ்ச சித்தாந்தமென்னும் நூலுமுண்டு.

பஞ்சதசி—பூரணை.

பஞ்சதத்துவம்—பஞ்சகமென்னும் ஐந்தின கூட்டம்.

பஞ்சபட்சி — எழுத்துப் பொருத்தமறியும் ஐந்து பட்சி. அவை;— வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில். இவற்றிற்கு முறையே எழுத்து, அ, இ, உ, எ, ஒ, இவற்றின் செய்கைஉண்டி, நடை, அரசு, தூக்கம், சாவு என்பனவாம்.

பஞ்சபட்சிக்காதல் } ஐந்துபட்சி
பஞ்சபட்சிசாஸ்திரம் } களைக்கொண்டு நலந் தீது சொல்லும் நூல்.

பஞ்சபட்சிப்பொருத்தம் — மணப் பொருத்தத்தொன்று. அது மயிலுக்குங் கோழிக்கும்-வல்லூறும், ஆந்தையும், காகத்திற்கு-ஆந்தையும், வல்லூறுக்கு-ஆந்தையும், மயிலும், கோழியும் பகையாம்; மற்றவை உறவாம். பெண்ணுக்கும் ஆணுக்கும் பகையில்லாதிருந்தாலும் ஒரே பட்சியானாலும் பொருத்தமாம்.

பஞ்சபூதக்கிரகம் } ஐந்து பூதங்களுக்
பஞ்சபூதக்கோள் } குரிய கிரகம்.
விபரம்:—பிருதிவிக் (பூமி) கிரகம் செவ்வாய். அப்புக்(நீர்)கிரகம் சுக்கிரன். தேயுக்(தீ)கிரகம் வியாழன். வாயுக்(காற்று)கிரகம் புதன். ஆகாயக்(அகண்டவெளி)கிரகம் சனி என்பனவாம். அன்றியும் முற்கூறிய கிரகங்களுடன் அப்புக்கு சந்திரனும், தேயுக்கு சூரியனும், ஆகாயத்திற்கு இராகு, கேது ஆகிய இவர்களும் என்று கூறும் நூல்களுமுள.

பஞ்சபூதப்பொருத்தம்—மணப்பொருத்தத்தொன்று. அவை அசுபதி முதல் ஐந்து நட்சத்திரங்களும் பிருதிவி என்றும், திருவாதிரை முதல் ஆறு நட்சத்திரங்களும் அப்புவென்றும், உத்திரமுதல் ஆறு நட்சத்திரங்களும் தேயுவென்றும், கேட்டை முதல் ஐந்து நட்சத்திரங்களும் வாயுவென்றும், அவிட்ட முதல் ஐந்து நட்சத்திரங்களும் ஆகாயமென்றும் பெயர். இதில் பெண்ணும் ஆணும் ஒரே பூதமானால் உத்தமம். அப்புந் தேயுவுமாகில் அதமம், மற்றவை மத்திமமாம்.

பஞ்சபூதம்—பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் முறையே மண், நீர், தீ, காற்று, வெளி (ஆகாயம்) என்பதாம்.

பஞ்சமத்தானம்—ஐந்தாமிடம்.

பஞ்சமம்—ஐந்து.

பஞ்சமி—அவிட்டமுதல் ஐந்துநாள், ஐந்தாந்திதி.

பஞ்சலோகம்—ஐந்துலோகம். அவை இரும்பு, ஈயம், செம்பு, பொன் வெள்ளி யென்பனவாம்.

பஞ்சாங்கபலன்—பஞ்சாங்கங் கணித்பதிற்கண்ட பலன்.

பஞ்சாங்கம் — சோதிடத்துக்குரிய ஐந்துறுப்பு. அவை கரணம், திதி, நட்சத்திரம், யோகம், வாரம் என்பனவாம்.

பஞ்சாங்கவாக்கியம்—கணிதமுறையினொன்று.

பஞ்சாசியம்—சிங்கம்.

பஞ்சாரம்—எருது. குதிரை, இவற்றினுள்.

பஞ்சார்க்கதோசம் — ஐந்தருக்கத்தால் வருந்தோசம்.

பஞ்சார்க்கம் — ஐந்தருக்கம். அவை இந்திரவில், கேது, தூமம், பரிவேடம், விதிபாதம் என்பனவாம்.

பஞ்சானனம்—சிங்கம்.

பஞ்சி—பஞ்சாங்கம்.

பஞ்சிகை—கணிதம், பஞ்சாங்கம்.

பஞ்சிதம்—விண்மீன்.

படர்க்கை—மூன்றுமிடம்.

படலம்—திசை.

படல்—அஸ்தமித்தல்.

படி—ஓரளவு, குணம், பூமி.

படிஞாயிறு—அத்தமசூரியன்.

படுதல்—அஸ்தமித்தல்.

படுவான்—மேற்றிசை.

பட்சபாதம்—ஒருவாரம்.

பட்சம் — பக்கம், பதினைந்துநாள் கொண்டது, பாட்டியமி.

பட்சாந்தம்—அமாவாசை, பூரணை.

பட்சிசாஸ்திரம்—பஞ்சபட்சிநூல்.

பட்சிதோசம்—குழந்தைகளுக்குவரும் பரவைத்தோசம்.

பட்சியோகம்—ஒரு கெட்டயோகம். அது நாலாமிடம் பத்தாமிடமிவை களில் எல்லாக் கிரகங்களும் நிற்றல்.

பட்டப்பகல்—நடுப்பகல், நற்பகல்.

பட்டாரகன்—சூரியன்.

பணகரம்—பாம்பு, இராகு கேதுக் களின் பொதுப்பெயர்.

பணபரம்—இரண்டு, ஐந்து, எட்டு, பதினொன்று ஆகிய இவ்விடங் களாம்.

பணாகரம், பணாதரம், பணாபவம் } இராகு கேதுக்களின் பொதுப் பெயர், பாம்பு.

பண்டகேந்திரம்—ஓர் கணிதம்.

பண்டி—உரோகணி நட்சத்திரம்.

பண்டிகை—பெருநாள்.

பண்டிதன்—சுக்கிரன், புதன்.

பண்ணவர்சாமி—இலக்கினாதிபன்.

பண்ணவன்—குரு, வியாழன்.

பதங்கன்—சூரியன்.

பதசம்—சந்திரன்.

பதம்—நாழிகை, பூரட்டாதி, பொழுது, காலம், பருவம்.

பதனகேந்திரம்— இலக்கினத்திலிருந்து நாலாம், எழாம், பத்தாமிடங் களாகிய இராசி.

பதி—குரு, வியாழன், வீடு.

பதிற்றுப்பத்து—நூறு.

பதிற்றொன்பான்—தொண்ணூறு.

பதினறுகோணம்—எட்டுத்திசையும் அதனுள்ளந்தராளமெட்டுமாம்.

பதினோராமிடக் காரகத்தின் பெயர்— இடதுசெவி, இடதுகன்னம், இடதுகால், இடதுதொடை, புதையல், துயர்நிவர்த்தி, மூத்தசகோதரம், களவு, வம்பு, மூர்க்கம், துர்ச்சேர்க்கை, சூது, இரசவாதம், கபடம், துன்மார்க்கம், அறிவு, சிவிகை, ஆயம், லாபம், விரையம், இலக்கினமூல மென்றும் பெயர்.

பதுகம்—சோதிடசாத்திரம்.

பதுமபந்து, பதுமபாணி } சூரியன்.

பதுமம்—கோடாகோடி.

பதுமவாஞ்சனன்—சூரியன்.

பதுமவிரோதி—சந்திரன்.

பதுமாப்தன், பதுமினிகாந்தன் } சூரியன்.

பத்தாமிடத்தின் காரகப்பெயர் — இடதுகை, வெகுமானம், காரியம்,

கருமம், தொழில், வியாபாரம், உத்தியோகம், தெய்வபக்தி, பிரதிட்டை, பூர்வகருமம், சற்கருமம், மெஞ்ஞானம், கருணை, வேளாண்மை யென்பதாம்.

பத்திரபதை— இரேவதி, உத்திரட்டாதி.

பத்திரம்—அதிட்டம். பத்திரவாகரணம்.

பத்திரயோகம்—ஒரு நல்லயோகம், அது சந்திரனுக்கு ஒன்பதில் குருவும், இலக்கினத்துக்கொன்பதில் சுக்கிரனும் நிற்பதாம்.

(2) இராகு, கேது, சூரியன், சந்திரன் இவர்கள் நீங்கிய குசாதி பஞ்சக்கோள்கள் ஆச்சியிலாவது, உச்சத்திலாவது கேந்திரித்து நிற்பதாம்.

பத்திரவாகரணம்—விட்டிக்கரணம்.

பத்திராசுவம்--நவகண்டத்தொன்று.

பத்திரை— துதிகை, சத்தமி, துவாதசி, கோழிக்கரணம்.

பத்மயோகம் — ஒரு நல்லயோகம். அது நான்கு கேந்திரங்களிலும், சுபரும் பாவருங்கலந்திருப்பதாம்.

பந்தன்—புதன்.

பந்துத்தானம்—நாலாமிடம்.

பபதி—சந்திரன்.

பம்—கிரகம், நட்சத்திரம்.

பயநாள்—திருவாதிரை, ஆயிலியம், கேட்டை, மூலம்.

பயறு—சித்திரை நட்சத்திரம்.

பயானகம்—இராகு.

பயித்தியகாரன்—சூரியன்.

பாக்குமிராசி—மகரம், மீனம்.

பரணம்—பரணி.

பரணிநட்சத்திரம்—அடுப்பு, காடுகிழவன், சோறு, தருமநாள், தாசி, தாழி, பகலவன், பாகு, பூதம், போதம், முக்கூட்டு.

பரணிநாள்—பரணிநட்சத்திரம்.

பரதகண்டம்--நவகண்டத்தொன்று.

பரதம்—இலட்சங்கோடி, கோடாகோடி, நவகண்டத்தொன்று.

பரமநாழிகை—முற்றுமுள்ள நாழிகை.

பரமாணு—காலநுட்பம்.

பரமானந்தயோகம்—ஒரு நல்லயோகம். அது இலக்கினந்திரமாகவும், எழு, ஐந்து, பதினொன்று இவைகளில் சூரியன், சந்திரன், சனி இவர்கள் தனித்தனியே நின்று குருஉச்சம் பெற்றிருப்பதாம்.

பராகம்—கிரணம், மற்றைநாள்.

பராக்கிரமகாரகன்—செவ்வாய்.

பராக்கிரமத்தானம்—மூன்றாமிடம்.

பராசரியம் — சிற்பநூல் முப்பத்திரண்டினொன்று.

பரார்த்தம்—எண் வகுப்பினொன்று, அது ஆயிரங்கோடி, கோடாகோடி.

பராபவ—நாற்பதாவது வருடம்.

பராபவவருடப்பலன் — முன்மழையில்லை, பின்மழையுண்டு, பசுக்கள் விருத்தியடையும், கரும்புகள் முதலியனவும், மற்றும் நால்வகைப்பொருளுங்குறையும், எல்

லாப் பிராணிகளுக்குங்கஷ்டமுமுண்டாம்.

உதாரணம்;—மிக்க பராபவத்தில் மேதினியிற் பின்மழையாம், தக்க பசுக்க டழைக்குமே-இக்குப், பலிக்காது நான்குவகைப் பல்லுயிர்க்கு மின்பங், கலிக்கா தெனவே கருது. (இடைக்காடர்)

பராயணம்—இராசி மண்டலம்.

பரார்த்தம்—எண்வகுப்பினொன்று.

பரி—அசுபதி, அச்சுவினி.

பரிகம்—நித்தியயோகத்தொன்று.

பரிணயம்—கடைப்பிராயம், கலியாணம், முதிர்வு.

பரிதாவி—நாற்பத்தாறுவதாண்டு.

பரிதாவிவருடப்பலன்—சொற்பமழையுண்டு. பருத்தி, உப்பு, ஆமணக்கு முதலியன குறையும் ஆகிலும் தானியவிளைவும் பொன் முதலிய திரவியவிருத்தியும், எல்லாச் சீவவர்க்கங்களுக்குஞ் சுகமுமுண்டாம்.

உதாரணம்;—சொன்னபரி தாவிதனிற் றொல்லுலகில் மாரிகொஞ்சம், பொன்னே விளைவுளதாம் பூதலத்தில்-பன்னும், பருத்தியுப்போ டாமணக்குப் பாரிற் குறையும், வருத்தமற வேயுயிர்வாழும். (இடைக்காடர்)

பரிதி—சூரியன், வட்டம்.

பரிதிமண்டலம்—சூரியமண்டலம்.

பரிவருத்தம்—உலகமுடிவு, சதுர்யுகமுடிவு.

பரிவருத்தனம், டரிவர்த்தனம் — சுற்று, கிரகங்கள் வீடுமாறி நிற்றல், பிரபவமுதல் அச்சயவரையறுபது வருடங்கொண்ட ஒருசுற்றுமாம்.

பரிவர்த்தனயோகம்—ஒருநல்லயோகம். ஒருவர்வீட்டி லொருவர் மாறி நிற்பதால் வரும் யோகம். இதில் பனிரண்டு, ஆறு, எட்டு இவ்வதிபர்களாலுண்டாகும் யோகம் மூப்பது. மூன்றுமதிபனல் வரும் யோகம் எட்டு. ஒன்று, இரண்டு, நாலு, ஐந்து, ஏழு, ஒன்பது, பத்து இவ்வதிபர்களாலுண்டாகும் யோகம் இருபத்தெட்டு. ஆகமொத்தம் அறுபத்தாறு வகையாகும். விபரம்:-தைந்யயோகம், கலயோகம், மகாயோகம் இவைகளிற் காண்க.

பரிவற்சரம்—வருடம்.

பரிவிருத்தம், பரிவிருத்தி — கிரகச்சுற்று, முடிவு, முழுவட்டம், பிரபவ வருடமுதல் அட்சய வருடம்வரையறுபது வருடங்கொண்ட ஒரு சுற்று. விபரம்;-சாலிவாகன சகாப்தத்திற் காண்க.

பரிவேசம், பரிவேடம் — சந்திரசூரியரைச் சூழத் தோன்றும் வட்டம். ஊர்க்கோள்.

பரிவேடக்குறி — மழைக்குறியினொன்று. அது ஆடிமாதம் பூரணையின் முதல் பத்து நாழிகையில் சந்திரனைப் பரிவேடமிட்டால் ஐப்பசி மாதத்தில் மழையுண்டென்றும்,

இரண்டாம் பத்து நாழிகையிற் பரிவேடமிட்டால் கார்த்திகையில் மழையுண்டென்றும், மூன்றும் பத்து நாழிகையில் பரிவேடமிட்டால் மார்கழியில் மழையுண்டென்றும், இரவில் பரிவேடமிட்டிருந்தால், இந்த மூன்று மாதங்களிலும் மழையுண்டென்றும் சொல்லப்படும். சந்திரன், குரு, சுக்கிரனிவர்களுடன் பரிவேடமிட்டிருந்தால் நல்ல மழையுண்டென்றும், செவ்வாய், சனி இவர்களுடன் பரிவேடமிட்டிருந்தால் மழையில்லை யென்றும், கிரகணகாலத்தில் பரிவேடமுண்டானல் இராசாக்களுக்கு ஆகாதென்றுஞ் சொல்லப்படும்.

பரீகம்—நித்தியயோகத்தொன்று.

பரீதாவி—நாற்பத்தாறுவதுவருடம்.

பருதி—பரிதி.

பருவகாலம்—ஏற்றகாலம். அது ஆறு பருவகாலம். விபரம்:-கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதிர்வேனில். இவை முறையே ஆவணி முதல் இரண்டிரண்டு மாதங்களாகக் கொள்க.

பருவசந்தி — அமாவாசை, பூரணை இவைகளின் கடையும் பிரதமை முதலும் பொருந்தும் சந்தி.

பருவமழை—காலமழை.

பருவமாதல்—இருதுவாதல்.

பருவம்—அமாவாசை, இருதுகாலம், பருவகாலம், பூரணை, பெருநாள், பொழுது, வயது.

பருவதயோகம்—ஒரு நல்லயோகம். அது இலக்கினுதிபன், ஏழுக்குடையவன் ஆகியவர்கள் கேந்திர திரிகோணங்களில் ஆட்சியுச்சம் பெற்று நின்றாலும்,

(2) இலக்கினுதிபன் விரையாதிபன் ஆகிய இவர்கள் நட்புவீட்டில் கேந்திரம் பெற்று நட்புக் கிரகங்களாற் பார்வைபெற்று நின்றாலும்,

(3) தனுதிபன் இலாபாதிபன் ஆகியவர்கள் உச்சம்பெற்று நின்றாலும்,

(4) ஏழில் சுடக்கிரகமிருக்க எட்டிற் பாவக்கிரகமிருக்க, இலாபாதிபன் பாபருடனே கூடி நின்றாலும் இவ்யோகமாம்.

பலகாற்கிரகம், பலகாற்கோள் } சந்திரன், இருபாம்புகளுமாம்.

பலகால்ராசி—கடகம், விருச்சிகம்.

பலசதம்—பலநூறு.

பலதீபிகை — பலபாகஞ்சொல்லும் ஓர் சோதிட நூல். அது மந்திரேசமுனிவரால் வடமொழியிற் செய்யப்பெற்று பின் தமிழில் வெளியிடப்பெற்றது.

பலபை—சூரியன் மையவரியில் நிற்கையில் கடிகாரமத்தியில் வீழும் நிழல்.

பலமுகம்—பலதிசை.

பல்லிக்காதல், பல்லிசாஸ்திரம் } கெவுளிநூல். விபரம்;—ஒவ்வொரு தினத்துக்குமுரிய பல்லியின் அடையாளம்.

பல்லிசாஸ்திரம்.

ஞாயிறில்—சிவந்த வர்ணமுள்ளதாயும் முதுகில் வரிரேகையுள்ளதாயுமுள்ள பல்லி ஆகாரங்கொள்ளுதலிலிருந்து ஒலிக்கும்.

திங்களில்-முதுகில்பத்துரேகையுள்ள இரண்டு பல்லிகள் ஆண் ஒன்றும் பெண்ணொன்றுமாகஆகாரங்கொள்ளத் திரிவதிலிருந்து ஒலிக்கும்.

செவ்வாயில்-சாம்பல் வர்ணமும் எட்டுரேகையுமுள்ள பெண் பல்லியும், நீலவர்ணமுள்ள ஆண் பல்லியும் ஆகாரங்கொள்ளத் தெற்கு முகமாகவிருந்து ஒலிக்கும்.

புதனில்- பொன்னிறமுள்ளதும் முதுகில் ஆறுவரி ரேகையுள்ளதுமான ஆண்பல்லி வடக்கு முகமாய்ப் பெண் பல்லியோடு ஆகாரங்கொள்ளவிருக்கும்.

வியாழனில் - ஆண்பல்லி நீலவர்ணங்கொண்ட பெண் பல்லியோடு ஆகாரங்கொள்ள விருக்கும் போது ஒலிக்கும்.

வெள்ளியில்-முதுகின் முற்பக்கத்தில் மூன்றுவரியுடைய பலநிறமுள்ள ஆண்பல்லி ஆகாரமதிகமாய்ச் சாப்பிட்டுப் பின் நித்திரைபோ யெழுந்திருக்கும்போது ஒலிக்கும்.

சனியில்-ஆகாரமில்லாமல் கறுப்பு நிறமுள்ள ஆண்பல்லி பெண் பல்லியோடு துக்கமுற்றுக்கொண்டிருக்கும்போது ஒலிக்கும்.

பல்லிசாஸ்திரம்.

## 2-பல்லிசொல்லும் பலன் விபரம்.

முதலில் பல்லி யொலிக்குஞ் சப்தமானது எந்தத்திசைஅல்லது கோணத்தினின்றும் வந்ததென்று திட்டமாய்க் கவனிக்கவேண்டும். அப்படிக் கவனித்தபின் திசை அல்லது கோணத்தை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, அத்தினம் ஒரு வாரத்துக்குள்ள ஏழு தினங்களில் எந்தக்கிழமை யென்றறிந்து இதன்கீழ் கிழமைப் பாராவில் விவரித்திருக்கும் பல்லி சப்தித்த திசையைக் குறிப்பிக்கும் இலக்கத்தை திசைகோண விபரத்திற்கண்டுகொண்டு அவ்விலக்கத்திற்கு நேரே அத்தினத்திலென்ன பலன் கூறப்பட்டிருக்கிறதோ அதுவே நமக்குரியபலனாகும். அப்பலனும் அங்குள்ளார் பலருக்கும் பொதுவாயும் பல்லியின் சப்தத்தைக் கவனித்த ஒருவருக்கே சிறப்பாயு மிருக்கினுமிருக்கும்.

## 3-திசைகோணமிவைகளின் விபரம்.

(1) வடக்கு, (2) வடக்கிற்கும் வடகிழக்கிற்கு மிடையிலுள்ள கோணம், (3) வடகிழக்கு, (4) வடகிழக்கிற்கும் கிழக்குக்குமிடையிலுள்ள கோணம், (5) கிழக்கு,

(6) கிழக்கிற்குந் தென்கிழக்கிற்கு மிடையிலுள்ள கோணம், (7) தென்கிழக்கு, (8) தென்கிழக்கிற் குந் தெற்குக்கு மிடையிலுள்ள கோணம், (9) தெற்கு, (10)தெற் குக்குந் தென்மேற்குக்கு மிடை யிலுள்ள கோணம், (11) தென் மேற்கு, (12) தென்மேற்கிற்கும் மேற்கிற்கு மிடையிலுள்ள கோ ணம், (13) மேற்கு, (14) மேற் கிற்கும் வடமேற்கிற்கு மிடையி லுள்ள கோணம், (15) வடமேற் கு, (16) வடமேற்கிற்கும் வடக் கிற்கு மிடையிலுள்ள கோணம், (17) ஆகாயம், (18) பூமி.

(4) மேற்படி பல்லியின் கிறம், செயல் ஆகியவைகளையும் திசை கள், கோணங்கள், ஆகாயம், பூமி ஆகிய இவைகளையும் கீழ்க்கண்ட ஒவ்வொரு கிழமையிலும் குறிப் பிட்டுள்ள பதினெட்டு இலக்கங் (நம்பர்)களையும் ஞாபகத்தில்வைத் து குறிப்பிட்ட கிழமையில் பல்லி ஒலிக்குந் திசையையும் அதற்குரிய இலக்கத்தையும் கவனித்து அந்த லக்கத்திற்கு நேரே அத்தினத்தி லென்ன பலன் கூறப்பட்டிருக் கிறதோ அதுவே நமக்குரிய பல னகக் கொள்ளவேண்டும்.

ஞாயிறு.

1 (மேஷம்) தனலாபம், 2 பரி மளசுகந்தம், 3 (சுக்கிரன்) ஒலே வரும், 4 உறவினர் வருவாங்கள், 5 பயணமுண்டு,6 கெடுவார்த்தை, 7 (கேது) சாவு,8 கலகம்,9 (செவ் வாய்) ராஜகலகம், 10 காரியமா காது, 11 (புதன்) உற்றவர் வரவு, 12 சோபனவார்த்தை, 13 (சனி) கலசம், 14 கெடுவார்த்தை, 15 (இந்திரன்) உண்ணும் வஸ்து வரும், 16 பூமிலாபம், 17 (சூரி யன்) வெகுமனஸ்தாபம் 18 (தே வேந்திரன்) காரியசித்தி.

திங்கள்.

1-(புதன்)வஸ்திராபரணம்வரும், 2-வெற்றியுண்டாம்,3-(சுக்கிரன்) பயிர்விருத்தி, 4-தள்ளாவார்த்தை, 5-(மேஷம்) தனலாபம், 6-பிர பல வார்த்தை, உறவினர்வரவு, 7-அக்கினிகலகம், 8-சொல்லாத வார்த்தை வரும், 9-(ராகு) பகை யாளி வருவான், 10-பொல்லாத வார்த்தை,காரியமாகாது,11-(சூரி யன்) சாவு, 12-கலகம்' 13-(சந் திரன்) ராஜாவினால் சந்தோசம், 14-உற்றூருறவு,15-(கேது) சாவு. 16-பகையாளிவரவு, 17 - (ராகு) பொல்லாத வார்த்தை, 18-(சந்தி ரன்) சகல சம்பத்து.

செவ்வாய்,

1-(ராகு)அக்கினிபயம், 2-கெடு வார்த்தை, 3-காலுகாற் பிராணி வரும், 4-நல்ல பெண்வார்த்தை, 5-(இந்திரன்) புத்திரசம்பத்து, 6-நல்லவார்த்தை, 7-(சுக்கிரன்) உற்றூர்வரவு,8-சுதேசத்தார்வரவு,

## பல்லிசாஸ்திரம்.

9-(கேது) சாவு, 10-அதிகப்பயம், வியாதி, 11-(ராகு) பகைவனுற் பயம், 12-இராஜகலகம், 13-(சூரியன்) காரியம் வெகு விஸ்தாரம், 14-பொருள்போம், 15-தூரதேச வுற்ருர்வரவு, 16-நல்லவார்த்தை, 17-(சூரியன்)இதரபயம், 18-(மேஷம்) தனலாபம்.

### புதன்.

1-(சுக்கிரன்) சுகம், 2-மற்றவருக்குப் புத்திசொல்லுங் காரியம், 3-(சூரியன்) கினைத்தகாரியஞ் சோர்வு, 4-மனேவிகாரியம், 5-(இந்திரன்) சருவகாரியசெயம், 6-தேங்காய் பழம் உண்ணும் வஸ்து வரும், 7-(மேஷபதி) சம்பத்து, 8-நல்லவார்த்தை, 9-(சந்திரன்) சந்தோஷவார்த்தை, 10-சாவுபயம், 11-(ராகு) உற்ருர் வரவு, பொல்லாதகாரியம்,12-கள்ளர் பயம், 13-(கேது) அதிகப்பயமுண்டு, 14-(அக்கினி) பொருள் நாசம், 15-(அக்கினி) பொருள் நாசம், 16-அக்கினிபயம், 17-சனி,பிறரால்சாவுவார்த்தைவரும், 18-உற்ருர் உண்ணும் வஸ்து வரும்.

### வியாழன்.

1-கலகக்காரியம், வியாதி. 2-பொல்லாத வார்த்தை, 3-(சுக்கிரன) நல்லபெண்வரும், 4-பலபல துன்பம், மனஸ்தாபம், 5-(ராகு) மரணவார்த்தை, 6-கள்ளர் பயம், 7-(புதன்) உற்ருர்வரவு, 8-சந்தோஷவார்த்தை, 9-(மேஷபதி) தனலாபம், 10-(அக்கினி) கள்ளர்பயம்,11-(சந்திரன்) நாடிய பொருள் கைகூடும்,12-சந்தோஷவார்த்தை,13-(அங்காரகன்)மரணவார்த்தை, 14-அக்கினிபயம்,15-(இந்திரன்) கலியாணவார்த்தை, 16-பெண்வரத்து, 17-(சனி) கலகம், கள்ளர்பயம், 18-(கேது) பொல்லாதகாரியம்.

### வெள்ளி.

1-(சனி) துக்கம், 2-கூக்குரல் கேட்கும், 3-(சூரியன்) பகையாளியால் அதிகபயம், 4-ராஜபயம், 5-புதிய நல்லவார்த்தை, 6-பரிமள சுகந்தம், 7-(கேது) உறவின் முறையார் உற்ருர்க்குப் பொல்லாத வார்த்தை, 8-அக்கினிபயம், 9-(புதன்) உற்ருர் சிநேகிதர்வரவு, 10-வஸ்திராபரணம் வரவு, 11-(மேஷம்) வெகுமதி, 12-தூரத்திலுள்ள பகைவரால் நன்மை, 13-(சந்திரன்) சந்தோசமாய்ப் பணம் வரவு, 14-தூரப்பயணம், 15-(இந்திரன்) சோபனவார்த்தை, 16-நல்ல செய்தியுள்ள ஓலே, 17-(சுக்கிரன்) உடையால் மேன்மை, 18-(எமன்) சாவு, குற்றம்.

### சனி.

1-(கேது) கெடுவார்த்தை, 2-சண்டையினுலே குடிபோவான், 3-(சனி) அதிகக் கேடுவார்த்தை,

## பல்லிசாஸ்திரம்.

4-ஐசுவரியம், 5-மிடி, ராசகலகம், பொல்லாதவார்த்தை, 6-பித்தம், சாவு, 7-(சந்திரன்) நல்லபோசனம், சுகந்தம், 8-தள்ளாதவார்த்தை, 9-(சுக்கிரன்) ராஜாவிடத்திற் காரியம், 10-காய்பழம்வரவு, 11-(அங்காரகன்) கிரூபம், ரொக்கம் வரவு, 12-வெளிப்பயணம், 13-(வியாழன்) புதுவஸ்திரம், 14-உறவின்முறை வரவு, 15-(இந்திரன்) குருச்சந்திரலாபம், 16-பிரியமான வஸ்துவரும், 17-(இந்திரன்) நினைத்தகாரியம் நலம், (18-சுக்கிரன்) சுகவார்த்தை.

மற்றொருவிதம் பதினாறு திக்கிலும்அருக்கன் எத்திக்கிலிருக்கின்றானென்று தெரிந்து அதிலிருந்து பதினாறுதிக்குக்கும் முறையே பின்வரு மிரண்டு கவியாலறியவும்.

விபரம்:- அருக்கன்மேற் பயநாசமிரண்டிற் சாவு, அகன்றவர்பின் மீண்டிடுவார் மூன்றே யாகில், உருக்கமுள்ள சாவதனைக் கேட்கநாலு, ஒருசண்டை யுண்டடைந்தா முறவா மாறு, விரிதலையு மழுகுரலு மழையு நோயு, மேன்மேலுந் துக்கமுண் டாகு மேழு, தரித்திடும்பூச் சந்தனமு மணமுங் கொண்டு, தகுதியுள்ளோர் கூடிவாலாகு மெட்டே.

சித்தமிக மகிழ்ச்சியுண்டாம் நாலோ டைந்து, தீதாக வேயுரைக்சத் தெரியும் பத்து, அத்தமிசை யாத்திரைகா ணாறே டைந்து, அகமகிழ்ச்சி கலியாண மாறே டாறு, பத்திவருங் காணிக்கை பதின்மூன் றாக்கு, பரந்துவரு மிழவோலை பதினா லுக்கு, மெத்தவரு முறவின்முறை யே ழு மெட்டு, மேன்மேலும் யோகமுண்டா மீரெட் டிற்கே.

## பல்லிவிழும் பலன்.

பல்லிலான் } சூரியன்.
பல்லிவி }

பல்லிவிழும் பலன் — விபரம்;-சிரசு நடுவில் பிதாமாதா பீடை, சிரசின் வலதுபுறம் சேஷ்டசகோதர பீடை, இடைப்பாரிசங் கனிஷ்ட சகோதர பீடை, பிடரியில் மாதுல பீடை, நெற்றியில் தனவிருத்தி, நேத்திரம் மூக்கு காது முகமிவைகளில் பீடை, காதுப்புறங்களில் சகோதரபீடை, பசுப்பீடை, புஜங்களில் ஸ்திரீபீடை, மார்பு சரீர பீடை, இடது கையில் அபமிருத்தியுபயம், வலது கையில் அபமிருத்தியுபயம், மாதாபீடை, வலதுகைவிரல்களில் இராஜதெரிசனம், இடதுகைவிரல்களில் ஞாதிநாசம், வயிற்றினில் தானியநாசம், இடுப்பில் வஸ்திரநாசம், முதுகில் தனநாசம், பின்தட்டில் அதிக தனலாபம், வலதுதொடையில் புத்திரபீடை, இடது தொடையில்புத்திரபீடை, முழங்கால்களில் பொருட்செலவு, பாதங்களில் விலங்கு, நகங்களில் பந்தனம், இடது

பவவருடப்பலன். பனிரண்டாமிடக் காரகப்பெயர்.

கட்டைவிரலில் இராஜபயம், வலது கட்டை விரலில் பந்தனம், கால்விரல்களில் விவாதங்கள், உள்ளங்கை உள்ளங்கால்களில் ஐசுவரிய விருத்தியாம். மேற்சொல்லிய அவயவங்களில் ஆரோகணமாக விழுந்தால் அசுப பலனும் சுபமாயிருக்கும். அவரோகணமாக விழுந்தால் தோசபலன் மிதோசமாகவும், குணபலன் குணமாகவும் பலிக்கும். திங்கள், புதன், வியாழன், வெள்ளி இவ்வாரங்களில் விழுந்தால் அசுப பலனுக்கு அதற்குப்பரிகாரம் ஸ்நானஞ் செய்யவும். ஞாயிறு, செவ்வாய், சனி வாரங்களில் விழுந்தாற் கடவுளை வணங்கவும் வேண்டும்.

பல்லுத்தானம்—இரண்டாமிடம்.

பவ—எட்டாவது வருடம்.

பவம்—சிங்கக்காணம், பலன், பாவம், பிறப்பு.

பவாணை—பூரணை.

பவவருடப்பலன்—நாட்டுக்கு வேண்டிய எல்லா நன்மையும், அதிக மழையுமுண்டாம், சனங்கள் சந்தோசமாக விருப்பர், இருந்தபோதிலும் வெப்பத்தால் அக்கினியால் மனிதர்களுக்குப் பீடையும், பிள்ளைப் பிறப்பும், தாய்மார்களுக்கு மரணபீடைகளு மூண்டாம்.

உதாரணம்;—பவவருடந் தோன்றிற் பரிவார மோங்குந், தவமிகுதி யாகுந் தலத்தில்-நவமதிகம், பெய்யுமழை தானதிகம் பிள்ளை பெறு மாதர்தாம், ஐய மடிவ ரறி.

(இடைக்காடர்)

பவனம்—இடம், இராசி, பொழுது.

பவனுசம்—பாம்பு.

பவிடியம், பவுசியம், பவுடியம்—எதிர்காலம், வருங்காலம்.

பவுரணமி, பவுரணை, பவ்வம்—பௌரணை.

பழிங்கு, பளிங்கி—சுக்கிரன்.

பறக்குமிராசி—மகரம், மீனம். இது மேற்பார்வையுள்ளது.

பறப்பன—விருச்சிகராசி.

பறவை—அவிட்டநாள்.

பற்கன்—சூரியன்.

பற்குனி — உத்திரநட்சத்திரம், பங்குனி.

பற்பறிகொடுத்தோன், பற்பரீகம்—சூரியன்.

பனிகாலம்—மார்கழிமுதலியநான்கு மாதங்களுமாம்.

பனிக்கதிர்—சந்திரன்.

பனிப்பகை—சூரியன்.

பனிமகன்—புதன்.

பனிரண்டாமிடக் காரகப்பெயர் — சீவனம், வேள்வி, வியாச்சியக் கவலை, சன்னியாசம், சுகக்கேடு, ஊழ், தனநட்டம், தேசாந்திரம், சாவு, துர்ச்சேர்க்கை, செலவு, மோட்சம், தியாகம், சயனம், அழிவு, பதவி, சிவயோகம், சமாதி, இடதுகண் என்பதாம்.

பாசயோகம். பாதச்சனி.

பனை—அனுடநட்சத்திரம்.

பன்றிக்கரணம்—கவுலவகரணம்.

பன்னணம்—பன்னுங்கு.

பன்னிருசூரியர் — துவாதசாதித்தரைக்காண்க.

பன்னிருலக்கினம் — துவாதசலக்கினத்தைப் பார்க்க.

## பா

பாககம்—பிரிக்குந்தொகை.

பாகம்—ஓர் கணிதம், பங்கு, பாகை, பாதி.

பாகனம்—ஒருவருடம்.

பாகன்—புதன்.

பாகாரம்— கணிதமுறையினென்று. அது பங்கிடல்.

பாகு—பங்கு, பரணி நட்சத்திரம்.

பாகுலம்—கார்த்திகைமாதம்.

பாகை—பகுதி, வட்டத்தின் முன்னூற்றறுபதி லொருபங்கு.

பாகோடன்—சூரியன்.

பாக்கியத்தானம்—ஒன்பதாமிடம்.

பாக்கிய[illegible], [illegible], செல்வம், தனம், பேறு, ஒன்பதாமிடம்.

பாக்கியலட்சுமி — அட்டலட்சுமியினொன்று.

பாசகன்—போதனைக் காண்க.

பாசகாதிபர்திசை — வேதகாதிபர்திசையிற் காண்க.

பாசம்—ஓரளவைப் பிரமாணம்.

பாசயோகம்—ஒருநல்லயோகம். அது மூன்றுதிபன் ஒன்பதாமிடத்திலும், எட்டாமிடத்திற் சுக்கிரனும், ஆறுமிடத்திற் சுபக்கிரகமுமிருந்தாலும்,

(2) ஐந்து ராசியில் இராகு கேது நீங்கிய சூரியனுதி எழுவர் நின்றாலும் இவ்யோகமாம்.

பாச்சல்—எழுச்சி, பாய்தல்.

பாச்சியம் — பங்கு, பிரிக்கப்படுந்தொகை.

பாடவள்
பாடவன் } மிதுனவிராசி.
பாடவை

பாடாவாரி நட்சத்திரம்—கெட்ட நட்சத்திரம். அது திருவோணம், பரணி, சதயம், கேட்டை, சோதி, விசாகம், அனுசம். அன்றியும் அசுபதி, மூலமுமாம்.

பாடு—இலக்கினத்திற் கேழாமிடம்.

பாட்டியமீ
பாட்டியம் } பிரதமை.

பாணி—காலம், பருவம், பொழுது.

பாண்டவாப்தம்— பாண்டவர்களரசு பூண்ட வருடம். அது கலியுகாரம்பத்திற்குச்சிறிதுகாலமுந்தியதாம்.

பாண்டில்—இடபவிராசி.

பாண்டுரோககாரகன்—இராகு.

பாதங்கி—சனி.

பாதசாரம்—நவக்கோள்கள் நட்சத்திர பாதங்களில் அன்றன்று நிற்கும் நிலை.

பாதச்சனி--வாக்குத்தானத்துச்சனி. அது இலக்கினத்திற்காவது, அல்லது சந்திர லக்கினத்துக்காவது இரண்டாமிடத்தில் நிற்கும் சனி.

பாதம்—கால், கிரணம், நாலிலொரு பங்கு, வட்டத்திஞன்கிஞென்று, வைகறை.

பாதலம் — சூரியனிற்கு மிராசிக்கு நாலாமிராசி.

பாதன்—சூரியன்.

பாதாரம்—கிரணம்.

பாதார்த்தம்—எட்டிலொருபங்கு.

பாதாளகிரணம்—காணுக்கிரகணம்.

பாதாளயோகம்—ஒரு நல்லயோகம். சுக்கிரன் வியாழனேடுகூட விரையாதிபன் உச்சனுகி, பாக்கியாதிபனுடன் கூடி நிற்றலாம்.

பாதிமதி—அர்த்தசந்திரன்.

பாதிமம்—நான்கிஞென்று.

பாதியிரா, பாதியிராத்திரி—அர்த்தசாமம், நள்ளிரவு.

பாது—சூரியன், பங்கு.

பாதேயம்—கன்னியாவிராசி.

பாத்திரபதம்—இரேவதி, உத்திரட்டாதி, புரட்டாசிமாதம்.

பாத்திரம்—புரட்டாசி.

பாத்து—நான்கு, பங்கு, பாதி.

பாத்துப்புலு—நாற்பது.

பாத்துமகற்பம்—பிரமனது ஆயுட்காலத்தின் முற்பாதி, வராககற்பமென்பதுமாம்.

பாநாள்—அத்தசாமம், பாதிநாள், மத்தியானம்,

பாநுவிதியை—சித்திரைமாதம்ஞாயிற்றுக்கிழமையில் வரும் இரண்டாந்திதி. இது சூரியனை நோக்கிச் செய்யும் விரதநாள்.

பாநேமி—சூரியன்.

பாபக்கிரகம்—இராகு, கேது, சனி, செவ்வாய், சூரியன், தேய்மதியுமாம்.

பாமன்—சூரியன்.

பாம்பு—ஆயிலியநாள், இராகு, கேதுக்களின் பொதுப்பெயர்.

பாரதகண்டம் — நவகண்டத்தொன்று.

பாரதவருடம்—பரதகண்டம்.

பாராசாரி—சுக்கிரன்.

பாராசாரியம்—பராசரியம் இது பாராசரராற்செய்யப்பட்ட ஓர் சோதிடநூல்.

பாரிசம்—திசை, பக்கம்.

பாரிசக்கிரணம்—பக்கக்கிரகணம்.

பாரு—சூரியன்.

பார்—உரோகணிநாள்.

பார்க்கரன்—சூரியன்.

பார்க்கவன்—சுக்கிரன்.

பார்க்கன்—சூரியன்.

பார்க்குணம்—பாற்குணம்.

பார்த்திப, பார்த்திவ—பத்தொன்பதாவது வருடம்.

பார்த்திவவருடப்பலன்—சிங்களதேசத்தாருக்குக் கெடுதியும், நம்முடைய அரசருக்கு நன்மையும், அனியாயஞ் செய்யும் வேற்றரசர்கட்கு நாசமும்,எங்கும் நல்லமழையும்,வேளாண்மைப் பலிதமுமுண்டாம்.

உதாரணம்;—தேச மிசைபார்த்திபவருடஞ் சிங்களத்தார், தேசங்

கெடுமனந்த தேசத்து-ராசர், அனியாயஞ் செய்வர் அதமேறு மாரி, இனிதாம் விளைவுமுள தே.

(இடைக்காடர்)

பார்த்தீப—பார்த்திபவருடம்.

பார்வணம்—பூரணை.

பார்வணன்—சந்திரன்.

பார்வை—கண்ணோட்டம், நோக்கு.

பாலக்கிரகதோசம் — குழந்தைகளுக்கு வரும் பாலாரிட்ட தோசங்கள். அது கந்தம்,விசாகம்,மேடம், ஸ்வானம், பிதுர் என்னும் ஐந்து ஆண் கிரகங்களும், சகுனி, பூதனை, சீதபூதனை, அதிட்டிபூதனை, முகமண்டலிகா, ரேவதி, சுட்கரேவதி என்னும் ஏழு பெண் கிரகங்களும் குழந்தைகள் அசுத்தமாதர்கள் பாலைக்குடித்த காலத்தும் மலசலத்தால் அசுத்தமாகக் கிடக்குங் காலத்தும், நித்திரா நித்திரை காலத்தும், பருவகாலத்தும், வருடமாதஞ் சந்திகாலத்தும், பட்சி, பூனை, ஆந்தை, கரடி முதலியவைகளைப்போல் மேற்படி கிரகங்களின் தோசம் பற்றி நிற்குமாம்.

இவையன்றி — நந்தனை, சுகந்தனை, முகமண்டலிகா, பிடாலிகா, சகுனி, சுட்கரேவதி, அந்நியவோடலிகா, மதபேதனை, ரேவதி,அர்ச்சகா, அற்புதா முதலியனவாகவுமுண்டாம்.

பாலசந்திரன்—பிறைச்சந்திரன்.

பாலசூரியன்—உதயாதித்தன்.

பாலவம்—கரணம் பதினொன்றினொன்று. அது புலிக்கரணம்.

பாலன்—ஏழுவயதுக்குட்பட்டவன்.

பாலாரிட்டம்--பாலக்கிரகதோசத்தாலும் நவக்கிரக தோசத்தாலும் வரும் அரிட்ட தோசங்கள்.

விபரம்;-(1) இலக்கினத்தில் சனியும், நாலாமிடத்தில் செவ்வாயும், ஏழாமிடத்தில் சூரியனு மிருந்தாலும்,

(2) இலக்கினத்தில் இராகுகேதுக்களும், நாலில் செவ்வாயும், ஏழில் சூரியனும் இருந்தாலும்,

(3) இலக்கினத்தில் அல்லது ஏழு, எட்டு, பனிரண்டு ஆகிய இவ்விடங்களில் அமரபக்கத்துச் சந்திரன் பாவிகளுடன் கூடி நின்றாலும்,

(4) இலக்கினத்துக்கு ஏழாமிடத்தில் செவ்வாயும்,எட்டாமிடத்தில் சூரியனும் இருந்தாலும்,

(5) இலக்கினத்தில் சூரியன் சனி கூடியிருக்க செவ்வாய் பார்த்தாலும்,

(6) இலக்கினத்துக்கு ஏழாமிடத்தில் செவ்வாய், சுக்கிரன், சனி இருந்தாலும்,

(7) இலக்கினத்துக்கு ஏழு, எட்டாமிடங்களில் செவ்வாய் சனி இருந்தாலும்,

(8) இலக்கினத்துக்கு நாலாமிடத்தில் செவ்வாயும், எட்டாமிடத்

தில் ராகுவும், பனிரண்டாமிடத்தில் சனியும் இருந்தாலும்,

(9) இலக்கினத்துக்கு எட்டு, ஒன்பது, பனிரண்டாமிடங்களில், சூரியன் தேய்பிறைச் சந்திரன், செவ்வாய், சனி ஆகிய இவர்கள் இருந்தாலும்,

(10) இலக்கினத்துக்கு நாலு, எட்டு ஆகிய இடங்களில் பாபக் கிரகங்களிருந்தாலும்,

(11) இலக்கினத்துக்கு ஐந்து, எட்டு, ஒன்பது, பனிரண்டு ஆகிய இவ்விடங்களில் சூரியன் அமா பட்சத்துச் சந்திரன் இவர்கள்கூடியாவது தனித்தனியாகவாவது இருந்தாலும்,

(12) இலக்கினத்துக்கு ஆறு,ஏழு, எட்டு, பனிரண்டு ஆகிய இவ்விடங்களில் தேய்பிறைச் சந்திரன் பாவர்களுடன் கூடியிருந்தாலும்,

(13) இலக்கினத்துக்கு ஐந்தில், பத்தில் சனி இருந்தாலுஞ் சிசுவுக்கு அரிஷ்டமாம்.

(14) இலக்கினத்துக்கு ஆறுமிடத்தில் சந்திரனும், அதற்கு ஏழாமிடத்தில் செவ்வாய், சனி ஆகியவர்கள் இருந்தாலும்,

(15) இலக்கினத்தில் சந்திரனும், நாலு, ஏழு, எட்டு ஆகிய இவ்விடங்களில் பாவிகள் இருந்தாலும்,

(16) இலக்கினத்துக்கு இருபுறமும் பாவிகளிருந்தாலும் தாய்க்கும் சிசுவுக்கும் அரிஷ்டமாம்.

(17) இலக்கினத்துக்கு ஆறுமிடத்தில் சூரியனிருக்க, ஏழாமிடத்தில் செவ்வாய் சனி; ஆகிய இவர்கள் இருக்க பிதாவுக்குஞ் சிசுவுக்கும் அரிஷ்டமாம்.

(18) சந்திரன் இலக்கினம் இவைகளில் பாவர்களிருந்தாலும், சிசுவுக்கு அரிட்டமாம்.

முற்கூறிய அரிட்டதோசங்கள் சுபக்கிரகம் இருக்க அல்லது பார்க்க நீங்கும்.

குறிப்பு;— ஒன்றுமுதல் பனிரண்டு வயதுவரை பாலாரிஷ்டம். பதின்மூன்று முதல் இருபது வயதுவரை யெளவன அரிட்டம். இருபத்தொன்று முதல் முப்பத்திரண்டு வயதுவரை கௌமார அரிட்டமாகக் கொள்க.

பாலை—புனர்பூசம், மிருகசீரிடம்.

பால்—திக்கு, பலன், பாதி.

பால்வீதிமண்டலம் — வானுட்சரேகையிற் றேன்றுஞ் சோதிவரி.

பாவம்—அதிட்டஈனம், கெட்டது, பாபம்.

பாவி—தீயோன், பாவக்கிரகம், பாவத்தாணுதிபதி.

பாழ்—ஆகாயம், எட்டாமிடம், நட்டம், மரணம்.

பாறல்—இடபவிராசி.

பாற்கரன் } சூரியன்.
பாஸ்கரன்

பாற்கராசாரி } இவர் ஒரு பிரபல சோதிட நூலார்.
பாஸ்கராசாரி

இவர் செய்த பீசகணிதத்தில் வருக்க சங்கிரண விதியென்று சொல்லப்படுவதாகிய நல்ல கணிதவிதி சொல்லப்பெற்றிருக்கிறது. இவர் சீவிய காலம் சாலியவாகன சகாப்தம் முதல்நூற்றாண்டடுத்திருக்குமென யூகிக்கப்படுகிறது.

பாற்குனம்
பாற்குனி
பாற்குனிக } உத்திரநட்சத்திரம், பங்குனிமாதம்.

பானாள்—அத்தசாமம், மத்தியானம், பாதிநாள்.

பானு—கிரணம், சிற்பநூல் முப்பத்திரண்டினொன்று, சூரியன்.

பானுமைந்தன்—சனி.

பானுவாசரம்
பானுவாரம் } ஞாயிற்றுக்கிழமை.

## பி

பிகானந்தம்—வசந்தகாலம்.

பிங்கலம்—பொன், வடக்கு.

பிங்கலன்—சூரியன்.

பிங்கலை—பிங்களை. அது வலமூக்கின் சரம்.

பிங்கள—ஐம்பத்தோராவதுவருடம்.

பிங்கள வருடப்பலன்—நல்ல மழைபெய்யும், காவேரி முதலிய ஆறுகளில் வெள்ளப்பெருக்குண்டாகி கொங்குநாடு செழிக்கும், இந்தியாவின் தென்பாகம் நல்ல விளைவும் வடபாகத்தில் பஞ்சமுங் கஷ்டமுமுண்டாம்.

உதாரணம்:—பிங்களத்திற் காவேரி யாறு பெருகியே, கொங்குவள நாட்டிற் குடிசெழிக்கும்-மங்களமாய்,தென்பூமி தான்விளையுஞ் சேரும் பொருளோடு, மன்கேட தாம்வடக்கில் மற்று.

(இடைக்காடர்)

பிங்களை—ஆயுட்காலத்தின் மூன்றிலொருபாகம்.

பிணித்தானம்—ஆறாமிடம்.

பிண்டம்—கால்வட்டத்தின் இருபத்துநான்கினொன்று.

பிண்டி—புனர்பூச நட்சத்திரம்.

பிண்டிலன்—சாதககணிதன்.

பிதகம்
பிதி } இடி.

பிதிர்—காலநுட்பம்,நொடி,தந்தை.

பிதிர்காரகன்—சூரியன்.

பிதிர்காலம்—தகப்பனைக்கோரி தகப்பனுக்குநன்றிசெலுத்துங்காலம். இது பதினெட்டு நாழிகை தொடர்ந்து, இருபத்துநாலு நாழிகைவரை யுள்ளதாம்.

பிதிர்த்தானம்—ஒன்பதாமிடம்.

பிதிர்த்தானுதிபதி
பிதிர்த்தானுதிபன் } ஒன்பதுக்குடையவன்.

பிதிர்த்திதி—அமாவாசை.

பிதிர்தைவதம்—மகநட்சத்திரம்.

பிதிர்நாள்—அமாவாசை, இறந்தோர்நாள், மகநட்சத்திரம்.

பிதூர்பதம்—தெற்கு.

பிது
பிதுரம் } இடி.

பித்தக்கிரகம்
பித்தக்கோள் } முப்பிணிக்கோளிலொன்று. அது

இராகு, கேது, சூரியன், செவ்வாய்.

பித்தரோககாரன்—செவ்வாய்.

பிப்பலாதம்—சூரியகிரணம்.

பிம்பகம்
பிம்பம்
பிம்பிகை } சந்திர சூரிய மண்டலம்.

பிரகநேமி—சந்திரன்.

பிரகஸ்பதி
பிரஹஸ்பதி
பிரகற்பதி } வியாழன்.

பிரகாசாத்துமா—சூரியன்.

பிரகிருதி—பஞ்சபூதம்.

பிரகிருத்தானம்—இலக்கினம்.

பிரக்கிரமம்—கிரணம்.

பிரசரம்—இடம், கதி, சமயம்.

பிரசாபதி—சூரியன்.

பிரசினதூதி—நொடி.

பிரசூரன்—சுக்கிரன்.

பிரசோற்பத்தி—ஐந்தாவதுவருடம்.

பிரசோற்பத்திவருடப்பலன்—சென்றவருடங்களில் மனிதர்களுக்குண்டாகிய வறுமையும், துன்பமும், மாறும். எல்லா நாடுகளிலும் நல்ல மழையும், வேளாண்மை மிகுதியும், மனிதர்கள் சுகவாழ்வுடனு மிருப்பர். ஆடுமாடு முதலிய நாற்காலிகளும், பறவைகளும் விருத்தியடையும்.

உதாரணம்;—துய்யபிர சோற்பதியிற் றோன்றுமே நற்காலம்,
பெய்யு மழையதிகம் பேருளவாம்-
வையகத்தில், உள்ள வகைச்சாதி
உயிர்தழைத்து வாழ்ந்திருப்பர்,
கள்ளமில்லை யென்றேநீ காண்.
(இடைக்காடர்)

பிரட்டானம்—திதிவிசேடம்.

பிரதமகாலம்—உதயகாலம், பூருவகாலம், விடியற்காலம்.

பிரதமை—ஒன்று, முதல்திதி.

பிரதிசம்—கோணதிசை.

பிரதிதேவன்—சூரியன், நாள்.

பிரதிவிசம்—இரவோடிரவு.

பிரதீசி
பிரதீசினம் } மேற்கு.

பிரதோசகாலம்—திரயோதசித் திதியிற் பொழுது அத்தமித்தற்கு முன், மூன்றேமுக்கால் நாழிகை தொடங்கி அத்தமித்து, மூன்றேமுக்கால் நாழிகை வரையுள்ள நேரம். அதாவது பொழுதத்தமிப்பதற்கு முன்னும், பின்னும் மூன்றேமுக்கால் நாழிகை. இரவின் முதற்சாமம், இது பகல் இருபத்தாறேகால் நாழிகைக்கு மேல் இரவு முப்பத்திரண்டேகால் நாழிகைவரை திரயோதசி இருக்க வேண்டுமென்பது. இதில் சதுர்த்தசி வியாபித்தால் அமரபக்கத்தில் திரயோதசி தினத்திலும், பூருவபக்கத்தில் துவாதசி தினத்திலும் பிரகாசமாம்.

பிரத்தியக்கு—மேற்கு.

பிரத்தியுசன்
பிரத்தியூசன் } அட்டவசுக்களிலொருவன்.

பிரத்தியோதம்—கிரணம்.

பிரமயோகம். பிரமாயுதம்.

பிரத்தியோதனன்—சூரியன்.

பிரபலானிஷ்டயோகம்—அமிர்தாதி யோகத்திற் காண்க.

பிரபவ—முதல்வருடம்.

பிரபவவருடப்பலன் — நல்ல மழையும் அதனால் விருக்ஷப்பொருள், தானியப்பொருள் ஆகியவைகள் விருத்தியும், பருத்தி உப்பு ஆமணக்கு முதலிய பொருள்களுக்கு கட்டமும், மனிதர்களுக்குத் துன்பமும், மரணமும் உண்டாம்.

உதாரணம்;—ஆதி பிரபவத்தில் அம்புவியின் மானிடர்க்குச், சோதனையாய்ச் சாவுதுன்பந் தோன்றுமே-தீதில, தருப்பொலியு மஃக மிகுந் தான்மாரி யோங்கும், பருத்தியுப்பு மாமணக்கும் பாழ்.

(இடைக்காடர்)

பிரபாகரன்—சந்திரன், சூரியன்.

பிரபாசன் — அட்டவசுக்களிலொருவன்.

பிரபாதசமயம்—விடியற்காலம்.

பிரபாதம்—வைகறை.

பிரபுத்தானம்—ஐந்தாமிடம்.

பிரமதண்டம்—சூரியன் நின்ற நட்சத்திரத்துக்குப் பதினைந்தாம் நட்சத்திரம்.

பிரமம்—சந்திரன், சூரியன், நித்திய யோகத்தொன்று.

பிரமயோகம்--ஒருநல்லயோகம். அது கேந்திர திரிகோணங்களில் குருநிற்க, இலாபம் கேந்திர மிவைகளில் சுக்கிரனிருக்க, அல்லது குரு சுக்கிரன் ஆகிய இவர்கள் இடமாறி நின்றாலுமாம்.

பிரமனாள்—உரோகணி, கற்பகாலம்.

பிரமாணம்—அளவுள்ளவை, எல்லை, பொழுது.

பிரமாதி—பதின்மூன்றாவதுவருடம்.

பிரமாதிவருடப்பலன் — பஞ்சமும், அரசரால் தீமையும், பசுக்களுக்கும் மனிதர்களுக்குங் கஷ்டமுமுண்டாம்.

உதாரணம்:—வெய்யபிர மாதியினில் வேந்தர் கொடுமையுறும், ஐயகேள் பஞ்ச மடுக்குமே-செய்ய, பசுக்கள் மெலியும் பாரிற் குடிகள், சிசுக்க ளுடனலவர் தேர். (இடைக்காடர்)

பிரமாதீச } நாற்பத்தேழாவது வருடம்.
பிரமாதீட்ச }

பிரமாதீட்ச வருடப்பலன் — மனிதருக்கு வறுமையும், பஞ்சமும், அம்மை முதலிய தொத்து நோய்களும், ஒருவர்க்கொருவர் சண்டையும், அதனால் மரணமும், மொத்தத்தில் உலகில் துக்கபலமுமே யுண்டாம்.

உதாரணம்:—நற்பிரமா தீட்சத்தில் நாட்டிலே சாவதிகம், சொற்பெரிய மாரிமிகத் தோன்றுமே-விற்பிடித்து, மல்விட்டு மாண்டிடுவார் வாளிஞ லேயறுவர், கொல்லும் வறுமையெனக் கூறு.

(இடைக்காடர்)

பிரமாயுதம்—பத்துலட்சம்.

பிரமுகம்—நிகழ்காலம்.

பிரமோதூத—நான்காவது வருடம்.

பிரமோதூதவருடப்பலன்—சொற்ப மழையும், கரும்புப்பயிர் விர்த்தியும், மனிதர்களுக்குப் பயமும், பூமிவிளைவுக் குறைவும், அரசர்களுக்கு நன்மையுமுண்டாம்.

உதாரணம்: — வரும்பிரமோதூத வருடமழை கொஞ்சம், கரும்பு மிகப்பலிக்குங் கண்டாய்-திரும்பப், பயமுண்டு பூமி பலியாது வேந்தர், நயமுள்ளா ராயிருப்பர் நன்கு. (இடைக்காடர்)

பிரயுதம்—பத்துலட்சம்.

பிரளயகாலம்--அழிவுகாலம், வாகினி மூன்றுபங்குகொண்ட அளவு.

பிரளயமுடிவு—யுகாந்தம்.

பிராகம்—கிழக்கு.

பிராகிண்ணம்—முற்பொழுது.

பிராசி—கிழக்கு.

பிராசீனதிலம்—சந்திரன்.

பிராசீனம்<br>பிராசு } கிழக்கு.

பிராணதிசை—சூரியபுடத்திற்கண்ட நட்சத்திரதிசை.

பிராணந்தியம்—நவக்கிரகம்.

பிராணிப்பொருத்தம் — மணப்பொருத்தத்தொன்று, அது பெண்ணுக்கும் ஆணுக்கும் ஒரு பிராணி நட்சத்திரமானால் உத்தமம். இதில் ஆண் ஆணாகவும் பெண் பெண்ணாகவுமிருந்தால் அதிக உத்தமம். இதரபிராணி நட்சத்திரமானாலும் பகையில்லாதிருந்தாலும் நன்றாம்.

பிராதக்காலம்—விடியல்.

பிராதாத்தானம்—மூத்த சகோதரத்தானம். அது பதினோராமிடம்.

பிராத்தியக்கு—மேற்கு.

பிராபோதம்—விடியல்.

பிராமி—உரோகணி.

பிராயம்—அளவு, மரணம், வயது.

பிரார்த்தரீயம்—துவாபரயுகம்.

பிரிதிவுக்கிரகம்—செவ்வாய்.

பிருகத்சங்கிதை—வராகமிகிரர் செய்த ஒரு நூல். இதிலே சூரிய சந்திர கிரகண விபரபலாபலன்களும் தூமகேதுக்கள் வரலாறும் சகுனம் முதலியனவுங் கூறப்பெற்றிருக்கிறது.

பிருகத்சாதகம் — வராகமிகிரரால் வடமொழியிற் செய்த சோதிட நூல். இதுவே தமிழில் மங்களேஸ்பரியமாம்.

பிருகு<br>பிருகுசுதன் } சுக்கிரன்.

பிருட்டி—கிரணம்.

பிருட்டோதயக்கோள் — சூரியன் சனி, செவ்வாய்.

பிருட்டோதயராசி — மேடம், இடபம், கடகம், தனுசு, மகரம்.

பிரேதபக்கம்—அமரபக்கம்.

பிரேதம்—தெற்கு.

பிரேதலோகம்—பிதிர்திசை.

பிர்மலக்கினம்—எட்டாமிடம்.

பிலவ—முப்பத்தைந்தாவதுவருடம்.

பிலவவருடப்பலன் — சொற்பமான மழையும் இராசர்களுக்குப் பீடையும் நாற்கால் சீவராசிகளுக்கு நட்டமும், வேளாண்மை நட்டத் தாற் பஞ்சமும், மொத்தத்தில் உலகிற்கே கேடுமுண்டாம்.

உதாரணம்;— பிலவத்தில் மாரிகொஞ்சம் பீடை மிகும்ராசர், சலமிகுதி துன்பந் தருகும்-நலமில்லை, நாலுகாற் சீவனெல்லாம் நாசமாம் வேளாண்மை, பாலுமின்றிச் செய்புவனம் பாழ்.

(இடைக்காடர்)

பிலவங்க—நாற்பத்தோராவது வருடம்.

பிலவங்கவருடப்பலன்—நல்ல மழையும், வேளாண்மை விர்த்தியும், தானிய மலிவுமுண்டாம். ஆயினும் மனித ஒழுக்கத்துக்குப் பொருத்தமில்லாத கற்பனை பேதங்களால், சனங்களுக்குள் கலகமும் மரணமுமுண்டாம்.

உதாரணம்;—பிலவங்க வாண்டதனிற் பேதங்கண் மிஞ்சிப், பல வந்த மாய்மடிவர் பாரில்-நலமிக்க வேளாண்மை மெத்த விளையுமே யஃகமோ, கேளா யதிகமதி கம்.

(இடைக்காடர்)

பிழைத்தானம்—எட்டாமிடம்.

பிறகாம்—சாமம்.

பிறத்தானம் — புறத்தானம். அது மறைவிடத்தானம். ஆறு, எட்டு, பனிரண்டாமிடங்களாம்.

பிறவு—உற்பத்தி, சகோதரம், பிறப்பு.

பிறை — சந்திரப்பிரபை. பாலசந்திரன்.

பிறைக்கொழுந்து—இளம்பிறை.

பிற்காலம் — எதிர்காலம், வருங்காலம்.

பிற்கொழுங்கோல்— உத்திரட்டாதி நட்சத்திரம்.

பிற்சாமம்—நான்காஞ்சாமம்,

பிற்பக்கம் } அமரபக்கம், கிருட்டின
பிற்பட்சம் } பக்கம், தேய்பிறை.

பிற்றை—பின்னைநாள்.

பின்சரிவு—பின்நேரம்.

பின்பனி — ஆறு பருவத்தொன்று. அது மாசி, பங்குனி ஆகிய மாதங்களின் பருவம்.

பின்மாரிகாலம்—மார்கழி, தை மாதங்களாகிய மழைக்காலம்.

பின்மாலிகாயோகம்—ஒரு நல்ல யோகம். அது ஐந்தாமிடமுதல் பதினோராமிடம் வரை இராகு கேதுக்கள் நீங்கிய ஏழு கிரகங்கள் நிற்பது.

பின்னகனம் — கீழ்வாயிலக்கத்தை சமமாகிய அவ்விலக்கத்தாற்றாக்கி வந்த இலக்கத்தை மறுமுறையும் பெருக்கல்.

பின்னகுணனம் — கீழ்வாயிலக்கத்தைப் பெருக்கல்.

பின்னம்—சிதைவு, பங்கு.

பின்னவியவகலிதம்— கீழ்வாய்க் கழிவு கணக்கு.

பின்னிலவு—அமரபக்கம்.
பின்னேரம்—சாயங்காலம்.
பின்னைநாள்—பின்னாள், மறுநாள்.
பின்னோக்கு—பிற்பார்வை.

## பீ

பீடைகழித்தல்—துன்பம் விலக்கல். அது மார்கழிமாதத்தில் செய்யுமோர்சடங்கு.
பீடைத்தானம்—ஆறாமிடம்.
பீடைமாதம்—மார்கழிமாதம்.
பீதகன்—வியாழன்.
பீதம்—நேரம்.
பீதன்—சூரியன்.
பீதாபன்—இந்திரன், குபேரன்,
பீமநாதன்—சிங்கம்.
பீமரதி—ஒருவன் பிறந்த எழுபத்தேழாமாண்டின் எழாமாதத்தேழாமிரவு.
பீயு—காலம், சூரியன்.

## பு

புகர்—சுக்கிரன்.
புகுடி—பருவம்.
புகை — தூபம். இது தென்கீழ்த்திசைப் பாலன்குறி, பனிப்படலம், யோசனை தூரம்.
புக்கை—உதயம்.
புங்கவன்—குரு.
புங்கசவனம்—குழந்தை பிறந்த ஐந்தாமாதத்திற் செய்யுமோர் சடங்கு.
புசாகோடி—ஏறுமிறங்குமிராசி.

புசாபலம்—கணிதமுறையுளொன்று. அது புசாகோடி களைந்தபின் மிஞ்சின தொகை.
புசியம்—தைமாதம்.
புசுண்டர்நாடி—ஓர் சோதிடநூல்.
புசை—ஒன்றும் இரண்டாம் மூன்றுமேழா மெட்டாம் ஒன்பதாமிராசிகள்.
புஞ்சவனம் — கருப்பங் கொண்ட மூன்றாந்திங்களிற் செய்யுமோர் சடங்கு.
புட்கலயோகம் } புஷ்கலயோகம் } அமாவாசையானது திங்கள், செவ்வாய், வியாழம் இக்கிழமைகளிற் கூடிவருவது.
புட்களயோகம் } புஷ்களயோகம் } ஒரு நல்லயோகம். அது சந்திரனிருந்த வீட்டிற்குடையவனும் இலக்கினத்திற்குடையவனும் ஒன்றாய்க் கூடி கேந்திரம் அல்லது நட்பு வீட்டிலிருப்பதாம்.
புட்பமாசம் } புட்பமாதம் } தளிர்காலம்.
புட்பயோகம் } புஷ்பயோகம் } ஒரு நல்ல யோகம். ஒன்பதாமதிபன் ஆட்சி பெற்று கருமாதிபன் கூடும்பத்தான மடைந்து இலக்கினாதிபன் பன்னொன்றில் உச்சம்பெற்றிற்பதாம்.
புணர்தம்—புநர்பூசம்.
புணர்பூசம்—அதிதிநாள், புநர்பூசம்.
புண்ணியத்தானம் } புண்ணியஸ்தானம் } இலக்கினத்திற் கொன்பதாமிடம்.

புண்ணியத்திசை—வடதிசை.

புண்ணியராசி — நட்சத்திரலோகம், ஐந்தாம், ஒன்பதாமிடங்களுமாம்.

புண்ணியோதயம்—அதிட்டம்.

புதகாரகம்—வித்தை, தாய்மாமன், பந்துத்துவம், கேள்வி, செட்டு, வியாபாரமுதலியனவாம்.

புததிசை—புதனில் நடக்குங்காலம். இதன் வருடம் பதினேழு.

புதநட்சத்திரம்—அத்தம், உத்திரம், சித்திரை, திருவாதிரை, புனர்பூசம் என்பனவாம்.

புதபுத்தி—ஒவ்வொரு திசையினுள் நடக்கும் புதனுடைய காலம்.

புதபுத்திரன்—அர்த்தபிரகரன்.

புதவாரம்—புதன்கிழமை.

புதன்—அருணன், அறிஞன், அனுவழி, அனுரு, கணக்கன், சவுமன், சாமன், சிந்தை, சூரியன், சௌமியன், துதுவன், தேர்ப்பாகன், நற்கோள், நிபுணன், பச்சை, பண்டிதன், பனிமகன், பாகன், புந்தி, புலவன், மதிமகன், மாலவன், மால், மேதை, புதன்கிழமைக்கும் பெயர்.

புதன்குணம்—தாமதகுணம்.

புதன்சமித்து—நாயுருவி.

புதன்சுவை—உப்பு.

புதன்தானியம்—பச்சைப்பயறு.

புதன்திக்கு, புதன்திசை } தென்மேற்கு, வடகீழ்த்திசையென்பாருமுளர்.

புதன்நிறம்—பச்சை.

புதன்பாசை, புதன்பாடை } சோதிடம்.

புதன்பார்வை—சாந்தபார்வை, எழாம்பார்வை.

புதன்பிணி—வாதரோகம்.

புதன்புட்பம்—வெண்காந்தள்.

புதன்ரத்தினம்—பச்சை.

புதன்ராசி—கன்னி, மிதுனம்.

புதன்லிங்கம்—அலி.

புதன்லோகம்—பித்தளை.

புதன்வடிவம்—நெடுமை.

புதன்வாகனம்—குதிரை.

புதன்வீடு—கன்னி, மிதுனம்.

புதானன்—குரு.

புதை—மறைவிடம்.

புதையற்றானம்—பதினோராமிடம்.

புத்தாதன்—சந்திரன்.

புத்திரகாரகன்—வியாழன்.

புத்திரத்தானம் — இலக்கினத்திற்கைந்தாமிடம், அதற்கைந்தாமிடமாகிய ஒன்பதாமிடமுமாம்.

புத்திரத்தானாதிபதி, புத்திரத்தானாதியன் } ஐந்தாமிடத்துக்குடையவன்.

புத்திரநாதன் — ஐந்தாமிடத்துக்குடையவன்.

புத்திரயோகம் — ஒரு சுபயோகம். அது இலக்கினம், கேந்திரம், மூலத்திரிகோணம், உச்சம் ஆகிய இவ்விடங்களில் புதன் நிற்பதாம்.

புனர்தம், புனர்வசு } புனர்பூசம்.

புந்தி—புதன்.

புந்திவாரம்—புதன்கிழமை.

புயங்கம்—பாம்பு.

புயல் — சுக்கிரன், பெருங்காற்று, மழைக்கோள், மேகம்.

புரட்சி — கிரகப்புரள்வு, கீழ்மே லாய் வருதல், திரும்புதல்.

புரட்டாசி } ஒருமாதம், பாத்திர
புரட்டாதி } பதம், பாத்திரம், பூரட் டாதி.

புரட்டை—பூரட்டாதி.

புரவி—அசுபதி நட்சத்திரம்.

புருசநாள் } ஆண்நட்சத்திரம். அது
புருடநாள் } அசுபதி, பரணி, உரோ
புருஷநாள் } கணி, ஆயிலியம், மகம், உத்திரம், சித்திரை, சோதி, கேட்டை, மூலம், பூராடம், உத் திராடம், பூரட்டாதி. அன்றியும் இரேவதியுமாம்.

புருவத்தானம்—இரண்டாமிடம்.

புரோகிதன்—சோதிடன்.

புலம்—திக்கு.

புலரி—உதயமாதல், விடியல்.

புலவன்—புதன்.

புலி—சிங்கவிராசி.

புலிப்பாணிசோதிடம்—ஓர்சோதிட நூல்.

புல்—அனுடநட்சத்திரம்.

புல்லம்—இடபவிராசி.

புள்—அவிட்டநாள்.

புற்பதி } அனுஷநட்சத்திரம்.
புற்றுளி }

புனர்தம்—புனர்பூசம்.

புனர்பூசம்—அதிதிநாள், ஆவணம், எரி, கரும்பு, கழை, பாலை, பிண்டி, புனர்தம்.

புனர்வசு—புனர்பூசம்.

புனீதம்—நட்சத்திரம், புனர்பூசம்.

புன்செக்கர்—மாலை நேரம்.

## பூ

பூ—பூமி.

பூகம்—நேரம்.

பூகம்பம் } பூமிநடுங்கல்.
பூகம்பனம் }

பூகோளம்—பூமியின் வட்டம், பூமி யின் இயற்கையளவு. விபரம்-பூமி யினிடையே மேருவும், கடலினி டையே வடவைத்தீவு மிருக்கின்ற தாம். இவை முறையே வடதுருவ மென்றும், தென்துருவமென்றுங் கூறப்படும். பூமத்தியமென்று ஆரிய சாஸ்திரத்திற் சொல்லப் பட்டபடி வடதுருவமுனை, பூமி யை மேகலாரேகையையெல்லையாக வைத்து, உத்தரகோளார்த்தம், தட்சணகோளார்த்தம் என்று இரு கூறாகப் பிரித்து உத்தரகோளார் த்த முழுதும் நிலமென்றும், தட் சணகோளார்த்தமுழுதும் நீரென் றுஞ் சித்தாந்தமாம்.

உத்தரகோளார்த்த முழுதும் நிலமென்பதால் அதன் மத்தியத் தானம் வடதுருவத்திலுள்ள சுமேருவாகின்றது. இனிகடலின் மத்தியமெனவே தட்சண கோளார்த்த முழுதும் நீராக அதன் மத்தியத்தானம் தென்துரு வத்திலுள்ள வடவாமுகமாகின்

றது. உத்தரகோளார்த்த முழுவதையும் ஜம்புத்தீபம் நவகண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதாம்.

பூசநட்சத்திரம்—காற்குளம், குருநாள், கொடிறு, தை, வண்டு.

பூசநாள்—பூசநட்சத்திரம்.

பூசுதன்—செவ்வாய்.

பூச்சக்கரம்—சூரியனோடும் பாதை, பூமிச்சுற்று.

பூணி—இடபவிராசி.

பூதகாலம்—இறந்தகாலம், கடந்தகாலம், சென்றகாலம்.

பூதனன்—சந்திரகிரணம்.

பூதம் — இறந்தகாலம், பஞ்சபூதம், பரணி நட்சத்திரம்.

பூதக்கிரகம் } பஞ்சபூதக் கிரகம்.
பூதக்கோள் } விபரம்-பஞ்சபூதக்கிரகத்திற் காண்க.

பூதன்—கிருட்டிணபக்கத்துப்பதினாலாந்திதி.

பூபயோகம்—ஒரு நல்ல யோகம். அது சந்திரன் ஐந்தில் நிற்க ஐந்தோன் உச்சம்பெற பாக்கியாதிபன் குடும்பமேறி நிற்பதாம்.

(2) இலக்கினமுதல் நாலாமிராசிவரை இருபாம்புகள் நீங்கிய ஏழு கிரகங்கள் நிற்பதாம்.

பூப்பிரிதி—அயனவரி.

பூமகன்
பூமன் } செவ்வாய்.
பூமிகாரகன்

பூமித்தானம்—நாலாமிடம்.

பூமிநிலைக்கிரகம் } சனி, சூரியன்,
பூமிநிலைக்கோள் } செவ்வாய், பாம்பு.

பூரட்டாதி — நாழி, முற்கொழுங்கோல்.

பூரணசந்திரன்—நிறைகாலச் சந்திரன்.

பூரணமி—பூரணை.

பூரணமை—பௌரணமி.

பூராணயனம்—இடபவீதி.

பூராணசம்—சந்திரகிரணம்.

பூரணேந்து—பூரணசந்திரன்.

பூரணை—அநுமதி, இடை, உவா, பவ்வம், சந்திரன், ஐந்தாம் பத்தாந்திதி, பௌரணை.

பூரநாள் } இடையெழுஞ்சனி, எலி,
பூரம் } கணை, நாவிதன், பகவதிநாள்.

பூராடநாள் } உடைகுளம், நீர்நாள்,
பூராடம் } முற்குளம்.

பூரி — எண்வகுப்பினொன்று. அது நூறுகோடி, கோடிகோடாகோடி, பகல்.

பூருவகாட்டை—கிழக்கு.

பூருவசந்தியை—விடியல்.

பூருவசென்மத்தானம் — இரண்டாமிடம்.

பூருவதிக்கு
பூருவதிசை } கிழக்கு.
பூருவதேசம்

பூருவபக்கம் } சுக்கிலபக்கம், முன்
பூருவபட்சம் } பக்கம், வளர்பிறைப்பக்கம்.

பூருவபற்குனி—பூரம்.

பூருவபற்குனியன்—வியாழன்.

பூருவம்—கிழக்கு, சந்திரனின் முன்பக்கம்.

பூருவாசாடம்—பூராடம்.

பூருவாண்ணம் } பகலின் முன்னே
பூருவாண்ணியம் } ரம்.

பூருவோத்தரம்—வடகீழ்த்திசை.

பூர்வம்—பூருவம். இது கிழக்கு.

பூர்வராத்ரம்—முன்னிரவு.

பூர்வார்த்தம்—முற்பாதி.

பூர்வான்னம்—பகலின் முற்பாதி.

பூனைத்திசை—தென்கிழக்கு.

## பெ

பெண்—கன்னியாராசி.

பெண்கிரகம் } சந்திரன், சுக்கிரன்,
பெண்கோள் } ராகு.

பெண்டீர்—கன்னியாராசி.

பெண்ணட்சத்திரம் } கார்த்திகை,
பெண்ணாள் } திருவாதிரை, புனர்பூசம், பூசம், பூரம், அஸ்தம், விசாகம், அனுஷம், திருவோணம், அவிட்டம், உத்திரட்டாதி, ரேவதி யென்பனவாம்.

பெண்தீர்க்கப்பொருத்தம் — மணப்பொருத்தத்தொன்று. அது பெண் நட்சத்திரமுதல் ஆண் நட்சத்திரம் பதின்மூன்றுக்கு மேல் வருவதாம்.

பெண்ராசி — இரட்டை ராசியைப் பார்க்க.

பெண்ணை—அனுடநட்சத்திரம்.

பெதும்பை — பதினொரு வயதுப் பெண்.

பெரியபுலு—நூறு.

பெருக்கல்—எண்கூட்டித்தாக்கல்.

பெருக்கு } கணக்கு வகை
பெருக்குக்கணக்கு } நான்கி னொன்று.

பெருக்குவேளை—உச்சிப்பொழுது.

பெருநாள்—அச்சுவினி முதலிய நாள், இரேவதி, கொண்டாட்டமான நாள்.

பெரும்பொழுது — ஆறு பருவம். அவை கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பனவாம்.

பெலராசி — திரராசி நான்குமாம். அது இடபம், சிங்கம், விருச்சிகம், கும்பம் என்பதாம்.

பெலன்—மூன்றாமிடம்.

பெற்றம்—இடபவிராசி.

## பே

பே—மேகம்.

பேதை—எழுவயதுப் பெண்.

பேகன்—சந்திரன், சூரியன்.

பேராண்டு — அறுபது வருடங் கொண்ட காலம்.

பேராளன்—மிருகசீரிடம்.

பேரிகையோகம்—ஒருவிசேட நல்ல யோகம். அது இரண்டு, எழு, பனிரண்டு ஆகிய இவ்விடங்களில் கிரகங்களிருந்து பத்தாதிபன் பெலத்து நின்றாலும்,

(2) வியாழன், சுக்கிரன், இலக்கினாதிபன் இவர்களோடு கூடி கேந்திரத்தில் நிற்க, பாக்கியாதிபதி பெலத்து நின்றாலும்,

(3) செவ்வாய்க்கு கேந்திரதிரிகோணத்தில் சுக்கிரன், வியாழன் ஆகிய இவர்களிருக்க, இலாபாதிபதி பெலத்து நின்றாலும்,

(4) இலாபாதிபதிக்கு சுக்கிரன் கேந்திரதிரிகோணம் பெற்று நின்ருலும்,

(5) சனிக்கு ஆறு, எட்டு இவைகளில் செவ்வாயிருக்க, செவ்வாய்க்கு ஆறு,எட்டு இவைகளில் வியாழனிருக்க, வியாழனுக்கு ஆறு, எட்டு இவைகளிற் சூரியன் நின்ருலும்,

(6) ஐந்தொன்பதில் பாபக்கோளிருக்க கேந்திரத்தில் சுபக்கோளிருக்க சூரியன் பெலத்து நின்ருலும்,

(7) வியாழனுக்கு மூன்று, ஐந்து, எழு இவைகளில் புதனிருக்க, புதனுக்குப்பத்தில் குருவிருந்தாலும்,

(8) இலக்கினுதிபதி, குரு, செவ்வாய் இவர்கள் மூன்றில் நிற்க, அல்லது பார்க்க இரண்டு, ஒன்பதில் பாபக்கோளிருந்தாலும்,

(9) இலாபாதிபதி உச்சனுகி இலாபத்தானத்தைக் குருபார்க்க சுக்கிரன் கேந்திர கோணத்திலிருந்தாலும்,

(10) ஒன்பது பனிரண்டில் புதனிருக்க ஒன்று, ஐந்து இவைகளில் குருவிருக்க, அட்டமாதிபன் பெலத்து நின்ருலும்,

(11) நாலோனும், குருவும் பாக்கியத்தைப் பார்த்தாலு மிருந்தாலும், குரு உச்சம் பெற்ருலும், வெள்ளியும் குருவும் ஒன்றுக்கொன்று நட்பாய்ப் பார்த்தாலும், வெள்ளி யுச்சம்பெற்று நின்ருலும்,

(12) குரு,புதன்,இலக்கினத்தைப் பார்க்க இலக்கினுதிபதி உச்சம் பெற்று நின்ருலும்,

(13) இராகுவிருந்த இராசியாதிபதி உச்சகேந்திர திரிகோணத்திருக்க, இராகு சுபவீடேறி சுபவர்க்கம் பெற்ருலும் பேரிகையோகமாம்.

பேரிளம்பெண்—நாற்பது வயதுப் பெண்.

பேரு—சூரியன்.

பேனவர்கி—இடி.

## பொ

பொங்குசனி—எழரைநாட்டுச் சனியில் இரண்டாமுறையாய் வருஞ் சனி.

பொருத்தம் — இணக்கம், தகுதி, விவாகப்பொருத்த முதலியன.

பொழுது—அமையம், ஆனியம், எல்வை, கடி, காலம், காலே, கால், கொன், சூரியன், செவ்வி, நிலே, பதம், பருவம், பாணி, போழ்து, வேலே, அன்றியும் மாலே, யாமம், வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு இவை அத்தமனகாலமிருந்து பத்து நாழிகை வீதமாம்.

பொழுதுபடுதல் } சூரியன் அத்தமித்தல்.
பொழுதுபுகுதல் }

பொழுதுவிடிதல்—சூரியனுதித்தல்.

பொன்—சூரியன், வியாழன்.

பொன்னவன்—வியாழன்.

## போ

போகத்தானம்—ஏழாமிடம்.

போகபோக்கிய யோகம்—ஒரு நல்ல யோகம். அது ஒன்பதுக்குடைய வன் நின்ற திரேக்காண ராசியில் ஐந்தாதிபனிருக்க ஐந்தில், குரு விருப்பதாம்.

போசராசாப்தம்—போசனராசாண்ட வருடம். இது கலியுகம் மூவாயி ரத்து நூற்று நாற்பத்தொன்றில் ஆரம்பம்.

போசனம் புசிக்குந்திக்கு } இன்ன
போசனம் புசிக்குந்திசை } திசையி

விருந்து போசனஞ் செய்தால் நன்மை தீமை என்பது. கிழக்கு மூகம் ஆயுள்விருத்தி, தெற்கு முகம் கீர்த்தி, மேற்கு முகம் சம் பத்து, வடக்கு முகம் சத்தியநட க்கையுண்டென்பதாம்.

போதகன்—இராகு, கேதுக்கள் நீங் கிய ஏழு கிரகங்களில் ஒவ்வொரு திசையில் வரும் புத்திக்கிரகங் களின் தனது பாகப்பலனைக் கொடுக்கச்செய்யுங் கிரகம், இது வே போதகனென்பது. அப்பாகப் பலனை மாறுபடுத்துங் கிரகம் வேதகனென்றும், தேரியபலனைக் கிடைக்கச்செய்யுங் கிரகம் பாசக னென்றும், சம்பாதித்த பொருளை யடையச்செய்யுங் கிரகம் காரக னென்றுஞ் சொல்லப்படும். விப ரம்:—வேதகாதிபர் திசையிற் காண்க.

போதகாதிபர் திசை—வேதகாதிபர் திசையிற் காண்க.

போதம்—பரணி நட்சத்திரம்.

போது—காலம்.

போந்து } அனுசநட்சத்திரம்.
போந்தை }

போரேறு—செவ்வாய்.

போர்—சதயநட்சத்திரம்,

போழ்து — காலம், நாள், பருவம், பொழுது.

## பௌ

பௌஷம் } தைமாதம்.
பௌடம் }

பௌதி—இராத்திரி.

பௌமன்—செவ்வாய்.

பௌரணமி }
பௌரணைமி }
பௌரணை } பூரணை.
பௌர்ணிமி }
பௌவம் }

## ம

ம—காலம், சந்திரன், நேரம்.

மகதந்திரம்—சிற்பநூல் முப்பத்திர ண்டி லொன்று.

மகத்திருநாள்—மாசிமகம்.

மகம் } ஆதிச்சனி, எழுவா
மகநாள் } யெழுஞ்சனி, கொடுமு கம், பிதிர்நாள், மாசி, வாய்க்கால், வேட்டுவன், வேள்வி,அன்றி இரு பத்தொன்றுக்கும் பெயர்.

மகரஅங்கம்—முழங்கால்.

மகாஉருவம்—முதலே.

மகாச்சா—பஞ்சாங்ககணிதமுறையின் சாவாக்கியத் தொன்று.

மகாத்திசை—வடக்கு.

மகாநிறம்—கறுப்பு.

மகாமாதம்—தைமாதம்.

மகரம் } கலே, சுறு, தை, பங்குக்
மகராசி } கிராகம், மான்.

மகாரவி — தைமாதம், மகரத்தில் சூரியனிற்றல்.

மகவோட்டம்—மாசிமாதம் பூரணையில் சந்திரனும் மகநட்சத்திரமும் உச்சமாகும்போது சந்திரனுக்கு வடக்கில் ஒரு நட்சத்திரம் தள்ளினல் கால்பங்கு தானியநாசம், இரண்டுதள்ளினல் அரைப்பங்கு நாசம், மூன்று தள்ளினல் முக்காற்பங்கு நாசம், நாலு தள்ளினல்முழுதும் கெடுதியாம். மேற்கண்டபடி தெற்கில் தள்ளினல் மிகவுஞ்சௌக்கியம்.

உதாரணம்;—'காணு மாசிக் கலேமதியைக் கருது மகமீ னுன்கதனிற், பேணுந் தென்பால மீன் சேரிற் பெரிதா மஃகந் தானென்ப, பூணி விரண்டு முக்காலாம் பொருந்து மூன்றிற் பாதியதாம், சேணில் வடபால் மீன்சேரிற் செகத்தி லன்னஞ் சிறிதாமே' என்னுஞ் செய்யுளாலறிக.

மகாகருவம் }
மகாகர்வம் } பத்துலட்சங்கோடி.

மகாகாலம்—நெடுங்காலம்.

மகாகிதி }
மகாக்ஷிதி } கோடிகோடாகோடி.

மகாகோணி }
மகாக்ஷோணி } இலட்சங்கோடாகோடி.

மகாசங்கம்—ஆயிரங்கோடாகோடி.

மகாசந்தபனம்—ஒரு விரதநாள்.

மகாசிவராத்திரி— சிவராத்திரியைக் காண்க.

மகாசோபம் } நூறுகோடி கோடா
மகாக்ஷோபம் } கோடி.

மகாட்டமி—ஐப்பசிமாத சுக்கிலபக்கத்திய எட்டாந்திதி.

மகாதசை } உடுதிசை அல்லது நட்
மகாதிசை } சத்திர திசை.

விபரம்:—கார்த்திகை, உத்திரம், உத்திராடம் சூரியதிசை; இதன் வருஷம் ஆறு. ரோகணி, அத்தம், திருவோணம் சந்திரதிசை, இதன் வருஷம் பத்து. மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் செவ்வாய்திசை. இதன் வருஷம் ஏழு. திருவாதிரை, சுவாதி, சதையம் இராகுதிசை. இதன்வருஷம் பதினெட்டு. புனர்பூசம், விசாகம், பூரட்டாதி வியாழதிசை; இதன் வருஷம் பதினறு. பூசம், அனுசம், உத்திரட்டாதி சனிதிசை; இதன் வருஷம் பத்தொன்பது; ஆயிலியம், கேட்டை, ரேவதி புதன்திசை; இதன் வருஷம் பதினேழு; அசுபதி, மகம், மூலம் கேதுதிசை; இதன் வருஷம் ஏழு. பரணி, பூரம், பூராடம் சுக்கிரதிசை; இதன் வருஷம் இருபது என்பதாம்.

மகாநிசி—அத்தசாமம்.

மகாபதுமம்—பத்துக்கோடாகோடி.

மகாபவன்—சுக்கிரன்.

மகாபிரளயம்—நானூற்று முப்பத்திரண்டு கோடிவருட முடிவில்வரும் அழிவுகாலம்.

மகாபிராணதிசை — சந்திரசூரிய லக்கினபுடங்களைக் கூட்டிக்கண்ட நட்சத்திரதிசை.

மகாபூரி—ஆயிரங்கோடி, கோடிகோடாகோடி.

மகாமகம்—மகநட்சத்திரத்தில் குரு வரும் வருடத்தில் மாசிமாதப் பூரணை.

மகாமகவாருணி — சித்திரை மாதம் அமரபக்கத்துத் திரயோதசியன்று சனிவாரமுஞ் சதயநட்சத்திரமுங் கூடிவருவது.

மகாயுகம் — சதுர்யுகம். இது நாற்பத்துமூன்று லட்சத்து இருபதினாயிரம் (4320000) வருடங்கொண்டது.

மகாயோகம்—பரிவர்த்தன யோகம், அது இலக்கினாதிபன் இரண்டு, நாலு, ஐந்து, ஏழு, ஒன்பது, பத்து, பதினொன்று ஆகிய இவைகளில் இருக்க, அவ்வீட்டதிபர் இலக்கினத்தில் நிற்பது.

(2) இரண்டுக்குடையவன் நாலு, ஐந்து, ஏழு, ஒன்பது, பத்து, பதினொன்று ஆகிய இவைகளிலிருக்க அவ்வீட்டதிபர் இரண்டில் நிற்பது;

(3) நாலுக்குடையவன் ஐந்து, ஏழு, ஒன்பது, பத்து, பதினொன்று ஆகிய இவைகளிலிருக்க அவ்வீட்டதிபர் நாலில் நிற்பது.

(4) ஐந்துக்குடையவன் ஏழு, ஒன்பது, பத்து, பதினொன்று ஆகிய இவைகளிலிருக்க அவ்வீட்டதிபர் ஐந்தில் நிற்பது.

(5) ஏழுக்குடையவன் ஒன்பது, பத்து, பதினொன்று ஆகிய இவைகளிலிருக்க அவ்வீட்டதிபர் ஏழில் நிற்பது.

(6) பாக்கியாதிபன் பத்து, பதினொன்று ஆகிய இவைகளிலிருக்க அவ்வீட்டதிபர் பாக்கியத்திலிருப்பது.

(7) பத்தோன் பதினொன்றிலிருக்க, பதினொன்றோன் பத்தில் நிற்பது.

குறிப்பு;--மேற்காட்டியுள்ள ஏழு பிரிவுகளில் முதலாவது பிரிவிற் கண்டவை ஏழுவகையாய்க் கிரகங்கள் மாறிநிற்கும். இரண்டாவதில் ஆறுவகையாய் மாறிநிற்கும். மூன்றாவதில் ஐந்து வகையாய் மாறிநிற்கும். நான்காவதில் நாலுவகையாய் மாறிநிற்கும். ஐந்தாவதில் மூன்றுவகையாய் மாறிநிற்கும். ஆறாவதில் இரண்டுவகையாய் மாறிநிற்கும். ஏழாவதில் ஒரே வகையாய் நிற்கும். இவ்வைகள் இருபத்தெட்டு வகையாய்

மாறிநிற்கும். இவைகள் விசேட நல்ல யோகமாம்.

மகாவற்புதம்—ஒருபேரெண்.

மகாவாருணி—சித்திரைமாதம் அமர பக்கத்தில் வரும் பதின்மூன்ருந் திதி.

மகாவிசுவம்—மேடசங்கிராந்தி.

மகாவிந்தம்—ஓரெண்.

மகிரன்—சூரியன்.

மகீசுதன்—செவ்வாய்.

மகுடயோகம்—ஒரு நல்ல யோகம். அது ஐந் தில் குருவிருக்க ஐந் தோன் ஒன்பதிலிருக்க. பத்தில் சனி நிற்பதாம்.

மகோதயம் } அறுபது வருடத்திற்
மஹோதயம் } கொருமுறை வரும் விசேடநாள்; அது அருத்தோயத் திற் கூறியபடி அமாவாசையானது திங்கட்கிழமையோடு கூடிவருவ தாம்.

மங்கையர்க்கரசியார்திருநட்சத்திரம்- சித்திரை மாதத்தில் வரும் ரோ கணி நட்சத்திரம்.

மங்கலம்—கலியாணம், நன்மை.

மங்கலவாரம் — செவ்வாய்க்கிழமை, நல்லநாள்.

மங்கலன்—செவ்வாய்.

மங்கலாதிபன்—ஏழுக்குடையவன்.

மங்களை --யோகினிதிசையினென்று.

மங்குசனி—முதல்முறை வரும் ஏழ ரைநாட்டுச்சனி.

மங்குல்—ஆகாயம், இரவு, மேகம்.

மங்கை—பதின்மூன்று வயதுடைய பெண்.

மங்கைதீர்க்கப் பொருத்தம்—மணப் பொருத்தத்தொன்று; அது பெண் நட்சத்திரத்திற்கு ஆண்நட்சத்தி ரம் பதின்மூன்றுக்கு மேலாயிருத் தல்.

மசண்டை--அந்திநேரம், கருக்குமாலை.

மச்சம்—மீனவிராசி.

மச்சயோகம்--ஒருநல்லயோகம். அது ஒன்று, ஒன்பது இவைகளில் பாவ ரிருக்க ஐந்தில் பாபருஞ் சுபரு மிருக்க நாலில் பாவிகளிருந்தா லும்,

(2) சரராசி இலக்கினமாக இலக் கினத்தைச் சுபர்நோக்க சாத்தில் குருவிருக்க கேந்திரத்தில் சுப ரிருக்க இலக்கினுங்கிச கேந்திர கோணத்தை ஐந்தாதிபன் பார்த் தாலும்,

(3) திரராசியிற் குரு சுக்கிரனிரு க்க திரிகோணத்தில் கிரகங்களி ருக்க இலக்கினத்தில் கிரகங்கள் வலுவுற்று இருந்தாலும்,

(4) மூன்றுக் குடையவனுடைய அங்கிசாதிபதி உச்சம்பெற்றிருக்க சுபக்கிரகம் பார்த்தாலும்,

(5) பாக்கியாதிபனிருந்த அங்கி சாதிபதி குரு சுக்கிரனுகே கேந்திர திரிகோணங்களிலிருந்தாலும்,

(6) இலக்கினுதிபதி சுப அங்கிசம் பெற்று தேவலோகாங்கிசமுமாகி பாக்கியாதிபதி சிங்காங்கிசம்பெற அல்லது கேந்திரமிருக்க, சரராசி

இலக்கினமானாலும் மச்சயோகமாம்.

மஞ்சள்நிறக் கிரகம்—வியாழன்.

மடங்கல்—இடி, சிங்கம், யுகமுடிவு.

மணப்பொருத்தம் — கலியாணப் பொருத்தம், விவாகப்பொருத்தம். இவை பதினாறு வகைப்படும்; விபரம்;—(1) இராசிப் பொருத்தம் (2) இராசியதிபதிப் பொருத்தம், (3) இரட்சுப் பொருத்தம், (4) கணப்பொருத்தம், (5) பெண் தீர்க்கப்பொருத்தம், (6) தினப்பொருத்தம், (7) மகேந்திரப்பொருத்தம், (8) யோனிப்பொருத்தம், (9) வசியப்பொருத்தம், (10) வேதைப்பொருத்தம், (11) ஆயுள் பொருத்தம், (12) நட்சத்திரப் பொருத்தம், (13) விருட்சப்பொருத்தம், (14) பச்சிப்பொருத்தம், (15) பஞ்சபூதப்பொருத்தம், (16) நாடிப்பொருத்தம் என்பதாம்.

மணி—நேரம். அது ஆங்கிலக்கணக்குப்படி இரண்டரை நாழிகை கொண்ட காலஅளவு; ஒரு ஓரையின்காலஅளவுமாம், சோதிடம்.

மணிதனு—வானவில்.

மணிப்பவம்—இருபது.

மணிமான்—சூரியன்.

மண்டலகம்—சூரியவட்டாகாரம்.

மண்டலம் — சூரியமண்டல முதலியன; நாற்பது நாள் கொண்டது, நாற்பத்தெட்டு நாள்கொண்டதுமாம்; பூமி.

மண்டலமேழு — வாயுமண்டலம், வருணமண்டலம், சந்திரமண்டலம், சூரியமண்டலம், நட்சத்திரமண்டலம், அக்கினிமண்டலம், திரிசங்குமண்டலமென்பனவாம்.

மண்டலம் வகுத்தல்—நவக்கிரகமண்டலமிரேகித்தல்.

மதனகேந்திரம்—சந்திரன்.

மதனதுவாதசி—சித்திரைமாதப் பூருவபக்கத்துப் பன்னிரண்டாந்திதி, இது ஓர் விரதநாள்.

மதனயோகம்—ஒரு நல்ல யோகம். அது ஐந்துக்குடையவன் நட்புக் கிரகத்தோடும் சுக்கிரனோடுங்கூடி இலக்கினத்திலிருக்க, லாபாதிபதி நட்பு, ஆட்சி, உச்சமிவைகள் பெற்று நிற்பதாம்.

மதி—கடகவிராசி, சந்திரன், மாதம்.

மதிக்கணம்—சந்திரகணம்.

மதிக்கலை—பதினாறு.

மதிதிசை—சந்திரதிசை, வடதிசை.

மதிநாள்—திங்கட்கிழமை, மிருகசீரிடம்.

மதிப்பகை—இராகு, கேது.

மதிமகன்—புதன்.

மதிமண்டலம்—சந்திரமண்டலம்.

மதியம் — சந்திரன், நடு, மத்தியானம்.

மதியுணி—இராகு, கேது.

மது—சித்திரைமாதம், வசந்தகாலம்.

மத்திமகண்டம் — நவகண்டத்தொன்று.

மத்தியராத்திரம்—நள்ளிரவு.

மரக்கால். மழைக்குறி.

மத்தியானம்—இராசி, உச்சி, உருமம், நடுப்பகல், நண்பகல்.

மந்தகேந்திரம் — கிரகநடையினென்று.

மந்தவாசாரம் }
மந்தவாரம் } சனிக்கிழமை.

மந்தன் — சனி.

மந்தாகினியோகம்—ஒரு நல்லயோகம், அது அட்டமத்திற் குரு சுக்கிரனிருக்க, சராசி இலக்கினமாக அதில் புதனிருக்க ஐந்து, ஏழு, பதினொன்றில் சூரியன் சந்திரன் சனி இவர்களிருப்பதாம்.

மந்தாரசத்தமி—மாசிமாதத்தின் பூருவபக்கத்து ஏழாந்திதி. இது ஓர் விரதநாள்.

மந்தார்த்தம்—சூரியனது மையத்திலிருந்து வேறொரு கிரகத்திற்குள்ள தூரஅளவு.

மந்திரி—சுக்கிரன், சோதிடன், புதன், வியாழன்.

மந்தோச்சம்—கிரகவட்டத்தின் தூரமானமுனை.

மயநூல் }
மயம் } சிற்பநூல் முப்பத்திரண்டினொன்று.

மயன்—சிற்பசாஸ்திரஞ் செய்த ஒரு தேவதச்சன்; இவன் காசிபமுனிக்குத் திதிவயிற்றிற் பிறந்தவன்.

மயிலை—மீனவிராசி.

மயில்—பஞ்சபட்சியினொன்று.

மயூகம்—கிரணம், பிரபை.

மரக்கால்—ஆயிலியம், சோதிநாள்.

மரணகண்டி }
மரணகண்டிகை } மாரககாலத்தைத் தெளிவுபெறக்கூறும் சோதிடநூல்.

மரணகண்டிதம்—மாரககால நிண்ணயம்.

மரணச்சனி — மூன்றுமுறையாக வரும ஏழரைநாட்டுச்சனி, மாரகச்சனி.

மரணத்தானம்—மாரகத்தானம்.

மரணயோகம்—ஒரு கெட்டயோகம். அது நாலாமிராசிமுதல் ஏழாமிராசிவரை ஏழு கிரகங்கள் நிற்பது. அன்றியும் கெட்டயோகம். விபரம்:—அமிர்தாதி யோகத்திற் காண்க.

மருங்கை—குழந்தை பிறந்த ஐந்தாநாள்.

மருத்துவநாள்—அசுபதிநட்சத்திரம்.

மருவகம்—இராகு.

மலமாதம்—இரண்டமாவாசை அல்லதுஇரண்டு பூரணை வரும்மாதம்.

மலை—இலக்கினம்.

மலைநட்சத்திரம் — அத்தம், இரேவதி, உத்திராடம், உத்திரட்டாதி, சித்திரை, திருவாதிரை, புனர்பூசம், பூராடம் என்பனவாம்.

மழைக்குறி—வைகாசிமாதம், தேய்பிறை சதுர்த்தசியில் மழைபெய்தால், அவ்வருடம் நல்ல மழையுண்டாம். சுக்கிரனிருக்கு மிராசிக்கு நாலு எட்டில் சனி நிற்கில் மழையுண்டாம், மத்தியில் பாவக்கோள் நிற்கில் மழையில்லை.

மழைக்குறிமூலங்கள் — மழைபெய்வதை அறியுங்குறிக்குஆதாரங்கள். அது அதிவெப்பம், இடி, காற்று, குளிர், மழைக்கால், மின்னல், மேகம், பரிவேடம், வானவில் என்பனவாம்.

மழைக்கோள்—சுக்கிரன்.

மறி—மேடவிராசி.

மறைத்தானம்—நாலாமிடம்.

மறையவன் } வியாழன்.
மறையோன் }

மறைவிடத்தானம் — இலக்கினத்துக்கு மூன்று, ஆறு, எட்டு, பன்னிரண்டாமிடங்கள்; அன்றியும் சூரியன், செவ்வாய், சனி, இராகு, கேது இவர்களுக்கு எட்டு, பனிரண்டாமிடங்களும், சந்திரன், புதன், வியாழமிவர்களுக்கு, மூன்று, ஆறு, எட்டு, பனிரண்டாமிடங்களும் சுக்கிரனுக்கு மூன்று, எட்டாமிடங்களுமாம்.

மனு—இலக்கினம்.

மனை — இரண்டாயிரத்து நானூறு குழிகொண்ட நிலம், பதினாறரையேயரைக்கால் குழிகொண்ட நிலம், வீடு.

மனைகோலுமாதங்கள் — வீடுகட்டு மாதங்களைக் காண்க.

மனையடிசாஸ்திரம் } மனையிலக்கணம், வீடு
மனையடிசாத்திரம் }

முதலியன கட்டும் விதிவிளக்கும் நூல். இதன் விபரங்களனைத்தையும் சிற்பநூற் பொக்கிஷமென்னும் புத்தகத்தில் விரிவாயறியலாம்.

மனையிலக்கணம் — வீடு முதலியன கட்டும் விதி; அது மனையை(தலைவன் கைமுழம் இரண்டுகொண்டது.) தச்சு முழத்தாலளந்து குழியாக்கி அந்தக் குழியை எட்டிற் பெருக்கி பனிரண்டிற் கழித்த மிச்சம் ஆதாயம்; ஒன்பதில் பெருக்கிப் பத்தில் கழித்த மிச்சம் செலவு, நாலில் பெருக்கி நானூறிற் கழித்த மிச்சம் வயது, எட்டு ஏழில் பெருக்கி இருபத்தேழிற் கழித்த மிச்சம் நட்சத்திரம், மூன்றில் பெருக்கி எட்டிற் கழித்த மிச்சம் யோனி, ஒன்பதிற் பெருக்கி ஏழிற் கழித்த மிச்சம் வாரம், ஒன்பதிற் பெருக்கி நாலிற் கழித்த மிச்சம் சாதி, நாலிற் பெருக்கி ஒன்பதிற் கழித்த மிச்சம் அம்சம், ஒன்பதிற் பெருக்கி முப்பதிற் கழித்த மிச்சம் திதி, இதில் பதினைந்துக்குட்பட்டால் வளர்பிறையாகவும், பதினைந்துக்கு மேல் தேய்பிறையாகவுங் கொள்க; நாலிற் பெருக்கி ஐந்திற் கழித்த மிச்சம் சூத்திரமாகக்கொள்ளவும், நாலிற் பெருக்கி பனிரண்டில் கழித்த மிச்சம் இராசி. இவற்றுக்கு யோனியாவன:—

ஒன்றுக்கு கெருடன், இரண்டிற்கு பூனை, மூன்றுக்கு சிங்கம், நாலுக்கு நாய், ஐந்துக்குப் பாம்பு, ஆறுக்கு எலி, ஏழுக்கு யானை, எட்டுக்கு முயல் எனக்கொள்க; இவற்றுள் பூனை, எலி, முயல் ஆகாவாம்,

## மனையிலக்கணம். | மன்மத.

அம்சம்-ஒன்றுக்கு சோரம், இரண்டுக்குப் புத்தி, மூன்றுக்கு சத்தி, நாலுக்கு தானியம், ஐந்துக்கு ராச்சியம், ஆறுக்கு கிலீபம், அல்லது பேடு, எழுக்கு வருத்தம், எட்டுக்கு ரோகம், ஒன்பதுக்கு சுபம். இவைகளில் ஒன்று, ஆறு, எழு எட்டு ஆகாவாம்.

சூத்திரம் - ஒன்றுக்கு பாலன், இரண்டுக்கு குமாரன், மூன்றுக்கு இராசன், நாலுக்கு கிழவன், ஐந்துக்கு மரணம். இவற்றுள் நாலு ஐந்து ஆகாவாம்.

வீட்டின் அகலத்தை ஒன்பது பங்காக்கி வலத்தில் ஐந்து பங்கு தள்ளி, நின்ற பங்கில் தெருவாசற்படி வைக்கவும், வலத்திலிரண்டு பங்கும் இடத்தில் மூன்றுபங்குந் தள்ளி நின்ற பங்கு நாலில் உள்முற்றமாக்க நன்று. இம்முற்றம் தென்வடல் நீளமாகிய சந்திரபத்தியாக வைப்பது விசேடமென்றும், கிழமேல் நீளமாகிய சூரியபத்தியாக வைப்பது மத்திமமென்றும் கூறுவாருமுளர்.

தானிருக்கு மனைக்குத் தெற்கில் குப்பைகொட்டவும், தென்மேற்கில் வைக்கோல்போர் கட்டவும், மேறகில் எருமைத்தொழு இடவும், வடமேற்கிற் தானியக் களஞ்சியம் அமைக்கவும், வடக்கில் பசுத்தொழுவங் கட்டவும், வடகிழக்கில் அடுக்களை வீடுகட்டவும், கிழக்கில் ஆட்டுக்கொட்டில் கட்டவும், தென்கிழக்கிற் பொக்கிஷவீடியற்றவும் நன்றாம். மற்றும் கிழக்கில் குளிக்குமிடமும், அக்கினியிற் சமைக்குமிடமும், தெற்கில் படுக்கைவீடும், நிருதி மூலையில் சாத்திரமுதலியன வைக்குமிடமும், மேற்கில் போசனஞ் செய்யுமிடமும், வாயுமூலையில் பசுத்தொழுவமும், வடக்கில் தனதானியவீடும், ஈசானியத்தில் பூசைவீடும் அமைக்கவும் நன்றாம்.

சந்திரனின்ற லக்கினத்தில் அஸ்திபாரம்(அடிப்படை)செய்து புதன்நின்ற லக்கினத்திற் கட்டி, சுக்கிரன்நின்ற லக்கினத்தில் வேய்ந்து (வீடுமூடி), குருநின்ற லக்கினத்திற் கிரகப்பிரவேசஞ் செய்தால் இந்திரபோக முண்டென்பதாம்.

உதாரணம்:—மதியுதிக்கக் கால்நாட்டி மாலுதிக்கக் கட்டி, விதிவெள்ளி தானுதிக்க வேய்ந்து—பதிதனிலே, மந்திரி தானுதிக்க மாடங் குடிபுகுந்தால், இந்திரன்போல் வாழ்ந்திருக்க லாம். என்னுஞ் செய்யுளாலு முணர்க.

மனைவித்தானம்—எழாமிடம்.

மனோகாரகன்—சந்திரன்.

மன்மத — இருபத்தொன்பதாவது வருடம்.

ம்ன்மதவருடப்பலன்—நல்ல மழையும், மனிதர்கட்கியைந்த எல்லாவகைப்பொருள்களும் விர்த்தியும் நானாவித சீவவர்க்கங்கள் சுகவாழ்வும் அடையும். ஆயினும் சீனமுதலிய தேசங்களில் அரசர்களுக்குள் கலகங்களும், இந்தியாவின் தென்பாகத்தில் அதிகக்காற்றும், தேன்முதலிய வனாந்திரப் பொருள்கள் குறைவு முண்டாம்.

உதாரணம்;—மன்மதத்தில் மாரியுண்டு வாழுமுயி ரெல்லாமே, நன்மைமிகும் பல்பொருளும் நண்ணுமே - மன்னவரால், சீனத்திற் சண்டையுண்டு தென்றிசையிற் காற்றுமிகும், கானப் பொருள்குறையுங் காண்.

(இடைக்காடர்)

மன்னன்—அரசன், ஆடவர் பருவத்தொன்று, இது முப்பத்திரண்டுக்கு மேல் நாற்பத்தெட்டுக்குட்பட்டது, உத்திரட்டாதி நட்சத்திரமுமாம்.

## மா

மா—இருபதில் ஒரு பகுதிகொண்ட ஒரெண்.

மாகண்டம் — அதிகண்டம், இது யோகம் இருபத்தேழினொன்று.

மாகம் — ஆகாயம், மகநட்சத்திரம், மாசிமாதம்.

மாகலி—சந்திரன்.

மாகாணி — பதினாறிலொருபங்கு கொண்ட எண்.

மாகேந்திரம்—நித்தியயோகத் தொன்று.

மாகேந்திரப்பொருத்தம் — மணப்பொருத்தத்தொன்று. அதுபெண் நட்சத்திர முதல் ஆண் நட்சத்திரம் நாலு, ஏழு, பத்து, பதின்மூன்று, பதினாறு, பத்தொன்பது, இருபத்திரண்டு, இருபத்தைந்து ஆனால் உத்தமமென்பதாம்.

மாசதிசை — ஒருமாத அளவுக்குள் நடக்குங் கிரகதிசை. அவை சென்மநட்சத்திர முதற்கொண்டுமாதம் பிறந்த நட்சத்திரம் வரைக்கும் எண்ணிய தொகையை எழில் பெருக்கி ஒன்பதில் கழித்த மிச்சம் 1-க்கு சூரியதிசை, 2-க்கு புததிசை, 3-க்கு இராகுதிசை, 4-க்கு குருதிசை, 5-க்கு கேதுதிசை, 6-க்கு சந்திரதிசை, 7-க்கு சனிதிசை, 8-க்கு சுக்கிரதிசை, 9-க்கு செவ்வாய்திசை என்பதாம்.

மாசதிசையின் காலங்கள் — சூரியதிசை நாள் ஒன்றரை, புதன்றிசை நாள் நாலேகால், இராகுதிசை நாள் நாலரை, குருதிசை நாள் நாலு, கேதுதிசை நாள் ஒன்றே முக்கால், சந்திரதிசை நாள் இரண்டரை, சனிதிசை நாள் நாலேமுக்கால், சுக்கிரதிசை நாள் ஐந்து, செவ்வாய்திசை நாள் ஒன்றே முக்கால் என்பதாம்.

| மாதசூன்யம். | மாதபலன். |
|---|---|

மாசதிசையின் பலாபலன் — சூரிய திசையில் அலேச்சல், தலைவலி, பகை, புதனில் பந்துக்கள் வரவு, சுகம், ஆலயதரிசனம், ராகுவில் துர்ச்சனர் நேசம், விபசாரதோசம், விரோதம், குருவில் சுகபோஜனம், தானியலாபம், வாகனயோகம், கேதுவில் சரீரபீடை, விபசாரதோசம்; சந்திரனில் தனலாபம், தேய்பிறையானல் தனநஷ்டம்; சனியில் களத்திரபகை, புண்ணோய், கலகம், சுக்கிரனில் இரத்தின லாபம், செவ்வாயில், கலகம் என்பதாம்.

இப்பலாபலன்களைக் கோசரத்தையனுசரித்துக் கண்டுகொள்க.

மாசத்தியாச்சியம் — மாதக்கழிவு.

மாசப்பிரவேசம் — மாதப்பிறப்பு. இது இராசியிற் சூரியன் பிரவேசித்தல்.

மாசமானம் — வருடம்.

மாசம் — மாதம், மாதத்திற்காண்க.

மாசாந்தம் — அமாவாசை, மாதத்தின் கடைசி.

மாசி — கும்பரவி, கும்பராசி, மகநட்சத்திரம், மாகம், மேகம்.

மாசிமகம் — மகாமகத்திற் காண்க.

மாதசங்கிரமம் — மாதப்பிறப்பு.

மாதசூன்யம் — ஒவ்வொரு மாதத்திலும் இன்ன இன்ன திதி, நட்சத்திரம், இராசி ஆகிய இவைகள் வரில் சூனியமென்பது. விபரம்;— சித்திரையில் அஷ்டமி, ஏகாதசி, ரோகணி, கும்பம்ஆகியவைகளும், வைகாசியில் துவாதசி, சித்திரை, சோதி, உத்திராடம், மீனம் ஆகியவைகளும், ஆனியில் திரயோதசி, புனர்பூசம், இடபம் ஆகியவைகளும், ஆடியில் சஷ்டி, அவிட்டம், மிதுனம் ஆகியவைகளும், ஆவணியில் அமாவாசை, பூரணை, பூராடம், மேடம் ஆகியவைகளும், புரட்டாசியில் சத்தமி, சதையம், பூரட்டாதி, ரேவதி, கன்னி, தனுசு ஆகியவைகளும்,ஐப்பசியில் நவமி, பூரட்டாதி, விருச்சிகம் ஆகியவைகளும், கார்த்திகையில் பஞ்சமி, கார்த்திகை, பூசம், மகம், துலாம் ஆகியவைகளும்,மார்கழியில் துதியை, நவமி, அனுசம், உத்திரட்டாதி, விசாகம், தனுசு ஆகியவைகளும், தையில் பிரதமை, அஸ்தம், திருவாதிரை, ஆயிலியம், கடகம் ஆகியவைகளும், மாசியில் சதுர்த்தி, தசமி, மூலம், திருவோணம், மகரம் ஆகியவைகளும், பங்குனியில் சதுர்த்தி, பரணி, கேட்டை, சிங்கம் ஆகிய இவைகளும் சுபகாரியங்களுக்கு விலக்காம்.

மாதபலன் — மாதம் பிறந்த நட்சத்திரத்தைக்கொண்டு சுகதுக்கமறிவது. விபரம்;— சென்மநட்சத்திர முதல் மாதம் பிறந்த நட்சத்திரம் வரை எண்ணிக்கண்ட தொகையை எழிற்பெருக்கி எட்டிற் கழித்த மிச்சம் 1-க்கு பிணி, 2-க்கு

கின்ற ராசிக்குத் திரிகோணத்தில் சனிவருங்காலமு மாரகமாம்.

இரண்டாமிடத்தில் பாபக்கிரகங்களிருக்க அல்லது பார்க்க இலக்கினுதிபதியும், வியாழனும் பாபக்கிரகங்களும் ஒரே இராசியிலிருக்க எட்டில் இராகுவிருக்க விஷத்தினுல் மாரகமாம்.

மாரிகாலம் — ஐப்பசி, கார்த்திகையின் பருவகாலம்.

மாரிக்குடா—வடகீழ்த்திசை.

மாரிநாள்—உத்திரநட்சத்திரம், மழைகாலம்.

மார்பு—ஐந்தாமிடம்.

மார்கழி — மார்கழிமாதம், மார்க்கசிரம், மிருகசீரிட நட்சத்திரம்.

மார்க்கசிரம் } மார்க்கம் } மார்கழி மாதம்.

மார்த்தண்டம்—சூரியனுடைய மண்டலம்.

மார்த்தாண்டன்—சூரியன்.

மார்பதை—மாதம்.

மாலதி—இரவு, சந்திரகிரணம்.

மாலவன்—புதன்.

மாலி—ஆதித்தன்.

மாலிகாயோகம்—ஒரு விசேட நல்லயோகம். அது இலக்கின முதல் ஏழு ராசிவரையில் இராகு கேது நீங்கிய ஏழு கிரகங்கள் நிற்பதாம். (2) நாலாமிடமுதல் பத்தாமிடம் வரை இராகு கேது நீங்கிய ஏழு கிரகங்கள் நிற்பதாம்.

மாலை—அந்திப்பொழுது, இரா.

மாலைக்காதம்—மாலைநேரம்.

மாலைப்பொழுது—அந்திக்காலம்.

மாலைவாரம்—அந்திப்பொழுது.

மாலைவெள்ளி—அந்திவெள்ளி.

மாலோன் } மால் } புதன்.

மாழ்கு—மிருகசீரிடநட்சத்திரம்.

மாளயபக்கம் } மாளயபட்சம் } புரட்டாசி மாதம், அமரபக்கத்துப் பிரதமை முதல் பூருவபக்கத்துப் பிரதமை மட்டு முள்ள காலமாம்.

மாளவயோகம்—இரு பாம்பு மதி இரவி ஆகியவர்கள் நீங்கிய பஞ்சக்கிரகங்கள் ஆச்சியுச்சமிவைகளிற் கேந்திரித்து நிற்பதாம். (2) சுக்கிரன், மூலத்திரிகோணம், ஆச்சி, உச்சம், கேந்திரம், உதயமிவைகளில் நிற்பதாம்.

மானபோதம்—சிற்பநூல் முப்பத்திரண்டினென்று.

மானம்—அளவு, கணிதம்.

மானேந்தி—சந்திரன்.

மானேறு—உத்திரநட்சத்திரம், மகாவிராசி.

மான்—மகாவிராசி.

மான்றலை—மிருகசீரிடநாள்.

## மி

மிகிரன்—சந்திரன், சூரியன்.

மிதுனஉருவம்—ஆணும் பெண்ணுஞ் சேர்ந்த இரட்டையுருவம்.

மிதுனதிக்கு—கிழக்கு.

மிதுனநிறம்—கறுப்பு.

மிருகயோகம். மிருதவேளை.

மிதுனம்—இரட்டை, சயமகள், தண்டு, பாடவள், பாடவை, யாழ், விழவு.

மிதுனமாதம்—ஆனிமாதம்.

மிதுனரவி — ஆனிமாதம், மிதுனத்தில் சூரியன் கிற்றல்.

மிதுனவீதி—சூரியன் வீதியினென்று. அது தனுசு,மகரம், கும்பம், விருச்சிகம் என்பனவாம்.

மிதுனுங்கம்—கழுத்து.

மித்திரநாள்—அனுடநட்சத்திரம்.

மித்திரன் — சிநேகிதன், பன்னிரு சூரியருளொருவன், நாலாமிரேவதி, சூரினுக்கும் பெயர்.

மித்துரு—சினேகிதன்.

மித்துருத்தானம்—இலக்கினத்திற்கு நாலாமிடம், நட்பு, வீடு.

மிருகசிரம்—மிருகசீரிடம்.

மிருகசீரிஷம் } இந்திரன்,ஐந்தானம்,
மிருகசீரிடம் } நரிப்புறம், பாலை, பேராளன், மதிநாள், மார்கழி, மாழ்கு, மான்றலை, மும்மீன், வெய்யோன் என்பனவாம்.

மிருகதரன்—சந்திரன்.

மிருகம்—மிருகசீரிடம்.

மிருகயோகம்—ஒரு நல்ல யோகம். அது எட்டோன் நின்ற அங்கிசாதிபன் சுபக்கோளோடு பாக்கியத்திருக்க பாக்கியாதிபதி யுச்சம் பெற்று நின்றாலும்,

(2) விரையாதிபன் ஆச்சிபெற அட்டமாதிபன் நாலு, பனிரண்டு இவைகளிலிருக்க பாக்கியாதிபன் பார்வைபெற்று நின்றாலும் இவ்யோகமாம்.

மிருகலாஞ்சனன்—சந்திரன்.

மிருகாங்கம்—காற்று, சந்திரன்.

மிருகாங்கன்—சந்திரன்.

மிருதங்கயோகம்—ஒரு நல்ல யோகம். அதுஇலக்கினுதிபதியின் அங்கிசாதிபதி அமிசையில் அமிசை பெற்றிருக்கின்றானே அதற்குடையவன் உச்சகேந்திரகோணத்தில் சுபக்கிரகத்துடன் கூடி நின்றாலும்,

(2) செவ்வாய் ஆச்சிபெற்று அமிசையில் உச்சாங்கிஷம் பெற்று நிற்க வியாழன் ஏழாம் நோக்குப் பெற்று நின்றாலும்,

(3) ஐந்தோன் நின்ற அங்கிசாதிபன் கேந்திர கோணத்திலாவது அல்லது உச்சாங்கிசத்திலாவது நின்றாலும்,

(4) சூரியன், செவ்வாய் ஆகிய இவர்கள் ஆறு, எட்டில் நிற்க சூரியன் நின்ற அங்கிசத்துக்கு சனி கேந்திர கோணத்தில் இருந்தாலும்,

(5) இலாபாதிபன் உச்சமாய் சுக்கிரனோடு நிற்க இவர்களிருந்த இராசியாதிபர் கேந்திரத்தில் நின்றாலும் இவ்யோகமாம்.

மிருதண்டன்—சூரியன்.

மிருதவேளை—பூர்வான்னமாகியஆறு நாழிகைக்குள் மேடமும், விருச்சிகமும் ஆறு நாழிகைக்குமேல்

பரான்னமாகிய பனிரண்டு நாழிகைக்குள் கன்னி, கடகம், மிதுனம் ஆகியவைகளும் பனிரண்டுக்குமேல் மத்தியான்னமாகிய பதினெட்டு நாழிகைக்குள் சிங்கமும், கும்பமும், பதினெட்டு நாழிகைக்குமேல் அபரான்னமாகிய இருபத்துநாலு நாழிகைக்குள் இடபமும், துலாமும், இருபத்துநாலு நாழிகைக்கு மேல் சாயான்னமாகிய முப்பது நாழிகைக்குள் மகரம், மீனம் ஆகிய இவைகள் வருவதாம்.

மிருதாகாரம்—இடி.

மிருதாண்டன்—சூரியன்.

மிருத்தியபுத்திரன்—கேது.

மிருத்தியதிசை—மிருத்துதிசை, மரணதிசை.

மிருத்தியூ—இயமன், மரணம்.

மிருத்து—பூமி, மண், மரணம்.

மிருத்துகாரகன் } மாரகஞ்செய்யுங்கிரகம்.
மிருத்துகிரகம் }
மிருத்துகோள் }

மிருத்துதிசை—சென்ம நட்சத்திரத்துக்கு மூன்றாவது நட்சத்திரதிசை.

மிருத்துநட்சத்திரம் } மிருகசிரம், சித்திரை, அனுடம், இரேவதி.
மிருத்துநாள் }

மிருத்துநிலை—மிருத்துகிரகநிலை.

மிருத்துபஞ்சகம் — பஞ்சக பலனிலொன்று. அது மரணபயம்.

மின்னல்—மின், வானத்திலெழுஞ் சோதி.

## மீ

மீ—ஆகாயம், மேல்புறம்.

மீனஅங்கம்—பாதம்.

மீனஉருவம்—மீன்.

மீனச்சுதி—[illegible], மார்ப்பான்.

மீனத்திசை—வடக்கு.

மீனநிறம்—பச்சை.

மீனமாதம்—பங்குனிமாதம்.

மீனம்—சலசரம், சலசலம், மச்சம், மயிலை, மீன்.

மீனயோகம் — இலாபாதிபனுடன் வெள்ளி கூடி யுச்சம்பெற்றும், இலக்கினாதிபன் கேந்திரம் பெற்றும் நிற்பதாம்.

மீனரவி—மீனத்தில் சூரியனிற்றல், பங்குனிமாதம்.

மீன்—சித்திரை நட்சத்திரம், நட்சத்திரப்பொதுப்பெயர், மீனவிராசி.

மீன்சுவை—சித்திரை நட்சத்திரம்.

## மு

முகம்—இரண்டாமிடம்.

முகில்—மேகம்.

முகிவுகாலம்—மரணகாலம், முடிவுகாலம்.

முகூர்த்தபலன்—முகூர்த்தநயம்.

முகூர்த்தம்—இரண்டு நாழிகைகொண்ட நேரம், இரண்டரை நாழிகைகொண்டதென்பாருமுளர். சுபவேளை, நற்காலம், மூன்றேமுக்கால் நாழிகை கொண்டதுமாம்.

முண்டீரபாதி. முப்பிணிக்கோள்.

முகூர்த்தத்திரயம்—உதயம், மத்தியானம், அத்தமனம்.

முகூர்த்தவிசேடம்--முகூர்த்தபலன்.

முக்காலம் — மூன்றுகாலம்; அது இறந்தகாலம், எதிர்காலம், நிகழ்காலம் என்பனவாம்.

முக்காணேர்க்கு — கிரகநோக்கினென்று.

முக்குணம் — மூன்றுகுணம், அது இராசதம், சாத்வீகம், தாமதம் என்பனவாம்.

முக்குளம்—பூராடநட்சத்திரம்.

முக்கூட்டு—பரணிநட்சத்திரம்.

முக்கோணம் — மூன்றுமூலை, திரிகோணம்.

முக்கோல் — திருவோண நட்சத்திரம்.

முசலயோகம்—ஒரு நல்ல யோகம், அது பத்தில்பாம்பிருக்க பத்தாதிபனுச்சம்பெற்று சனிபார்வையோடிருந்தாலும்,

(2) இராகு கேது நீங்கிய எழு கிரகங்கள் திரராசியில் நின்றாலும் இவ்யோகமாம்.

முசலி—சந்திரன்.

முச்சுடர்—சந்திரன், சூரியன், தீ.

முடவன்—அருணன், சனி.

முடி—இலக்கினம்.

முடிவுகாலம்—யுகாந்தகாலம்.

முண்டகநாயகன் } சூரியன்.
முண்டகபதி }

முண்டன்—இராகு.

முண்டீரபாதி—சூரியன்.

முதலெழுஞ்சனி—மகம்.

முதனாள்—அசுபதி நட்சத்திரம், தலைநாள், முந்தின நாள்.

முதிர்வயது—கிழப்பருவம்.

முதிர்வேனிலுரிமை—கோடைக் காற்று வீசலும் கானல் தோன்றலும் காடை, வலியான், வானம்பாடி, காகம், கவுதாரி இவைகள் மகிழ்தலும், மல்லிகை, புளி, பாதிரி இவைகள் மலர்தலும், பாலை, காஞ்சிரம், நாவல், இலுப்பை இவைகள் காய்த்தலுமாம்.

முதிர்வேனில் — ஆனி, ஆடியின் பருவம்.

முதீ—சந்திர கிரணம்.

முதுநீர்ச்சடங்கு—சீமந்தச் சடங்கு.

முதுமகன்—சனி.

முதுவேனில்—ஆனி, ஆடியின் பருவம்.

முத்தி—திசை, பிறப்பு, சாவு.

முத்தித்தானம்—பனிரண்டாமிடம்.

மூத்தொகைவினை—ஒருவகைக் கணக்கு.

முந்திரி—ஒரு சிற்றிலக்கம். அது முன்னூற்றிருபது பாகத்தொன்று.

முந்திரிகை—ஒரெண்,

முந்தைநாள்—முதனாள்.

முப்பிணிக்கிரகம் } மூவகைப்பிணிக்குள்ள கிரகம்.
முப்பிணிக்கோள் }

அது வாதக்கிரகம், பித்தக்கிரகம், சிலேத்துமக்கிரகம் என்பனவாம்.

மும்மண்டலம்—பூமி, அந்தரம், சுவர்க்கம். அன்றியும் அக்கினிமண்டலம், ஆதித்தமண்டலம், சந்திரமண்டல மென்பதுமாம்.

மும்மீன்—மிருகசீரிடம்.

மும்மை—முக்காலம், மூன்றாயிருக்குந் தன்மை, மூன்று.

முயலின்கூடு—சந்திரன்.

முயல்—முசல், இது வடகீழ்த்திசைப் பாலன்குறி.

முயற்களங்கம்—சந்திரகளங்கம்.

முயற்காதிலை } சந்திரன்.
முயற்கூடு }

முயற்றிசை—வடகீழ்த்திசை.

முரசு—உத்திரட்டாதி நட்சத்திரம்.

முல்லைமுதற்பொருள்—புறவும், புறவுசார்ந்த இடமும், கார், மாலை என்னும் பெரும்பொழுது, சிறுபொழுது என்பதுமாம்.

முழுநா } அறுபது நாழிகை, அல்லது இருபத்துநான்கு ஓரை, அல்லது இருபத்துநாலு மணி கொண்ட நேரம், இராசிக்குப்பங்குபடாநட்சத்திரம். இது அசுபதி, பரணி, ரோகணி, திருவாதிரை, பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சுவாதி, அனுசம், கேட்டை, மூலம், பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி என்பனவாம்.
முழுநாள் }

முழுநோக்கு—பூரணபார்வை, முழுப்பார்வை.

முழுமதி—பூரணசந்திரன்.

முழுமதிக்குடையோன்—சந்திரன்.

முழுமனை—அறுபதடி நீளமும் நாற்பதடி யகலமுங் கொண்ட நிலம்.

முளரிப்பகை—சந்திரன்.

முறம்—விசாகநட்சத்திரம்.

முறைதெரிந்தோன் — சிற்பசாஸ்திரி.

முற்குளம்—பூராடநட்சத்திரம்.

முற்கூறு—முற்பாகம்.

முற்கொளுங்கோல் — பூரட்டாதி நாள்.

முற்சனி—மகநட்சத்திரம்.

முற்சாமம்—முதற்சாமம்.

முற்பகல்—ஒரு பகலின் முற்பகுதி, பதினைந்து நாழிகை, அல்லது ஆறு ஓரை கொண்ட நேரம், ஆறு மணிகொண்ட காலமுமாம்.

முற்பக்கம் } பூருவபட்சம், வளர்பிறை.
முற்பட்சம் }

முற்பனி — மார்கழி தை மாதங்களின் பனி.

முற்பால்—முற்கூறு.

முற்றில்—விசாகநட்சத்திரம்.

முற்றும்—மூலநட்சத்திரம்.

முன்பக்கம்—பூருவபட்சம்.

முன்பனி—மார்கழி தை மாதங்களின் பருவம்.

முன்பனியுரிமை—கொண்டல் வீசலும், தூக்கணான், கூகை, ஆந்தை இவை மகிழ்தலும், மாவும், சிவந்தியு மலர்தலும் இலந்தை பழுத்தலும், செந்நெல் விளைதலும், கரும்பு முதிர்தலுமாம்.

முன்னிரவு, முன்னிரா } இரவின் முற்பகுதி, சூரியன் அத்தமித்து பதினைந்து நாழிகை, அல்லது ஆறு ஓரை, அல்லது ஆறுமணி நேரங்கொண்ட காலம்.

முன்னிருட்டு—முன்னிரவினிருள்.

முன்னிலவு—முன்னிரவின் நிலவு.

## மூ

மூக்குத்தானம்—இரண்டாமிடம்.

மூக்குசாத்திரம்—சரநூல்.

மூடம்—மந்தாரம்.

மூதிரை—திருவாதிரை நட்சத்திரம்.

மூரி—இடபம்.

மூர்த்தம்—முகூர்த்தம்.

மூலக்கிரகம், மூலக்கோள் } சுக்கிரன், சூரியன். அது மாஞ்செடி முதலியவைகட்குரியவை.

மூலத்தம்பம்—சிற்பநூல் முப்பத்திரண்டினொன்று.

மூலத்திரிகோணம் — சூரியனுக்குச் சிங்கமும், சந்திரனுக்குக் கடகமும், செவ்வாய்க்கு மேடமும், புதனுக்குக் கன்னியும், குருவுக்குத் தனுசும், சுக்கிரனுக்குத் துலாமும், சனி ராகுவுக்குக் கும்பமும், கேதுவுக்குச்சிங்கமும், குளிகனுக்கு மீனமுமாம்.

மூலத்துருவம்—கிரகவீதியின் மூலநீள அளவு.

மூலநட்சத்திரம், மூலநாள் } அசுரநாள், அன்றில், ஆனி, குருகு, கொக்கு, சிலை, தேக்கடை, வில் என்பனவாம்.

மூலம்—மூலநட்சத்திரம். எந்தத் தொகையாற் பெருக்கப்படுகிறதோ அந்தத்தொகைக்கும் பெயர்.

மூலராசி—திரராசி நாலு. அது இடபம், சிங்கம், விருச்சிகம், கும்பம் என்பனவாம்.

மூலைச்சூலம்— வாரசூலத்தொன்று. அது திங்கள் சனி தென்மேற்கு, வியாழம் வடமேற்கு, வெள்ளி ஞாயிறு வடகிழக்கு, செவ்வாய் புதன் தென்கிழக்கு என்பதாம்.

மூன்றாம்பிறை—பங்குனி சித்திரை தென்கோடுயர்ந்தும், வைகாசி முதல் மார்கழி வரை வடகோடுயர்ந்தும், தையும் மாசியும் சமனுமிருக்கவேண்டும், இல்லாவிடில் கலகமும் பஞ்சமுமுண்டாம்.

உதாரணம்;— மீனுடு தெற்குயர மிக்கெட்டு மேவடக்காம், தானேமான் கும்பஞ் சரியாக-மானேகேள், சொன்னபடி சோமனிரானெனிலோ கோன்மடிவான், அன்னமரி தாகிவிடு மாம் என்னுஞ் செய்யுளாலு மறிக.

மூன்றாமிடத்தின் காரகப்பேர்—வல்லமை, கீர்த்தி, விஜயம், வெற்றி, பராக்கிரமம், தைரியம், சகோதரம், காவியம், அடிமை, வலதுகாது, ஆயுள், ஆபரணம், சேவகாவிருத்தி, வலதுகன்னம், பலதேச வர்த்தமானம், கேள்வி முதலியனவாம்.

# மெ

மெய்—இலக்கினம், சந்திரலக்கின மூமாம்.

மெய்ப்பிரம்—மேகம்.

மெய்யுவமம்—சூரியப்பிரகாசம்.

# மே

மேககாலம்—கார்காலம்.

மேககர்ச்சனம்—இடி.

மேகதீபம்—மின்.

மேகபூதி—இடி.

மேகமண்டலம்—மூகின்மண்டலம்.

மேகயோகம் — ஒரு நல்லயோகம். அது வியாழனுக்கு மூன்றில் வெள்ளியும், வெள்ளிக்கு ஒன்பதில் சூரியனும், பத்துக்குடையவன் நாலிலுமிருப்பதாம்.

மேகவிரோதி—பெருங்காற்று.

மேகாகமம்—கார்காலமழை.

மேகோற்பத்தியிடம் — இன்ன கிரகம் மேகாதிபதியானல் இன்ன திக்கில் மேகோற்பத்தியென்பது. அது சூரியனகில் கிழக்கிலும், சந்திரனுகில் தென்மேற்கிலும், செவ்வாயாகில் தெற்கிலும், புதனுகில் வடக்கிலும், வியாழனுகில் வடகிழக்கிலும், வெள்ளியாகில் தென்கிழக்கிலும், சனி யாகில் மேற்கிலு மேகவுற்பத்தி என்பதாம்.

மேக்கு—மேற்கு.

மேகசம்—இருள், முகில்.

மேசம்—ஆடு, உதள், கொறி, தகர், மறி, மேடம், மை, யாடு, வருடை என்பனவாம்.

மேடகம்—மேடம்.

மேஷமதி
மேடமதி
மேஷமாதம்
மேடமாதம் } சித்திரைமாதம்.

மேடம்—மேசவிராசி, மேசத்தைக் காண்க.

மேடவுருவம்—வெள்ளாடு.

மேடச்சாதி—சத்திரியன், வெள்ளாளன்.

மேடத்திக்கு—கிழக்கு.

மேடநிறம்—செவப்பு.

மேடரவி—சித்திரைமாதம், மேடத்தில் சூரியனிற்றல்.

மேடவிடபம்—மேடாயனம்.

மேடவீதி — சூரியவீதியினென்று. அது இடபம், சிங்கம், மிதுனம், கடகம் என்பனவாம்.

மேடாங்கம்—தலை.

மேடாயனம்
மேஷாயனம் } சூரியனிடபவிராசியினின்று கற்கடக விராசிக்குச் செல்லும்பாதை, உத்தராயணமூலம்.

மேதினியோகம்—ஒரு சமயோகம். அது ஐந்து, ஒன்பது, ஏழு, பத்து இவைகளில் சுபர்களிருக்க, பாவர் நோக்கில்லாதிருப்பதாம்.

மேதை—புதன்.

மேரு—இலக்கினம், பூமிக்கு நாராசம்போல் தென்துருவ முதல் வடதுருவம் வரை உள்ளே மூளை

த்து வடதுருவத்தில் வளர்ந்திருக்கும் மலே, வடதுருவஞ் சுமேருவென்றும், தென்துருவங்குமேருவென்றும், வடவாமுகமென்றுங் கூறப்படும். சுமேருவை சாதாரணமாக மேருவென்று வழங்கப்படும். இந்த மேருப்பிரதேசத்திலிருப்பவர்களுக்கு உத்தராயண காலமாகிய ஆறுமாதம் பகலும், தெட்சணயன காலமாகிய ஆறு மாதம் இரவுமாகும்.

மேலே—மேல்,மேற்கு,வருங்காலம்.

மேலேத்திசை—மேற்றிசை.

மேலேநாள்—முன்னுள்.

மேல்—ஆகாயம்,மேற்கு, மேற்புறம், வருங்காலம்.

மேல்காற்று—கோடைக்காற்று.

மேல்கை—மேற்கு.

மேல்நோக்குக்கிரகம் } மேல்நோக்குக்கோள் } மேற்பார்வையுள்ள கிரகம். அது சூரியன்.

மேல்பார் } மேல்பால் } மேற்கு.

மேல்வாய்—ஒன்று முதலாய் மேற்பட்ட கணக்கு,

மேற்கு—மேல், மேற்றிசை.

மேற்கோள்—சனி.

மேற்றிசை—மேற்குத்திக்கு.

மேற்றிசைப்பாலன்—வருணன்.

மேனெக்குநட்சத்திரம் } மேனெக்குநாள் } ஆயிலியம் கார்த்திகை, பரணி, பூரம், பூராடம், பூரட்டாதி, மகம், மூலம், விசாகம் என்பனவாம்.

மேனெக்குராசி—மகரம், மீனம்.

## மை

மை—இருள், மேடவிராசி,

மைதுனம்—மிதுனம்.

மைனம்—மீன்.

## மொ

மொத்தம் } மொத்தளம் } தொகை.

## மோ

மோககாரகன் } மோககாரன் } சுக்கிரன்.

மோக்கம் } மோட்சம் } இலக்கினத்திற்குப் பனிரண்டாமிடம்.

மோனம்—உரோகணிநட்சத்திரம்.

## ய

யக்காராத்திரி — கார்த்திகை மாதத்தில் வரும் பௌரணை; இது ஓர் விரதநாள்.

யக்கியசாழிகை—மகநட்சத்திரம்.

யக்கியம்—துவாபரயுகம்.

யமகண்டம் — எமகண்டம்; இது விலக்கப்பட்ட வேளேகளிலொன்று.

யமதேவதை—பரணிநட்சத்திரம்.

யமம்—இயமம், சனி.

யமன்—அட்டதிக்குப் பாலகருளொருவனுகிய தென்றிசைக்குடையோன்.

யமுனுசனகன்—சூரியன்.

யவயோகம்—ஒரு நல்ல யோகம். அது ஒன்றும் ஏழாமிடங்களிற்

பாவரும், நாலுபக்கத்திற் சுபரும், மற்றவிடத்திற் கிரகமில்லாதிருப்பதுமாம்.
யவனகாவியம்—ஓர் சோதிடநூல்.
யவனாசாரியன்—ஓர் சோதிட அறிஞன்.

## யா

யாடு—மேடவிராசி.
யாண்டு—வருடம்.
யாத்திரைத்தானம்—ஏழாமிடம்.
யாத்திரைநாள்—திங்கள், புதன், வியாழம், வெள்ளியும், துதிகை திருதிகை, பஞ்சமி, சத்தமி, தசமி, திரயோதசியும், அசுபதி, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், அத்தம், அநுசம், திருவோணம், அவிட்டம், இரேவதி ஆகிய இவைகளும் உத்தமமாம். உத்திரம், உத்திரட்டாதி இவைகள் மத்திமமாம். கரணங்களில் பத்திரவாகரணம் ஆகாது; இலக்கினங்களில் இடபம், மிதுனம், கடகம், சிங்கம், துலாம், தனுசு, மகரம், மீனம் இவைகள் சுபமாம்; யாத்திரைக்கு முக்கியமாய் யோகினி வாரசூலை இவைகள் பார்க்கவேண்டுமென்பதாம்.
யாமகோடம்—நாழிகைவட்டம்.
யாமநீ—இரவு.
யாமபதி—சந்திரன்.
யாமம்—இராத்திரி, சாமம், தெற்கு, மாலைப்பொழுதின் பின் பத்து நாழிகை.
யாமவதி—இராத்திரி.
யாமி—இரவு, தெற்கு.
யாமிகை—இரவு.
யாமிநீபதி—சந்திரன்.
யாமியம்—தெற்கு.
யாமியாயனம்—தெட்சணாயனம்.
யாமியை } இரவு.
யாமினி }
யாமினியம்—தெற்கு.
யாமீரன்—சந்திரன்.
யாமீரை—இரவு.
யாமை—இரவு, தெற்கு, பரணி.
யாழ்—அசுபதிநாள், திருவாதிரை, மிதுனவிராசி.
யாளி—சிங்கவிராசி.
யானைத்திசை—வடக்கு.

## யு

யுகங்கள்—கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்பனவாம். இதன் வருடங்கள் கிரேதாயுகத்திற்கு பதினேழு லட்சத்து இருபத்தெண்ணாயிரம், திரேதாயுகத்திற்கு பனிரண்டு லட்சத்துத் தொண்ணூற்றாறாயிரம், துவாபாயுகத்திற்கு எட்டு லட்சத்து அறுபத்துநாலாயிரம், கலியுகத்திற்கு நாலுலட்சத்து முப்பத்தீராயிரம். மற்றவிபாம் காலத்திலறிக.
யுகசந்தி—கிரேதாயுகத்திற்கு தேவ வருடம் எண்ணூறும் மற்ற யுகங்களுக்குத் தனித்தனியே இருநூறு வருடங்களுமாம்.

யுகப்பிரளயம்—யுகாந்தம்.

யுகமுடிவு—உலகமுடிவு.

யுகம் — இரண்டு, ஒருகாலத்தளவு, நாலு முழங்கொண்ட நீளம், பூமி, யுகங்களுக்கும் பேராம்.

யுகயோகம்—இராகு கேது நீங்கிய சூரியனாதி எழுவரும் இரண்டு ராசியில் நிற்பதாம். இது ஒரு கெட்ட யோகம்.

யுகளம் } இரண்டு.
யுகளி }

யுகாதி—வருடாரம்பம்.

யுகாந்தம்—உலகமுடிவு, யுகமுடிவு.

யுக்மம் } இரண்டு.
யுதகம் }

யுத்தத்தானம்—ஆறுமிடம்.

யுவ—ஒன்பதாவது வருடம்.

யுவதி—பதினறுவயதுப்பெண்.

யுவவருடப்பலன் — நல்லமழையும், நன்செய் விளைவும், நவதானிய விருத்தியும், எல்லாப்பிராணிகளுக்குஞ் சுகமும், விசேடமாகப் பசு விருத்தியும், மனிதர்களுக்குக் குறைவில்லாத சந்தோசமுமுண்டாம்; என்றாலும் மனிதர்கள் வியாதி பீடையால் வருந்துவார்கள்.

உதாரணம் — யுவவருடம் பூவுலகி லுள்ளவர்க ளேயாற், றவவருந்து வார்பசுமா தங்கும்-நவமாக, வாழ்வாம் பரிவாரம் மாரியுண்டு நெல்விளையுந், தாழ்வான தொன்றமில்லைத் தான். (இடைக்காடர்)

யுவன்—பதினறு வயதுக்கு மேல் முப்பது வயதுக்குட்பட்ட ஆண்.

## யூ

யூபயோகம்—ஒரு நல்ல யோகம். அது இலக்கினமுதல் நான்காமிராசி வரை இராகு கேது நீங்கிய சூரியாதி எழுவர் நிற்பதாம்.

யூழி—பனிரண்டாமிடம்.

## யோ

யோகத்தியாச்சியம் — நித்தியயோகத்தின் கழிவு நாழிகை. அது விசகடிகை ஆரம்பித்த நாழிகைமுதல் மூன்றேமுக்கால் நாழிகைவரையாம். இவை இருபத்தேழுயோகங்களிற் சில யோகங்களுக்குமட்டுமேயாம்; விபரம்-பின்வருமாறு: விஷ்கம்பத்திற்கு மூன்று, சூலத்திற்கு ஐந்து, கண்டத்திற்கு ஆறு, அதிகண்டத்திற்கு ஆறு, வியாகாதத்திற்கு ஒன்பது, வச்சிரத்திற்கு ஒன்பது, வைதிருதிக்கு அறுபது, பரிகத்திற்கு அறுபது என்பதாம்.

யோகம் — (1) அதிட்டம், பலம், பொருத்தம்.

(2) அமிர்தாதியோக முதலியன.

(3) ஆனந்தாதியோக முதலியன.

(4) சாதகயோக முதலியன. இது உத்தமம், மத்திமம், அதமம் என்னும் மூவகையுள்ளது. இதன் ஒவ்வொன்றுள்ளும் பல பிரிவுகளுள்ளதாம்.

(5) பஞ்சாங்க உறுப்பினென்று. இது விஷ்கம்பம், பிரீதி, ஆயுஸ்மான், சௌபாக்கியம்,சோபனம், அதிகண்டம். சுகர்மம், திருதி, சூலம், கண்டம், விருத்தி, துருவம், வியாகாதம், அரிஷணம், வச்சிரம், சித்தி, விதிபாதம்,வரியான், பரிகம், சிவம், சித்தம், சாத்தியம், சுபம், சுப்பிரம், பிரமம், ஐந்திரம், வைதிருதி. இவைகட்கு முறையே கம்பம், பிரியம், வாழ்நாள், புண்ணியம், நலம், மாகண்டம், அறம், துணை, சூலம், கண்டம், ஆக்கம், நிலை, அரவு, எக்களிப்பு, வேல், வல்லமை, கொலை, காயம்,தாழ்வு, காட்சி, திறம், புகழ், காவல், தெளிவு, பிரமா, இந்திரன், பேய் என்பதாக தென்மொழிப் பெயராம், இவற்றுள் கம்பம், கண்டம், அதிகண்டம், சூலம், வியாகாதம், வச்சிரம், விதிபாதம், பரீகம், வைதிருதி இவ்வொன்பது நீங்கிய மற்றவை நல்லனவாம்.

இவற்றுள்ளும்;—கம்பத்தில் மூன்றும், சூலத்தில் ஐந்தும், கண்டத்திலும் அதிகண்டத்திலும்ஆறும்,வியாகாதத்தில் ஒன்பதும் கழித்து நின்ற நாழிகையே ஆகாவாம்.

(6) அட்டாங்கயோக முதலியனவாம்.

யோகினி—காளி, சன்மினி, சூர்மகள், கீர்வாணி. இவள் நிர்வாணமும், விரித்ததலையும், தேகத்தில் வெண்ணீறும், சங்காபரண முதலிய அமங்கலமும், இரத்த நிறமுமுடையவள்.

யோகினிதிசை—யோகினி நிற்குந் திசை, விபரம்:-பூர்வபக்கத்திற்கு பிரதமை முதல் மேற்படி பூரணை வரை முறையே கிழக்கு, வடக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, தெற்கு, மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு, ஆகாசம், பூமி, கிழக்கு, வடக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, தெற்கு ஆகிய இத்திசைகளில் நிற்கும்.

அமரபக்கத்திற்கு பிரதமை முதல் மேற்படி அமாவாசை வரை முறையே மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு, ஆகாசம், பூமி, கிழக்கு, வடக்கு, தென்கிழக்கு,தென்மேற்கு, தெற்கு, மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு, ஆகாசம், பூமி ஆகிய இத்திசைகளில்நிற்குமென்பதாம்.

மேற்கூறிய இருபட்சத் திதிகளுக்குரிய எந்தத்திக்கில்யோகினி நிற்கின்றதோ அந்தத்திக்கிற்கு எதிராகவும், வலப்பக்கமும் பிரயாணஞ் செய்யலாகாது.

யோசியம்—சோசியம், சோதிடம்.

யோசியர்—சோதிடர்.

யோனிப்பொருத்தம் — மணப்பொருத்தத்தொன்று. விபரம்;-யானைக்கு மனிதனும், குதிரைக்கு பசு

வும், எருமையும், பசு, எருமை, கடா, மான், நாய் இவைகளுக்குப் புலியும், குரங்குக்கு ஆடும், எலிக்குப் பூனையும், பாம்பும், பாம்புக் குக்கீரியும், ஆடும், பூனைக்கு நாயும் புலியும் பகையாம். மானுக்குப் பசுவும், ஆட்டுக்குக் குதிரையும், நாய்க்கு மனிதனும் நட்பாம்; இவைகளல்லாதவை சமமாம்; சகல யோனிகளுக்குங் குரங்கு நட்பென்பதுமாம்.

குறிப்பு;—பெண், ஆண்களுக்கு யோனி ஒன்றாயினும், நட்பு யோனியில் இருவருக்கும் பெண்யோனியானலும, ஆணுக்கு ஆண்யோனியானலும், பெண்ணுக்குப்பெண் யோனியானலும் உத்தமம்; இருவருக்கும் ஆண்யோனியானல் மத்திபம், ஆணுக்குப் பெண்யோனியும், பெண்ணுக்கு ஆண்யோனியாயினும், இருவருக்கும் சத்துருயோனி யாயினும் பொருந்தாது என்பதாம்.

## ர

ரசாதலம்—கீழேழுலகத் தொன்று.

## ரா

ராகு—இராகு.

ராசி—இராசி. இது மேட முதல் மீனம் வரையுள்ள பன்னிரு இராசிகள்.

ராஜன்—சந்திரன்.

## ரு

ருசிதரன்—குரு.

## ரே

ரேவதி—இரேவதி நட்சத்திரம்.

## ரோ

ரோமகசித்தாந்தம்—உரோமக சித்தாந்தத்திற் காண்க.

ரோமகபுரி — உரோமக புரியிற் காண்க.

ரோகினி } உரோகினி நட்சத்திரம்.
ரோஹிணி }

## ல

லங்காபுரி } இலங்காபுரியிற் காண்க.
லங்கை }

## லீ

லீலாவதி—இலீலாவதியிற் காண்க.

## லோ

லோகபாலர்—உலோகபாலரைக் காண்க.

லோகாலோகம்— உலோகாலோகத்திற் காண்க.

## வ

வக்கிரசந்திரன்—இளம்பிறை.

வக்கிரம்—மீளமடங்குதல், மீளுதல், பின்றிரும்புதல். இவை கிரக நடையினொன்று.

வக்கிரன்—சனி, செவ்வாய், குருரன்.

வக்கிராஸ்தமனம் } கிரகங்கள் வக்கிரத்தோடு அத்தமனமடைதல்.
வக்கிராத்தமனம் }

வக்கிரித்தல்—திரும்புதல், கிரக நடையினென்று.

வக்கிரோதயம்—கிரகங்கள் திரும்புதலோ டுதித்தல்.

வசந்தகாலம் — சித்திரை, வைகாசியின் பருவம்.

வசந்த தூதம்—சித்திரைமாதம்,

வசந்தமாதம் — சித்திரை, வைகாசி மாதம்.

வசந்தம் — இளவேனில், தென்றற்காற்று.

வசந்தருது—இளவேனிற் பருவம்; இவை சித்திரை வைகாசியின் பருவம்.

வசந்தன்—தென்காற்று.

வசியம் —அட்டகருமத்துளொன்று, மணப்பொருத்தத்தொன்று.

வசியப்பொருத்தம்—மணப்பொருத்தத்தொன்று; விபரம்-மேடத்திற்குச் சிங்கமும், விருச்சிகமும், இடபத்திற்குக் கடகமுந் துலாமும், மிதுனத்திற்குக் கன்னியும், கடகத்திற்கு விருச்சிகமும், தனுசும், சிங்கத்திற்குத் துலாமும், கன்னிக்கு மிதுனமும், மீனமும், துலாத்திற்கு மகரமும், விருச்சிகத்திற்கு கடகமுங் கன்னியும், தனுசுக்கு மீனமும், மகரத்திற்கு மேடமுங் கும்பமும், கும்பத்திற்கு மேடமும், மீனத்திற்கு மகரமும் வசியமாம். இதில் பெண் ராசிக்கு ஆண்ராசி வசியமானாலும், இருவருடைய ராசி ஒன்றானாலும் உத்தமம். ஆண்ராசிக்குப் பெண்ராசி வசியமானால் மத்திமம்; மற்றவை அதமமாம்.

வசு —அட்டவசுக்கள், கிரணம், குபேரன், சூரியன்.

வசுநாள்—அவிட்டநாள்.

வசுபை—புனர்பூச நட்சத்திரம்.

வசுமத்யோகம் — சந்திரனுக்காவது இலக்கினத்திற்காவது உபசெயத்தானத்தில் எல்லாச் சுபகிரகங்களும் நிற்பது;இதன்பலன் திரவிய விர்த்தி.

வச்சிரம்—இடி, சிற்பநூல் மூப்பத்திரண்டினென்று, பஞ்சாங்கவுறுப்பினென்றாகிய நித்தியயோகத்தொன்று.

வச்சிரயோசம்—ஒரு நல்ல யோகம்; அது நாலுபத்து ஆகிய இடங்களில் பாபக்கிரகங்களிருக்க மற்ற விடங்களிற் சுபர்களிருப்பதாம்.

வச்சிரீகாணம்—இடை,பிங்கலை,சுழிமுனை.

வஞ்சுளஏகாதசி—சூரியோதயத்தில் தசமி சம்பந்தமாய் வரும் ஏகாதசி திதி. அது ஓர் நோன்புநாள்.

வடகீழ்த்திசை<br>வடகீழ்த்திசைப்பாலன் } ஈசானன்.

வடகீழ்த்திசைப்பாலன்குறி--காகம்.

வடகீழ்த்திசையானை—சுப்பிரதீபம்.

வடகோடு — இளம்பிறைச் சந்திரனின் வடமுனை, வடக்கு மூலை.

வடக்கு — உதக்கு, உத்தரம், வடதிசை.

வடந்தை—வடகாற்று.

வடவை—அச்சுவினிநாள்.

வடாது—வடக்கு.

வட்டம்—பரிவேடம்.

வணசி—எருதுக்கரணம்.

வணிகம்—துலாராசி.

வணிகன்—புதன்.

வணிசம்—எருதுக்கரணம்.

வணிர்—துலாம்.

வண்டு—பூசநாள்.

வத்தகாலம்—நிகழ்காலம்.

வத்துவித்தியாபதி—சிற்பநூல் முப்பத்திரண்டினுளொன்று.

வம்சயோகம்—ஒரு நல்ல யோகம்; அது ஏழாதிபனேறிய அங்கிசாதிபதி உச்சனாய் கருமாதிபனுடன் கூடி நிற்பது.

வம்பல்—திசை.

வயது—ஆயுசு, யௌவனம்.

வயிரம்—திருவோணநட்சத்திரம்.

வரயோகம்—சுபயோகத்தொன்று.

வரலட்சுமி விரதம்—ஆவணி மாதத்துச் சுக்கிலபக்ஷத்து வெள்ளிக்கிழமையாம்.

வராகமிசிரர்—ஓர் சோதிடசாஸ்திரி. இவர் கலியுகம்மூவாயிரத்தறுநூற்றிலிருந்தவர், இவர் செய்த நூல்கள்பிருஹத்சம்ஹிதையும், பிருஹத் சாதகமுமாம்.

வராளி—சந்திரன்.

வரிசம்—வருஷம்.

வரியான், வரீயான் } நித்தியயோகத்தொன்று.

வருகாலம்—எதிர்காலம்.

வருக்ககனம்—கனவருக்கம்.

வருக்கமூலம் — வருக்கத்தொகையினின்றதன் மூலமறிதல்.

வருக்கம்—ஒழுங்கு, சமமாகிய வீரெண்ணின் பெருக்கம். விபரம்—வர்க்கமூலத்திற் காண்க.

வருங்காரியஞ்சொல்லுவோர்—சோதிடர், வள்ளுவர்.

வருசதாதுக்கள்—மழைக்குறிக்காதாரங்கள்; விபரம்-மழைக்குறி மூலத்தி லறிக.

வருசருது—கார்காலம், இது ஆவணி புரட்டாசி மாதங்கள்.

வருசாதிநூல்—சோதிடநூல்களினின்றுந் திரட்டி எடுத்த சோதிட முதனூல்.

வருடதேவதை — அவ்வவ்வருடங்களுக்குரிய தேவதை.

வருடபலம் — அவ்வவ்வருடத்திற்குரிய பலன்.

வருடப்பிறப்பு—புதுவருடத் தோற்றம்.

வருடம், வருஷம் } ஆண்டு, ஆயனம்; கண்டம, சமை, தெய்வம், தெய்வதம், மழை, யாண்டு, வற்சரம், இதன்பாதி, அயனம்.

வருடாகாலம்—மழைகாலம்.

வருடாங்கம்—மாதம்.

வருடாந்தம், வருடாந்தரம், வருடாந்திரம் } வருஷமுடிவு.

வருடாயுதம்—பதினாயிரம்,

வருடாரம்பம்—மழைத்தொடக்கம். வருஷத்தொடக்கம், வருஷப்பிறப்பு.

வருடை—மேடவிராசி.

வருடோதயம்—வருடப்பிறப்பு. இது ஒவ்வொரு வருடங்களும் எந்த வாரத்தில் பிறந்ததோ அதற்கு அடுத்த வாரத்திலும், எந்தத் திதியிற் பிறந்ததோ அதற்கு பனிரண்டாவது திதியிலும், எந்த நட்சத்திரத்திற் பிறந்ததோ அதற்கு பதினோராவது நட்சத்திரத்திலும், எந்த நாழிகையிற் பிறந்ததோ அதற்கு பதினாறு நாழிகைக்கு மேலும் வருடம் பிறக்கும்.

வருணநாள்—சதையநட்சத்திரம்.

வருணப்பொருத்தம்—நிறப்பொருத்தம். அது மணப்பொருத்தத்தொன்று; விபரம்-பெண்ணும் ஆணும் சிவப்பு நிறமானால் உத்தமம்; இருபேரும் மால் நிறமானாலும், பெண் கறுப்பு நிறமும், ஆண் சிவப்பு நிறமுமானாலும், பெண் சிவப்பும், ஆண் கறுப்புநிறமுமானாலும் மத்திபம், இருவரும் கறுப்பு நிறமானால் அதமம். பொருந்தாதென்பதாம்.

வருணவில்—வானவில்.

வருணன் — சமுத்திரம், பன்னிரு மாதச் சூரியனிலொருமாதச் சூரியன், மேற்றிசைப் பாலன்.

வர்க்கசித்தாந்தம்—சட்வர்க்கம்.

வர்க்கமூலம்—ஒரு குறிப்பிட்ட தொகையை அதே தொகையிற் பெருக்க வருகிற மொத்தத்தொகைக்கு வர்க்கமென்றும் எந்தத் தொகையாற் பெருக்கப்படுகிறதோ அந்தத் தொகைக்கு மூலமென்றும் ஆகிய இவ்விரண்டிற்குமே வர்க்கமூலமென்றுபெயர்.

வர்க்கம்—வர்க்கமூலத்திலறிக.

வர்க்கோத்தமம்—இராசியிற் கிரகங்கள் நிற்பதுபோல நவாமிசத்திலுமிருப்பதாம்.

வர்த்தகத்தானம்—நாலாமிடம்.

வர்த்தமானகாலம்—நிகழ்காலம், அப்பொழுது நடக்குங்காலம்.

வலவோட்டு—சூரியன் முதலிய சத்தக் கிரகங்களின் சுற்று.

வலவோட்டுநட்சத்திரம், வலவோட்டுநாள் } அசுபதி, பரணி, கார்த்திகை, புனர்பூசம், பூசம், ஆயிலியம, அஸ்தம், சித்திரை, சுவாதி, மூலம, பூராடம், உத்திராடம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி என்பனவாம்.

வலிபம்— கீழேழுலகத்தொன்று. அது மகாதலம்,

வல்லகியோகம்—வீணையோகம் பார்க்க.

வல்லமைத்தானம்—மூன்றாமிடம்.

வல்லாரல், வல்லாரை } கேட்டைநட்சத்திரம்.

வல்லூறு—பஞ்சபக்ஷியிலொன்று.

வழிநாள்—பின்னைநாள்.

வளர்பிறை—பூருவபக்கத்துச் சந்திரன்.

வள்ளுவசாத்திரம்—ஓர் சோதிடம்.

வள்ளுவன்—சோதிடன், வருங்காரியஞ் சொல்லுவோன், புரோகிதன் மேன்மகன்.

வற்கசங்கலிதம்—வருக்கசங்கலிதம்.

வற்கடகம்—பஞ்சகாலம், வறப்புக்காலம்.

வற்கமூலம் — வருக்கத்தொகையின் மூலம்.

வற்கம் — சமமாகிய வீரெண்ணின் பெருக்கம்.

வற்காரடம் — மத்தியானக் கிரணம்.

வற்கித்தல்—ஒரு தொகையை அத்தொகையிற் பெருக்கல்.

வற்சரம—வருடம்.

வனசை—எருதுக்கரணம்.

## வா

வாகனத்தானம்— இலக்கினத்திற்கு நாலாமிடம்.

வாக்குத்தானம் — இலக்கினத்திற்கு இரண்டாமிடம்.

வாக்குதேவதை, வாக்குபதி, வாக்பதி } வியாழன்.

வாசதேயி—இரவு.

வாசபதி—வியாழன்.

வாசம், வாசரம் } நாள், வாரம்.

வாசி — அசுபதிநட்சத்திரம், நிமித்தம்.

வாசியோகம் — ஒரு சுப யோகம்; அது (1) சூரியனுக்கு முன்னே சுக்கிரன் நின்றாலும்,

(2) சூரியனுக்கு முன்னே சனி நின்றாலும்,

(3) சூரியனுக்குப் பின் எல்லாக் கிரகங்களும் நின்றாலும்,

(4) சூரியனுக்குப் பின் சனி,செவ்வாய் நின்றாலும்,

(5) சூரியனுக்குப் பின் புதன் நின்றாலும்,

(6) சூரியனுக்குப் பின் குரு, சுக்கிரன் கூடி நின்றாலும் இவ்யோகமாம்.

(7) சுபமல்லாத யோகம் சூரியனுக்குப் பின் சனி நின்றாலும்,

(8) சூரியனுக்கு விரையத்தில் சந்திரன் நீங்கிய சுபக்கிரகங்கள் நின்றாலும் இவ்யோகமாம்.

வாசுரை—இரவு, பூமி.

வாடை—காற்று, வடகாற்று, வடக்கு.

வாடைக்கச்சான்—வடமேற்குக் காற்று.

வாடைக்கொண்டல்-வடகீழ்க்காற்று

வாணன்—கார்த்திகைநட்சத்திரம்.

வாணாள்—வாழ் நாள்.

வாணிகன்—துலாராசி.

வாதக்கிரகம், வாதக்கோள் } மூப்பிணிக்கிரகத்தொன்று. அது சனி, குரு, புதன் என்பனவாம்.

வாதரூடம்—காற்று, வானவில்.

வாதரோகக்காரன்—சனி;

வாத்து—வாஸ்துபுருசன்.

வாஸ்துபுருடன் நித்திரை செய்யுந் திசைகளுக்கு மாதங்கள் — சித்திரை, வைகாசி, கிழக்கு; ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை,வடக்கு; ஆனி, ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி, தெற்கு; பங்குனி, மேற்கு என்பதாம்.

உதாரணம்;—ஆடு விடைகிழக்கா மாவணிதே ளைப்பசிதை, கூடு வடக்காங் குளிர்மிதுனம்-நீடுசிலை, பெண்கும்பந் தெற்காகும் பேசரிய மேற்காமீன், வண்வாஸ்து சென்னிவைக்கு மால் என்னும் செய்யுளானு மறிக. அன்றியும்,

சித்திரை, வைகாசி, பங்குனி மாதங்களில் கிழக்கு மேற்கு வீதியிலும், ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை இந்த மாதங்களில் தெற்கு வடக்கு வீதியிலும் குடிபுக மனைகோல உத்தமமுமாம்.

ஆனி, ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி மாதங்கள் குடிபுக மனைகோல ஆகாதென்று சில நூல்களிற் சொல்லப்படுகின்றன.

உதாரணம்:—ஆடுவிடை மீன மதி யாங்கிழக்கு மேற்காகும், தேடுசிங்கந் தேள்மரிமான் தென் வடக்காம்-நீடுதெரு, வீடெடுக்க விற்புதுத வேண்டினர் மேலோர்கள், நாடதனி லுள்ளோர்க்கு நன்கு.

வாஸ்துபுருடன் நித்திரை விடுதல்—சித்திரைமீ பத்தாந்தேதி அஞ்சு நாழிகை, வைகாசிமாதம் இருபத்தோராந்தேதி இரண்டு நாழிகை, ஆடி மாதம் பதினோராந்தேதி இரண்டு நாழிகை, ஆவணி மாதம் ஆறாந்தேதி பத்துநாழிகை, ஐப்பசிமாதம், பதினோராந்தேதி இரண்டு நாழிகை, கார்த்திகைமாதம் எட்டாந்தேதி பத்து நாழிகை, தைமாதம் பனிரண்டாந் தேதி இருபத்திரண்டு நாழிகை, மாசி மாதம் இருபத்திரண்டாந்தேதி பதினெட்டு நாழிகை, பங்குனி மாதம் இருபத்திரண்டாந் தேதி பதினெட்டு ஆகிய இந்நாழிகைக்கு மேல் மூன்றேமுக்கால் நாழிகை விழிக்குங் காலமாம்.

உதாரணம்:— மேட மாதியீரைந்துதே தியினில் விளங்கு கடிகையோ ரைந்தாம், விடைமதி மூவேழ் தெய்தியீர் கடிகை விருச்சிகத் தெட்டிலீ ரைந்தாம்; ஆடியைப் பசிபன் னொன்றினி லிரண்டாம் ஆவணி யாறிலோர் பத்தாம், அணிகுட மீன மிருபதோடிரண்டி லாம்பத்து மெட்டென வறையக்; கூடுதை மதியீ ராறுதெய் தியினிற் குலவிரு பானின்மே லிரண்டாம், கூடிடுங் கடிகை வாஸ்துவாம் புருடன் கூர்துயில் நீங்குநா ளென்பர்; பீடிலா வானி புரட்டையா மதியின் பெருதுயில் நீங்கிடா னென்றே, பேசுவர் பெரியோர் குடிபுகுந் திடனும்

பெருமனை கோலவுந் தீதே என்னுஞ் செய்யுளாலு மறிக.

வாத்துபோதம்—சிற்பநூல் முப்பத்திரண்டி னொன்று.

வாத்துமன்—வாஸ்துபுருடன்.

வாமத்தோன்—சந்திரன்.

வாமபாகம் } இடப்பக்கம்.
வாமம் }

வாமதேவதை-சனி செவ்வாய் நின்ற நட்சத்திரத்துக்கு பதினேழு, பதினெட்டு, பத்தொன்பது, இருபத்திரண்டு ஆகிய நட்சத்திரங்களாம்.

வாமனசயந்தி — ஓர் விசேடநாள். அது புரட்டாசிமாத சுக்கிலபட்ச துவாதசியில் திருவோணங் கூடி வரும் நாள்.

வாமனம்—தென்றிசை யானை.

வாமாங்கராசி — துலாமுதல் ஆறு ராசிகளாம்.

வாயசவாகனன் — காகவாகனன், சனி.

வாயவி—வடமேற்கு.

வாயு—காற்று இது வாயுமண்டலத்திற்கு அதிதேவதை.

வாயுகோணம்—வாயுமூலை.

வாயுக்கிரகம் — பஞ்சபூதக் கிரகத்தொன்று அது புதன்.

வாயுபலம்—மழை, வானவில்.

வாயுமூலை—வடமேற்கு.

வாய்—வாக்கு, இலக்கினத்திற்கிரண்டாமிடம்.

வாய்க்கால்—மகநட்சத்திரம்.

வாரசூலம்—வாரசூலை. இது திங்களுஞ் சனியும் கிழக்கிலும், செவ்வாயும் புதனும் வடக்கிலும், வெள்ளியும் ஞாயிறும் மேற்கிலும், வியாழன் தெற்கிலுமாம்.

வாரசூலநாழிகை—இன்ன கிழமைக்கு இன்ன திசையில் இவ்வளவு நாழிகைக்குச் சூலமென்பது. விபரம்—திங்களுஞ் சனியுங் கிழக்கில் எட்டு நாழிகையும், வியாழன் தெற்கில் இருபது நாழிகையும் வெள்ளி ஞாயிறு மேற்கில் பனிரண்டு நாழிகையும், செவ்வாய் வடக்கில் பனிரண்டு நாழிகையும் புதன் வடக்கில்பதினாறு நாழிகையுமாம்.

உதாரணம்;—திங்களுஞ் சனியுமிந்திரன் றிசையிலோ ரெட்டதாகும், பொங்குபொன் னிருபான் தெற்கு புகர்கதிர் மேற்கீராறும், தங்குசேய் வடக்கீ ராறுஞ் சார்புத னதிலீ ரெட்டுச், சங்கரன் கையிற் சூலந் தாணியில் வைக்குங் கன்னல் என்னுஞ் செய்யுளாலு மறிக.

வாரசூலபரிகாரம் — சூலகாலத்தில் வடக்கே போக வேண்டுமானால் பாலும், கிழக்கே தயிரும், தெற்கே தயிலமும், மேற்கே வெல்லமும் ஆகிய இவைகளை உண்டேனும் கொண்டேனும் செல்வது நன்றென்பதாம்.

உதாரணம்;—சூலத் திசையிற் சொற்பயணம் போகவெனிற்,

சீலத் துடனுண்டு செல்வடக்குப பாலாம், தயிர்கிழக்குத் தெற்குத் தயிலமா மேற்குச், செயிர்தீர்ந்த வெல்லமெனச் செப்பு என்னுஞ் செய்யுளாலு மறிக.

வாரசூனியம்—இன்ன கிழமையில் இன்ன நட்சத்திரம் வந்தால் சூனியமென்பது. விபரம்-ஞாயிறில் அனுடம், கேட்டை, மகம், விசாகம், பரணி, மிருகசீரிடம் ஆகியவைகளும், திங்களில் பூராடம், அனுடம், மகம், பூரட்டாதி, கார்த்திகை, விசாகம் ஆகியவைகளும், செவ்வாயில் அவிட்டம், சதையம், திருவோணம், கேட்டை, திருவாதிரை ஆகியவைகளும், புதனில் மூலம், திருவோணம், கார்த்திகை, அவிட்டம், அசுபதி, பரணி ஆகியவைகளும், வியாழனில் மிருகசீரிடம், பூராடம், ரேவதி, புனர்பூசம், பூசம் ஆகியவைகளும், வெள்ளியில் பூசம், விசாகம், உரோகணி, அவிட்டம், மிருகசீரிடம், அத்தம், அனுடம் ஆகியவைகளும், சனியில் அத்தம், பூசம், புனர்பூசம், உத்திரம், ரேவதி ஆகிய இவைகளும் வருவதாம்.

வாரத்தியாச்சியம்—ஒவ்வொரு கிழமையிலும் நீக்கப்பெற்ற கழிவு நாழிகை; விபரம்:-ஞாயிறு முப்பத்திரண்டுக்கு மேலும், திங்கள் நாற்பத்திரண்டுக்குமேலும், செவ்வாய் முப்பதொன்றுக்குமேலும், புதன் நாற்பத்தொன்றுக்கு மேலும், வியாழன் முப்பத்தொன்றுக்கு மேலும், வெள்ளி இருபத்தொன்றக்கு மேலும், சனி பதிறுைக்கு மேலும், மூன்றேழுக் கால் நாழிகையை நீக்கப்படுவதாம்.

வாரமிச்சம்—மாதம் பிறந்த கிழமை தொடங்கி சனிக்கிழமை வரை எண்ணிக்கண்ட தொகையாம்.

வாரமுக்குணவேளை — இன்ன கிழமையின் முதலில் இன்ன குண வேளை வருவதென்பது அது திங்கள், வியாழம், சாத்மீகமும் வெள்ளி செவ்வாய், இராசதமும் புதன் ஞாயிறு, சனி, தாமதமும் முதவில் வரும் வேளையாம். இதன் காலம் மூன்றேழுக்கால் நாழிகையாகக் கொள்க.

வாரம் — கிழமை, சமையம், நாள், பக்கபாதம், பங்கு, பஞ்சாங்கஉறுப்பிஞென்று, வாசரம். அன்றியும் எழு கிழமை கொண்டதுமாம்; இது ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி, சனி என்பன.

வாரவாணி—வருடம்.

வாரவிசேடம்—இன்ன கிழமையில் இன்ன காரியஞ்செய்ய நன்மை என்பதாம்; அது ஞாயிறில் உத்தியோகஞ்செய்ய, திங்களில் விதை

விதைக்க, செவ்வாயில் போர்தொடங்க, புதனில் கல்விகற்க, வியாழனில் மணஞ்செய்ய, வெள்ளியில் மயிர்களிக்க, சனியில் தெய்வபூசனை செய்ய உத்தமமென்பதாம்.

வாரவோரை—காலவோரையிற் காண்க.

வாராதிபன்—கிழமைக்கதிபதி, ஓரைக்கதிபதியுமாம்.

வாருணம்—மேற்கு.

வாருணி—சதையநட்சத்திரம், மேற்குமத்தியத்திற்கு அதிதேவதை.

வார்த்தலம்—கெட்டநாள்.

வார்த்தவம்—இருது.

வாலசந்திரன்—இளம்பிறை.

வாலசூரியன்—இளவாதித்தன், உதயசூரியன்.

வாலவம்—புலிக்கரணம்.

வாலாதித்தன்—உதயகாலசூரியன்.

வாலை—பன்னிருவயதுள்ளபெண்.

வால்மீன், வால்வெள்ளி } வால்நட்சத்திரம்.

வாழ்நாள்—ஆயுகம், ஆயுள், உறை, சீவியகாலம்.

வானசாஸ்திரம், வானசாத்திரம் } வானசோதிகளின் போக்குவரவு அறியும் நூல்.

வானசோதி—ஆகாயப்பிரபாரூபிகள், இவை நட்சத்திர கணங்களாம்.

வானட்சத்திரம்—வால்வெள்ளி.

வானம்—ஆகாயம், மழை.

வானவில்—இந்திரவில், இது மழைக்குறியினொன்று.

வானவிற்குறி — இந்திரவிற்குறி. இது மழைக்குறியுளொன்று. விபரம்—ஆனி, ஆடி, ஆவணி இந்த மாதங்களில் கிழக்கே இந்திரன் வில்லுண்டானல் பஞ்சமுண்டாகுமென்பதாம்.

உதாரணம்;— ஆனியுடனடியாவணியித் திங்களிலே, கூனியே வான்விற் குணதிசையில்—மானேகேள், மேவில் மழையறுமே விண்ணுட ருக்குமே, பூவின் விளைவறுந்து போம் என்னும் செய்யுளாலுமறிக.

வானேறு—இடி.

வான்மீகம்—இந்திரவில்.

வான்மீன்—உடு, உற்கை, ஒளி, சிதம், சுக்கை, சோதி, தாரகை, தாரா, தாரை, பம், மீன், அன்றியும் அசுபதி முதலிய இருபத்தேழு நட்சத்திரங்களுமாம்.

வான்மியராசி—திரராசி நான்குமாம். இவை இடபம், சிங்கம், விருச்சிகம், கும்பம்.

## வி

வி—ஆகாயம், காற்று, திசை.

விககம்—கிரகம், சந்திரன், சூரியன், மேகம்.

விககயோகம்—ஒரு மத்திமயோகம். அது சூரியாதி எழுவர் நாலாம், பத்தாமிடங்களிலிருப்பதாம்.

விகங்கம் — சந்திரன், சூரியன், மேகம்.

விகசன்—சந்திரன்.

விகடயோகம்—ஒரு தீயபலன். அது நாலு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து இத்தானங்களில் ஏழு கிரகங்கள் கூடிநிற்பது.

விகடிகை—விநாடி.

விகணனம்—கணித்தல்.

விகர்த்தனன்—சூரியன்.

விகலை — காலநுட்பம், காலம், நாழிகை.

விகாரி—மூப்பத்துமூன்றுவது வருடம்.

விகாரிவருடப்பலன் —மழையில்லை. ஏரி, கேணி முதலிய நீர்நிலைகள் வற்றி வேளாண்மை நட்டமும், தீயோர்களால் மனிதர்களுக்குத் துன்பமும், மனிதர்கள் தங்களுடைய பழைய பொருள்களை விற்று உண்ணும் பஞ்ச நிலையையும் அடைவார்கள்.

உதாரணம்:— பார விகாரிதனிற் பாதலநீ ருங்குறையும், மாரியில்லை வேளாண்மை மத்திமமாம்-சோரர், பயமதிக முண்டாம் பழையோர்கள் சம்பாத்,தியவுடைமை விற்றுண்பார் தேர்.

(இடைக்காடர்)

விகாலிகம் — நாழிகை யறிவிக்கும் இல்விக்குடம்.

விகிரன்—சந்திரன்.

விகிர்தி } இருபத்து நாலாவது
விகிர்த்தி } வருடம்.

விகிர்திவருடப்பலன்—எங்கும் நல்ல மழையும், சிறந்த விளைபலனும், நானாவிதச் செல்வங்கள் விருத்தியும், மனிதர்கள் சுகவாழ்வையுமடைவார்கள்; ஆகினும் மாடு, குதிரை, கழுதை முதலிய விலங்கினங்களுக்கு நோயுண்டாகும்.

உதாரணம்;—வையந் தனில்விகிர்தி மாரி விளைவதிகம், செய்ய வளங்கள் சிறக்குமே - ஐயகேள், மாடு கழுதை வயப்பரி நோய்மிக்குச், சாட மெலியுமே தான்.

(இடைக்காடர்)

விக்கிரம—பதினைவாவது வருடம்.

விக்கிரமவருடப்பலன் — முன்மழையில்லாததால் பயிர்களுக்கு நட்டமும், சீவராசிகளுக்கு மரணமும், மனிதர்களுக்குப் பிணியும், பாவகாரியங்களால் துன்பமும் உண்டாகும்; என்றாலும் வருடத்தின் பின் பாகத்தில் ஒரேயொரு நல்ல மழையுண்டாம்.

உதாரணம்;—விக்கிரம வாண்டதனில் மேவியமுன் மாரிகொஞ்சம், அக்க ளுயிர்க ளழியுமே—தொக்க, பயிர்தீயும் நோயும் பழியுமாம் பின்பு, செயிர்தீர்ந்த வோர்மழையாஞ் செப்பு.

(இடைக்காடர்)

விக்கிரமத்தானம் — இலக்கினத்திற்கு மூன்றாமிடம்.

விக்கிரமார்க்க சகாப்தம் — விக்கிரமார்க்கன் அரசாட்சி தொட்டு எண்ணிவரும் வருடம்; இது கலியுகம் மூவாயிரத்து நாற்பத்தைந்

தில் விக்கிரமார்க்கன், டில்லி அரசனைத் தோற்கடித்த காலமுதல் ஆரம்பம்.

விசகம்—கேது.

விசகன்—சந்திரன்.

விசங்கடம்—சிங்கம்.

விசூன்யம்—இன்ன திதியில் இன்ன இலக்கினம் வருவதென்பது; விபரம்-பிரதமையில் துலாமும், மகரமும், துதிகையில் தனுசும், மீனமும், திருதிகையில் மகரமும், சிங்கமும், சதுர்த்தியில் கும்பமும், இடபமும், பஞ்சமியிற் கன்னியும், மிதுனமும், சஷ்டியில் மேடமும், சிங்கமும், சத்தமியில் தனுசும், கடகமும், அட்டமியில் கன்னியும், மிதுனமும், நவமி தசமி இவைகளில் சிங்கமும், விருச்சிகமும், ஏகாதசியில் தனுசும், மீனமும், துவாதசியில் துலாமும், மகரமும், திரயோதசியில் இடபமுஞ், சிங்கமும், சதுர்த்தசியில் மிதுனமும், கன்னியும், அமாவாசை பூரணை இவைகளில் தனுசு, மீனம் ஆகிய இவைகள் வருவதாம்.

விசய—இருபத்தேழாவது வருடம்.

விசயதசமி—ஐப்பசிமாதம் பூருவபக்கத்தில் வரும் பத்தாந்திதி. இது ஓர் விசேடநாள்.

விசயமாலிகாயோகம் — ஒரு நல்ல யோகம். அது பதினோராமிட முதல் ஐந்தாமிடம்வரை இருபாம்பு நீங்கிய ஏழு கிரகங்கள் நிற்பது.

விசயம்—சூரியமண்டலம்.

விசயவருடப்பலன்—அளவுக்கு மிஞ்சிய மழையும், எல்லாவகைச் சிறுதானியங்களின் விர்த்தியுமுண்டாம்; இதற்கு முந்திய வருடத்தில் மக்களடைந்த துக்கமெல்லாம் நீங்கிச் சுகவாழ்வை யடைவார்கள்.

உதாரணம்:—மண்ணில் விசய வருட மழைமிகுதி, எண்ணுசிறு தானியங்க ளெங்குமே-நண்ணும், பயம்பெருகி நொந்த பரிவாரமெல்லாம், நயம்பெருகி வாழுமென நாட்டு. (இடைக்காடர்)

விசயை—மூன்றும், எட்டாம், பதினைந்தாந்திதிகள்.

விசர்க்கம்—தெட்சணாயனப் பாதை.

விசாகநாள்—விசாகநட்சத்திரம்.

விசாகம்—அணிலநாள்,காற்றுமுந்துநாள், சுளகு, சேட்டை, முறம், முற்றில், வைகாசி என்பனவாம்.

விசாலம்—சிற்பநூல்முப்பத்திரண்டினுென்று.

விசிகை—வைத்தியக்கிரகம்.

விசு } பதினைந்தாவ தாண்டு, சட
விஷு } சீதி புண்ணியகாலங்கள் வரும் நாட்கள்.

விசும்பு—ஆகாயம், திசை.

விசும்புத்திசை—உச்சி.

விசுவகர்மன் } சிற்பசாஸ்திரி, சூரி
விசுவகர்மா } யன்.

விசுசங்கராந்தி—சூரியன் விசுபத்தினின்றும் அடுத்த ராசிக்குப்போவது.

விசுவதினம்—இராப்பகல் நாழிகை சரியாக இருக்கும் நாள்.

விசுவநாள்—உத்திராடம், அவிட்டம்.

விசுபவை—சந்திரன், சூரியன்.

விசுவம் — பூமியின் சமரேகையும், சூரியன் பாதையுஞ் சந்திக்குமிடம்.

விசுவருடப்பலன்—காலமழை பெய்யாது, ஏரி, குள முதலிய நீர் நிலைகள் பெருகாது, சிசுக்களுக்குப் பிணியுண்டாம். ஆகினும்பின்மழை பெய்யும், மனிதர்கள் மத்திமமான சுகத்தை யடையவார்கள்.

உதாரணம்:—பாரில் விசுவருடம் பாலருக்குப் பீடையுண்டாம், கார் பொழிவ தில்லைமுற் காலத்தில்—ஏரி, பெருகாது பிற்காலம் பெய்யுமே மாரி, இருகால முஞ்சமமென் றெண். (இடைக்காடர்)

விசுவாவசு—முப்பத்தொன்பதாவது வருடம்.

விசுவாவசுவருடப்பலன் — எல்லா நாடுகளிலும் நல்லமழைபெய்யும், நானாவிதமான தானியங்கள் நன்றாய் விளையும், ஆடு, மாடு முதலிய நாற்காலிகள் விருத்தியுண்டாகும், வெளிநாட்டாருஞ் சுகமடைவார்கள், என்றாலும் குழந்தைகட்குச் சேதமுண்டாகும்.

உதாரணம்:—விசுவா வசுவருடம் வேளாண்மையேறும், பசுமாடோடாடும் பலிக்கும்-சிசுநாசம், மற்றையரோ வாழ்வார்கள் மாதவங்கள்மீறுமே, உற்றுலகில் நல்ல மழை யுண்டு. (இடைக்காடர்)

விசோகதுவாதசி — ஐப்பசிமாதம் பூருவபக்கத் துவாதசிதிதி.

விச்சுவகாசிபம், விச்சுவசாரம், விச்சுவதருமம், விச்சுவபோதம் — சிற்பநூல் முப்பத்திரண்டினுளொன்று.

விச்சுவரேகை—வானவரை.

விச்சுவா—சூரியகிரணத்தொன்று.

விச்சுவேசம்—சிற்பநூல் முப்பத்திரண்டினுளொன்று.

விடபம்—இடபராசி.

விடலை—முப்பதுவயதிற் குட்பட்டவன்.

விடிதல்—உதயமாதல்.

விடியல்—உதயம், காலை, புலரி, விடியற்காலம், வைகல், வைகறை.

விடியற்றரம்—விடியற்காலம்.

விடிவெள்ளி — வைகறை வெள்ளி. அது சூரியோதயத்திற்கு முன் உதயமாகும் வெள்ளி.

விடை—இடபவிராசி.

விட்கம்பம், விஷ்கம்பம் — நித்தியயோகத்தொன்று.

விட்சேபம்—வானுட்ச இரேகை.

விட்டம்—உத்திரம்.

விட்டி—சோழிக்கரணம், பத்திரவாகரணம்.

விட்டிதோசம், விஷ்டிதோசம் — சுபகாரியங்களுக்கு விலக்கப்பெற்ற நாள், அவை-பூருவபக்கச் சதுர்த்

தசியில் ஐந்தாஞ்சாமம் மேற்கிலும், அட்டமியில் இரண்டாஞ்சாமம் தென்கிழக்கிலும், ஏகாதசியில் ஏழாஞ்சாமம் வடக்கிலும், பூரணையில் நாலாஞ்சாமம் தென்மேற்கிலும், அமரபக்கத்திருதிகையில்ஆருஞ்சாமம் வடமேற்கிலும், சத்தமியில் மூன்ருஞ்சாமம் தெற்கிலும், தசமியில் எட்டாஞ்சாமம் வடக்கிலும், சதுர்த்தசியில் முதற்சாமம் கிழக்கிலும், விஷ்டியுண்ணுங் காலமாம்.

விட்ணுயோகம் } ஒரு நல்லயோகம்
விஷ்ணுயோகம் } அது-கருமாதிபதி பாக்கியாங்கிசமேறி பாக்கியத்தானத்தில் பாக்கியாதிபனேடு கூடி நிற்பது.

விண்டு—ஆகாயம், மேகம்.

விண்டலம்—ஆகாயம்.

விண்ணேறு—இடி.

விண்மணி—சூரியன்.

விண்மீண்—உடு, தாரகை, உற்கை, கணம், சுட்கை,பம், மீன்,அசுபதி முதலிய இருபத்தேழு நட்சத்திரங்களுமாம்.

விண்வீழ்கொள்ளி—உற்கை.

விதலம் — கீழேழுலகங்களுளிரண்டாவது; இது இருளால் மூடப்பெற்றுள்ளது.

விதானமாலை—ஓர்சோதிடநூல்.

விதி—எட்டாமிடம், காலம், பிறப்பு.

விதிக்கு—கோணதிசை.

விதிபாதம்—வியதிபாதம்.

விதியை—இரண்டாந்திதி.

விது—சந்திரன்.

விதுட்சயம்—தேய்பிறை.

விதுர்துதம்—இராகு.

விதுப்பிரியை—உரோகணி.

வித்தாரம் } சிற்பநூல் முப்பத்திர
விஸ்தாரம் } ண்டினென்று.

வித்தியாகாரகன்—புதன்.

வித்தியாரம்பம்--கல்விகற்கத்தொடங்கல்; இது பிள்ளைச்சடங்குகளினென்று.

வித்துரு—மின்னல்.

வித்தைகாரகன்—புதன்.

வித்தைத்தானம் —இரண்டாமிடம், நாலாமிடம், அன்றியும் ஒன்பதாமிடமுமாம்.

விநாடி } காலநுட்பம். அதுகூணி
விநாடிகை } கம் பனிரண்டு கொண்டது.

விநாயகசஷ்டி } கார்த்திகை மாதத்
விநாயகசட்டி } தில் கார்த்திகை கழிந்த இருபத்தோராம் நாள் வரும் ஆறுந்திதி.

விநாயகசதுர்த்தி — ஆவணிமாதம் பூருவபக்கத்தில் வரும் நாலாந்திதி.

விநாயகவிரதம்—வைகாசிமாதம் சுக்கிலபக்கத்தின் முதல் வெள்ளிக்கிழமை தொடங்கி சுக்கிரவாரந்தோறும், விநாயகரை நோக்கியனுட்டிக்கும் விரதநாள்.

விநிகதம்—உற்பாதம்.

விந்தசன்—சந்திரன்.

விந்தம்—ஓரெண்.

விபகலனம் } கணிதமுறையினெ
விபகவிதம் } ன்று; அது கழித்தல்.

விபலம்—காலநுட்பம்.

விபரீதவேதை — கோசரவேதையி னென்று; அது சந்திரலக்கினத் திற்கு ஐந்து, ஒன்பது, நாலு, பனி ரண்டு ஆகியவைகளிற் சூரியனிரு க்க, பதினொன்று, மூன்று, பத்து ஆறு ஆகியவைகளில் வேறு கிரக மிருப்பதாம்.

விபவ—இரண்டாவது வருடம்.

விபவவருடப்பலன்—எங்கும் நல்ல மழை பெய்து ஆறு, குளம் முத லிய நீர்நிலைகள் பெருகி பூமியில் நல்ல விளைவையும் மனிதர்கள் சுகவாழ்க்கையையும் அடைவார் கள். அரசன் செங்கோலுயர்ச்சியி னல், மக்கள் அரசனிடத்து மிக்க நம்பிக்கை வைத்தும் வாழ்வார் கள்.

உதாரணம்:—செய்யவிப வவ் வருடஞ் செய்புவனந் தான்விளை யும், பெய்யுமழையெங்கும் பெரு குமே-ஐயமின்றி, மிக்க சுகம்பெறு வர் மேதினியோர் வேந்தருக்குத், தக்கவபி மானமுண்டு தான்.

(இடைக்காடர்)

விபாகரன்—சூரியன்.

விபாதம்—உதயகாலம்.

விபாவசு—சந்திரன், சூரியன்.

விபாவரி—இராத்திரி.

விபுதன்—சந்திரன்.

விபூதிதுவாதசி—சித்திரை, வைகாசி, கார்த்திகை, மார்கழி, பங்குனி, ஆடி இம்மாதங்களில் வரும் பூருவபக்கத்துப் பனிரண்டாந் திதி.

விபை—கிரணம்.

விப்பிராந்தசீலம்—சூரியசந்திர வட் டம்.

விமர்த்தனம்—கிரகணம்.

விமர்த்தார்த்தம் — கிரகணந்தொட் டது முதல் விடுதல் வரைக்கு முள்ள காலம்.

விம்சகம்—இருபது கூடியது.

விம்சதி—இருபது.

விம்பம்—சந்திரசூரியர்களின் மண் டலம், சாயை.

விய—இருபதாவது வருடம்.

வியசனம்—அரிட்டம்.

வியதிபாதம் —துன்னிவித்தம், நித் திய யோகத்தொன்று. இது-சுப காரியங்களுக்கு விலக்காம், அன் றியும் திருவோணம், அசுபதி, அவிட்டம், திருவாதிரை, ஆயிலி யம் ஆகிய இவைகள் அமாவா சை, ஞாயிற்றுக்கிழமை ஆகியவை களிற் கூடி தை, மாசி மாதங்க ளில் வருவதுமாம்.

வியதீபாதம்—நித்தியயோகத் தொ ன்று.

வியம்—பனிரண்டாமிடம்.

வியவருடப்பலன் — நல்லமழையும் வேளாண்மைப் பலிதமும், நவதா னிய முதலிய பதினெட்டு வகை

வித்துப்பொருள விர்த்தியும், தானிய மலிவும் சீனதேசத்திற்குச் சேமமுமுண்டாம்.

உதாரணம்;—வியவருடம் மாரி விளைவுண்டாஞ் சீனம், சுயவாழ் வடனே சுகமாம்-உயர்வாய்ப்,பதினெட்டுவித்தும் பதிவாய்ப் பலிக்கும், சதிர்பெறுநல் லக்ஷ்மிகுந் தான். (இடைக்காடர்)

வியனசமனசங்கிவிதம்-கணிதமுறையுளொன்று.

வியன்மணி—சூரியன்.

வியாகம்—காற்று, ஒரு நட்சத்திரம், கல்யாணம்.

வியாகாதம்— நித்தியயோகத் தொன்று.

வியாச்சியகவலை — பனிரண்டாமிடத்துப்பலன்.

வியாதாபம் } இடி.
வியாதாமம் }

வியாழத்தின் காரகம் — புத்திரன், கலைக்கியானம், நாணயம்,ஆபரண முதலியவையாம்.

வியாழகுணம்—சத்துவம்.

வியாழகேந்திரம்—வியாழ வீதியின் மத்தி, வியாழன் கேந்திரத்தில் நிற்றல்.

வியாழசமித்து—அரசு.

வியாழசுவை—தித்திப்பு.

வியாழதானியம்—கடலை.

வியாழதிக்கு — வடக்கு. அன்றியும் தெற்கென்பாருமுளர்.

வியாழதிசை— வியாழனுக்குச்செல்லுங்காலம். இதன்வருடம் பதினாறு, தெற்குத்திசையென்பதுமாம்.

வியாழநட்சத்திரம்—இரேவதி, உத்திரட்டாதி, பூராடம், மூலம்.

வியாழநிறம்—மஞ்சள்.

வியாழபாஷை—ஆரியமொழி.

வியாழபார்வை—சாந்தம்.

வியாழபிணி—வாதம்.

வியாழபுட்பம்—முல்லை.

வியாழபுத்தி — ஒவ்வொரு திசையினுள் நடக்குங்காலம்.

வியாழபுத்திரன்—எமகண்டன்.

வியாழம்—அந்தணன், அமைச்சன், அரசன், ஆசான்,ஆண்டளப்பான், குரு, சிகண்டிசன், சிகண்டிதன், சீவன், சுரகுரு, தாராபதி, தெய்வமந்திரி, நற்கோள், பிரகஸ்பதி, பீதகன், பொன், மறையோன், வேந்தன். அன்றியும் வியாழக்கிழமைக்கும் பெயர்.

வியாழரத்தினம்—புட்பராகம்.

வியாழராசி—தனுசு, மீனம்.

வியாழலிங்கம்—பெண்.

வியாழலோகம்—பொன்.

வியாழவடிவம்—நெடுமை.

வியாழவட்டம்—குரு சூரியனைச் சுற்றிவருகிற பனிரண்டு வருடங்கொண்ட கால அளவு.

வியாழவாகனம்—யானை.

வியாழன்—வியாழம்.

வியுட்டம்—நாள், பலன், வைகறை.

வியுட்டி—பலன்.

விரசனன்—சந்திரன், சூரியன்.

விரன்மிண்டநாயனர் திருநட்சத்திரம் } சித்திரை மாதத்தில்வரும் திருவாதிரை நட்சத்திரம்.

விரிஞ்சியோகம்—ஒருநல்லயோகம். அது-இலக்கினதிபன், குரு, சனி ஆகிய இவர்கள் கேந்திரகோணங்களில் ஆச்சி, உச்சம், நட்பு இவைகள் பெற்று நிற்பதாம்.

விரிச்சி—நன்னிமித்தம்.

விரிச்சிகம்—விருச்சிகம்.

விரிச்சிகன்—சூரியன்.

விருகற்பதி—வியாழன்.

விருகாராதி, விருகாரி } சிங்கம்.

விருச்சி—சொன்னிமித்தம்.

விருச்சிக அங்கம்—பீசம்.

விருச்சிக உருவம்—தேள்.

விருச்சிகதிசை—மேற்கு.

விருச்சிகநிறம்—பச்சை.

விருச்சிகமாதம்—கார்த்திகைமாதம்.

விருச்சிகம், விருக்ஷிகம் } தெருக்கால், தேள், பறப்பன். அன்றியும் கார்த்திகைமாதமுமாம்.

விருச்கிரவி — கார்த்திகைமாதம், விருச்சிகத்தில் சூரியனிற்றல்.

விருட்சப்பொருத்தம் — மணப்பொருத்தத்தொன்று; அது ஆண்நட்சத்திரம் வயிரமரமும், பெண்நட்சத்திரம் பால்மரமுமாகில் மக்களுண்டாம்; பெண் வயிரமரமும் ஆண் பால்மரமுமாகில் மக்களில்லை; இருவரும் வயிரமரமானல் மக்களும் பொருளும் நட்டமாம்; இருவரும் பால்மரமாகில் அதிக நன்மையும் மக்களுமுண்டாம்.

விருட்டுணுயோகம்— விட்டுணுயோகம் பார்க்க.

விருத்சபாவம்—முதிர்வயது.

விருத்தம்—சிற்பநூல் முப்பத்திரண்டினென்று.

விரையத்தானம்—இலக்கினத்திற்கு பனிரண்டாமிடம்.

விரோசனன்—சந்திரன், சூரியன்,

விரோதத்தானம்—ஆறு, எட்டாமிடங்கள்.

விரோதி — இருபத்துமூன்ருவது வருடம்.

விரோதிவருடப்பலன்---அதிகமழை பெய்து மேடுகாடுகள் முதலிய எல்லாவிடங்களும் விளைவுண்டாகும், ஆனல் அரசர்களுக்குள் சண்டையும் மனிதர்களுக்கு நோயும், பொதுவாய் உலகத்திற்குக் கெடுதியுமுண்டாம்.

உதாரணம்;—நீடு விரோதி நிலத்தில் மழைமிகுதி, மேடுகா டெல்லாம் விளைவுண்டாம் - நாடும், அரசர்போ ராலே யழியு முலகம், திரமிகுநோய் சேருமெனச் செப்பு. (இடைக்காடர்)

விரோதிகிருது--நாற்பத்தைந்தாவது வருடம்.

விரோதிகிருதுவருடப்பலன்—நல்ல மழையும்,தானியங்கள் விளைவும், கரும்பு பவளமுதலிய சிவப்புப் பொருள்கள், ஆமணக்கு முதலிய

தயிலப்பொருள்கள் ஆகியவைகள் விருத்தியும், மனிதர்களுக்குத் திரவியவிர்த்தியு முண்டாம்; உப்பு பருத்தி முதலிய வெண்மைப்பொருளகள் குறையுமென்பதாம்.

உதாரணம்:— மிக்க விரோதி விளைவுண்டு மாரியுண்டு, தக்க சிறப்புந் தனமுண்டு- இக்குண்டு, உப்பு பருத்தி யுலகத்தி லேகுறையும், துப்புமிகு மாமணக்காஞ் சொல். (இடைக்காடர்)

விலங்கரசு } சிங்கம்.
விலங்கிறை }

விலாசி—சந்திரன், பாம்பு.

வில்—தனுராசி, மூலநட்சத்திரம்.

விவசுதன்—சூரியன்.

விவாகப்பொருத்தம்—மணப்பொருத்தம். விபரம்:-மணப்பொருத்தத்திலறிக.

விவாகம்—உபயம், கடி, கலியாணம், கைப்பற்றல், பரிணயம், மங்கலம், மணம், மன்றல், வதுவை, வரைவு, விதியுளி, வேட்டல்.

விழவு—மிதுனராசி.

விளக்கம்—சந்திரனள்.

விளக்கீடு—ஒருதினம். அது கோவில்களில் விளக்கேற்றுதல்.

விளக்கு—சோதிநட்சத்திரம், தீபம்.

விளங்குதிங்கள்—சுக்கிரன்.

விளம்பி—முப்பத்திரண்டாவது வருடம்.

விளம்பிவருடப்பலன் — குறைந்த மழையும், வேளாண்மை நட்டமும், அரசர்களுக்குப் பிணியுங் கவலையும், மனிதர்களுக்குத் துன்பமு முண்டாம்.

உதாரணம்—விளம்பி வருடம் விளைவுகொஞ் சம்மாரி, அளந்து பொழியு மரசர்—களங்கமுடன், நோவால் மெலிவரே நோக்கரிதாகுங்கொடுமை, ஆவா புகல்வதரிதாம். (இடைக்காடர்)

வினை—இரண்டு, பிறப்பு.

## வீ

வீசகணிதம்—அச்சரகணிதம்.

வீசம்—ஓர்கணிதம், மாகாணி.

வீசி—கிரணம்.

வீடுகட்டுமாதங்கள்—சித்திரை, வைகாசி, ஆடி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை, மாசி என்பனவாம்; ஆடிமாதம் வீடு கட்டலாகாதென்று சில நூல்களில் சொல்லியுள்ளன; விபரம்-வாஸ்துபுருடன் நித்திரை செய்யுந் திசைகளும், மாதங்களுமென்றதிலறிக.

வீட்டுக்கிரியை — சாச்சடங்கென்று.

வீட்டிற்கு லக்கினகேந்திர கிரகபலன் } குருவிருக்கும் இலக்கினத்தில் முகூர்த்தக்கால் நாட்டி புதனிருக்கும் இலக்கினத்தில் தூலமேற்றி வீடுவேய்ந்தால் அந்த வீட்டிற்கு அக்கினி, திருடர், ராசபய முதலியவைகளில்லை. ஐந்து, ஆறு ஆகியவிடங்களில் சந்திரனிருக்க, வெள்ளிக்கிழமை

யில் வீடுகட்டினால் சம்பத்துண்டாம்.

வீட்டிற்கு அறைமுதலியன கட்டும்விதி } மனைவீட்டிற்கு அறைகள், கூடங்கள், வாசல்கள் முதலியன வைத்துக் கட்டுவதற்கு அகலம் நீளம், அடியளவு விபரம்- ஆறு அடி வைத்தால் நன்மை, ஏழுக்குத் தரித்திரம், எட்டுக்குச் சேமம், ஒன்பதுக்கு பீடை, பத்துக்கு பாக்கியம், பதினொன்றுக்கு நன்மை, பனிரண்டுக்குப் புத்திர நாசம், பதின்மூன்றுக்கு வியாதி, பதினாலுக்கு சஞ்சலம், பதினைந்திக்கு துன்பம்,பதினாறுக்கு செல்வவிருத்தி, பதினேழுக்கு சத்துரு செயம், பதினெட்டுக்கு மனைபாழ், பத்தொன்பதுக்கு தரித்திரம், இருபதுக்கு இன்பமுண்டாம், இருபத்தொன்றுக்கு நன்மை, இருபத்திரண்டிற்கு தைரிய விருத்தி, இருபத்துமூன்றுக்குத் தீமை, இருபத்துநாலுக்கு மத்திமம், இருபத்தைந்துக்கு மனைவி தோசம், இருபத்தாறுக்கு சம்பத்து, இருபத்தேழுக்கு செல்வ விர்த்தி, இருபத்தெட்டுக்கு தெய்வகடாட்சம், இருபத்தொன்பதுக்கு பாக்கியம், முப்பதுக்கு இலக்குமிவாசம், முப்பத்தொன்றுக்குத் துன்பமில்லை, முப்பத்திரண்டுக்குப் பொருள்விர்த்தி, முப்பத்துமூன்றுக்கு நன்மை, முப்பத்துநாலுக்கு நிலையாவாசம், முப்பத்தைந்திற்கு இலக்குமிகடாட்சம், முப்பத்தாறுக்கு வீரலட்சுமி கடாக்ஷமுண்டாம். மற்றும் விபரமாயறிய வேண்டில் சிற்பநூல் பொக்கிஷமென்ற புத்தகத்திற் காண்க.

வீணை—மிதுனம், மின்னல்.

வீணையோகம்—ஒரு நல்ல யோகம்; அது அட்டமத்தோன் உச்சனாகி மூன்றில்நிற்க, லாபாதிபன் தனத்தானத்தில் நிற்பது.

(2) இராகு கேது நீங்கிய சூரியனாதி எழுவர் ஒன்றாமுதல் ஏழுராசிவரை தனித்தனி நிற்பதுமாம்.

வீதம்—பங்கு,வேறுவேறாய்ப்பகுத்த பகுப்பினளவு.

வீதிகோத்திரன்—சூரியன்.

வீதிவாசற் கால் வைக்கும்விதி } தலைவாசற் கால் வைக்கும்விதி. விபரம்-தலைவாசற்கால்வைக்கும் விதியிற் காண்க.

வீபத்து—சந்திரன்.

வீமேசுர உள்ளமுடையான் — ஓர் சோதிடநூல்.

வீரியத்தானம்—மூன்றாமிடம்.

வீழ்க்கை—சோதிநட்சத்திரம்.

வீழ்நாள்—இழந்தநாள்.

## வெ

வெகுசுருதம்—சிற்பநூல் முப்பத்திரண்டினொன்று.

வெகுதானிய — பனிரண்டாவது வருடம்.

வெகுதானிய வருடப்பலன்— முன் மழை குறையும், பின்மழை பெய்யும், கரும்புப் பயிரும் விருட்சசாதிகளும் விருத்தியுண்டாம்,பருத்தியும் உப்பும் குறையும், என்றாலும் சிறிது பஞ்சமுமுண்டாகும்.

உதாரணம் — வெகுதானிய வருட மேதினியி லெல்லாம், தகுமாரி பின்பெய்யுந் தான்முன்- முகில்சோர்ந்து, கொஞ்சமழை பெய்யுங் குலவு கழைதழைக்கும், பஞ்சம் பருத்தியுப்பு பாழ்.

(இடைக்காடர்)

வெங்கதிர்
வெங்கதிர்ச்செல்வன் } சூரியன்
வெஞ்சுடர்க்கிரணம்

வெடி—இடி.

வெண்கதிரோன்
வெண்கதிர் } சந்திரன்.
வெண்சுடர்

வெண்ணிறக்கிரகம் } சந்திரன், சுக்
வெண்ணிறக்கோள் } கிரன்.

வெயில்—ஒளி, சூரியகிரணம், சூரியன்.

வெய்யவன் — சூரியன் மிருகசீரிட நட்சத்திரம்.

வெய்யோன்—சூரியன்,வெய்யவன், மிருகசீரிட நட்சத்திரம்.

வெளி—ஆகாயம்.

வெளிராசி—மேடம்,கடகம்,துலாம், மகரம்.

வெள்ளம்—எண்வகுப்பு ளொன்று.

வெள்ளி—சுக்கிரன், வெள்ளிக்கிழமை.

வெள்ளிக்கிழமை—சுக்கிரவாரம்.

வெள்ளிடி — மழைக்குணமில்லாது விழுமிடி.

வெள்ளித்தோற்றம் — சுக்கிரோதயம்.

வெள்ளிப்பிரிவு — சுக்கிரனிருந்த ராசிவிட்டுப் பிரிதல்.

வெள்ளிவாரம்—வெள்ளிக்கிழமை.

வெறுநுகம்—சோதிநட்சத்திரம்.

வெற்றித்தானம்—மூன்றாமிடம்.

## வே

வேசியோகம் — ஒரு நல்லயோகம். அது சூரியனுக்கு முன்னே கிரகங்கள் நிற்பது.

(2) சூரியனுக்கு இரண்டில் சந்திரன் நீங்கிய சுபக்கிரகங்கள் நிற்பதுமாம்.

வேட்டுவன்—மக நட்சத்திரம்.

வேதகன்—போதகனைக் காண்க.

வேதகாதிபர்திசை—பாசகன்,போதகன், காரகன், வேதகன் என்னும் நால்வர்களில், இன்னவர் திசையில் இன்னவர், பாசகன், இன்னவர் போதகன், இன்னவர் காரகன், இன்னவர் வேதகன் என்பது. விபரம்:—(1) சூரியதிசையில் சனிபாசகனும், செவ்வாய் போதகனும்,வியாழன்காரகனும், புதன் வேதகனும்,

(2) சந்திரதிசையில் - சுக்கிரன் பாசகனும், செவ்வாய் போதகனும், சனி காரகனும், சூரியன் வேதகனும்,

(3) செவ்வாய் திசையில்-சூரியன் பாசகனும், சந்திரன் போதகனும், சனி காரகனும், வியாழன் வேதகனும்.

(4) புதன்திசையில்-சந்திரன் பாசகனும், வியாழன் போதகனும் சுக்கிரன் காரகனும், செவ்வாய் வேதகனும்.

(5) வியாழதிசையில்-சனி பாசகனும், செவ்வாய் போதகனும், சந்திரன் காரகனும், சூரியன் வேதகனும்.

(6) சுக்கிரதிசையில்-புதன் பாசகனும், சூரியன் போதகனும், சந்திரன் காரகனும், சனிவேதகனும்.

(7) சனிதிசையில்-சுக்கிரன் பாசகனும், சந்திரன் போதகனும், வியாழன் காரகனும், செவ்வாய் வேதகனும்.

வேதகாதிபர்திசைக்கு சத்துரு மித்துரு } பாசகாதிபர்களில் இன்னவர் திசையில் இன்னவர் பகை, இன்னவர் நட்பு என்பது. விபரம்:—சூரியதிசைக்கு பாசகன் பகையாம், சந்திரதிசைக்கு-போதகன், காரகன், வேதகன், இவர்கள் பகையாம். செவ்வாய், புதன் இவர்கள் திசைக்கு, வேதகன் பகையாம். வியாழதிசைக்கு, பாசகன் வேதகன் இவர்கள் பகையாம். சுக்கிரதிசைக்கு--காரகன் வேதகன் இவர்கள் பகையாம், சனிதிசைக்கு-பாசகன் காரகன் இவர்கள் பகையாம். மேற்கூறியவைகளன்றிமற்றக்கிரகங்கள்நட்பு என்பதாம்.

வேதம்—நாலாமிடம்.

வேதன்—வியாழம், நாலாமிடத்ததிபதி.

வேதா—சூரியன்.

வேதி—கேட்டை நட்சத்திரம்.

வேதை—இரேகை, துன்பம்.

வேதைப்பொருத்தம் — மணப்பொருத்தத்தொன்று. அது அசுபதிக்கு மகமும், மூலமும் ஒன்றுக்கொன்று பொருந்தாது, பரணிக்குக் கேட்டையும், கார்த்திகைக்கு அனுசமும், உரோகணிக்கு விசாகமும், மிருகசீரிடத்திற்கு சோதியும், திருவாதிரைக்குஅவிட்டமும், புனர்பூசத்துக்கு திருவோணமும், பூசத்திற்கு உத்திராடமும், ஆயிலியத்துக்கு பூராடமும், பூரத்திற்கு ரேவதியும், உத்திரத்துக்கு உத்திரட்டாதியும், அஸ்தத்திற்கு பூரட்டாதியும், சித்திரைக்குச் சதையமும் பொருந்தாது. மற்ற நட்சத்திரங்கள் பொருந்துமென்பதாம்.

வேதோதயன்—சூரியன்.

வேந்தன்—அரசன், சந்திரன், சூரியன், வியாழன்.

வேலை—அவமிருத்து, எல்லை, காலம், நிகழ்காலம், பனி, பொழுது.

வேளை—காலம்.

வேள்வி—மகநட்சத்திரம், பனிரண்டாமிடம்.

வேனிற்காலம்—கோடைகாலம்.

## வை

வைகல்—கழிவுநாள், நாள், விடியல்.

வைகறை—விடிய முதற்பத்து நாழிகை யளவு காலம், விடியற்காலம்.

வைகாசம்—வைகாசி மாதம், விசாகம், விடியற்காலம்.

வைகாசி—விசாகம், வைசாகம், வைகாசி மாதம்.

வைகாலம்—சாயங்காலம்.

வைகுண்டஏகாதசி—மார்கழி மாதம் பூர்வபக்கத்தில்வரும் பதினொராந் திதி.

வைகுண்டசதுர்த்தசி — கார்த்திகை மாதம் பூர்வபக்கத்தில்வரும் பதிலாந்திதி.

வைகுறு—வைகறை.

வைசனனம்—பிள்ளைப்பேறுமாதம்.

வைசாகம், வைசாகி — வைகாசி மாதம், விசாகம், வைகாசம்.

வைச்சுதன்—சனி.

வைதிருதி—இலாடநாளுக்குப் பதினைந்காம் நாள், சித்தியயோகத்தொன்று.

வைநாசிகம்—ஓர் யோகம்.

வைநாசிகநட்சத்திரம் — சென்மலக்கினத்திற்கு இருபத்திரண்டாம் நட்சத்திரம்.

வைநாயிகை—சதுர்த்தி திதி.

வைபகம், வையம் — உரோகணி நட்சத்திரம்.

வைரோசனன்—சூரியன்.

வைவஸ்வதன்—சனி.

வைவஸ்வதி—தென்றிசை.

## ஹ

ஹரிணாங்கன்—சந்திரன்.

ஹில்வலை—மிருகசீரிட நட்சத்திரத்தினது தலையிலுள்ள உப நட்சத்திரங்களாம்.

ஹேமந்தருது — முன்பனிக்காலம், இது மார்கழி, தை மாதங்களாம்.

---

சோதிடப்பேரகராதி.

முற்றிற்று.

# பிழை திருத்தம்.

| பக்கம். | பத்தி | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| 2 | 1 | 4 | கிறன்றன | கின்றன |
| 2 | 2 | 15 | கும் நட்சத்திரமாம் | கும் காலம் நட்சத்திரமாம் |
| 2 | 2 | 18 | எட்டி | ஒன்பதி |
| 8 | 1 | 24 | அதமவிமிசதி | அதமவிம்சதி |
| 8 | 1 | 28 | அறுபது | ஆறு |
| 8 | 1 | 30 | அதிககான் வருமாதம் | அதிகமாகுமாதம் |
| 8 | 2 | 5 | அதிசாரத்தில்வரும் வக்கிரகதி | அதிசாரமும் வக்கிரமுமாம் |
| 12 | 1 | 16 | அதுகிருட்டினன் | அது கிருட்டிண |
| 15 | 1 | 20 | சூரியனை பூமி சுற்றி வரும் போது | துருவனைப் பூமி சுற்றி வரும் போது |
| 16 | 1 | 32 | கிடதபுரி | கிடதகிரி |
| 25 | 2 | 31 | இலம்பயோம் | இலம்பயோகம் |
| 29 | 2 | 24 | டாம் | டம் |
| 37 | 2 | 12 | கிற் | கின் |
| 58 | 1 | 10 | கணிதசாதிஸ்ரம் | கணிதசாஸ்திரம் |
| 72 | 2 | 25 | பிரஞ்ஞானதீகையிற் | பிரஞ்ஞானதீபிகையிற் |
| 100 | 2 | 22 | இக்கினதிபன் | இலக்கினதிபன் |
| 151 | 2 | 32 | இராஜபஞ்சகமும் | பகலில் இராஜபஞ்சகமும் |
| 152 | 1 | 15 | பனைந்தாம் | பதினைந்தரம் |
| 188 | 1 | 24 | வித்தியாதரண்யர் | வித்தியாரண்யர் |
| 191 | 2 | 8 | அமிசையில் என்றது முதல் 5 வரி | இருந்த வீட்டோன் கேந்திர உச்சமிவை களிலிருக்க எழோன் பார்த்தாலும் |
| 210 | 1 | 21 | பா-ரவிகாரி | பாரவிகாரி |
| 211 | 1 | 28 | ஐப்பசி மாதம் | புரட்டாசி மாதம் |
| 212 | 1 | 16 | சுகத்தையடையவார்கள் | சுகத்தையடைவார்கள் |
| 215 | 2 | 27 | குரு சூரியனைச்சுற்றி | குருபன்னிரு ராசிகளைச்சுற்றி |

## கந்தபுராண 4 காண்ட உரை.

இது கச்சியப்பசிவாசாரியாரால் ஆக்கப்பெற்ற 6 காண்டங்களில் மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தட்சகாண்டம் ஆகிய வைகளுக்கு பானுகவியவர்களா் லியற்றிய கலாபூஷண உரையுடனுள்ளது. சொற்பப் பிரதிகளே கைவசமுள்ளதால் முந்தினவர்களுக்குப் புத்தகம் கிடைக்கும். விலை ரூ. 15—0—0. தபால்கூலி ரூ. 1—0—0.

## மங்கம்மாள் அல்லது மதுரைக்கரசி.

இது சரித்திர சம்பந்தமான தப்பறியும் இனிய செந்தமிழ் நாவல். வாசிப்போர்களுக்கும் சரித்திர ஆராய்ச்சிக்காரர்களுக்கும் இது ஒரு நல் விருந்தாகும். எல்லா பத்திரிகாசிரியர்களாலும் புகழப்பெற்று சென்னை துரைத்தனத்தாராலும் அங்கீகரிக்கப் பெற்றுள்ளதாகையால் இதன் பெருமையை இங்கு விரிக்காது விடுத்தோம். விலை. 1-8-0. தபால்கூலி அணு 5.

### வைத்திய நூல்கள்.

| | | |
|---|---|---|
| வைத்தியஅரிச்சுவடி 1,2பாகம் | 0 | 6 |
| வைத்தியசார சங்கிரஹம் | 1 | 8 |
| ஷை நயம் | 2 | 8 |
| பதார்த்த குணசிந்தாமணி | 1 | 4 |
| ஷை நயம் | 1 | 12 |
| வைத்திய சில்லரைக்கோர்வை | 1 | 8 |
| பாக்கெட் வைத்தியம் | 0 | 12 |
| புலிப்பாணி 500 | 0 | 6 |
| புலிப்பாணி பலதிரட்டு | 0 | 4 |
| மலையகராதி | 0 | 4 |
| பசுமூலிகையகராதி | 1 | 0 |
| வைத்தியமூலிகையகராதி | 1 | 4 |
| சிகிச்சாரத்னதீபம் | 2 | 8 |
| கண்ணுசாமியம் | 1 | 8 |
| நவரத்தின வைத்திய சிந்தாமணி | 1 | 4 |
| பெருநூல் நாலுகாண்டம் | 1 | 0 |
| வைத்திய ராஜசிந்தாமணி | 1 | 0 |
| நோயில்லா வாழ்வு | 0 | 12 |
| போகர் 700 (எழுநூறு) | 0 | 10 |
| போகர் 7000 (ஏழாயிரம்) | 4 | 0 |
| போகர் ஜெனனசாகரம் | 0 | 12 |
| ஆயுள்வேதச்சுருக்கம் | 0 | 12 |
| ரோமரிஷி 500 | 0 | 12 |
| அகஸ்தியர் வைத்தியம் 1500 | 1 | 0 |
| மணிமந்திர வைத்தியம் | 1 | 0 |
| வைத்தியத்திறவுகோல் | 0 | 10 |
| மாட்டுவாகடம் தனி | 0 | 12 |
| மாட்டுவாகடமும் அசுவசாஸ்திரமும் | 1 | 8 |
| தற்கால வைத்தியபோதினி | 0 | 8 |
| பதினெண்சித்தர்நாடி | 1 | 4 |
| அகஸ்தியர்குருநாடி | 0 | 5 |
| குணவாகடத்திரட்டு | 0 | 5 |
| சுப்பிரமணியர்ஞானம் 200 | 0 | 4 |
| ஷை 500 | 1 | 0 |
| வைத்திய ரத்தின சுருக்கம் | 0 | 5 |
| அனுபோகவைத்தியம் 8 கா | 4 | 0 |
| ஷை தேவரகசியம் | 4 | 0 |
| ஜீவரக்ஷாமிர்தம் | 7 | 8 |

### பாகசாஸ்திரம்.

| | | |
|---|---|---|
| மில்டேரிபாகசாஸ்திரம் | 0 | 10 |
| சைவபாகசாஸ்திரம் | 0 | 10 |
| நளவீமபாகசாஸ்திரம் | 1 | 4 |
| சிவேந்திரபாகசாஸ்திரம் | 2 | 0 |

### மாந்திரீக நூல்கள்.

| | | |
|---|---|---|
| மலையாளமாந்திரீக அரிச்சுவடி | 0 | 4 |
| கடல்கட்டு மீன்மந்திரம் | 0 | 4 |
| மூலிகை ஜாலரத்தினம் | 0 | 4 |
| ஷை 2ம் பாகம் | 0 | 4 |
| மலையாளமாந்திரீக ரத்னுகரம் 8 பாகங்கள் ஒரேகட்டடம் | 1 | 0 |
| பீதாம்பரையர்ஜாலம் | 1 | 4 |
| மாந்திரீகபோதினி | 0 | 4 |
| வாராகிமாலை சக்கரம் | 0 | 4 |
| சடாக்ஷரவிஞ்சைசக்கரத்துடன் | 0 | 4 |
| கந்தானுபூதி சக்கரத்துடன் | 0 | 4 |
| 10பாகம் ஜாலக்கண்ணாடி | 0 | 6 |
| அகஸ்தியர் மாந்திரீக காவியம் 1000 | 0 | 12 |

## பலவித புத்தகங்கள்.

| | | |
|---|---|---|
| திருவிளையாடற் புராணம் வசனம் | ரூ2 | 8 |
| ஷை கிளேஸ் | 4 | 0 |
| ஷை கவி | 3 | 0 |
| பெரியபுராண வசனம் | 2 | 8 |
| ஷை கிளேஸ் | 4 | 0 |
| ஷை கவி | 4 | 0 |
| கந்தபுராணவசனம் | 4 | 0 |
| கன்னியாகுமரித்தலபுராணம் பாட்டும் வசனமும் | 1 | 0 |
| அரிச்சந்திர புராணம் உரையுடன் | 2 | 0 |
| கம்பராமாயண வசனம் | 5 | 0 |
| ஷை திக் 2 வால்யம்சேர்ந்தது | 8 | 0 |
| ஷை கிளேஸ் | 12 | 0 |
| ராமர்அஸ்வமேதயாகம் | 2 | 0 |
| கம்பராமாயணக்கவி 2வால்யம் உள்ளது | 10 | 0 |
| அயோத்தியா காண்டம் உரை | 3 | 8 |
| பாலகாண்டம் உரை | 3 | 8 |
| சுந்தரகாண்டம் உரை | 3 | 8 |
| கிஷ்கிந்தாகாண்டம் மூலம் | 1 | 0 |
| தாயுமானவர் பாடல் மூலம் | 0 | 12 |
| ஷை நயம் | 1 | 8 |
| ஷை உரையுடன் | 3 | 4 |
| „ விருத்தி உரை | 4 | 0 |
| பாகவத வசனம் | 5 | 0 |
| ஷை 2 வால்யம் | 8 | 0 |
| „ கிளேஸ் | 12 | 0 |
| பக்தவிசயம் 1-வது | 1 | 8 |
| „ 2-வது | 3 | 0 |
| „ 3, 4 பாகங்கள் | 3 | 0 |
| பட்டணத்தார் பாடல் உரையுடன் | 2 | 0 |
| குணங்குடி மஸ்தான் பாடல் | 1 | 4 |
| ஷை நயம் | 2 | 0 |

| | | |
|---|---|---|
| தனிச்செய்யுட்சிந்தாமணி | 3 | 0 |
| தனிப்பாடற்றிரட்டு மூலம் | 1 | 4 |
| „ உரையுடன் 1ம் பாகம் | 2 | 8 |
| „ 2ம் பாகம் | 2 | 8 |
| விநோதரசமஞ்சரி | 2 | 0 |
| நயம் பதிப்பு | 3 | 0 |
| திருக்குறள் மூலம் | 0 | 6 |
| „ உரையுடன் | 2 | 0 |
| „ நயம் பதிப்பு | 4 | 0 |
| நைடதம் உரையுடன் | 3 | 0 |
| „ விருத்தி உரை | 4 | 0 |
| வில்லிபாரதக்கவி | 3 | 0 |
| நல்லாபிள்ளை பாரதக்கவி 2 வால்யம் | 12 | 0 |
| பாரத வசனம் 4 வால்யம் | „ | |
| „ திக்கு „ | „ | |
| „ கிளேஸ் „ | „ | |
| „ சுருக்கம் ஒரேபயிண்டு | 3 | 0 |
| விராடபர்வம் | 1 | 4 |
| ஆதிபர்வம் | 2 | 0 |
| யாழ்ப்பாணம் பேரகராதி | 10 | 0 |
| நாலாயிர திவ்யப்பிரபந்தம் | 4 | 0 |
| பகவற்கீதை வசனம் | 1 | 8 |
| ஷை பாக்கெட் சைஸ் | 0 | 10 |
| இராமலிங்க ஸ்வாமிகள் திருவருட்பா | 5 | 0 |
| அகத்தியதேவாரத்திரட்டுநயம் | 1 | 12 |
| திருவாசகம் | 1 | 0 |
| „ நயம் | 1 | 4 |
| சூடாமணி நிகண்டு 11, 12 மட்டும் | 0 | 12 |
| „ 1முதல்12தொகுதிசேர்ந்தது | 2 | 0 |
| விநாயகர் கொத்து | 1 | 8 |
| „ நயம் பதிப்பு | 2 | 0 |
| அருணாசலபுராணம் உரையுடன் | 2 | 0 |
| விநாயகபுராண வசனம் | 5 | 0 |

மற்றும் சகலமான புத்தகங்களும் நமது புத்தகசாலையில் விலை சகாயமாகக்கிடைக்கும். வேண்டுவோர்கள் காட்லாக்குக்கு எழுதுங்கள்.

சோதிட சாஸ்திரி,

**எஸ். கூடலிங்கம் பிள்ளை,**

புத்தகசாலை, மதுரை.

# புதிய சோதிடப் புத்தக விளம்பரம்.

---

## சிற்பநூற் பொக்கிஷம்.

இது தற்காலம் அச்சில் வழங்கிவரும் 40 அடி அளவுவரைக்குள்ள விதிமுறைகள் போலல்லாது இராஜமாளிகை முதல் சிறு வீடுகள் வரை கட்டுவதற்கு 120 அடி அளவு வரைக்குள்ள விதிமுறைகளனைத்தையும் தமிழாசிரியரும், ஜோதிட சாஸ்திரியுமாகிய சந்தனம்பிள்ளையவர்களின் பழைய எட்டுப்பிரதியிலிருந்தெடுத்துத் திரட்டி அருமையான அநேக புதிய விஷயங்களோடு உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் சுத்தமாக அச்சிட்டு சேர்த்தியான பயிண்டு செய்துள்ளது. சொற்பப்பிரிதிகளே அச்சிட்டிருக்கிறபடியால் வேண்டுவோர் முன்னாடியே எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள். விலை ரூ. 1—0—0, தபால் கூலி அணா 5.

## பாராசாரியம்.

இது தற்காலம் அச்சில் வழங்கும் பிழையோடுள்ளதுபோலல்லாது பழைய எட்டுப்பிரதியிலிருந்து பரிசோதித்து சுத்தப்பதிப்பாக அச்சிட்டுள்ளது. திசாபுத்தி பலன் அறிய விரும்புவோர்களுக்கு மிகுந்த உபயோகமுள்ளது. விலைரூ. 0—12—0. தபாற்கூலி அணா 4.

## வானசேகர சப்தகோள தீவம்.

இது யாழ்ப்பாணம் பண்டிதரால் எழுதப்பட்டது. ஜோதிடர்களுக்கும் மற்றோர்களுக்கும் அதிக உபயோகமான சூரியனாதி 7 கிரகங்களின் கதோள சக்கரங்கள், சத்தி, சிவபீசாட்சர சக்கரங்கள், நாற்பத்து மூக்கோணம், மானுடகிருத்தியம், சபிண்டசமஸ்காரம், தினவோரை, தறிக்கால், பிரயாணம, எட்டுதிக்குத் ஆகிய பலவிதங்களையும் விபரமாக விளக்கும்8விதச்சக்கரங்களுடன் 160 ஆராய்ச்சி விஷயங்களோடு வேறு பல உபயோகமான விஷயங்களுஞ் சேர்த்து அச்சிட்டிருக்கிறது. விலை ரூ 1—0—0 தபால்கூலி அணா 4.

## சூடாமணி உள்ளமுடையான்.

இது முகூர்த்தாதி கணிதமுறை முதலிய ஜோதிடங்களனைத்தையும் தெளிவாக விவரிக்கும் அருமையான நூல். விலை ரூ 1—0—0 தபாற்கூலி அணா 4.

## சாதகசிந்தாமணி.

இது சோதிடசாஸ்திரங்களுள் மிக்க பழமையானதும் முதன்மையுள்ளதுமாகும். துவாதசபாவகங்களனைத்தும் மிக்க விவரமாகக் கூறப்பட்டிருக்கிறது. பிழையறப் பரிசோதித்தது, திக்குக்கடிதத்தில் அச்சிட்ட சுத்தபதிப்பு விலை ரூ. 2—8—0 தபாற்கூலி அணா 6.

## ஜெயமுனி ஜோதிடம் 12000 கவிகள்.

இலட்சக்கணக்கான செய்யுள்களடங்கிய ஜோதிட சாஸ்திரங்கள் (ஓலைப்பிரதி) என்னிடமிருக்கிறதென்பது தமிழ் நாட்டாரனைவருக்குந் தெரியும். இதில் ஜோதிடர்களுக்கும், மற்றோர்களுக்கும் மிக்க உபயோகமானதும் இதுவரை அச்சிற்குவாராததுமாயிருக்கும் பலசாஸ்திரங்களில் மேற்கண்ட 12000த்தை அச்சிட்டு வெளியிட உத்தேசித்திருக்கின்றேனாகையால், இப்புத்தகத்தை விரும்புவோர்கள் தங்கள் விலாசத்தைத் தெரிவித்தால் பதிவு செய்துகொண்டு புத்தகம் முடிந்தவுடன் அறிவிக்கப்படும்.

---

# புதிய சோதிடப் புத்தக விளம்பரம்.

| | |
|---|---|
| சோதிட அரிச்சுவடி | 0—4—0 |
| ஷை 2-ம் பாகம் | 0—4—0 |
| சோதிடசிந்தாமணியென்னும் பெரிய வருசாதிநூல் | 0—12—0 |
| ஷை நயம்பதிப்பு | 1—8—0 |
| சுந்தரசேகரம் | 0-12—0 |
| ஷை 2ம் பாகம் | 0-12—0 |
| ஷை 3ம் பாகமாகிய தியாகராஜஜோசியம் | 0-12—0 |
| புலிப்பாணிஜோதிடம் | 0-12—0 |
| ஷை தாய்மகவேசல் | 0-12—0 |
| சாதகஅலங்காரம் | 0-12—0 |
| ஷை உரையுடன் | 2—0—0 |
| வீமேசாஉள்ளமுடையான் உரையுடன் | 1—8—0 |
| மங்கனேஸ்பரியம் உரையுடன் | 2—0—0 |
| குமாரசாமியம்உரையுடன் | 1—[illegible]—0 |
| நந்திவாக்கியம் | ........... |
| ஷை 2ம் பாகம் | 1—8—0 |
| ஷை ஷை ஸ்திரிஜெனனருது சாதகம் | 1—8—0 |
| கௌசிகசிந்தாமணி | 0-14—0 |
| ஷை 2ம் பாகம் | 1—4—0 |
| ஷை 3ம் பாகம் | 1—0—0 |
| ஷை 3-பாகம் சேர்ந்தது | 3—0—0 |
| சத்தரிசிவாக்கியம் 5500 பாடல் | 6—0—0 |
| வீமகவி | 0-10—0 |
| ஜோதிடகணிதம் | 0—8—0 |
| பஞ்சாங்ககணிதம் 5 பாகம் 3 புத்தகம் | 5—0—0 |
| பலதிபிகை | 3—0—0 |
| கணிதமுருகசேகரம் | 1—0—0 |
| புட்பவிதம் மழைக்குறி | 0—8—0 |
| ஓரசாஸ்திரம் | 1—0—0 |
| சந்திரகாவியமூலம் | 0—2—0 |
| கோட்சாரசிந்தாமணி | 1—0—0 |

| | |
|---|---|
| ஜினேந்திரமாலை | 1—4—0 |
| அலங்கையாரூடம் | 0-10—0 |
| நவக்கிரகமாலை | 0-10—0 |
| சாதகத்தெளிவானந்த சிந்தாமணி | 1—0—0 |
| அனுபோக பிரசன்ன ஆரூடம் | 0-12—0 |
| சாதகபாரிசாதகம் | 0-12—0 |
| அனுபோகசாதகாசியம் | 0-12—0 |
| ஜோதிடக்களஞ்சியம் | 1—0—0 |
| ஜோதிட குஞ்சரம் | 0-12—0 |
| மணிகண்டகேரளம் | [illegible] |
| துய்ய கேரளம் | [illegible] |
| மரணகண்டி | [illegible] |
| ஷை சுத்தப்பதிப்பு | [illegible] |
| சர்வார்த்த சிற்பசிந்தாமணி | [illegible] |
| ஜோதிடசில்லறைக் கோவை | [illegible] |
| ஜெயமுனிவாக்கியம் | [illegible] |
| சர்வகனவின்பலன் | [illegible] |
| கனவுகாணுஞ்சாஸ்திரம் | [illegible] |
| போகர்பஞ்சபட்சி உரை | [illegible] |
| ரோமரிசி ஷை மூலம் | [illegible] |
| ஷை உரை | [illegible] |
| அகஸ்தியர் பட்சி மூலம் | [illegible] |
| ஷை உரை | [illegible] |
| கமலமுனி இரேகை | [illegible] |
| இராமதேவர் இரேகை | [illegible] |
| ஸ்திரிபுருஷ சாமுத்திரிகா லட்சணம் | [illegible] |
| செவுளி சாஸ்திரம் | [illegible] |
| தொடுகுறி சாஸ்திரம் | [illegible] |
| வால்மீக ஆரூடம் | [illegible] |
| அம்மணி ஐயாச்சாமியம் | [illegible] |
| ஜோதிடமாலை | [illegible] |
| மணிமந்திரம் | [illegible] |
| ஜோதிடநூலாதாரம் | [illegible] |
| புசுண்டர்நாடி | 0—3—0 |
| சந்தனநூல் | 0—2—0 |

மற்றும் சகலமான புத்தகங்களும் நமது புத்தகசாலையில் விலை சகாயமாகக் கிடைக்கும். வேண்டுவோர்கள் காட்லாக்குக்கு எழுதுங்கள்.

சோதிட சாஸ்திரி,

**எஸ். கூடலிங்கம் பிள்ளை,**

புத்தகசாலை, மதுரை.